முகாமைத்துவம்: எருமைகளாலும் பறக்கமுடியும்

# உலக உலா

ஓகஸ்ட் 1994




## உலக கால்பந்துப் போட்டி

சொகுசான பயணத்திற்த ஓர் உறுதியான நுழைவாயில்

## வேல் மோட்டோஸ் ஸ்ரோர்ஸ்

ஒஸ்ரின் வாகன
உரிமையாளர்களின்
கவனத்திற்கு!

உங்கள் ஒஸ்ரின்
வாகனத்திற்கு மொத்தப்
பாதுகாப்பளிக்கக் கூடிய

ஒஸ்ரின் - காஸ் கட்டுகள்
எம்மிடம் உள்ளன.




மாஸ்ரர் பென்ஸ், பிரித்தானிய ஐரோப்பிய
பயணிகள் வாகனங்களிற்கும் மற்றும் மோட்டார்
சைக்கிள் உதிரிப் பாகங்களிற்கும்

# வேல் மோட்டோஸ் ஸ்ரோர்ஸ்

**221, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்**

★ எரிபொருள் காட்டிகள்

★ பெற்றோல்/டீசல் வடிகட்டிகள்

போன்றவற்றையும் மலிவுடன் கூடிய முறையில் விநியோகிப்பவர்கள்

உலக உலா

## உலக விவகாரங்கள்

### ஆசியா


உறவுகளைச் சரிப்படுத்தல் 07
பாகிஸ்தான் அரசின் திண்டாட்டம் 09
பங்களாதேசும் சுழற்காற்றும் 10
ராமோஸ் பின்வாங்குகிறார் 11
யேமனில் உள்நாட்டுப் போர் 15
கடினமான பகுதி வருகின்றது 17
மீண்டும் போரின் ஆக்கிரமிப்பு 20


### ஐரோப்பா


ருஷ்யாவின் ஆயுத விற்பனை 23
சிறுதாக்குதல் அபாயகரமானது 28


### அமெரிக்கா


அந்தரங்க நாடகம் 27
நாட்டைக் காட்டிக் கொடுத்தவர்கள் 29


### ஆபிரிக்கா


வீடு திரும்புதல் 31
ருவாண்டா: ஒரு கொலைக்களம் 33
மண்டேலாப் பித்து 36


### நேர்காணல்


கேணல் கடாபியுடன் 41


### முகாமைத்துவம்


சிக்கலுக்குரியவர் யார்? 43


### குற்றவியல்


வாணிகத் திருடு 49
மன்னர் தலைமறைவாகினார் 52


### விஞ்ஞானமும் தொழில்நுட்பமும்


ஆபத்தில்லா ஆயுதங்கள் 54
'' குவாக் '' கைக் கண்டுபிடிக்க ...... 56


### மதம்


ஜெருசலேமின் மகுதி 59
சீனாவில் கிறிஸ்தவம் 61


### மனிதவியல் வரலாறு


3 மில்லியன் பழைமையானவர் 65
அமெரிக்க மக்களின் வாழ்க்கை 67


### மருத்துவம்


நுண்ணுயிர்க் கொல்லிகளின் முடிவு 68


### மலரும் நினைவுகள்


டி-டே 75


### விளையாட்டு


உலகக் கோப்பை காற்பந்தாட்டம் 79


### பல்திணைப்பகுதி


செய்திச்சரம் 02
புதியன அறிமுகம் 03
பார்வைகள் 06



விலை ரூ. 100/-

உலக உலா
பல்துறைசார்
மாத இதழ்

உலா : 12

## பங்களாதேஷ்

### மூலப்பிரிவு ஒன்றிற்குச் சுயாட்சி

சிட்டகொங் மலைப் பிரதேசத்தில் தமக்குச் சுயாட்சி கேட்டுப் போராடும் சாந்தி பாகினி கெரில்லா இயக்கத்திற்கும், பங்களாதேஷ் அரசுக்கும் இடையில் பேச்சு வார்த்தைகள் நடைபெறுகின்றன. அதன் 7 ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தை சென்ற மே 5 ஆம் திகதி நடைபெற்றது. அரசின் சார்பில் செய்தித் தொடர்புத்துறை அமைச்சர் தலைமையிலான குழு ஒன்று பங்குபற்றுகின்றது.

## தாய்வான்

### சனநாயக முன்னேற்றக் கட்சி

“தாய்வானின் மண்டேலா” என்று சிறப்பித்து அழைக்கப்படும் சீ மிங் டே, சென்ற 25 ஆண்டாகச்சிறையிருந்து மீண்ட பின்பு அந்த நாட்டின் முக்கிய எதிர்க் கட்சியான சனநாயக முன்னேற்றக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். மேதின விழாவில் பேசும் போது அவர் அந்தத் தீவின் விடுதலைக்காகப் போராடப் போவதாகச் சூளுரைத்தார். 53 வயதான சீ அந்த நாட்டின் செல்வாக்கு மிக்க யூ குடும்பத்தைச் சேர்ந்த 69 வயதான யூ சென்னை 206- க்கு 145 என்ற வாக்கு வித்தியாசத்தில் தோற்கடித்துக் கட்சித் தலைமையைப் பிடித்துள்ளார்.

## இந்தியா

### தடை நீடிக்கப்பட்டது

ஜம்மு காஷ்மீர் விடுதலை முன்னணியின் JKLF மீதான தடையை இந்திய அரசு இன்னும் இரண்டு வருடங்களால் நீடித்து 1996 பெப்ரவரி வரை நிலவச் செய்துள்ளது. காஷ்மீரில் இயங்கும் இந்திய எதிர்ப்புத் தீவிரவாதக் குழுக்களுள் மிகவும் மிதவாதமானது என்று கருதப்பட்ட அந்த இயக்கம் அரசுடன் திறந்த பேச்சுக்கள் நடத்துமென்றும் எதிர்பார்க்கப்பட்டது.

### பாதுகாப்புச் செயற்பாடு

பம்பாய்க்கு அருகில் தாராபூரில் அமைந்துள்ள அணு மின் நிலையத்திற்கு அனைத்துலக அணுசக்தி நிலையத்தின் விதந்துரைகளின் படி பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்வதாக இந்தியா கூறியிருப்பதை அந்த நிலையம் ஏற்றுக் கொண்டு உள்ளது. அதனால் சக்தியூட்டப்பட்ட யுரேனியம், விநியோகிக்கும் வெளிநாடுகள் அந்த அணு உலைக்கு விற்கப்படும் யுரேனிய எரிபொருள் பயன்படுத்தப்பட்ட பின்பு அதன் கழிவுகள் ஆயுத உற்பத்திக்குப் பயன்படுத்தப்பட மாட்டாது என்று ஏற்றுக்கொள்ளுமென இந்தியா நம்புகிறது. ஆனால் அமெரிக்காவும், பிரான்சும் இந்தியாவுக்கு யுரேனியம் விற்பதென்றால் அதற்கு முன்பு இந்தியா முற்று முழுதான பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்து நிறைவேற்ற வேண்டும் என்று தடை விதித்துள்ளன.

## வியட்நாம்

### பிரஜா உரிமை மாற்றம்

ஐ. நா. வின் அகதிகளுக்கான அமைப்பின் உயர் ஸ்தானிகர் சடாகோ ஒகாடா தங்கள் நாட்டை விட்டு ஓடும் வியட்நாமியர் இனிமேல் அகதி அந்தஸ்துப் பெற அருகதையானவர்களாகக் கருதப்படமாட்டார்கள் என்று கூறினார். அமெரிக்கா வியட்நாம் மீதான வர்த்தகத் தடையை நீக்கி இரண்டு வாரங்களுக்குப் பின்பு இந்த அறிவிப்பு வருகிறது. அநேக வியட்நாமிய அகதிகள் பொருளாதார நலனுக்காகவே அப்படிச் செய்கின்றனரென்று கருதப்படுகின்றது.

## சீனா

### மிகவும் சலுகைக்கு உரிய நாடு என்ற நிலைப்பாட்டிற்கு ஆபத்து

ஏசியா வோச் மனித உரிமை பேணல் அவதானிப்பு அமைப்பு அண்மையில் வெளியிட்ட அறிக்கையொன்றில் சீனாவின் மனித உரிமை மீறல்களைச் சாடியிருப்பது பெய்ஜிங் தொடர்ந்து அமெரிக்காவின் மிகவும் சலுகைக்குரிய வர்த்தக நாடு என்ற நிலையை மேலும் பாதிக்கலாம். அந்த அறிக்கையில் 1,200 தனிநபர்களின் விபரங்கள் தரப்பட்டுள்ளன. 1993 மிக மோசமான மனித உரிமை மீறப்பட்ட ஆண்டாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. 1989 பெய்ஜிங் படுகொலைகளைத் தொடர்ந்து அங்கே கைதுகள் பெருமளவில் நிகழ்கின்றன. பெய்ஜிங் அதனைப் பக்கச் சார்பான அறிக்கை என்று கூறுகின்றது.

### தெருக்காவல் உலா

காவல்துறை அமைச்சர் டாஓ சீஜூ சீனாவின் 88 முக்கிய நகரங்களில் 15,000 காவலர்கள் ஆயுதம் தாங்கிய காவல் உலாக் கடமை செய்வதற்கான ஒழுங்கு விதி ஒன்றில் ஒப்பமிட்டுள்ளார். அக் காவலர்களுக்கு வேறு கடமைகளுடன் சட்டவிரோதக் கூட்டம் கூடுதல்களையும், ஆர்ப்பாட்டங்களையும் தடுக்கும் அதிகாரமும் கொடுக்கப்பட்டுள்ளன. அந்த ஒழுங்கு விதிகளில் குடிமக்கள், காவலர்களின் அதிகார அத்துமீறல்கள் பற்றி முறைப்பாடு செய்யலாம் என்றும் கூறப்பட்டுள்ளது.

## தரமான அச்சுவேலை செய்யும் கணனிப்பொறி

பீ.சி எனப்படும் தனிநபருக்குச் சொந்தமான வீட்டில் பாவிப்பதற்குரிய கணனியில் பொருத்தப்படும் அச்சுப் பொறியின் விலை உயர்வானது, பிரச்சனையை உண்டாக்கியுள்ளது. தரமான அச்சியந்திரம் உச்ச விலையில் தான் கிடைக்கின்றது. சராசரிப் பாவனையாளரின் முதலீட்டுக்குப் பெறுமதியான இயந்திரமோ தரங் குறைவாய் உள்ளது. மலிவான சரக்குத்



திருப்தியான சேவை அழிக்கவில்லை எனக் குற்றஞ் சாட்டப்படுகிறது. தற்போது இந்தக் குறை நீக்கப்பட்டுள்ளது. ஹியூலெற் பக்காட் ( Hewlett Packard ) என்ற நிறுவனம் விலை குறைந்த ஆனால் திருப்தியான சேவை அளிக்கும் அச்சுப் பொறி ஒன்றைத் தயாரித்து விற்பனைக்கு விட்டுள்ளது. இந்த நிறுவனந் தயாரித்த டெஸ்க் ஜெற் 500 என்ற கறுப்பும், வெள்ளையும் கணனியுடன் பொருத்தும் அச்சுப் பொறி உலகில் மிகக் கூடுதலாக விற்பனையாகும் கருவி என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நிறுவனம் அறிமுகஞ் செய்யும் புதிய தொழில் நுட்பம் வர்ண அச்சுவேலையை மிகவும் கர்ச்சிதமாகச் செய்கின்றது. தரப்பட்ட மூலப்பிரதி என்ன வகையைச் சேர்ந்தது என்பதை இந்தப் பொறி முன்கூட்டியே தீர்மானித்தபின் அச்சுவேலையை ஆரம்பிக்கின்றது. பொதுவாகப் பிரதி பண்ணவேண்டியவை மூன்று வகைப்படும். எழுத்துக்கள், சித்திரம் அல்லது வரையப்பட்டவை, புகைப்படங்கள். புதிய அச்சுப்பொறி இந்த மூன்றுக்கும் ஏற்ற தனித்தனி மாற்றங்களைச் செய்து அச்சுவேலையை ஒப்பேற்றுகின்றது. தானியங்கி முறையில் நடக்கும் மாற்றங்கள் தரமான அச்சுப் பிரதியைத் தயாரிக்கப் பெரிதும் உதவுகின்றன. இயக்குபவர் தானியங்கி முறையை நிறுத்திவிட்டுத் தானே பொறியை அதன் ஒவ்வொரு கட்டத்திலும் இயக்கலாம். தனது விருப்புக் கேற்ற தனிப்பட்ட அச்சுப் பிரதிகளை இந்த முறையிற் தயாரிக்க முடிகிறது. புதிய அச்சுப் பொறியில் வர்ணப் படங்களைக் கறுப்பும் வெள்ளையுமாக மாற்றி அச்சாக்கலாம். இந்த முறையில் கிடைக்கும் பிரதி மிகவும் நேர்த்தியான அழகுடன் திகழ்வதாகச் சொல்லப்படுகின்றது. இந்த வகைப் பிரதிகளைப் (F) பாக்ஸ் முறையில் அனுப்பக்கூடியதாகவும் இருக்கின்றது. இப்படியான கறுப்பு வெள்ளைப் படங்களுக்கு இந்தப் பொறி அங்குலமொன்றிற்கு 600 தொடக்கம் 300 வரையிலான புள்ளிகளை உபயோகிக்கின்றது. லேசர் கதிரியக்க முறையில் அச்சாகும் பிரதிகளுடன் ஒப்பு நோக்கக்கூடிய திறன் இப் படங்களுக்கு உண்டு எனத் தெரிவிக்கப்படுகின்றது. பீ.சி எனப்படும் தனிநபர் கணனியுடன் பொருத்தப்படும் அச்சுப் பொறிக்கு டெஸ்க் ஜெற் 560 C என்ற வர்த்தகப் பெயரும் மக்கின்டொஷ் போன்ற பெரிய அளவுக் கணனியுடன் பொருத்துவதற்கு ஏற்ற பொறிகளுக்கு டெஸ்க் றைற்றர் 560 C என்ற குறியீடும் கொடுக்கப்பட்டுள்ளன. இரண்டிற்கும் விலை ஒன்று தான். இதன் விலை 719 டொலர்.

டச்சுக்காலத்து அச்சியந்திர சாதனங்களைக் கொண்டிருக்கின்ற எங்களைப் போன்றவர்களுக்கு இது ஓர் அரிய வரப் பிரசாதமாகும்.

★

## துணிகளைத் துவைத்து உலர்த்தித் தரும் சிறிய உருவமைப்புள்ள கருவி

துணி துவைக்கும், உலர்த்தும் பொறிகள் தனித்தனியாகவும் ஒரே அமைப்பிலும் மேற்கு நாடுகளில் உருவாக்கப்பட்டுள்ளன. மாடிக் கட்டடங்களில் எலிப்பொந்து மாதிரியான சிறிய உறைவிடங்களில் வசிப்போருக்கு ஒரு மனக்குறை



உண்டு. அதாவது தாங்கள் பாவிக்கும் கருவிகள் உருவத்தில் சிறியனவாகவும், பெரிய பொறிகளின் சக்தியும் செயற்றிறனும் கொண்டவையாகவும் இருக்க வேண்டுமென்பதே. அமெரிக்காவில் விற்பனைக்குள்ள துவைத்து உலர்த்தும் அலகுகள் கொண்ட

பொறிகள் உருவத்தில் பெரியவையாகவும், இடத்தைப் பிடிப்பவையாகவும் இருக்கின்றன. ஆனால் ஐரோப்பிய நாடுகளில் தயாரிக்கப்படும் இது போன்ற பொறிகள் சிறியவையாகவும், செயற்றிறன் கொண்டவையாகவும் இருக்கின்றன. ஆகவே தாங்கள் சொந்தமாகத் தயாரிக்கும் வரை அமெரிக்கா இத்தாலியில் தயாராகும் இந்த ரக இயந்திரங்களை இறக்குமதி செய்யத் தொடங்கியுள்ளது. இது 3 அடிக்கும் குறைவான உயரமுள்ளது. அகலம் 2 அடி. நீளமும் அப்படியே. அமெரிக்கத் தயாரிப்பொன்றில் 60 வீத உருவமைப்பு இதற்கு உண்டு. அமெரிக்கர்களின் தயாரிப்பிலும் பார்க்க இது சற்றே மந்தகதியில் வேலை செய்வதாகச் சொல்லப்படுகின்றது. ஆனால் இது ஒரு பொருட்டல்ல. காலையில் அலுவலகம் செல்லும் போது ஆடைகளை அதற்குள் திணித்து, கழுவும் பொடியையும், நீரையும் அதனுள் கொட்டி மின்சாரத் தொடர்பையும் ஏற்படுத்தினால் மாலையில் திரும்பும்போது யாவும் கழுவி உலர்த்தித் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும். இதன் விலை 795 டொலர்.

★

## சிறிய உருவக் கிண்ணம் போன்ற 'அன்ரெனாக்கள்' (ANTENNAS)

தூரத்திலிருந்து வரும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளை சாதாரண ஒளிவாங்கிகளால் கிரகிக்க முடியாது. இதற்காக மிகப்பெரிய குறுக்களவுள்ள வட்டவடிவமான ஒளிவாங்கிகள் தேவைப்படுகின்றன. இதன் உதவியுடன் செய்மதிமூலம் உலகளாவிய ரீதியில் அனுப்பப்படும், செய்திகள், செய்திப்படங்கள் திரைப்படங்கள் யாவற்றையும் பார்க்க முடியும். அமெரிக்காக் கண்டத்தில் பல்லாயிரம் தொலைக்காட்சி நிலையங்களும் செய்மதி மூலம் பரப்பப்படும் நிகழ்ச்சிகளுமுண்டு. இந்த நாட்டில் செய்மதி நிகழ்ச்சிகளைக் குறிப்பிட்ட தொலைக்



காட்சி நிறுவனம் எடுத்துப் பரப்பாவிட்டால் நாமே அதை இதுபோன்ற கிண்ணம்போன்ற பெரிய உருவமைப்பு ஒளிவாங்கியின் துணையுடன் எடுக்க வேண்டியுள்ளது. இது இருப்பிடத்திற்குமேல் பொருத்துவது எளிதான விடயமல்ல. பொருத்திய பின்பும் இவை மிகவும் அவலட்சணமாக இருக்கும். சிறிய கைக்கடக்கமான இதுபோன்ற கிண்ணங்கள் பலநாட்தேவையாக இருந்துள்ளன. தொம்சன் வீட்டுப்பாவிப்பு இலத்திரனியல் நிறுவனமும், ஆர். சி. ஏ எனப்படும் ரேடியோ கோர்ப்பரேஷன் ஒவ் அமெரிக்கா என்ற ஒலி, ஒளி தயாரிப்பு நிறுவனமும் 18 அங்குலக் குறுக்களவுள்ள கிண்ண ஒளிவாங்கியைக் கூட்டாகத் தயாரித்துள்ளன. 150 நிகழ்ச்சிகளைத் தெரிவு செய்து பார்வையிட இதன் உதவியுடன் இயலும். சங்கிலித்தொடர் (Cable) தொலைக்காட்சி நிகழ்ச்சிகளையும் தெரிவு செய்ய முடியும். மிகவும் தெளிவான காட்சிகளைத் தொலைக்காட்சிப் பெட்டியில் பார்க்கலாமென்றும் தெரிவிக்கப்படுகிறது. அவ்வளவு உச்சமான தொழில் நுட்பம் இதில் பயன்படுத்தப்பட்டுள்ளது. சாதாரண ஒளி வாங்கியிலும் 30 வீதம் கூடுதலான தெளிவு பெறப்படுவதாக ஆய்வாளர்கள் தெரிவித்துள்ளனர். இதன் விலை 699 டொலர்.

★

## விளம்பரங்களைத் தவிர்க்க ஒரு மின்னியற் சாதனம்

நியூயோர்க் மாகாணத்தில், ஹாபுவாகே என்ற நகரில் இயங்கும் அரிஸ்டா டெக்னோலொஜி என்ற நிறுவனம், கொமர்ஷியல் பிறீக் (வர்த்தக விளம்பரத் தடுப்பி) என்ற சாதனம் ஒன்றைச் சந்தைக்கு விட்டுள்ளது. அது வீடியோ தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் போது வரும் விளம்பரத் தொடர்களைத் தானுணர்ந்து, அவை தொலைக்காட்சியில் தோன்றாமல் செய்யவல்லது. அது வீடியோ பதிவுச் சாதனம் ஒன்று தொலைக்காட்சி நிகழ்ச்சிகளைப் பதிவு செய்யும்



பொழுது; அதனிடையில் வர்த்தக விளம்பரங்கள் ஆரம்பமாவதற்கும், முடிவதற்கும் இடையில் வரும் சமிக்ஞைகளைத் தன்னுள் பதிந்து கொள்ளும். அத்துடன் அது அந்த வீடியோ நாடாவில்

அடையாளங் காட்டும் நேரச் சமிக்ஞையைப் பதிவு செய்து விடும். அந்த நாடா ஒளிக் காட்சியாகக் காட்டப்படும் பொழுது தன்னுள் ஒவ்வொரு காட்சியிலும் வரும் விளம்பரங்களின் ஆரம்ப முடிவு அடையாளங்களைத் தனது நினைவுப் பதிவில் வைத்திருந்து விளம்பரம் வந்தவுடன் தொலைக் காட்சித் திரையில் அது தோன்றாமல் நீலமாக்கி விட்டு வீடியோப் பதிவை வேகமாக இயங்க வைத்து, நாடாவில் வெறுமனே ஓடியபின்பு கெதியில் மீண்டும் படக்காட்சியைத் தோன்றித் தொடரச் செய்யும். இத்தனைக்கும் 5 முதல் 10 செக்கன்கள் தான் செல்லும். விலை 200 டொலர்.

அப்படியென்றால் ரூபவாகினியிலும், தூரதர்சினியிலும் வருகிற ஒரு சில நல்ல நிகழ்ச்சிகளையும்(?) இனிப்பார்க் கேலாட்டால் வேறு எதனைப் பார்ப்பது?

★

## உடனடித் தயார் நிலைக் கூடாரம்

அநேகமாக மேற்கத்தைய நாட்டவர்கள் தங்கள் நவீன வாழ்வின் அலுப்பை மறந்திருந்து ஓய்வு கொள்ளச் சில நாள்கள் எங்காவது சென்று வாடி வாழ்வு வாழ்வதுண்டு. ஆனால், அந்தச் சுக அனுபவத்திற்கு முன்னால் கூடாரத்தை அமைத்துக் கொள்ளும் சிரமத்திற்கு உள்ளாக வேண்டியிருந்தது. இயற்கையுடன் இணைந்து வாழ்வதை மேலும் உற்சாகமான தாக்க, அமெரிக்காவின் மியாமி நகரில் உள்ள நிறுவனம் ஒன்று உடனே காற்றில் விரிந்து தாங்கி நிற்கக்கூடியதும், கொண்டு செல்வது மிகவும் இலகுவானதுமான உடனடிக் கூடாரங்களைச் சந்தைப்படுத்தியுள்ளது. வட்ட வடிமாக மடித்து வைக்கப்பட்டுள்ள அக்கூடாரத்திற்கான அமைப்பை வேண்டிய இடத்தில் காற்றில் வீசியதும் அது உடனே தானாக விரிந்து கூடாரமாக நிற்கிறது. ஒருவகை நைலோனாலும், அதனை உறுதியாக நிற்க வைப்பதற்காக மெல்லிய கண்ணாடி இளைக் குழாய்களாலும் அது பொருத்தப்பட்டு உள்ளது. அத



னால் பாரமான கூடாரத் துணியையும், கால். மரங்களையும் காவித்திரிய வேண்டியதில்லை. ஒரு முறை விரித்ததும் அது மடியாமல் நின்று பிடிக்கும் என்று அதன் உற்பத்தியாளர்கள் கூறுகின்றனர். முன் ஆணிகள் அதனைப் பூமியுடன் நங்கூரமிட வைக்குமாம். அதுபோலவே கூடாரத்தைக் கழற்றி எடுப்பதும் இலகுவானதாகும் கழற்றிச் சுருட்டி அதற்கான பைக்குள் போட்டுத் தோளில் இலகுவாகத் தொங்க வைத்துக் கொண்டு செல்லலாம். அதில் உள்ள மற்றைய அம்சங்கள் மழை நீர் உட்புகாத கவசம், ஒளி தரும் சாதனத்தைத் தொங்க விடுவதற்கான பிடி, மழை நேரத்தில் காற்று உட்புகவெனத் திறந்து வைக்கக் கூடிய தாழ்வாரங் கொண்ட சன்னல்கள் என்பனவாகும். ஆறு வேறுபட்ட மாதிரிகளில் இரண்டு பேர் முதல் ஆறு பேர்வரை அதன் கீழ் உறங்கத்தக்க அளவுகளில் செய்யப்பட்டுள்ளது. வேட்டை ஆடச் சென்று கூடாரத்துள் இருந்து கொண்டு குறிவைத்துச் சுடுவதற்கு ஏற்ற விதமாகப் பற்றைபோல் வர்ணம் தீட்டப்பட்ட மாதிரியும் கூட உள்ளது. விலைகள் 75 முதல் 300 டொலர் வரை.

★

## பூப் பூ

பிரித்தானிய நிறுவனம் ஒன்று ''சைகிள் மேற்' என்ற மிதிவண்டியுடன் பொருத்தும் சாதனம் ஒன்றை விற்பனைக்கு விட்டுள்ளது. அது சில நிமிட நேரத்தில் இரண்டு சாதாரண மிதிவண்டிகளை ஒரு முச் சக்கர சாதனமாக மாற்ற உதவும். பாவனையாளர் பின் மிதிவண்டியின் முன் சில்லைக் கழற்றி விட்டு அதன் போர்க்கை சைகிள் மேற்றுடன் பொருத்தி விட்டு அந்தச் சாதனத்தை முன் மிதிவண்டியின் பின் சில்லுடன் பொருத்திவிட்டால் அது இயங்கத் தயாராகிவிடும். கழற்றப்பட்ட சில்லைப் பின் மிதிவண்டியிலுள்ள கரியரில் பொருத்திக் கொண்டு செல்லலாம். சைகிள் மேற் சாதாரண முச் சக்கர இணைப்புக்களிலும் பார்க்க மிதித்துச் செல்வதிலும், வளைவுகளில் திருப்புவதிலும் இலகுவானதாகுமென்று கூறப்படுகிறது. அதே முறையில் இரண்டுக்கு மேற்பட்ட மிதிவண்டிகளைக் கூடப் பொருத்தலாம். விலை 114 அமெரிக்க டொலர்

## காதில் விழுந்தவை

- மந்த புத்தியுள்ள அறிவிலிகள் ஒருபோதும் தங்கள் மனதை மாற்றிக் கொள்ள மாட்டார்கள்.

  — பூட்றோஸ் காலி

  ஐக்கிய நாடுகள் தலைமைச் செயலரும் தனது உறுதிமொழியிலிருந்து தவறிவிட்டார்.

- "என்றுமே எம் நினைவை விட்டகலாத கடந்த 40 வருடகால வாழ்வில், 'ஜாக்கி' எமது குடும்பத்தில் மட்டுமல்லாது எங்கள் ஒவ்வொருவரது இதயத்திலும் இடம்பெற்றுள்ளார். அவர் ஒருபோதும் எம்மை விட்டகலவே மாட்டார்."

  — ஒனாசிஸ் ஜாக்குலின் கென்னடியின் நினைவு தினத்தின் போது எட்வாட் கென்னடி கூறியது.







- "புதிய ஏற்பாட்டில் தன்னாட்சிபெற்ற காசா, ஜெரிக்கோ பிரதேசங்களில் இஸ்ரேலிய சட்டதிட்டங்கள் இனிச் செல்லுபடியாகாது என்பது உறுதிப்படுத்தப்படவேண்டும்" என்று பாலஸ்தீனிய விடுதலை இயக்கத் தலைவர் யாசீர் அரபாத் கூறியபோது; "நீர் இவ்விடத்தில் இருக்கவே கூடாது, ஒப்பந்தத்தைப் பூர்த்தி செய்துவிட்டு எங்காவது விரும்பிய இடங்களைச் சுற்றிப்பார்த்து, உறுதிமொழிகளை அங்கங்கே கூறுங்கள்."

  — இவ்வாறு இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சிமோன் பெரேஸ் விடை பகர்ந்தார்.

- "வரலாற்றுச் சிறப்புமிக்க ஜெருசலேமை மீட்டுவிட, நீங்கள் புனிதப் போரொன்றை ஆரம்பித்துள்ளீர்கள்" என்று ஜொஹானஸ்பேக் பள்ளிவாசலில் குழுமியிருந்த மக்கள் மத்தியில் தோன்றிய பா, வி. இ. தலைவர் யாசீர் அரபாத் கூறினார். அவர் மேலும் கூறுகையில், "இதுவே சமாதானத்திற்கான சிறந்த வழி" என்றார்.

- டெக்ஸாஸ் கம்பனியின் இணை – உரிமையாளர் "அலன் சாப்" கூறுகின்றார்: "எமது கம்பனியின் தயாரிப்பான குண்டு துளைக்காத கண்ணாடிக் கதவுகள், பொருத்தப்பட்ட வாகனங்களில் பயமின்றிப் பிரயாணஞ் செய்யலாம். இராணுவத்தினரின் துப்பாக்கிக் குண்டுகள் தானும் இக்கதவுகளைத் தாக்குந் திறனற்றவை."



# உறவுகளைச் சரிப்படுத்தல்

**இந்தியப் பிரதமர் நரசிம்மராவின் அமெரிக்க யாத்திரையைப் பின் தொடர்ந்து பாகிஸ்தான் ஜனாதிபதி பாருக் லெகாரியும் அமெரிக்கா சென்றுள்ளார்.**


பிரித்வி

குணம்: தரை இலக்கு தாக்கும்
சக்தி: 150 முதல் 250 கி. மீ.
குண்டு எடை: 500 – 1000 கிலோ
ஏவப்பட்டது: 12 முறை
செலவு: தலா ரூ. 3 கோடி
நிலை: சோதனை முயற்சி

ஆலய தரிசனம் பாவவிமோசனம் என்பதுபோல அமெரிக்க விஜயம் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளுக்கும் மிகவும் முக்கியமாகி விட்டது. அமெரிக்க நல்லெண்ணத்தைப் பெறுவதே இருநாடுகளின் இராசதந்திரக் குறிக்கோளாக இருக்கின்றது. இதை நன்கு உணர்ந்த அமெரிக்கா இருசென்ம விரோதிகளையும் கண்டிப்பதும், அரவணைப்பதுமாகத் திரிசங்கு நிலையில் வைத்திருக்கின்றது.

இவ்வருட மே 14 ஆம் திகதி பிரதமர் நரசிம்மராவ் அமெரிக்க விஜயம் ஒன்றை மேற்கொள்ள நிதி அமைச்சர் மஃமோகன் சிங், உயர்தர ஆலோசகர்கள் ஆகியோர் அடங்கிய குழுவுடன் புறப்பட்டுள்ளார். இவருடைய குறிக்கோள் இரண்டாகும். முதலாவதாக நீண்டதூரம் பாயும் இந்தியா தயாரித்த பிரித்வி ஏவுகணையால் எழுந்த இருநாட்டு முரண்பாடுகளைத் தீர்ப்பதும், அமெரிக்கா பாகிஸ்தானுக்கு விற்க இருக்கும் 38, எப் 16 ரக போர்விமான விநியோகத்தைத் தடுப்பதுமாகும். இரண்டாவதாகத் 900 மில்லியன் டொலர் பெறுமதி மிக்க சந்தை இந்தியாவில் இருப்பதைக் காட்டி அமெரிக்க வர்த்தக சமூகத்தையும் அரசையும் தமது நாட்டுப் பக்கம் இழுப்பதும் ஆகும். அத்துடன் அமெரிக்காவும் இந்தியாவும் உலகின் இருபெரும் ஜனநாயக நாடுகள் என்பதைச் சுட்டிக்காட்டித் தமக்கிடையில் உள்ள உறவு வித்தியாசமானது என்று சந்தர்ப்பம் கிடைக்கும்போதெல்லாம் நினைவூட்டுவதுமாகும்.

அமெரிக்க — இந்திய நட்புக்கு இடையூறாக இருப்பது பிரித்வி விவகாரம் எனலாம். 8.5 மீற்றர் நீளங் கொண்ட இந்த ஏவுகணை அரைத் தொன் நிறையுள்ள குண்டை 250 கிலோமீற்றர் தூரம் செலுத்த வல்லது. இதை விசேடமாகத் தயாரிக்கப்பட்ட வாகனமொன்றிலிருந்து, அந்த வாகனத்தில் உள்ள கணனிப் பொறிகளின் உதவியுடன் விரும்பிய இலக்கிற்குச் செலுத்தலாம். இந்தியாவின் பாதுகாப்புப் படைகளின் தேவைக்காக இப்போது 100 பிரித்விகள் தயாரிக்கப்படுகின்றன. இது போன்ற ஏவுகணைகள் ஒருதற்கால இராணுவத்திற்கு மிகவும் அவசியம் என்று இந்திய தரப்பில் கூறப்பட்டாலும், இது புதியதோர் அணு ஆயுதப் போட்டிக்கு இந்திய உப-கண்டத்தில் இடம்தரும் என்று அமெரிக்கா வாதிடுகின்றது. அணு ஆயுதம், ஏவுகணைத் தொழில்நுட்பம் ஆகியவற்றால் எழுந்த இரு நாட்டுக் கருத்து வேறுபாடுகள் பிரதமரின் பயணத்தால் தீரும் என்று நம்ப இடமில்லை.

இந்தியாவில் முதலீடு செய்துள்ள பிறநாடுகளில் அமெரிக்கா முதலிடம் வகிக்கின்றது. அமெரிக்க அரசு என்னகருத்தைத் தெரிவிப்பினும் ஏற்கனவே முதலீடு செய்தவர்களும், இன்னும் முதலீடு செய்யக் காத்திருப்பவர்களும் இந்தியாவுடன் நல்லுறவைப் பேணவே விரும்புகின்றனர் அமெரிக்க வர்த்தகர்களும், முதலீட்டாளர்களும் அமெரிக்க அரசின் இந்தியா சம்பந்தமான வெளியுறவுக் கொள்கைகளைத் திசை திருப்பும் அளவுக்கு பலம் வாய்ந்தவர்களாக இருக்கின்றார்கள். ஆகவே பில் கிளின்ரன் அணு ஆயுதம், பிரித்வி, காஷ்மீர் சம்பந்தமாக இந்தியாவைக் கண்டிக்கத் துணிந்தாலும் அதை உறுதியாகச் செய்ய முடியவில்லை என்றபடியால் கடந்த ஒரு வருடகாலமாக நிரப்பப்படாது இருந்த டில்லியில் அமெரிக்கத் தூதுவர் பதவிக்கு

உப பாதுகாப்புச் செயலாளர் பிராங்க் விஸ்னர் என்பாரை நியமனஞ் செய்து இந்திய நிர்வாகிகளைக் கிளின்ரன் திருப்திப்படுத்தியுள்ளார்.

ஆனால் அமெரிக்க காங்கிரசின் மூத்த தலைவர்கள் ஆசியக் கண்டத்தில் பொதுவாகவும், இந்திய உபகண்டத்தில் குறிப்பாகவும் அணு ஆயுதங்கள் பரவுவதைத் தடுக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்திப் பேசியுள்ளனர். காங்கிரசின் வெளிவிவகாரக் குழுவின் தலைவர் லீ ஹமில்ரன் பாகிஸ்தானுக்குக் கொடுக்கப்படும் எப் 16 போர் விமானங்களுக்கு மாற்றீடாகப் பாகிஸ்தானின் அணு ஆயுதத் திட்டங்களின் நிறுத்தத்தைத் தாம் எதிர்பார்ப்பதாகக் கூறியுள்ளார். இது சாத்தியப்படும் என்று கூறமுடியாது. பாகிஸ்தான் இதற்கு ஒரு போதும் ஒத்துக் கொள்ளப்போவதில்லை; அதேசமயத்தில் யுத்த விமான விற்பனை, இந்தியா தரப்பில் பெரும் பரபரப்பைக் கிளப்பிவிட்டது. இந்த யுத்த விமானங்களின் தாககத்தை ஈடு செய்ய இந்தியா இதற்கு நிகரான போர் விமானங்களையும், பிரித்வி போன்ற ஏவுகணைகளையும் தயார் நிலையில் வைத்திருக்கவேண்டியது மிகவும் அவசியம் என்று பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். யுத்த விமானங்களையும், ஏவுகணைகளையும் தொடர்பு படுத்தவேண்டாமென அமெரிக்க அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். ஏவுகணைகள் மிக விரைவாக இலக்கை நோக்கிச் செல்லுந் தன்மை உள்ளவை, விமானங்கள் எத்தனை வேகமாக இருப்பினும் ஏவுகணையிலும் தரங்குறைந்தவையே. ஆனால் இந்தியா தனது பாதுகாப்புத் திட்டங்களை அமெரிக்காவின் சொற்படி விட்டுக் கொடுக்கத் தயாரில்லை என்பது ராவ் அவர்களின் விஜயத்தின் போது தெளிவாகியுள்ளது. அணு ஆயுதக் குறைப்புச் சம்பந்தமான பேச்சுக்களில் தாம் கலந்துகொள்ளத் தயாரென்று மாத்திரம் அவர் தெரிவித்துள்ளார். அமெரிக்க அரசின் இராசதந்திரப் பின்னடைவு என்று இதைக் குறிப்பிடலாம்.

இந்தியப் பிரதமர் தனது நாடு திரும்பிய சில நாள்களில் பாகிஸ்தான் ஜனதிபதி பருக் லெகாரி அமெரிக்கா வந்துள்ளார். எப் 16 யுத்த விமானங்களைப் பெறவிரும் பின், அணு ஆயுதப் பரீட்சையையும், தயாரிப்பையும் நிறுத்தல் வேண்டுமென அமெரிக்க அதிபர் இவரிடம் எடுத்துரைத்துள்ளார். "உயிர்களைப் பெருந்தொகையில் அழிக்கும் கருவிகளையும், அவற்றைச் செலுத்தும் சாதனங்களையும் கட்டுப்படுத்த வேண்டும்" என்பதில் கிளின்ரனும், ராவும் பொதுப்படையாக இணக்கந் தெரிவித்துள்ளார்கள். இதையே லெகாரிக்கும் கிளின்ரன் எடுத்துக் கூறியுள்ளார். இந்தியா மீது அமெரிக்க நிர்வாகம் யாதொரு அழுத்தமும் பிரயோகிக்க வில்லை. இந்தியாவில் நடக்கும் பொருளாதார மாற்றங்கள் அமெரிக்காவுக்கு மிகவும் சாதகமாக இருப்பதே காரணம். அதேசமயத்தில் யுத்த விமான வர்த்தகத்தை இந்தியப் பிரதமரால் நிறுத்த முடியவில்லை என்பது மறைக்க முடியாத உண்மையாகும். இந்தியாவும் பாகிஸ்தானும் நடத்தும் அணு ஆயுதப் போட்டியை அமெரிக்காவால் முடிவுக்குக் கொண்டுவர முடியுமா என்பது சந்தேகமே.

வார் ஈஸ்ரேன் எக்கனமைக் றிவியூ
மே, 26 1994.



அமெரிக்காவின் காங்கிரஸ் சபை முன் ராவ்.

## பீரங்கிப் படகு இராஜதந்திரம்

சிங்கப்பூர் கடற்படையின் இரண்டு நடுத்தர யுத்தக் கப்பல்கள், இந்தியக் கடற்படைக் கப்பல் ஒன்றுடன் சேர்ந்து இந்தியாவின் அந்தமான் தீவுக் கடலில் நீர் மூழ்கிக் கப்பல் எதிர்ப்பு இராணுவ ஒத்திகையில் ஈடுபட்டன. அதற்கு இந்திய நீர்மூழ்கிக் கப்பல் ஒன்று எதிர்த் தாக்கியாகப் பயன்படுத்தப்பட்டது. இந்த ஒத்திகை சென்ற பெப்ரவரி மாதத்தில் நிகழ்ந்துள்ளது. இப்படி இரு நாட்டுக் கடற்படைகளும் ஒன்றாகப் போர் அடுக்குப் பார்த்தது இது இரண்டாவது முறையாகும்.

# பாகிஸ்தான் அரசின் திண்டாட்டம்

பிரிட்டிஷ் இந்தியா காலத்தில் பெக் (Beg) குடும்பத்தினர் இராணுவ சேவையில் பிரபல்யம் வாய்ந்தவர்கள். பிரிவினைக்குப் பின் இவர்களிற் பெரும்பான்மையானோர் பாகிஸ்தான் சென்று விட்டனர். அங்கும் இவர்கள் இராணுவ சேவையில் இணைந்துள்ளனர். ஜெனரல் மிர்சா அஸ்லாம் பெக் என்பார் (Gen. Mirza Aslam Beg) இராணுவ அதியுயர் அதிகாரியாகக் கடமையாற்றிவிட்டு இளைப்பாறியுள்ளார். மூத்த இராணுவ வீரர்கள் இறப்பதில்லை, அவர்கள் மெதுவாக மறைந்து விடுவார்கள் என்பார்கள் (Old Soldiers Do Not Die, They Fade Away). ஆனால் இவர் விதி விலக்காகத் தனது அண்மைக்கால நடவடிக்கைகளால் விவாதத்திற்குரியவராகி விட்டார்.

பாகிஸ்தான் இவ்வளவு காலமும் வன்மையாக மறுத்து வந்துள்ள பல திரை மறைவு நடப்புக்களை இவர் ஆதாரபூர்வமாக வெளியிட ஆரம்பித்துள்ளார். மேடையில் பேசியும், தினசரிப் பத்திரிகைகளில் எழுதியும், இவர் பல பரம இரகசியங்களை அம்பலப் படுத்தியுள்ளார். இதனால், இன்றைய பாகிஸ்தான் அரசும், இராணுவ உயர் பீடமும் இவர் மீது கடுஞ் சினங் கொண்டுள்ளன. பாகிஸ்தானிடம் அணுவாயுதங்கள் உண்டு என்பதை இவர் திட்டவட்டமாக ஏற்றுக்கொண்டுள்ளார். விரும்பிய இலக்குகளுக்கு அணு குண்டுகளை அனுப்புவதற்கு, சீனாவிடமிருந்து பெற்றுக்கொண்ட எம் 11 ரக ஏவுகணைகளும் பாகிஸ்தானிடம் உண்டு என்பதையும் இவர் பகிரங்கப் படுத்தியுள்ளார். இந்த இரண்டையும் இன்றுவரையும் பாகிஸ்தான் மறுத்து வருவது குறிப்பிடத்தக்கது.

1987 இல் பாகிஸ்தான் அணு குண்டைத் தயாரித்து விட்டதாகவும், ஆப்கானிஸ்தானில் நடந்த ருஷ்யாவுக்கெதிரான யுத்தத்தில் ஒத்துழைத்தமைக்காக அமெரிக்கா 1990 ஆம் ஆண்டு வரை, பாராமுகமாக இருந்ததாகவும் இவர் தெரிவித்துள்ளார். அணு ஆயுதத்தை ஏவும் பொறுப்பு அணுவாயுதக் கட்டளைக் குழுவின் கையில் இருப்பதாகவும் இவர் விபரித்துள்ளார். இந்தக் குழுவில் பின்வரும் நபர்கள் அங்கத்துவம் வகிக்கின்றனர். நாட்டின் பிரதமர், ஜனாதிபதி, இராணுவத் தலைவர் இன்னும் மூவர். அணு ஆயுதங்களின் பாதுகாப்புக்கும் இவர்களே பொறுப்பு என்று அவர் வெளியிட்ட செய்திகள் தெரிவிக்கின்றன.

## முன்னாள் இராணுவத் தளபதி நாட்டின் அணுவாயுத இரகசியங்களை அம்பலப்படுத்துகிறார்

பத்திரிகையில் எழுதிய கட்டுரையில் அவர்: ''எம்மிடம் எப் 16 யுத்த விமானங்களும், மிராஜ் ரகத் தாக்குதல் விமானங்களும், எம் 11 ஏவுகணைகளும், அணு குண்டுகளும் உண்டு'' எனக் குறிப்பிட்டுள்ளார். குறி தவறாது செலுத்தும் ஆற்றல் எம்மிடம் உண்டு என அதே கட்டுரையில் அவர் தொடர்ந்து எழுதியுள்ளார்.

அத்துடன் 1990 இல் மத்திய கிழக்கிலிருந்து 6.4 மில்லியன் அமெரிக்க டொலர் உதவியாக வந்துள்ளதென்றும், இப் பணம் அதே வருடம் நடந்த தேர்தல்களில் பெனாசீர் பூட்டோவை வீழ்த்த உளவுத்துறையால் பயன் படுத்தப் பட்டதென்றும் இவர் தெரிவித்துள்ளார். இத்தகைய தகவல்கள் நாட்டை உலுக்கியுள்ளது என்று சொன்னால் மிகையாகாது. ஜெனரல் பெக் அவர்களுக்கு அடுத்த தேர்தல்களில் ஆட்சியைக் கைப்பற்றும் அபிலாசைகள் உண்டு என்று பரவலாகப் பேசப்படுகின்றது. இது உண்மையாக இருப்பின் பாகிஸ்தானை இயக்கிவரும் இராணுவத்தையும், உளவுத் துறையையும் இவர் எப்படிச் சமாளிக்கப் போகிறார் என்பது சிறிதளவேனும் புரியவில்லை.

(எப்) பார் ஈஸ்ரன் எக்கனோமிக் றிவியூ, மே 05, 1994.

# பங்களாதேசமும் சுழற் காற்றும்



சிதைவுகளுக்கிடையில் பொருள்களைத் தேடும் இரு பெண்கள்

வருடாவருடம் ஏப்ரல் முதல் மே வரையிலான காலப்பகுதியில் வங்காள விரிகுடாவை மையமாகக் கொண்ட சுழல்காற்று அதிவேகமாகப் பங்களாதேசத்தை நோக்கிச் செல்லும். காற்றும் மழையும் போதாதென்று கடலும் கொந்தளித்து எழுந்து நாட்டின் கரையோரத்தையும், சிறு தீவுகளையும் மூடிவிடும். மூன்று வருடங்களுக்கு முன்பாக இப்படியானதொரு நிகழ்ச்சியில் 130,000 மக்கள் உயிரிழந்தனர். பங்களாதேசம் உதயமாவதற்கு ஒரு சில வருடங்களுக்கு முன் இப்படியானதோர் அனர்த்தம் நிகழும் போது அப்போது அங்கு நிலைகொண்டிருந்த பாகிஸ்தானியப் படைகள் கைகட்டி நின்றார்கள் என்று சொல்லப்படுகின்றது. கடுஞ் சினங்கொண்ட மக்கள் இவர்களைத் துரத்த வேண்டும் என்று திடசங்கற்பம் பூண்டதாகவும், ஆரம்ப நிலையிலிருந்த போராட்டக் குழுக்களில் தம்மை இணைத்துக் கொண்டதாகவும் போராட்ட வீரன் மேஜர் ஜெனரல் றபிக்-உல்-இஸ்லாம் தனது சுயசரிதையில் கூறுகின்றார்.

இந்த வருடம் சென்ற மாதம் (மே) இப்படியானதோர் சுழல்காற்றுத் தாக்கிய போது 223 மக்கள் இறந்துள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. மூன்று வருடத்தில் இத்தகைய வீழ்ச்சியின் காரணம் என்ன? புயல் காற்று நாட்டின் கரையை அடையு முன்பே செய்மதி மூலம் எச்சரிக்கை கிடைத்ததே வீழ்ச்சியின் காரணம். மே 2 ஆந் திகதி புயல்தாக்கிய போது மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கிச் சென்றுவிட்டனர். அத்துடன் இம்முறை அதிர்ஷ்டம் மக்கள் பக்கம் இருந்திருக்கின்றது. கடல் அலைகள் ஏற்றம் குறைந்து வற்றுதல் நிலையிலிருந்தபடியால் பெரும் பாதிப்பு ஏற்படவில்லை. செய்மதித் தொடர்புகளுக்கு ஈடாகப் பாதுகாப்புக் கட்டடங்களும், மேட்டு நிலங்களில் அரசினால் அமைக்கப்பட்டுள்ளன. 900- க்கு மேற்பட்ட இத்தகைய கட்டடங்கள் 10 மீற்றருக்கு மேற்பட்ட உயரமுள்ள தூண்களில் கட்டப்பட்டுள்ளன. மே 02 அதிகாலை 2 மணிக்கு இருப்பிடங்களை விட்டு மேற்கூறிய பாதுகாப்பு மையங்களில் இடம் பிடிக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இதன் பின் 800,000 மக்கள் இவ்வாறு புகலிடம் தேடியுள்ளனர். 1991 ஆம் ஆண்டுப் புயலின் தாக்குதலில் தனது மூன்று குடும்ப அங்கத்தவர்களை இழந்த அபு சபார் என்ற கடற்றொழிலாளர் இம்முறை இவ்வாறு உயிர் தப்பியுள்ளார். ஆனால் வருடா வருடம் பாதிப்படையும் கொக்ஸ் பசார்ப் பகுதியில் இம்முறை 85 பர்மாவிலிருந்து வந்த முஸ்லிம் அகதிகள் இறந்துள்ளனர். மனித உயிர்கள் பெருந்தொகையில் காப்பாற்றப்பட்டாலும், பொருட்சேதம் இம்முறையும் எப்போதும் போல் இருந்துள்ளது. வீடுகள், பயிர்கள் கால்நடைகள் யாவும் அடித்துச் செல்லப்பட்டுள்ளன.

உலகக் காலநிலை எதிர்வு கூறும் நிறுவனத்திற்குப் பங்களாதேசம் நன்றி கூறவேண்டியுள்ளது. World Meteorological organisation எனப்படும் இந்த அமைப்புத் தனது செய்மதி மூலம் நித்திய ஆய்வுகள் செய்தபடியே இருக்கின்றது. இந்தியாவின் இன்சாற் (Insat) செய்மதியும் இத்தகைய தகவல்களை உடனுக்குடன் பங்களாதேசத்திற்கு அனுப்பி வருகின்றது. ஜப்பானுக்குச் சொந்தமான காலநிலை அறிவிக்கும் செய்மதியும் உதவுகின்றது. இந்த மூன்றினதும் உதவியால் கரையோர மற்றும் உட்பகுதி மக்களுக்கு ஐந்து மணித்தியால முன் எச்சரிக்கை கிடைக்கின்றது. நிரந்தரமாகப் பொருத்தப்பட்ட ஒலி பெருக்கிகள் பாதுகாப்புத் தேடும்படி அலறுகின்றன. இத்துடன் தொண்டர் குழுக்கள் மக்களை எச்சரிக்கும் பணியில் ஈடுபடுகின்றன. பன்னெடுங்காலத்தின் பின் பங்களாதேசம் எல்லாம் தலைவிதி என்று பொறுத்திராது கடல், காற்று, மழை என்பவற்றுடன் போராட ஆரம்பித்துள்ளது.

ரைம் மே 16, 1994.

# பின் வாங்குகிறார்

இலட்சியவாதிகளும், கசப்புணர்வுடைய நாடுகடத்தப்பட்டோரும் கூடிய வெறும் மகாநாடுகளில் ஒன்றுதான் அது. பிரதேசப் பத்திரிகையாளர் ஒருகால் தலை அசைத்து விட்டுச் செல்ல, மீண்டும், யாராலும் அறியப்படாமல் மறப்பு என்னும் இருளில் மறைந்து போகக் கூடியதுதான். ஆனால் ஜகார்த்தாவிலிருந்து இந்தோனேசிய அரசாங்கத்தின் கடும் எதிர்ப்புக் காரணமாக, மணிலாவில் நடைபெற்ற ''கிழக்குத் திமோர் பற்றிய ஆசிய - பசுபிக் மகாநாடு'' தனிப்பட்டவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு சிற்றவை என்ற நிலைமாறி, ஓர் அனைத்துலக முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாகி, இந்தோனேசிய அரசாங்கத்திற்கும், பிலிப்பைன்சுக்கும் இடையில் பொருளாதார அரசியல் தொடர்புகளைத் துண்டாடும் அளவுக்குப் பூதாகாரமாகிவிட்டது. இறுதியில் பாவம் பிலிப்பைன்ஸ் ஜனாதிபதி ஃபிடெல் ராமோஸ் பின்வாங்கி அந்நிய நாட்டவர் இக்கூட்டத்தில் கலந்து கொள்ளக் கூடாது என்று தடைவிதிக்கும் அவல நிலைக்குத் தள்ளப்பட்டார். ஆனால் அவரது புகழேணியில் ஏறிக் கொண்டிருந்த படிமத்தில் மாசு படிந்தது. உள்ளூரிலும், வெளிநாட்டிலும் அவர் நாட்டின் ஜனநாயக இலட்சியங்களுக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் நடந்துகொண்டார் என்று குற்றஞ் சுமத்தப்படுகிறார்.

**ஜகார்த்தாவின் அழுத்தத்துக்கு வளைந்து கொடுக்கிறார் ராமோஸ்**

அரசியல் அவதானிகளுக்கு வியப்பூட்டும் விடயம்: கிழக்குத் திமோர் பற்றிய மகாநாடு ஒன்று ஏற்பாடு செய்யப்படுகிறது எனும் செய்தி பிலிப்பைன்ஸ் அதிகாரிகளுக்கு 1993 ஜனவரி மாதமே தெரியும் என்ற புதினம் வெளிப்பட்டதாகும். சென்ற நவம்பர் மாதம் அம்மகாநாட்டுப் பிரதம ஏற்பாட்டாளர் ஆன றெனாரோ கொன்ஸ்தந்தினோ (மகன்) ஜனாதிபதியின் பாதுகாப்பு ஆலோசகர் அஜாஸே அல்மென்ரேயைச் சந்தித்தபோது, அவர்; அரசாங்கம் இந்த விடயத்தில் தலையிடமாட்டாது; ஏனெனில் அப்படித் தலையிடுவது 1986 இல் பேடினன்ட் மார்க்கோஸின் வீழ்ச்சிக்காகப் போராடிய பிலிப்பைன்ஸ் மக்கள் எந்த இலட்சியங்களுக்குக்காகத் தியாகம் செய்தார்களோ அவர்களுக்கு மாறான செயலாகும் என்றார். ஆனால் ராமோஸ் இந்தோனேசிய அரசின் எதிர்ப்பின் உத்வேகத்தைக் கண்டு அச்சமடைந்தார். தேசியப் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படும்போது அரசின் உயிர் நாடியான நலன்களுக்குப் பாதகம் விளையும் போது மட்டும் உபயோகிக்கக்கூடிய விசேட அதிகாரங்களைப் பயன்படுத்தி, ஜனாதிபதி ராமோஸ் அவுஸ்ரேலிய சிட்னி நகரைத் தளமாகக் கொண்டு செயற்படும் எதிர்ப்பு இயக்கத் தலைவர் ஜுவான் ராமோஸ்




''சுஹாற்றோ மார்க்கோசின் விதியை அனுபவிப்பாரா?''
''கிழக்கு திமோரில் மனிதப்படுகொலைகளை நிறுத்துக''
— மகபாயன்

இப்படியான கடூர வாசகங்களைத் தாங்கிய சுலோக அட்டைகளுடன் பிலிப்பைன்ஸ் வாசிகள் ஊர்வலம் செல்கிறார்கள்.

இந்தோனேசியா பற்றிய ஓர் இரக்கச் சொல்லேனும் அவர்கள் வாயில் வரவில்லை.

ஹோர்த்தா திமோரிலிருந்து வரும் ஏழு சகபாடிகளுக்கும் மகாநாட்டில் பங்குபற்ற முடியாமல் செய்துவிட்டார்.

மகாநாட்டின் தலைவர் கொன்ஸ் தந்தினோ, ஒரு மனித உரிமைகளுக்காகச் செயற்படுபவர்; பிரபல இடதுசாரி வரலாற்றறிஞர் ஒருவரது மகன். இத்தடைகளுக்காக அவர் ராமோஸின் செயல்களைக் கடுமையாக விமர்சித்தார். ''இந்தோனேசிய அழுத்தத்துக்கு வளைந்து கொடுத்தது என்பது வெளிப்படையாகத் தெரிகிறது''. ''ராமோஸ் அரசாங்கம், பிலிப்பைன்ஸ் நாடு இந்தோனேசியாவின் 28 ஆம் மாகாணம் என்று நினைக்கிறதுபோலும்'' என்று இகழ்ந்தார். ஜகார்த்தா அரசு ராமோஸின் செயல் குறித்துத் தனக்குத் திருப்தி என்று கூறியது.



டிவியில் இந்தோனேசிய படைவீரர்:

கிழக்கு திமோரைப் பணம் சம்பாதிக்கும் இடமாகக் கருதுகிறார்கள்

கிழக்குத் திமோர் விடயமாக இந்தோனேசியாவின் குரைப்புக்கு ஆளாகியநாடு பிலிப்பைன்ஸ் மட்டுமன்று. நியூசிலாந்தின் பிரதமர் ஜிம் பொல்கர் மே 15— 17 ஆம் திகதிகளில் உத்தியோகபூர்வமான இந்தோனேசிய விஜயத்தின் போது தம் நாடுபற்றிய கண்டனங்களுக்கு விளக்கங் தெரிவிக்கும் நிலை ஏற்பட்டது; அவருடைய நாட்டுப் பாராளுமன்றத்தினர் கிழக்குத் திமோர் மக்களுக்குச் சுயநிர்ணய உரிமை வேண்டும் என்ற தீர்மானத்தைச் செய்து ஒரு விண்ணப்பமாக (இந்தோனேசிய அரசுக்கு) அனுப்பியது, இந்தோனேசிய ஆட்சியாளருக்குப் பிடிக்கவில்லை. இந்த வேளையில்தான் பிலிப்பைன்ஸ் முன்னாள் வெளிவிவகாரச் செயலர் ராவுல், மன்கிளாபஸ் மணிலாவின் நிலைபற்றி ஜகார்த்தாவில் விளக்கங் கொடுத்தார்.

ஸ்தானிகர் மட்டத்திலானஇராஜதந்திர எதிர்ப்புக்களும், விளக்கங்களும் காற்றில் மிதந்ததற்குக் காரணம் கிழக்குத் திமோரில் வெளிநாட்டுப் பத்திரிகையாளர் இருமுறை சுற்றுப் பயணத்தை மேற்கொண்டு அங்கு நிகழ்ந்தவற்றை உலகறியச் செய்ய முற்பட்டமையாகும். இதில் ஒரு சுற்றுப் பயணத்தின் போது, டிலி சிறைச் சாலையிலிருந்த அரசியற் கைதிகள் எத்தூண்டுதலுமின்றித் தாமாகவே திடீரென முன்வந்து ஒரு வீதி (அடையாள எதிர்ப்பு) ஊர்வலத்தை ஏற்பாடு செய்தனர்; வெளிப்படையாக அரசின் கொடுமையை எதிர்க்கும் செயல்களில் ஈடுபட்டனர்.

இந்தோனேசிய அரசுக்கு ஆத்திரமூட்டிய மற்றொரு நிகழ்ச்சி பிரித்தானிய தொலைக்காட்சிப்படம் ஒன்றை நியூசிலாந்து ஒளிபரப்பியதாகும். அதில் கிழக்குத் திமோர் நாட்டைப் போர்த்துக்கீசர் விட்டு விலகியபோது, 1975 இல் இந்தோனேசியப் படைகளை அனுப்பிக் கைப்பற்றி, அந்நாட்டு மக்களைப் பலாத்காரமாகத் தம் ஆட்சிக்கு உட்படுத்திய துன்பியல் வரலாறு சித்திரிக்கப்பட்டது.

ராமோசின் நெஞ்சம் நிறைந்த திட்டமான கிழக்கு ஆசிய வளர்ச்சிப் பிரதேசம் (ஈகர்) தென் மின்டானோவிலுள்ள தவாஓ ஜெனரல் சாந்தோஸ் நகர் ஆகியவற்றையும், இந்தோனேசியாவுக்குரிய வடசுலாவெசி மாகாணத்தையும் உள்ளடக்கிய இந்தோனேசியாவுடன் கடும் பகைமை ஏற்பட்டால் முதலில் நிறுத்தப்படுவது இத்திட்டமாகலாம். மே 26 — 27 ஆந் திகதிகளில் தவாஓ வில் இரு தரப்பாரும் கூடி இதனைக் குறித்து ஆலோசிக்க இருந்த நிகழ்ச்சி நிரல் பின்போடப்பட்டது. ஏனெனில் இந்தோனேசிய வர்த்தகர்களும், அரச உத்தியோகத்தரும் தாம் வரமுடியாது என அறிவித்திருந்தனர்.

''ஈகாவின்'' பொருளாதார ஆலோசகர் அந்தோனியோ பெல்ரா அக் கூட்டத்தில் கையெழுத்திடத் திட்டமிட்ட இணை தொழில் முயற்சிகள் 12 இல், 9 உடனே எடுத்துக் கொள்ளப்படமாட்டாது என்று அறிவிககப்பட்டது என்றார். ''இவை வெறுந் திட்டமிடும் நிலையில் உள்ளவை அல்ல; ஏலவே, அதற்குரிய பணம் வங்கிகளில் இடப்பட்டுவிட்டது''. இதற்கிடையில் இந்தோனேசியா, பிலிப்பைன்ஸ் மீனவர்கள் தம் கடற்பரப்பில் மீன் பிடிக்கும் போது அவர்களைப் பார்க்கும் பார்வை மாறுபட்டது 'ஜெனரல் சாந்தோஸ்' துறைமுகத்திலிருந்து மீன் பிடிக்கச் சென்ற 25 சிறு படகுகள் ஒரு வாரத்துக்குள் தடுத்து வைக்கப்பட்டன.

''ஈகா'' எண்ணக் கரு மீன் பிடித்தொழில் திடீர் வளர்ச்சி பெற்றதிலிருந்தே உதயமானது. பிலிப்பைன்ஸ் தொழில் திட்டங்கள் இந்தோனேசியக் கடல் எல்லைக்குள் மீன் பிடித்தே வளர்ச்சியுறும் என்ற நம்பிக்கை இருந்தது. ''எமது மீன்பிடிக்கு இந்தோனேசியா தடைவிதித்தால் 5 தகரத்தில் அடைக்குந் தொழிற்சாலைகள் மூடப்படவேண்டும்'' என்கிறார் பெல்ரா. திமோர் மகாநாட்டுடன் திட்டமிட்ட கண்டனப் பேரணி ஒன்றை நடத்த ஏற்பாடு செய்தமை பற்றி அவர் எமது

சஞ்சிகைக்குக் கருத்துத் தெரிவிக்கையில், ''எந்த ஒரு மக்கட் குழுவும் இப்படிப் பைத்தியகாரத் தனமாக நடக்கும் என நான் அறியவில்லை'' என்கிறார்.

ராமோசுக்கு வேறு வழிகளிலும் கஷ்டம் உண்டாகிறது. ஆறு 'ஆசியான்' அரசுகளுக்கிடையில் எழுதாவிதி ஒன்று உண்டு; அவை ஒன்றின் உள்நாட்டு விவகாரத்தில் மற்றொன்று தலையிடலாகாது என்பது. ஜகார்த்தா அரசு மணிலாவுக்கும், மொறோ தேசிய விடுதலை முன்னணிக்குமிடையில் நடைபெற்றுவரும் சமாதானப் பேச்சு வார்த்தைகளில் ஆக்கபூர்வமாக ஈடுபட்டு வருகிறது; இந்த நிலையும் திமோர் மகாநாட்டுப் பிரச்சினையால் பாதிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்தில் கிழக்குத்திமோர் பற்றிய அக்கறை பெரிதாக இருந்ததில்லை. தொலைக்காட்சி விவரணப் படமும், பொல்கரின் விஜயமும் சேர்ந்தபடியால் 99 பாராளுமன்ற உறுப்பினருள் 51 பேர் ஒரு விண்ணப்பந் தயாரித்து கிழக்குத் திமோருக்குச் சுய நிர்ணய உரிமையளிக்க வேண்டும் என்று இந்தோனேசிய ஸ்தானிகரிடம் மே 5 இல் கையளித்தனர். இந்தோனேசியப் படைகளை உடனே மீள எடுத்துக் கொள்ள வேண்டும்; தம் இனத்தவரைத் திமோரில் குடியேற்றுவதும், திமோர் வாசிகளை நாடு கடத்தித் தம் இடத்துக்குக் கொண்டு செல்வதும் உடனே நிறுத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்தோனேசியா பச்சையான தலையீடு எனக் கருதியது.

பொல்கர் இந்தோனேசியாவில் வந்து இறங்கியபோது நியூசிலாந்தின் மகாதேசாதிபதி கதரீன் ரிஸாட் அம்மையார் அவரது சிக்கல்களை மேலும் கூட்டிவிட்டார். புதிய இந்தோனேசிய ஸ்தானிகர் தாஹ்லியா சொமலாங் தமது பதவிப் பத்திரங்களைச் சமர்ப்பித்தபோது மகாதேசாதிபதி தாம் அரசியலுக்கு அப்பாற்பட்ட ஸ்தானத்தில் அமர்ந்திருப்பவள் என்பதை மறந்து, ''கிழக்குத் திமோர் நியூசிலாந்து மக்களுடைய உள்ளங்களைத் தொடர்ந்து உறுத்தி வருகிறது'' என்ற கருத்தைக் கட்டவிழ்த்து விட்டார். அது தனிப்பட்ட முறையில் தெரிவித்த கூற்று எனினும் நியூசிலாந்தின் ''ஹெரால்'' (தூதன்) பத்திரிகை அதைப் பிரசுரித்து விட்டது.

பிரதமர் தம்மிடம் பாராளுமன்ற உறுப்பினர் கொடுத்த விண்ணப்பத்தை இந்தோனேசியா ஆட்சியாளர்களிடம் கையளிக்க மறுத்து இந்தோனேசியாவின் ஒரு பகுதியாகவே கிழக்குத் திமோரை இன்று நியூசிலாந்து அரசு கணிக்கிறது என்பதே வெலிங்ரன் அரசின் கொள்கை என்பதை வற்புறுத்தினார். எனினும் பின் ஜனாதிபதி சுஹார்த்தோவுடன் உரையாடிய போது மனித உரிமை மீறலைக் குறித்துத் தமக்கு உள்ள நெருடல் உண்டு என்பதைக் குறிப்பிட்டார்.

சுஹார்த்தோ இந்தோனேசியா கிழக்குத் திமோருக்குப் படையெடுத்ததற்கு முன் நிகழ்ந்த சம்பவங்களைப் பற்றிய தம் பக்க நியாயங்களை விவரித்து நியூசிலாந்துப் பாராளுமன்ற உறுப்பினர் தாமே நேரில் வந்து இந்தோனேசியாவின் 27 ஆம் மாகாணத்தைப் பார்வையிடும்படி அழைப்பு விடுத்தார். பின்னர் பொல்கர் இந்தோனேசியாவுக்கும், போர்த்துக்கலுக்கும் இடையில் திமோர்ப் பிரச்சனை குறித்துத் தொடர்ந்து நிகழும் உரையாடல் காரணமாக ''ஒரு நீதியானதும், சகல அம்சங்களையும் உள்ளடக்கியதும் சர்வதேச அங்கீகாரம் பெறக்கூடியதுமான ஓர் அமைதித் திட்டம் உருவாகும்'' எனத் தாம் நம்புவதாக அறிக்கை வெளியிட்டார்.

நியூசிலாந்திலோ விண்ணப்பம் அனுப்பமுன் நின்றவரும், எதிர்க்கட்சியான தொழிற்கட்சி அங்கத்தவருமான ஃபில்கொஃப் சுஹார்த்தோவின் அழைப்பைக் கேலி செய்தார். ''நியூசிலாந்து பா. உறுப்பினர்கள் பார்வையிட்டுத் திரும்பி அரை மணி நேரத்திற்குள் திமோரியர் கேள்வி முறையற்ற சிறையும், கடூரத் தண்டனையும், மரண தண்டனைகூட அனுபவிப்பது நிச்சயம் என்ற நிலையில் யார்தான் எங்களுக்கு உண்மை சொல்ல முன்வருவார்'' என்றார்.

1990 இலிருந்து நியூசிலாந்து திமோரில் நிகழும் மனித உரிமை மீறல் குறித்து அக்கறை செலுத்தத் தொடங்கியது; ஜகார்த்தா, ஐ. நா மனித உரிமை ஆணைக்குழுவில் இடம் பெற முயன்றபோது அதனை ஆதரிக்க மறுத்தது. ஆனால் இப்போது அதிகாரிகள் ஜகார்த்தா தன் செயல்களில் மாசு இல்லாமல் கழுவ முயல்வதாகக் கருதுகின்றனர். வெலிங்ரன் அரசு, இந்தோனேசியா ஐ. நா பாதுகாப்புச் சபையில் இடம் பெற முயல்வதை இன்று ஆதரிக்கிறது; இரண்டு ஆண்டுகளுக்கு முன் தான் அங்கத்துவம் பெற முயன்ற போது இந்தோனேசியாவின் ஆதரவைப் பெற்றதை மறக்கவில்லை.

நியூசிலாந்தின் கவனம் ஒரு குறுகிய எல்லைக்குட்பட்டதே எனினும் கிழக்குத் திமோர் மகாநாடு குறித்து பிலிப்பைன்சுடன் ஏற்பட்ட மோதல் கூடிய அழிவுக்கு வழி செய்யும் போலத் தோன்றியது. விசேட தூதுவர் மன்கிளாப்பைகைச் சந்தித்த பின் அலற்றாஸ் அறிவித்தார்: ''இராஜதந்திர மொழியை இங்கு நாம் உபயோகிக்க வேண்டாம் இந்தோனேஷியா, பிலிப்பைன்ஸ் அரசாங்கம் இக்கருத்தரங்கை நிறுத்த வலிமையற்றது என்ற நிலை குறித்து ஏமாற்றமடைந்துள்ளது''.

அலற்றாஸ்லின் கூற்றுப்படி மணிலா இக்கருத்தரங்கை நிறுத்தி விடுவதாகச் சென்ற ஆண்டு இது பற்றிய அறிவித்தல் வந்தபோது வாக்குறுதியளித்தது. ஆனால் மார்ச்சில் பிலிப்பைன்ஸ் அதிகாரிகள் இது விடயமாகத் தமது வாக்குறுதியைக் காப்பாற்ற இயலாத நிலை உண்டு எனச் செய்தியறிவித்தனர். இந்தோனேசியா எந்தச் சாக்குப் போக்கையும்ஏற்கத் தயாராயில்லை. ''அவர்களுடைய அரசியல் யாப்புத் தடைகளை நாம் உணர்கிறோம். ஆனால் தேசிய நலன் என்ற விடயமும் ஒன்று உண்டே'' என்றார் வெளிநாட்டமைச்சர்.

மே 31, ஜூன் 4 மகாநாட்டுடன் நெருங்கிய தொடர்புடைய 13 குழுக்களில் மோபியர் உதவி குறித்த தேசிய அவையும் ஒன்று. இது தன் குடை நிழலில் கிழக்குத் திமோரின் (அந்நிய ஆட்சி) எதிர்ப்பு அமைப்பாகிய ஃபிறெற்றிலினும் சேர்ந்திருக்கிறது. அதனோடு இணைந்தவையே நெதர்லாந்தில் இயங்கும் கிழக்குத் திமோர் பற்றிய சர்வதேச நீதியாளர் மேடையும், பிரித்தானியாவில் கிழக்குத் திமோருக்கான எரிக் அவெபெரியனி பாராளுமன்றத்தினர் என்ற இயக்கமும் ஆம்.

இந்தோனேசியா கிழக்குத் திமோர் குறித்துக் கடைப்பிடிக்கும் கொள்கையை வெளிப்படையாகக் கண்டித்த ஒரே ஓர் இந்தோனேசிய புத்திஜீவி ஆதித் ஜோன்ட்றோ மட்டுந்தான். மார்ச்சில் அவுஸ்ரேலிய செய்திப் பத்திரிகைகள் அவரது கட்டுரைகளில் சில பகுதிகளை வெளியிட்டன: 1991 இல் டிலியில் நிகழ்ந்த படுகொலை பற்றிய எண்ணிக்கை, மிக உயர்வாகக் கொடுக்கப்பட்ட கட்டுரையும் அவற்றுள் ஒன்று. இந்தோனேசிய அக் கல்விசார் நிபுணர் அக்கணக்கை மீண்டும் உறுதிப்படுத்தினார். அது லிஸ்பனில் (போர்த்துக்கல்) வெளியிடப்பட்டது. ஆனால் திமோரில் எடுத்த கணக்கே. அவர் அவுஸ்ரேலிய தொலைக்காட்சிக்காகச் சிங்கப்பூரில் வைத்து வழங்கிய நேர் முகத்தில் இதனை உறுதிப்படுத்தினார்.

அவர் தேசபக்தியற்றவர் எனக் குற்றஞ் சாட்டப்பட்டாலும், அவர் நேரடியாக அரசாங்கத்தின் 'கரைச்சல்' எதற்கும் ஆளாகவில்லை என்றார். "கிழக்குத் திமோர் நிலைமை எவ்வளவு இறுக்க மின்றி இருக்கிறது என்பதை இது தெளிவாக்குகிறது" என்று அவர் வார் ஈஸ்ற்ரேன் எக்கனமிக் றிவியூ சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் கூறினார். ஆனால் டிலியில் ஏற்பாடு செய்யப்பட்ட சுற்றுப் புறச் சூழல் பற்றிய மகாநாட்டில் பேசுவோர் பட்டியலிலிருந்து அவர் பெயர் நீக்கப்பட்டது. இம் மகா நாட்டின் நோக்கம் திமோரிலுள்ள குழுக்களுடன் நேசத் தொடர்புகளை ஏற்படுத்துவதாகும். இம் மகாநாடும் பின்னர் நடைபெறவில்லை.

இந்தோனேசிய அரசாங்கம் ஒரே குரலிற் பேசினாலும், அரசாங்க வெளியுறவு அமைச்சுக்கும், படையணிகளுக்கும் திமோர் குறித்துக் கடைப்பிடிக்கும் கொள்கை பற்றிக்கருத்துவேற்றுமை உண்டு. ஆக்கபூர்வமான அணுகு முறை எனக் கைக்கொண்டு இராணுவக் குறைப்பையும் மேற்கொள்ள குடிசார் அதிகாரிகள் விரும்புகிறார்கள். இராணுவமோ அம் மாகாணம் தனது சொந்தமண் என்ற ரீதியில் சிந்திக்கின்றது. தான் முன்னர் செய்த தியாகங்களை நினைவு படுத்துகின்றது. ஆனால் அதே சமயம் இது பற்றி இரட்டைச் சிந்தனையுண்டு என்பது புலப்படுகிறது. சென்ற ஏப்ரலில் ஒரு படைத் தலைவர் கூறினார்: "இன்னும் இரண்டு தலைமுறை சென்றால் தான் பெரும்பாலான திமோர் மக்கள் இந்தோனேசிய ஆட்சியை ஏற்பர்" என்பதாக.

## கடுமையான படிப்பினை

அமெரிக்காவின் மெய் வல்லுநர் விளையாட்டு, காலணி உற்பத்தியில் மாபெரும் நிறுவனமான நைகி (Nike) சீனாவில் சறுக்கி விழுந்து கடுமையான பாடம் படித்துக்கொண்டது. அது தனது விளையாட்டுக் காலணிகள் விற்பனை நிலையம் ஒன்றை ஷங்காய் நகரில் ஒரு மில்லியன் டொலர் முதலீட்டில் திறந்து நடத்திய பின்பு, அண்மையில் அதனை மூடிவிட்டது. சீனாவின் கொள்கைத் திட்டமிடலில் திடீர் திடீரென ஏற்படும் மாற்றங்கள் எப்படி வெளிநாட்டு முதலீட்டாளர்களைப் பாதிக்கும் என்பதற்கு இது ஓர் எடுத்துக்காட்டாகும். நைகி நிறுவனம் அங்கே கடை திறந்த பொழுது அந்த இடம், அந்த நகரத்திற்கான தெரு, மற்றும் தெருவின்கீழ்ப் பகுதி அபிவிருத்தி வேலைகளால் பாதிப்புக்குள்ளாகாதென உறுதி அளிக்கப்பட்டிருந்தது. ஆனால் அப்படி வாக்குறுதி செய்த அதிகாரிகளுக்குத் தெரியாமல் தலைவர் டென் சியாவோ பிங் அதற்குச் சில வாரங்களுக்கு முன்பு ஷங்காய் உயர்தர அதிகாரிகளை, அங்கே நகர அபிவிருத்தி மந்தகதியில் நிகழ்வதாகக் கூறி ஏசியிருந்தார். அதனால் அடுத்த சில வாரங்களுக்குள் நகரத் திட்டமிடல்கள் நடந்து நைகி நிறுவனம் கடை வைத்திருந்த தெருவும் வீதி விரிவாக்கத்திற்கு உட்பட்டதால் பல கட்டடங்கள் இடிக்கப்பட நேர்ந்தது.

காணிவிலை வானளவு உயர்ந்திருப்பதால் அங்கு வேறு இடத்தில் கடையை அமைப்பதில்லையென நைகி தீர்மானித்து ஒரேயடியாக தனது முயற்சியை அங்கு கைவிட்டுள்ளது.

# யேமனில் வடக்குத் தெற்குப் போர்

நெடுங்காலமாகத் தனித் தனியாக ஆட்சி செய்யப்பட்டு வந்த வடக்கும், தெற்கும் நான்கு வருடங்களுக்கு முன் ஒன்றிணைந்து, 'யேமன்' (Yemen) என்ற பெயருடன் நிலை பெற்றுள்ளது. அண்மையில் வடக்கைச் சேர்ந்த ஜனாதிபதி அலி அப்துல்லா சலே அவர்களுக்கும் தெற்கைச் சேர்ந்த உப ஜனாதிபதி அலிசலேம்அல் பைத் அவர்களுக்குமிடையில் முரண்பாடுகள் தலை தூக்கியுள்ளதால், ஒரு வடக்குத் தெற்குப் போர் ஆரம்பமாகியுள்ளது. இரு பகுதியும் நான்கு வருடங்களுக்கு முன் ஒன்றிணைந்தாலும் ஆட்சிப் பொறுப்புக்கள் பிரிந்தே இருந்தன. வடக்கின் இராணுவமும், தெற்கின் இராணுவமும் தனித்தனியாக இயங்கி வந்துள்ளன. அதேபோன்று இரு பகுதியின் பொருளாதாரக் கலப்பும் நடைபெறவில்லை. சுருங்கச் சொன்னால் இருபகுதிப் பொதுமக்களுக்கிடையில் ஒற்றுமை நிலவினாலும் ஆட்சியாளர்களுக்கிடையில் பரஸ்பர நம்பிக்கையும், நல்லெண்ணமும் ஏற்படவேயில்லை. இதற்குத் தலைவர்களுக்கிடையில் ஒற்றுமையின்மையைவிடப் பிற அடிப்படைக் காரணங்களுமுண்டு.

வடக்கிற்கும், தெற்கிற்கும் நிறையச் சமுதாய அரசியல் வித்தியாசங்கள் உண்டு. இரு பகுதியும் மூன்று நூற்றாண்டுகளுக்கு மேலாக சவுதிஅரேபியாவுடன் இணைந்து துருக்கியர்களால் ஆட்சி செய்யப்பட்டு வந்துள்ளமை கடந்த கால வரலாறு. இரு பகுதிகளும் சவுதிஅரேபியா உள்ள நிலப்பரப்பில், சவுதியின் தெற்கு எல்லையில் காணப்படுகின்றன என்றாலும் யேமன் மத்திய கிழக்கின் வறுமை மிக்க நாடு என்று சொன்னால் மிகையாகாது. பிற மத்திய கிழக்கு நாடுகள் கொடுக்கும் உதவிப் பணத்தில் இந்நாடு இயங்கிக் கொண்டிருக்கின்றது என்பது ஒரு கசப்பான உண்மை. மிக அண்மையில் தெற்கு யேமனியில் எண்ணெய்க் கிணறுகள் தோண்டப்பட்டு குறிப்பிட்ட வருமானம் கிடைக்க ஆரபித்துள்ளது. இதுவும் மோதல் நிலைக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது. தெற்குப் பெற வேண்டிய வருவாய் வடக்கினால் அடித்துச் செல்லுகின்றது என்ற குற்றச் சாட்டைத் தென் யேமனைச் சேர்ந்த உப ஜனாதிபதி அல் பைத் கிளப்பியுள்ளார்.

1839 ஆம் ஆண்டு தென் யேமனை, பிரிட்டன் துருக்கியரிடமிருந்து கைப்பற்றியுள்ளது. ஏடன் (Aden) என்ற பெயரில் பிரிட்டி



தலைநகர் சானாவின் தெருக்களில்
வட யேமன் படைகள் ரோந்து

சாரால் கடற்படைத் தளமாக இப்பாகம் 1967 ஆம் ஆண்டுவரை ஆட்சி செய்யப்பட்டுள்ளது. இவ்வருடம் விடுதலை பெற்றபின் மத்திய கிழக்கின் முதலாவது கொமியூனிச நாடாக தென் யேமன் உருப்பெற்றுள்ளது. 1859 முதல் 1869 வரையிலான காலப்பகுதியில் சுயெஸ் கால்வாய் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன்பின் இந்திய உப கண்டத்திற்குப் பிரிட்டிஷ் கப்பல்களின் போக்குவரத்திற்கு ஜிபிறோல்ராமுனை, மோல்றா, ஏடன் என்ற சங்கிலித் தொடர் பாதுகாப்பு வழங்கியுள்ளன.

பிரிட்டிசார் 1947 இல் இந்தியாவை விட்டு வெளியேறியபின் ஏடன் தனது முக்கியத்துவத்தை இழந்துவிட்டதுஎனலாம். 1967 இல் அது விடுதலை பெறுவதற்கு இது அடி கோலியுள்ளது. வடக்கு யேமனின் வரலாறு வித்தியாசமானது. முதலாம் உலகயுத்தம் முடிவுறுந் தருணத்தில் துருக்கியர் நலிவுற்ற நேரத்தில் வடக்கு யேமன் தனது விடுதலையைப் பறித்து எடுத்துக் கொண்டதெனலாம். இதன் பின் வடக்கு யேமன் அப்பகுதியில் உள்ள பிரதான குடும்பத் தலைவர்களால் கூட்டாட்சி முறையில் நிர்வகிக்கப்பட்டு வந்துள்ளது.

1990 இல் இருபகுதியும் ஒருங்கிணைந்துள்ளன என்றாலும் ஜனாதிபதிக்கும், உப ஜனாதிபதிக்குமிடையில் நிலவிய தனிப்பட்ட விரோதங்கள் பூரணமான ஒருங்கிணைப்புக்குத் தடையாக இருந்துள்ளன. அரேபியத் தீபகற்பத்திற்கே முன்மாதிரியாகச் சென்ற வருடம் (1993) மக்கள் வாக்களிப்பினால் பாராளுமன்றத் தேர்வுகள் நடைபெற்றுள்ளன. இத்தேர்தலின்பின் அமைச்சர்கள் நியமனத்தில் நிகழ்ந்த வஞ்சகத்தால் இரு தலைவர்களுக்குமிடையில் கசப்புணர்வு உச்ச நிலைக்குச் சென்றுள்ளது. ஜனாதிபதி அலி அப்துல்லா சலே அவர்கள் வடக்கைச் சேர்ந்த 21 அங்கத்தவர்களுக்கு அமைச்சர் பதவி வழங்கியுள்ளார். இந்த 21 அமைச்சர்களில் சிலர் இஸ்லாமிய அடிப்படைவாத அமைப்புக்களைச் சேர்ந்தவர்கள். மிகக் குறைந்த பதவிகளே தென் யேமன் அங்கத்தவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. இதையும் பொறுத்துக்கொண்ட உப ஜனாதிபதிக்கு இரண்டு மாதத்தில் இன்னுமோர் அடி காத்திருந்தது. தென் ஜேமனில் அமுலில் இருக்கும் சோசலிச சட்டங்களை நீக்க வேண்டும் என்ற பிரேரணையை இஸ்லாமிய அடிப்படைவாதத் தலைவர் பாராளுமன்றத்தில் கொண்டு வந்துள்ளார். இதைப் பொறுக்காத உப ஜனாதிபதி அல் பைத், வட யேமன் தலைநகர் சானா (Sana) வை விடுத்துத் தெற்கு நோக்கிச் சென்றுள்ளார். இதன்பின் அவர் திரும்பவேயில்லை. உப ஜனாதிபதி விலகிச் சென்றுள்ளதால் அரசு தொடர்ந்து நடைபெற முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. வரவு செலவு அறிக்கை தயாரித்தளிக்கப்படாமல் குழப்ப நிலை ஆரம்பமாகியுள்ளது.

பின்பு ஜனாதிபதி சலே, உப ஜனாதிபதி அல்பைத் அவர்களுடைய அரசியல் சகாக்களைக் கொலை செய்வித்துள்ளார். இதனால் ஜோர்தான் மன்னர் குசேயின் எடுத்த ஒற்றுமை ஆக்கும் முயற்சிகள் தோல்வி கண்டுள்ளன. வளைகுடா யுத்தத்தில் யேமன்




சதாம் குசையினுக்கு ஆதரவாகச் செயற்பட்டதால் சவுதி அரேபியா, தனது நாட்டில் தங்கியிருந்த ஒரு மில்லியனுக்கு மேற்பட்ட யேமன் நாட்டவர்களை வெளியேற்றியுள்ளது. உள்நாட்டுப்போர், குழப்பங்கள் இவையெல்லாம் யேமன் நாட்டிற்குப் புதிதல்ல. 1960 ஆம் ஆண்டளவில் வடக்கு யேமனில் பெரும் உள்நாட்டுப் போர் நடந்துள்ளது. 1970 இல் வடக்கு தெற்கு மோதல்கள் நடைபெற்றுள்ளன. 1980 இல் தொடர்ச்சியாகப் பல அரசியற் படுகொலைகள் நடைபெற்றுள்ளன.

இப்போது நடக்கும் போர் இரு தலைவர்களுக்கிடையிலான அதிகாரப் போட்டியினால் ஏற்பட்டது என்று பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். முதல் அடி கொடுத்தவர் ஜனாதிபதி சலே தான். தென் யேமன் துறைமுகம் மற்றும் விமான நிலையங்கள் யாவற்றையும் யுத்த விமானங்கள் மூலம் நிர்மூலம் ஆக்கியுள்ளார். எகிப்து, ஜோர்தான் போன்ற நாடுகள் யுத்த நிறுத்தம் ஒன்றைக் கொண்டு வரமுன், தென் யேமனின் பலத்தைக் குறைப்பதே ஜனாதிபதியின் திட்டம்.

தென் யேமன் தனது பங்கிற்கு ஐந்து ஸ்கட் ஏவுகணைகளை வடக்கின் தலைநகர் மீது ஏவியுள்ளது. ஆனால் இவை குறிதவறி, ஒன்றும் பெரிதாகச் சாதிக்கவில்லை. இதேவேளையில் வட யேமன் படைகள் கனரக வாகனங்கள், ஏவுகணைகள், யுத்த விமானங்கள் சகிதமாக தெற்கு யேமனுக்குள் நுழையும் தறுவாயில் இருக்கின்றன. ''ஒருங்கிணைப்பு இறந்துவிட்டது'' என்ற ஏகோபித்த அபிப்பிராயம் நிலவுகின்றது. இரு பகுதியினரும் விட்டுக் கொடுக்கும் நிலையில் இல்லை. மக்கள் ஒருவரை ஒருவர் விரும்பினாலும் தலைவர்கள் விரோதிகளாக இருக்கும்வரை யுத்தம் நீடிக்க வாய்ப்பு உண்டு.

ஆதாரம்:- ரைம்ஸ் மே 24, 1994
நியூஸ்வீக் மே 16, 1994

செல்வத்தின் இருப்பிடம்
இலட்சுமியே தான்

★ நம்பிக்கை! ★ நாணயம்! ★ நயம்!

அன்று முதல் இன்று வரை
பல்வேறு விதமான பரிமாணங்களைத்
தாண்டி வளர்ச்சி பெற்று வந்துள்ளது.

இலட்சுமி ஸ்ரோர்ஸ்

அத்தியாவசியப் பொருள்கள், சில்லறைப் பொருள்கள்
எதுவானாலும் சகாய விலையில் பெற்றிட



அனைத்து வாடிக்கையாளர்களினதும் நன்மதிப்பைப் பெற்று
வீறுநடை போடுவது

# இலட்சுமி ஸ்ரோர்ஸ்

ஏழாலை மேற்கு, சுன்னாகம்.



“ உடல் நலம் காப்போம்
நிறைவுடன் வாழ்வோம் ”

## வைத்திய நிலையம்

குழந்தைகளுக்கான
நோய்பிணிகள்
எதுவானாலும்
வைத்தியமும்,
ஆலோசனையும்
வழங்கப்படும்.

உங்கள் உடல்
நலத்தினைப் பேணி
நிறைவாக
வாழுங்கள்.

குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை
அனைவருக்கும் வைத்திய சேவை
ஆமாம்

# வைத்திய நிலையம்

பலாலி வீதி, திருநெல்வேலி வடக்கு,
யாழ்ப்பாணம்.

# "புதிய முகங்கள் நிர்வாக சேவையில் தேவை"

## "தூக்கிப் பார்த்தால் பாரந்தெரியும் இனித்தான் பி. எல். ஓவுக்கு கஷ்ட காலம்"

நீண்ட நாள்களாக இழுபறி நிலையில் இருந்த பேச்சுக்கள் மே மாத முதல் வாரம் முற்றுப் பெற்றுள்ளன. காசாவிலும், ஜெரிக் கோவிலும் பாலஸ்தீனியர்களுக்கு, தன்னாட்சி என்ற அடிப்படையில் ஒப்பந்தம் ஒன்றில் கைச்சாத்திடும் வரை, ஆவணங்களில் பதியப்படும் ஒவ்வொரு சொல்லும், வரைபடமும் சூடான வாதங்களுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. இரவு பூராவாகவும் இஸ்ரேல், பி. எல். ஓ இரு தரப்பினரும் ஒப்பந்தத்தில் சேர்க்கப்பட வேண்டியவற்றை ஆராய்ந்த வண்ணம் இருந்துள்ளனர். அடுத்த நாள் கைரோ நகரின் சர்வதேச ஆலோசனை மண்டபத்தில் 2,500 அகதிகள், படப்பிடிப்புக் கருவிகள் முன்பாகக் கைச்சாத்திடும் நேரத்தில் மீண்டும் குழப்பங்கள் ஆரம்பித்துள்ளன. பரஸ்பர நம்பிக்கையீனமே பிரதான காரணம். இஸ்ரேல் வெளிவிவகார அமைச்சர் சிமோன் பெரஸ், பி. எல். ஓ தலைவர் யாசீர் அரபாத், எகிப்து ஜனாதிபதி கொஸ்னி மூபராக், ருஷ்ய வெளிவிவகார அமைச்சர் ஆந்திரே கொசிரேவ், அமெரிக்க வெளியுறவுச் செயலர் வோரன் கிறிஸ்தோபர் ஆகியோர் மேடையிலே எல்லோர் முன்னிலையிலும் 40 நிமிடங்களாகக் கடும் சொற் பரிமாறிக் கொண்டனர். ஒப்பந்தத்தின் ஆறு வரைபடங்களை ஒப்பமிட்டு அத்தாட்சிப்படுத்த யாசீர் அரபாத் தவறியதை, சிமோன் பெரஸ் சுட்டிக் காட்டிய பின்பே குழப்ப நிலை தொடங்கியுள்ளது. அரபாத் ஒப்பமிட மறுத்தால் தான் வெளியேறுவதாகப் பெரஸ் தெரிவிக்க கடும் வாக்குவாதம் நிகழ்ந்துள்ளது. இறுதியில் யாசீர் அரபாத் தேவையான இடத்தில் ஒப்பமிட்டுள்ளார். காலப் போக்கில் ஜெரிக்கோவின் எல்லைகள் விஸ்தரிக்கப்படும் என்ற வாக்குறுதியைச் சம்பந்தப்பட்ட சகலரிடமிருந்து பெற்ற பின்பே அரபாத் மேற்படி ஒப்புதல் வழங்கியுள்ளார்.

நெடுங்காலமாகப் போராடிக் கொண்டிருக்கும் விடுதலை இயக்கம் திடீரென ஆட்சிப்பொறுப்புக்களை ஏற்று நடத்துவது சாதாரணமாக நடக்காத காரியமாகும். போராட்டத்தை முன்னெடுக்கும் காலத்தில் ஆட்சிப் பொறுப்புக் கேற்ற நிர்வாகத்தை அமைக்கும் பொறுமையும், திறனும் அநேகமான சந்தர்ப்பங்களில் கிடைப்பதில்லை. இது வரலாற்று நியதி. பி. எல். ஓ இதற்கு விதிவிலக்கல்ல மேற்கு கரையையும், காசாவையும் தமது கட்டுப்பாட்டில் கொண்டு



ஒப்பந்தம் கைச்சாத்திடச் சில நிமிடங்களுக்கு முன் பி. எல். ஓத் தலைவர் யாசீர் அரபாத்துக்கும், இஸ்ரேலைச் சேர்ந்த பெரஸ், அமெரிக்காவின் வோரன் கிறிஸ்தோபர், ருஷ்யாவின் ஆந்திரே கொசிரோவ், எகிப்தின் கொஸ்னி முபாரக் ஆகியவர்களுக்கிடையில் ஒரு மோதல் நிலை உருவாகிறது. பின்பு தணிந்து ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பி. எல். ஓ இயக்கம் 27 வருடம் இஸ்ரேலுடன் போராடி இருக்கின்கின்றது. இப்போது இஸ்ரேலியர் வெளியேறும் கட்டம் வந்தவுடன் ஆட்சிப் பொறுப்பை ஏற்று நடத்தும் பயிற்றப்பட்ட நிர்வாகமும், அனுபவமும் இல்லாதபடியால் சில மாதகால அவகாசம் தரும்படி பி. எல். ஓ கேட்டுள்ளது. கேட்கப்படும் காலம் வரை தங்க இஸ்ரேலிய நிர்வாகம் ஒத்துக்கொண்

டாலும் இஸ்ரேலிய இராணுவம் உடனடியாக வெளியேறவே விரும்புகின்றது.

ஆரம்பக் கட்டத்திலேயே பி. எல். ஓ தரப்பில் நிர்வாகச் சிக்கல்கள் வெளிவந்துள்ளன. மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள பி. எல். ஓ முகாங்களில் பயிற்றப்பட்ட 9,000 காவல்துறையினரில் மேற்கூறிய ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட அடுத்த நாளே 1,500 நபர்கள் காசா- ஜெரிக்கோவுக்கு வர ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் 19 காவல்துறையினரே அடுத்தநாள் வந்திருந்தனர். சிவில் நிர்வாகத்தின் சகல அலகுகளையும் பி.எல்.ஓ பொறுப்பேற்க வேண்டும் என்பதே ஒப்பந்தத்தின் தீர்ப்பு. மக்களுக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் நிர்வாகமே கவனிக்க வேண்டும் என்பது எல்லாப் பகுதியினராலும் ஒத்துக் கொள்ளப்பட்டுள்ளது. கல்வி, சுகாதாரம், வரி வசூல், வாகன வரிகளை நிர்ணயித்தல், திரட்டல், வீட்டு வசதி யாவற்றையும் இதே பி. எல். ஓ நிர்வாகமே கவனிக்க வேண்டியுள்ளது. ஆனால் பி. எல். ஓ உயர் அதிகாரி பின்வருமாறு கூறியுள்ளார்: ''எமது தரப்பில் இது சம்பந்தமான யாதொரு ஒழுங்குகளும் செய்யப்படவில்லை. யாசீர் அரபாத் அவர்களுடைய தங்கும் ஒழுங்குகள் கூட இன்னும் செய்து முடிக்கப்படவில்லை. அவர் இன்னும் வட–ஆபிரிக்க நாடான ரியூனிஸ் தலைநகரில் தங்கியிருக்கின்றார். எப்போது தம் மக்கள் மத்தியில் வாழ வருவார் என்று எவருக்கும் தெரியாது.''

தலைவர் யாசீர் அரபாத் அவர்களுடைய வாழ்க்கை முறை, திட்டமிடல் ஆகியவற்றைப் பின்வருமாறு வர்ணிக்கலாம். நன்றாக முன்கூட்டியே நன்கு திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் வழக்கம் அவரிடம் கிடையாது. எத் தீர்மானத்தையும் இறுதி நேரத்தில் எடுப்பதுதான் அவருடை பாணி. அத்துடன் ஆலோசகர்களுடன் கலந்து பேசும் வாடிக்கையும் அவரிடம் மிகக் குறைவு, பொறுப்புக்களைப் பகிர்ந்தளிக்கும் பண்பும் அவரிடம் கிடையாது. சகலதையும் தனது கைகளில் முடக்கி வைத்திருப்பது அவருடைய நடைமுறைக்கு ஒவ்வாத போக்கு. அடுத்த ஒக்ரோபர் மாதம் தேர்தல்கள் நடக்கும் வரை 24 அங்கத்தவர்கள் கொண்ட குழு காசா-ஜெரிக்கோவை நிர்வகிக்கும் என்பதே ஒழுங்கு. இதில் பாதி அங்கத்தவர்கள பி. எல். ஓ தலைமைப் பீடத்திலிருந்து மிகுதி அங்கத்தவர்கள் காசா ஜெரிக்கோவிலிருந்தும் தெரிவு செய்யப்படவுள்ளார்கள். ஆனால் இதுவரையும் அரபாத் ஒருவரது பெயரையும் வெளி விடாது மௌனம் சாதிப்பது உள்ளூர் மக்களுக்கு அச்சங் கொடுத்துள்ளது. கூடுதலான வெளியார் நியமனம் பெற்றால் கலவரங்கள் ஏற்படுவது நிச்சயம் எனலாம்.

என்றாலும் எல்லாம் இருள் மயம் என்று எண்ணவேண்டாம்; இஸ்ரேல் ஆட்சியிலும் நிர்வாக சேவை பெரும்பாலும் பாலஸ்தீனிய அதிகாரிகளின் கையில் இருந்துள்ளது. இவர்களை மாற்றித் தமது நிர்வாக சேவையை பி. எல். ஓ இருத்தும்வரை நிர்வாகம் குழப்பம் இன்றிச் செயற்படும். ''புதிய முகங்கள் நிர்வாக சேவையில் தேவை'' என்பதே பெரும்பான்மை அபிப்பிராயம். பாலஸ்தீனியர்களில் படித்தவர்களும், திறமை வாய்ந்தவர்களும் இருக்கிறார்கள். மத்திய கிழக்கின் பல நாடுகளில் இவர்கள் தமது நிர்வாகத் திறனை நன்கு நிரூபித்துள்ளனர்.

காசா - ஜெரிக்கோவின் முன்னேற்றத்திற்குப் பண உதவி செய்யப் பல மத்திய கிழக்கு நாடுகள் முன்வந்துள்ளன. வாக்குறுதி

## பி. எல். ஓ. நிர்வாகத்திற்கு வந்து சேரும் நிதி உதவிகள்

உலக வங்கி 1.2 மில்லியன் பெறுமதியான மூன்று வருட உதவித் திட்டத்தைத் தயாரித்துள்ளது. காசா, ஜெரிக்கோ பிரதேசத்திற்கு உதவும் நாடுகள் கொடுத்த 2.1 மில்லியன் டொலர் பணத்தின் முதற் பகுதி இத்தொகையாகும்.

1) **பொதுவேலைத் திட்டங்கள்:-**

சாக்கடைக் கழிவைப் போக்கும் குழாய்களை அமைத்தல், கழிவு நீரைச் சுத்தம் செய்தல் போன்ற திட்டங்களும், சாலைகள் திருத்தம், பாரிய கிடங்குகள் நிரவுதல் போன்ற வேலைகளும், கல்வி, சுகாதாரம் ஆகிய சேவைகளும். இப்பணிகளுக்கு 167 மில்லியன் டொலர்.

2) **நிர்வாக சேவை புதுப்பித்தலும், விரிவாக்கலும்**

காவல் துறையினருக்குத் தளபாடங்கள், புதிய அரசுக்கு உதவி. மொத்த உதவி 58 மில்லியன் டொலர்.

3) தனியார் துறையைப் பலப்படுத்தும் நோக்குடன் வங்கிகளுக்கான உதவி. பாலஸ்தீனிய மத்திய வங்கி நிறுவுவதற்கும், பணக் கட்டுப்பாட்டு நிர்வாகத்திற்கும் உதவி 50 மில்லியன் டொலர்.

4) தொழில் நுட்ப உதவி, திட்டமிடல் பணிகளுக்கான உதவி சமுதாயப் பொருளாதார ஆய்வுகள் மேற்கொள்ள நிரந்தர நிறுவனம் அமைக்க உதவிகள். மொத்தமாக உதவி 18 மில்லியன் டொலர்.

அளிக்கப்பட 2.1 பில்லியன் டொலரின் 1.2 பில்லியன் பி. எல். ஓ விடம் வரத் தயார் நிலையில் இருக்கின்றது. ஆனால் இரண்டு கேள்விகளுக்கு விடை காணுதல் மிக அவசியம். இஸ்ரேலிய நிர்வாகத்திலும் பார்க்கக் கூடுதலான திறமையுடன் பி.எல்.ஓ வால் பணியாற்ற முடியுமா? வந்து சேரும் பண உதவிகளை எவ்வாறு பி. எல். ஓ பயன்படுத்தும்?

பாலஸ்தீனியர்கள் கனவு காணும் முழுச் சுதந்திரத்தை ஒப்பந்தம் கொடுக்கவேயில்லை. குறுகிய உள்நாட்டு நிர்வாகம் மாத்திரம் கிடைத்துள்ளது. பாலஸ்தீனியத் தனிநாடு உண்டாவதைத் தாம் ஒருபோதும் அநுமதிக்கத் தயாரில்லை என்று இஸ்ரேல் வெளிப்படுத்தியுள்ளது. பெரும்பாலான பாலஸ்தீனியர்கள் அரபாத் தனது நன்மைக்காக எதிரியுடன் ஒப்பந்தம் செய்துள்ளதாகவே நம்புகின்றனர். ஆனால் யாசீர் அரபாத் அவர்கள் ஒருவரால் தான் இத்தனை துணிச்சலுடன் இந்தளவு உரிமைகளை யாவது பெற்றுக்கொள்ள முடியும். ஆக்கிரமிக்கப்பட்ட மிகுதி மேற்குக் கரைக்கும் பேச்சுக்கள் ஆரம்பிக்க இருக்கின்றன. கூடுதலான நிலப்பரப்பைக் கட்டுப்பாட்டில் கொண்டு வருவதால் பி,எல்.ஓ வின் நன்மதிப்பு மக்கள் மத்தியில் உயர வாய்ப்புண்டு. காசாப் பிரதேசத்திற்கே உரித்தான அழுக்கு நீர் அகற்றும் பிரச்சனையும், தெருக்கள் சுத்தப்படுத்தும் திட்டங்களும், நிர்வாகம் உடன் கவனிக்க வேண்டியிருக்கின்றது. யூதக் குடியேற்றவாசிகளின் பிரச்சனை இன்னும் தீர்ந்தபாடில்லை. வளம் மிக்க அரபு நிலம் யாவும் இவர்களின் பிடியில் இருக்கின்றன. இஸ்ரேலியர் ஆட்சிக் காலத்தில் 5,000 திற்கு மேற்பட்ட பாலஸ்தீனியர்கள் இஸ்ரேலிய இராணுவத்துடன் ஒத்துழைத்துத் தம் மக்களைக் காட்டிக் கொடுத்துள்ளனர். இவர்களின் கதி என்ன? காசா, ஜெரிக்கோவை விட்டு இவர்கள் வெளியேறிவிட்டால் இவர்கள் கடுஞ் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டுக் கொல்லப்படுவது நிச்சயம். சில இஸ்ரேலிய இராணுவ அதிகாரிகள் கூற்றின்படி இவர்களுக்கு இஸ்ரேல் நாட்டில் புகலிடம் அளிக்கப்படவுள்ளதாகத் தெரிகின்றது. ஆனால் உத்தியோகபூர்வமாக யாதொரு செய்தியும் இது சம்பந்தமாக இதுவரை வெளிவரவில்லை. போராட்டம் எளிது; நிர்வாகச் சுமை பெரிது என்பதே பி. எல். ஓ அனுபவம்.

*நியூஸ்வீக் ரைம், மே 16, 1994*

ருஷ்யா

## யுத்தம் ஒரு வெற்றிகரமான தொழிற்துறை

ஜோர்ஜியா அசர்பைஜான், தஜிகிஸ்தான் ஆகிய நாடுகளிலும், முன்னாள் சோவியத் ஒன்றியத்தின் பல பழையஉறுப்பு நாடுகளிலும் மிகவும் வெற்றிகரமாக இயங்கும் ஒரு தொழிற்றுறை உள்ளதென்றால் அது போராகும். அதனால் மொஸ்கோவின் செய்திப் பத்திரிகை விற்பனை நிலையங்களில் எதிர்காலத்தில் கூலிப் படைகளாகச் சேர்பவர்களைக் கவர வெளிவரும் அமெரிக்க சஞ்சிகையான, சோல்ஜர், ஒப் ஃபோதுன் (செல்வனான படைவீரன்) என்ற சஞ்சிகையின் ருஷ்யப் பதிப்புக்கு மிகுந்த மவுசு உண்டு. அதில் வரும் கட்டுரைத் தலைப்புக்களில் மாதிரிக்கு ஒன்றிரண்டு: ''வியற்நாமிலும் தெற்கு றொடீசியாவிலும் (இப்பொழுது சிம்பாப்வே) கூலிப் படைத் துப்பாக்கிகள்'', ''உலகில் சிறந்த செப்பாலான குத்துக் கைக்கவசம்''. இவற்றைப் படித்து விட்டு எவரும் தத்துவார்த்த ரீதியாக ஆராயவோ கலந்துரையாடவோ தேவையில்லை, சோலிடாட் உடாசி என்ற ருஷ்ய மொழிப்பெயரில் வரும் அந்தச் சஞ்சிகையின் ஆசிரியர்: ''இந்தச் சஞ்சிகை செயலிற் காட்டுவோரால் அன்று சொல்லித் திரிவோரால் அல்ல வாசிக்க உகந்ததாகும். உண்மையான மனிதர்கள் அதனைத் தான் செய்வர்'' என்று கூறியுள்ளார். ஜனநாயகத்தின் முழு உருவமே அது தானோ?

# மறுபடியும் போரின் ஆக்கிரமிப்பு

## துருக்கியில் நடக்கும் குர்திஷ் இனத்தவர்களுக்கு எதிரான உள் நாட்டுப் போரின் தாக்கங்கள்

குர்திஷ் இனத்தவர்கள் தாம் குர்திஷ்தானில் வசிப்பதாகக் கூறிக்கொண்டாலும் இன்று இந்த நாடு மறைந்து விட்டது குர்திஷ் மக்கள் வடக்கு ஈராக்கிலும் வடமேற்கு ஈரானிலும், தென்-கிழக்குத் துருக்கியிலும் காணப்படுகின்றனர். இந்த மூன்று நாட்டிலும் தாம் வாழும் மூன்று பகுதிகளையும் ஒன்று கூட்டிப் பெருமையாகக் குர்திஷ்தான் என்று கூறிக்கொண்டாலும் அத்தகைய நாடு ஒருபால் உருவாகும் வாய்ப்பு இல்லையெனலாம். இதற்காக இந்த இனத்தவர்கள் நெடுங்காலமாகப் போராடி வருகின்றனர். வல்லரசுகளும் தங்கள் இலாபத்திற்காக உதவப் போவதாகக் காலத்திற்குக் காலம் கூறிக்கொண்டாலும் இன்னும் யாதொருவரும் உருப்படியாக ஒன்றும் செய்யவில்லை என்பது வரலாற்று உண்மை. இந்த இனத்வர்களும் தங்கள் நெடுங்காலக் குறிக்கோளை விட்டுக் கொடுத்ததாகவும் வரலாறு இல்லை. இவர்கள் வாழும் இந்த மூன்று நாடுகளை ஆளும் பெரும்பான்மை இனங்களும் குர்திஷ் மக்களைச் சந்தேகக் கண்கொண்டே பார்க்கின்றனர். ஈராக், ஈரான், துருக்கி ஆகிய மூன்று நாடுகளும் குர்திஷ் மக்களை மிகக் கொடுமையாக நடத்தியதற்கும், இன அழிப்புப் போன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டதற்கும் நிறையச் சான்றுகள் உள்ளன. ஈராக் தலைவர் சதாம் குசேயின் இந்த இனத்தவர்கள் மீது நச்சு வாயுக் குண்டுகளை வீசி அழிக்க முற்பட்டது அண்மைக்கால வரலாறு ஆகும். வளைகுடாப் போரின் நன்மை என்று சொல்லத் துணிந்தால் அது குர்திஷ் இன மக்களுக்கு வடக்கு ஈராக்கில் வாழும் உரிமை அளித்தமையே ஆகும்.

இந்தக் குர்திஷ் மக்கள் யாரென்று அறிய ஆவலாய் இருப்பது இயற்கையே. இவர்கள் துருக்கி இனத்தவர்களுடன் இரத்தக் கலப்புச் செய்த இந்தோ-ஐரோப்பிய பழங் குடியினர்கள் ஆவார்கள். உருவத்தில் நெடியவர்கள். கேசம் கருமை குறைந்ததாகும். பேசும் மொழி ஈரானிய மொழியின் வழி வந்ததாகும். பிரதான தொழில்கள் மந்தைப் பராமரிப்பும், விவசாயமும் ஆகும். இவர்கள் இஸ்லாமிய மதத்தவர்கள்.



துருக்கியிலுள்ள தமது தாயகத்தை விட்டு வடக்கு ஈராக்கில் புகலிடந் தேடியுள்ள குர்திஷ் மக்கள்.

கடந்த பத்து வருடங்களுக்கு மேலாகத் துருக்கி ( Turkey ) அரசபடைகளுக்கும், குர்திஷ் இனப் போராளிகளுக்குமிடையில் துருக்கியில் ஒரு கொடிய உள்நாட்டுப் போர் நடந்து கொண்டிருக்கின்றது. இது வரை 13,500 மக்களும், போராளிகளும், இராணுவத்தினரும் இறந்ததாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. துருக்கிய அரசின் நிலைப்பாடு மிகவும் அதிசயமான தாகும். குர்திஷ் பிரச்சனை ஒன்று இருப்பதாக அவர்கள் ஒத்துக் கொள்வதில்லை. அண்மையில் அவர்கள் ஒரு படி மேலே போய் துருக்கியில் குர்திஷ் இன மக்களே இல்லையென்று கூறி வருகின்றனர். அவர்களுடைய அறிக்கையின் படி தென் கிழக்குத் துருக்கியில் இருப்பவர்கள் ஆதியில் குர்திஷ் இனத்தவர்களாயிருப்பினும் தற்போது அவர்கள் முழுத் துருக்கியர்களே. தென்-கிழக்கில் நடக்கும் உள் நாட்டுப் போரை "தொழில்சார் பயங்கரவாதிகள்" உடனான போர் என வர்ணிக்கின்றனர். அத்துடன் வளைகுடாப் போரின் காரணமாக




ஈராக் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடையால் இப்பகுதியே பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளபடியால் இந்தரகப் பயங்கரவாதம் தலைதூக்கிவிட்டதென்றும் அரசு தெரிவிக்கின்றது. துருக்கியின் பெண் பிரதமர் தான்சுசில்லொ நிலைமையை விளக்கிப் பின் வருமாறு கூறுகின்றார்:'' துருக்கி-ஈராக் பொது எல்லை மூடப்பட்டதால் 20 பில்லியன் டொலர் வருவாயை இழந்து விட்டோம்.'' அத்துடன் எல்லைப் புறத்தில் குடியிருந்த மக்கள் இடம் பெயர நேர்ந்துள்ளது. ஐ நா விதித்த தடையை மீறப் போவதில்லை என்று துருக்கி கூறியுள்ளது. என்றாலும் அரசு தனது மனக்குறையைச் சந்தர்ப்பங் கிடைத்த போதெல்லாம் தெரிவித்து வருகின்றது.

ஈராக் மீது விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகளாலும், வேறுகாரணிகளாலும் துருக்கி நாணயம் வீழ்ச்சி அடைந்துள்ளது. பணவீக்கம் இரண்டு மடங்காக உயர்ந்துள்ளது. அத்துடன் அண்மையில் நடந்த நகராட்சித் தேர்தல்களில் இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சி தலைநகர் அன்கராவையும், இஸ்தான்புல் (Ankara, Istanbul) உப தலைநகரையும் கைப்பற்றியுள்ளது. குர்திஷ் இனத்தவருடன் நடக்கும் போர் நிதி நிலையை மோசமாக்கியுள்ளது. யுத்தத்தின் செலவை உள்நாட்டு அமைச்சர் நாகித் மென்தேஸ் கணக்கிட்டு வருடமொன்றுக்கு யுத்தச் செலவு 6 டொலர் பில்லியன் என்று தெரிவித்துள்ளார். யுத்தம், பொருளாதாரத் தடை, பணவீக்கம் ஆகிய மூன்றும் துருக்கியை வீழ்ச்சி அடையச் செய்துள்ளன. அன்கரா, இஸ்தான்புல் ஆகிய நகரங்களைப் பிடித்துள்ள இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சி 1996 இல் நடக்கப் போகும் பொதுத் தேர்தல்களில் தாம் ஆட்சியைக் கைப்பற்றப் போவதாகத் தெரிவித்துள்ளது. ''எமது பிரச்சாரம் அரசின் நிதிச் சூன்யத்தை எடுத்துக் காட்டுவதாகவே இருக்கும்'' என்று கட்சியின் தலைவர் கூறியுள்ளார்.

குர்திஷ் இனமொன்று தமது நாட்டில் இல்லையென்ற அரசின் போக்கு விபரீத விளைவுகளை ஏற்படுத்தியுள்ளது. பாகிஸ்தானைப் போன்று துருக்கியிலும் இராணுவம் ஒரு பலம் வாய்ந்த பின்னணிச் சக்தியாக இருக்கின்றது. 1960, 1971, 1980 ஆகிய ஆண்டுகளில் துருக்கியின் ஆட்சி இராணுவத்தின் பிடியில் இருந்திருக்கின்றது. இராணுவத்திற்குச் சவால்விடும் வல்லமையுள்ள அரசியல்வாதி துருக்கியில் இல்லையெனலாம். துருக்கி இராணுவத்தின் குர்திஷ் இனப் போராளிகளுக்கெதிரான நடவடிக்கைகள் உலகின் கவனத்தைக் கவர்ந்துள்ளன. பி.கே.கே. எனப்படும் இப் போராளிகள் குழுவில் 5,000 பேர்களே உள்ளனர் என்று சொல்லும் அரசுஇவர்களைக் கைது செய்ய 150,000 போர் வீரர்களையும், 15,000 காவல் துறையினரையும் ஏவி விட்டுள்ளது, இத்துடன் 2,500 துணைப் படையினரும் போரில் கலந்துள்ளனர். பக்கச்சார்பு இல்லாதோரின் கணிப்பில் 30,000 போராளிகள் இருக்கலாம் என்று தெரிவிக்கப் படுகின்றது. இந்த யுத்தத்தின் பின் துருக்கி ஒரு ஜனநாயக நாடு, அதன் நடவடிக்கைகள் நாகரிகமானவை என்ற தோற்றம் மறைந்துவிட்டது. மனித உரிமைக் குழுக்களின் அறிக்கைப்படி கடும் சித்திரவதை, காணாமற்போதல், சட்டத்திற்கு அப்பாற்பட்ட கொலைகள், தீவைப்பு, கொள்ளை


குர்திஷ்தான் மலைப்பகுதியில் பயிற்சியில் ஈடுபடும் குர்திஷ் இனப் போராளிகள்.

ஆகியவை தென்-கிழக்குத் துருக்கியில் மிகவும் மலிந்துவிட்டன. தென்-கிழக்குத் துருக்கிக் கிராமங்கள், நகரங்கள் ஆகியவற்றில் உள்ள மக்களை அகற்றும் நடவடிக்கைகளிலும் இராணுவம் தற்போது ஈடுபடுகின்றது. வெறுமையாக்கப்பட்ட கிராமங்களைத் தீயிட்டுப் பொசுக்குவதால் குர்திஷ் போராளிகள் தங்க இடமில்லாது போகுமென இராணுவம் எண்ணுகின்றது. ஆனால் போராளிகளின் முகாங்கள் எல்லைக்கு அப்பால் சிரியாவிலும், வடக்கு ஈராக்கிலும், ஈரானிலும் இருப்பதாகப் பலரும்நம்புகின்றனர். குர்திஷ் இனத்தவர் அல்லாத தென்-கிழக்குத் துருக்கிவாழ் மக்களும் பாதிக்கப்பட்டுள்ளனர். காணாமற் போனோரில் பலர் இந்த மக்களும் ஆவர்.

துருக்கி இராணுவத்தின் மனித உரிமை மீறல்களால் அமெரிக்க அரசு வருடா வருடம் கொடுக்கும் 364 மில்லியன் டொலர் உதவிப் பணம் 25 சத வீதத்தால் குறைக்கப் பட்டுள்ளது. ஆனால் இராணுவச் செலவு இதனால் பாதிப்பு அடைந்ததாகத் தெரியவில்லை. அதேபோல் இராணுவ நடவடிக்கைகளிலும் ஒருவித மாற்றமும் காணப்படவில்லை. இந்த உள்நாட்டுப் போருக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் துருக்கிப் பத்திரிகையாளர் கசான் செமால் தனது கருத்துக்களை அண்மையில் மிகவும் ஆணித்தரமாகத் தெரிவித்துள்ளார். இப்போது இராணுவத்தின் கை ஓங்கியிருந்தாலும் அது பிரச்சனையைத் தீர்த்து வைக்கப் போவதில்லை, மக்கள் கடும் பயத்தினால் இராணுவத்தைச் சாரலாம். இதை அமைதி திரும்பியுள்ளதாக ஏற்கமுடியாது, குர்திஷ் இனத்தின் தனித்துவத்தை ஏற்பதும், அவர்கள் மானத்துடன் வாழ வழி செய்வதும் இராணுவ நடவடிக்கைகளுக்கு இப்பகுதியில் ஓய்வு கொடுக்கும்.

நியூஸ் வீக் மே 30, 94

## இஸ்லாமிய அடிப்படை வாதம் சம்மந்தமான அமெரிக்க அரசின் அணுகுமுறையில் மாற்றம்

இஸ்லாமிய அடிப்படைவாதிக்கும், இஸ்லாமியத் தீவிரவாதிக்கும் உள்ள வேறுபாடு வித்தியாசங்களை அமெரிக்க அரசு ஆராய்ந்து வருகின்றது. இந்த இருவரில் யார் பயங்கரவாதி என்பதை அறிய அமெரிக்க அரசு ஆவலாக இருக்கின்றது. இப்படியான ஆய்வுகள் புதிய வெளியுறவுக் கொள்கை ஒன்றைத் தயாரிக்க உதவுமென அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் சிரேஷ்ட வெளியுறவுக் கொள்கை ஆலோசகர் அன்தனி லேக் தெரிவித்துள்ளார். ''எங்கள் எதிரிகள்; மக்கள்மீது செலுத்தப்படும் கொடூரங்களும், அதற்குப் பொறுப்பானவர்களுமே;'' ''பெறுமதிமிக்க பாரம்பரிய இஸ்லாமியக் கோட்பாடுகளை மீளக் கொணரும் நடவடிக்கைகள் எமக்கு ஏற்புடையதாகும்.'' இவ்வாறு அன்தனி லேக் கொள்கை விளக்கந் தந்துள்ளார்.

இந்த மாற்றத்திற்குச் சவுதி அரேபியா முக்கிய காரணமாக அமைகின்றது. மத்திய கிழக்கில் அமெரிக்காவின் தலையாய நண்பன், இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் தாயகமாகிய சவுதி அரேபியாவென்றால் மிகையாகாது. ''உலக சமாதானத்திற்கு இஸ்லாமிய அடிப்படைவாதம் தரும் ஆபத்து'' என்ற ரீதியில் வெளியுறவுக் கொள்கையை வகுப்பது நட்பைச் சோதிக்கும் செயலாகும். எனவே மாற்றம் நண்பனை மகிழ்விக்கும், அத்துடன் பிரச்சனைக்குரிய பல இஸ்லாமிய அடிப்படைவாத இயக்கங்களுடன் நல்லுறவைப் பேணவும் இடந் தரும்.

இஸ்லாமிய அடிப்படைவாதக் கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதைத் தடுக்கும் நோக்குடன் 1902 இல் இராணுவம் அல்ஜீரியாவின் ஆட்சியைக் கைப்பற்றியது யாவரும் அறிந்ததே. இரு தரப்பினருக்குமிடையில் அன்று தொட்டு மோதல்கள் நடைபெறுகின்றன. பழைமைக்கும் புதுமைக்கும் நடக்கும் போராக இது வர்ணிக்கப்பட்டுள்ளது. புதிய அமெரிக்க வெளியுறவுக் கொள்கை அல்ஜீரிய அடிப்படைவாதிகளுக்கு அங்கீகாரமும் தன்னம்பிக்கையும் கொடுக்கும் என்பதில் ஐயமில்லை. இதே சமயத்தில் இராணுவத்தை இறங்கிவரத் தூண்டுமென்றும் கொள்ளலாம்.

காசாப் பிரதேசத்தில் பலம்பெற்றுவரும் காமாஸ் இயக்கத்துடன் அமெரிக்கா அண்மைக் காலத்தில் தொடர்புகளை ஏற்படுத்தி வருகின்றது. எகிப்து அரசுக்குப் பெரும் தொல்லை கொடுத்து வரும் ஷெக் ஓமார் அப்டேல் றகுமானுடைய இயக்கத் தலைவர்களுடன் தொடர்பு கொள்ள அமெரிக்கா அண்மைக் காலமாக முயன்று வருகின்றது. ஆனால் எகிப்தின் அடிப்படைவாதத்தின் பரமவைரியான ஜனாதிபதி கொஸ்னி முபராக்கின் நிலை எவ்வாறு இருக்கும் என்பது தான் விவாதத்திற்குரியதாகும். பழம்பெரும் சவுதி நண்பனை மகிழ்விக்கும் கொள்கைமாற்றம் இன்னுமொரு பழம்பெரும் நண்பனைப் படுகுழியில் தள்ளக்கூடாது அல்லவா?

நியூஸ்வீக் மே. 30, 94

# ருஷ்யா கையாளும் "இரும்பு வியாபாரம்"



பாகிஸ்தானுக்கு அனுப்பவென்று கட்டப்பட்ட கப்பலின் ஒரு பகுதி துறைமுகத்தில் தாழ்ந்த நிலையில் கிடக்கின்றது.

ருஷ்யாவில் நிலவும் குழப்ப நிலையையும், பொருளாதாரச் சீர்கேட்டையும் அரசும், தனியாரும் பிறநாட்டவருடன் செய்யும் வியாபாரங்கள் படம் பிடித்துக் காட்டுகின்றன. அண்மையில் அரசுக்குச் சொந்தமான 90 கிலோ மரகதக்கற்கள் உலகின் கள்ளச் சந்தையில் விற்பனைக்கு வந்து உள்ளது. யூரல் மலைச்சாரலில் ( Ural Mountains ) காலதாமதமாகக் குறைத்துக் கொடுக்கப்படும் ஊழியத்தை ஈடு செய்வதற்காக, சுரங்கத் தொழிலாளர்கள் இந்தப் பெறுமதிமிக்க கற்களை மறைத்து வைத்துள்ளனர். அரசும் அரசின் உளவுத்துறையும் அறியாமல் செய்தி, சில இடைத் தரகர்கள் மூலம் உலகச் சந்தைக்கு எட்டியுள்ளது. மத்திய ருஷ்யாவின் மலைப்பிரதேசத்தில் கற்கள் மறைவிடம் ஒன்றில் வைக்கப்பட்டிருந்தன. வாங்குவோருக்கும் விற்போருக்கும் நிறைய அபாயங்கள் உண்டு. அமெரிக்க மாபியாவை ( Mafia ) யும் விஞ்சும் வகையில் செயற்படும் கொலைகாரத் திருட்டுக் கும்பல்கள் ருஷ்யாவிலும் அண்மைக்காலத்தில் துளிர் விட்டுள்ளன. எடுத்துச் செல்லப்படும் பணமும் வாங்கிக்கொண்டு போகும் கற்களும் பறிமுதல் ஆகும் சந்தர்ப்பம் நிறைய உண்டு. அத்துடன் உயிருக்கும் உத்தரவாதம் இல்லை. வியாபாரம் முற்றுப்பெறும் தறுவாயில் "கெரில்லா" என்ற பெயருடைய திருட்டுக் கும்பல் தலைவனும், ருஷ்ய உளவுத்துறையின் பிராந்திய அதிகாரியும் அங்கு பிரவேசித்து அளவுக்கு மிஞ்சிய பங்கு கேட்டதால் ஒன்றுமே நடைபெறவில்லை. தனது உயிரும் பணமும் தப்பினால் போதுமென்று கற்களை வாங்க வந்த வர்த்தகர் நாட்டை விட்டு வெளியேறி விட்டார்.

ருஷ்யாவின் இராணுவத் தளபாடத் தொழிற்சாலைகளும், அணு உலைகளும் தலைநகர் மொஸ்கோவிலிருந்து பல மைல் தொலைவில் மேற்கூறிய யூரல் மலைப்பகுதியிலும் அடர்பனிச் சைபீரியாவிலும் காணப்படுகின்றன. சோவியத் ருஷ்யா உடையும் வரை இவை யாவும் பரம இரகசியமாக பாதுகாக்கப்பட்டுள்ளன. ஆனால் இன்று அந்த நிறுவனங்களில் வேலை செய்த உயர்தர விஞ்ஞானிகள் பணமுடையில் தவிக்கின்றனர். ஆயிரக்கணக்கான நிபுணர்களும், மில்லியன் கணக்கான தொழிலாளர்களும் உணவுக்கும், உடைக்கும் பெரும்பாடுபட வேண்டியுள்ளது. இத்தகைய தொழிற்கூடங்களின் பொறுப்புக்கள் யாவும் பழைய உளவுத்துறை, கொம்யூனிஸ்ட் கட்சி, இராணுவ தலைமைப்பீடம் ஆகியவர்கள் கையில் அடைக்கலம் புகுந்துள்ளது. இவர்கள் இந்த தொழிற்சாலைகளில் உள்ள யாவற்றையும் விற்றுப் பணமாக்குவதில் தற்சமயம் முனைந்துள்ளனர். இங்கு காணப்படும் ஆயுதங்கள், தேடுதற்கரிய கனியங்கள் யாவும் விலை போகின்றன. அமெரிக்க பாதுகாப்புச் செயலாளர் வில்லியம் பெரி நிலைமையைப் பின்வருமாறு கூறியுள்ளார்.

## ஆயுத விற்பனை:

## பணத்திற்காக ருஷ்யர்கள் ஆபத்தானதொரு வர்த்தகம் செய்கிறார்கள்.

"இது ஒரு வேதனை தரும் பிரச்சனை. அவர்கள் இன்றும் அணு ஆயுத விற்பனையை ஆரம்பிக்கவில்லை. அதையும் தொடங்கிய பின்தான் உண்மையான தலைவலி எம்மைக் காத்திருக்கின்றது."

சில விற்பனைகள் ருஷ்ய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. வேறு சில, நிர்வாக அதிகாரிகளின் சுய இலாபத்திற்காக நடைபெறுகின்றன. இந்தரக விற்பனையில் அரசுக்கு ஒரு வித பங்கும் இல்லை. பெரும்பாலும் விற்பனையால் வரும் பணம் யாவும் அரசியல்வாதிகளுக்கும், உளவுத்துறை

மற்றும் இராணுவ அதிகாரிகளுக்கும் உரியதாகி விடுகின்றது. பணம் படைத்த பிறநாட்டு வர்த்தகர்களும், பெரும் சர்வதேச வர்த்தக நிறுவனங்களின் பிரதிநிதிகளும் ருஷ்யாவில் இன்று காணப்படுகின்றனர். கவலைக்குரிய விஷயம் என்னவென்றால் பெரும் குற்றச் செயல் புரியும் கும்பல்களும் தங்கள் முகவர்களை ஆயுதவேட்டைகளுக்காக இங்கு அனுப்புவது தான். இவர்கள் தரமான ஆயுதங்களுக்கு கேட்ட விலை கொடுத்து வாங்குவது அண்மையில் கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. அத்துடன் இனவிடு தலைக்காகப் போராடும் குழுக்களும் தங்கள் பிரதிநிதிகளை இங்கு அனுப்பி வருகின்றனர். ருஷ்யா இன்னுந் தரமான குடும்பப் பாவனைப் பொருள்களையும் சொகுசாக வாழ்க்கை நடத்துவோர் விரும்பும் உல்லாசச் சரக்குகளையும் தயாரிக்கும் நிலைக்கு வர இன்னும் பல வருடங்கள் எடுக்கும். அதுவரையும் இப்படியான ''இரும்பு வியாபாரம்'' செய்ய வேண்டிய கட்டாயம் ருஷ்யாவுக்கு உண்டு. வெளிநாட்டு வர்த்தகர்களுக்கு உதவுவதற்கும், அதன் காரணமாக ஊதியம் தேடவும் இடைத் தரகர் போன்றதோர் கும்பல் ருஷ்யாவில் தோன்றியுள்ளது. வியாபாரத்தை வெற்றிகரமாக நடத்தித்தரும் அதிகாரிகளையும், தாராளமாக கைலஞ்சம் வாங்கும் நிர்வாகிகளையும் இவர்களுக்கு நன்றாகத் தெரிந்தபடியால் வெளிநாட்டு வர்த்தகர்கள் இவர்களுடைய. சேவையை தேடிப் பெறுகின்றனர்.

நிர்வாக அதிகாரிகளும், முப்படையிலும், உளவுப்படையிலும் பொறுப்பு வாய்ந்த பதவி வகிப்பவர்களும் தேசிய உடைமைகளை விற்றுப் பணம் பெறுவதின் பின்னணி என்ன(?) சோவியத் ருஷ்யாவில் இவர்கள் பெற்ற பெரும் ஊதியமும், உயர்ந்த சலுகைகளும் இன்று இவர்களுக்கும் கிடைப்பதில்லை. தமது வருவாயைத் தாமே தேட வேண்டிய நிலையில் இவர்கள் இருக்கிறார்கள். அட்மிரல் தரத்திலுள்ள ஒரு கப்பற்படை அதிகாரி அரசுக்குச் சொந்தமான நீர் மூழ்கிக் கப்பல்களை பழைய இரும்பு விலைக்கு விற்றுள்ளமை, அண்மையில் அம்பலத்திற்கு வந்துள்ளது. சென்ற வருடம் லத்வியாநாட்டின் துறையில் நிறுத்தப்பட்ட ருஷ்யக் கப்பல்களின் எரிபொருள் யாவும் வெளியாருக்கு விற்கப்பட்டுக் கப்பல்கள் நாடு திரும்ப முடியாமல் தவித்துள்ளன. இந்த வியாபாரத்தைச் செய்தவர்கள் கப்பற்படையின் உயிர் அதிகாரிகள் என்பது இன்னு மோர் செய்தி. ஒஸ்மியம் 187 எனப் படும் அணு உலையில் பயன் படுத்தப்படும் மிகப் பெறுமதியினை கனியத்தின் கம்யூனிஸ்ட் கட்சி

யூரல் மலைப் பிரதேசத்தில் 200 கிலோ மீற்றர் வடக்கே சோவியத் ருஷ்யாவின் அணு ஆயுத மையங் காணப்படுகின்றது. யெல்சின் அரசியலுக்கு வந்ததே இந்த இடத்தில் இருந்து தான். இங்கு 32,000 ஏவுகணையில் பொருத்தப்படும் அணுகுண்டுகள் காணப்படுகின்றன. இவற்றைச் செயலிழக்கச் செய்வதில் விஞ்ஞானிகளும், தொழில் நிபுணர்களும் இப்போது ஈடுபட்டு வருகின்றனர். அவை ஆயுதங்களுக்குப் பொருத்தமாகப் பயன்படுத்தப்பட்ட புளுட்டோனியம் இப்போது தொழிற்சாலை



எம். ஐ. ஜி. 29 ரக யுத்த விமானங்கள் தொழிற்சாலையில் கட்டப்படுகின்றன. இவை விற்பனைக்கு உள்ளன.

அதிகாரியும், உளவுப்படை (கே. ஜி. பி) முதல்வரும் கூட்டாக வெளிநாட்டு நிறுவனம் ஒன்றுக்கு விற்றுள்ளனர். இதன் விலை ஒரு கிராம் 40,000 டொலர், பல மில்லியன்கள் பெறுமதி வாய்ந்த இந்தக் கையாடலில் பெற்ற பணம் எங்கு சென்று உள்ளது என்பது தெரியவில்லை. ஆயுத விற்பனையின் போது யாருக்கு விற்கப்படுகின்றது என்பதையெல்லாம் ருஷ்யர்கள் பார்ப்பதில்லை. பல மில்லியன் பெறுமதியான ஆயுதங்கள் பிற நாட்டு நிறுவனங்களின் பெயரில் மத்திய கிழக்கின் இஸ்லாமிய நாடுகளுக்கு பணம் ஒன்றே குறியாக ஏற்றுமதி செய்யப்படுகின்றன. தார்மிகத்துக்கே இடமில்லை. எதுவிதப்பட்டும் வியாபாரம் நடந்தால் சரி.

ளில் பயன்படுத்தும் எரிபொருளாக மாற்றப்பட்டு வருகின்றது. ஆனால் யெல்சின் அனுப்பி வைத்த அனு ஆயுதப் பரிசோதகர்கள் இவ்விடத்தில் தங்கள் கடமையைச் செய்ய உளவுத்துறை அனுமதி வழங்க மறுத்துள்ளது, இந்த அணு ஆயுத மையத்தில் கனவிலும் நினைக்க முடியாத பெரும்பணம் குவிந்து கிடப்பதே காரணம். யெக்காரறின் பேர்க் எனப் பெயரிடப்பட்ட இந்த மையம் தன்னகத்தே புளுட்டோனியத்தை விட ஒஸ்மியம் 187, போரோன் 10 போன்ற வைரத்திலும் பல மடங்கு பெறுமதி வாய்ந்த திரவியங்களை வைத்திருக்கின்றது.

ருஷ்யத் தரகர்களை விட இஸ்ரேல் நாட்டைச்சேர்ந்த ஐசன் பேர்க் போன்ற சர்வதேசத் தரகர்களும் இந்த வியாபாரத்தில் குதித்துள்ளனர். இவர்கள் ருஷ்யாவுக்கு வருகை தராமல் தங்கள் அலுவலகங்களில் இருந்தபடி செய்மதித் தொலைபேசி மூலம் தங்கள் பணியை முடித்து விடுகின்றனர். இவை ருஷ்ய வியாபாரத்தை முடித்துக் கொடுக்கும் இடைத் தரகர்கள் சுவிற்சிலாந்தில் தங்கள் அலுவலகங்களை வைத்திருக்கின்றனர். அவர்களுடைய வங்கிக் கணக்குகளும் அந்த நாட்டிலேயே இருக்கின்றன. ருஷ்யாவில் வாங்கப்படும் கனியங்களைப் பரிசோதிப்பதற்கும் சுவிற்சிலாந்தில் ஆய்வு கூடங்கள் நிறுவப்பட்டுள்ளன.

இவர்களை விடக் கடத்தற்காரர்களும் இன்று ருஷ்யாவில் மலிந்து விட்டனர். கைக்கெட்டியதைச் சுருட்டிக் கொண்டு இவர்கள் நேராக பால்றிக் கடலோரப் பகுதிக்கு வருகின்றனர். இங்கு தொழில் நிபுணர்கள், சில சமயம் விஞ்ஞானிகள், ஆயுதந் தரித்த மெய்ப்பாதுகாவலர் சகிதம் பிறநாட்டு வர்த்தகர்கள் உல்லாச விடுதிகளில் தங்கியிருக்கின்றனர். பொருளின் தரம் பரிசோதிக்கப் பட்டபின் விலை தீர்மானிக்கப் பட்டுப் பொருள் கைமாறுகின்றது. வர்த்தகர்களும், கடத்தற்காரர்களும் தத்தம் இடத்திற்குத் திரும்புகின்றனர். இவ்வாறு மிக அபூர்வமாகக் கிடைக்கும் கனியங்கள் யாவும் ருஷ்ய நாட்டை விட்டு வெளியேறுகின்றன. சுதந்திரமான தடையற்ற சந்தைப் பொருளாதாரத்தை ருஷ்யர்கள் விரும்பியது உண்மை. ஆனால் அது இந்த உருவம் எடுக்கும் என்று யாரும் நினைக்கவில்லை.

ரைம் ஏப்பிரல் 18, 1994

★

# சிறு தாக்குதல் அபாயகரமானது

★★★★★★★★

**பொஸ்னியா: பில் கிளின்ரன் துவக்கை நீட்டுவார், ஆனால் சுடமாட்டார். சேர்பிய இராணுவ அதிகாரியின் விமர்சனம்.**

★★★★★★★★

இரண்டு வருட கால தாமதத்தின் பின் நேற்றோ நாடுகள் சேர்பியர்கள் மீது விமானத் தாக்குதல் நடத்த ஆரம்பித்துள்ளன. ஏப்ரல் மாத நடுப் பகுதியில் இரண்டு சுற்று விமானக் குண்டு வீச்சு சேர்பியர்களின் நிலைகள் மீது நடாத்தப்பட்டுள்ளது. முஸ்லிம் மக்கள் தங்குவதற்குப் பாதுகாப்பான இடமென ஐ. நா குறிப்பிட்ட கொராஸ்டே (Gorazde) நகர் மீது சேர்பிய இராணுவம் தனது பிடியை அண்மைக்காலமாக இறுக்கி வருகின்றது. இந்தச் சுற்றி வளைக்கப்பட்ட நகரை ஐ. நா பாதுகாப்பான இடம் எனப் பரிந்துரை செய்தது ஒரு சர்வதேச மட்டக் கேலிக் கூத்தாக இருக்கின்றது. இந்த நகரில் 65,000 குடி மக்கள் காணப்படுகின்றனர். இந்த நகருக்கு அண்மையில் உள்ள குன்றுகளிலிருந்து சேர்பியர்கள் எறிகணை வீச்சு, பீரங்கித் தாக்குதல், கலிபர் சூடு போன்றவற்றை நடத்தி வருகின்றனர். இதை நிறுத்தும் நோக்குடன் நேற்றோ விமானங்கள் குண்டு போடத் தொடங்கியுள்ளன. ஆறு விமானங்கள் இதில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன. காலநிலை சரியில்லாதபடியால் விமானங்கள் குறிபார்த்துத் தாக்குதல் நடத்த முடியவில்லை. ஆனால் சேர்பியர்கள் தரையிலிருந்து வானிற்குத் தாக்கும் ஏவுகணைகளைத் தொடுத்துப் பிரிட்டிஷ் போர் விமானமொன்றைச் சுட்டு வீழ்த்தியுள்ளனர். விமானம் நொருங்கியது, ஆனால் விமானி பாரசூட் உதவியுடன் உயிர் தப்பி உள்ளார்.

மேற்கூறிய அரைமனத் தாக்குதல் வாளும், வீரமும் களத்தே போட்டு நாடு திரும்பும் பண்டைக் காலப் போர் வீரனின் நிலைக்கு ஒப்பானது. சேர்பியர்கள் திட்டம் இட்டபடி செயற்பட்டு வருகின்றனர். ஆனால் அமெரிக்க அதிபர் பில் கிளின்ரனின் தடுமாற்ற நோய் அவருடைய ஐரோப்பிய நண்பர்களையும் நன்றாகப் பீடித்துள்ளது. இதைச் சேர்பியர்கள் ஐயந் திரிபற அறிந்துள்ளனர். ஆறு அமெரிக்க முன்னாள் வெளியுறவு ஆலோசகர்கள் அமெரிக்காவின் தற்போதைய கீழ் நிலையை உணர்ந்து பின்வருமாறு அறிக்கை விடுத்துள்ளனர். ''கிளின்ரன் ஜனாதிபதி தனது அரசியல் மற்றும் தார்மிகப் பொறுப்புக்களிலிருந்து விடுதலை பெற்றுள்ளார்.'' இந்தப் பாரதூரமான கண்டனத்தைப் பல அமெரிக்கப் பத்திரிகைகள் ஆமோதித்துள்ளன. மேற்கூறிய ஆறு பேர்களில் ஒருவரான இளைப்பாறிய அமெரிக்கப் பாதுகாப்புச் செயலாளர் பிறாங்

கார்லுச்சி ''பொஸ்னியாவில் ஐ. நா அமைதிப்படை தங்கியிருப்பதில் பயனில்லை'' என்று குறிப்பிட்டுள்ளார். இதைக் கேள்வியுற்ற பொஸ்னியாவில் தங்கியுள்ள ஐ. நா அமைதிப்படை இராணுவ அதிகாரி கார்லுச்சி சொன்னதை முற்றாக ஏற்றுக் கொண்டுள்ளார். ''எமது படை பொஸ்னியாவை விட்டு வெளியேற வேண்டும் அல்லது மேலதிகப் படைகளை வரவழைத்து எமது பலத்தைக் கூட்ட வேண்டும்'' என்று அந்த அதிகாரி பகிரங்கமாகத் தெரிவித்துள்ளார்.

நேச நாடுகள் இராசதந்திர ரீதியாகவும், இராணுவ ரீதியாகவும் குழம்பிப்போய் இருக்கின்றன. அமெரிக்க அரசு திட்டவட்டமான பொஸ்னியக் கொள்கையுடன் செயற்படுவதாகத் தெரியவில்லை. இங்கிலாந்தைச் சேர்ந்த ஐ. நா. அமைதிப்படையின் அதியுயர் இராணுவ அதிகாரி கூடுதலான விமானத் தாக்குதலுக்கு உத்தரவிடுவதை ஐ. நா. வின் நிர்வாக அதிகாரிகள் தடுத்துள்ளனர். பின்பு சேர்பியர்கள் அகோரமான தாக்குதல்கள் ஆரம்பித்தவுடன் அதே நிர்வாக அதிகாரிகள் கூடுதலான விமானத் தாக்குதல்களை நடத்தும்படி கேட்டுள்ளனர். ஆனால் இது நடைபெறவில்லை.

மேற்கூறிய ஆறு விமானங்களின் மட்டுப்படுத்தப்பட்ட தாக்குதலுக்கு உத்தரவு வழங்கும்போது கிளின்ரன் நிர்வாகத்தின் குறிக்கோள் என்ன என்று தெரியவில்லை. நேற்றோ நாடுகள் இந்த விமானத் தாக்குதல்களை நடத்தினாலும் அவை அமெரிக்கா கேட்டதற்காகவே நடத்தப்பட்டுள்ளன. ஆகவே இந்த மென்மையான தாக்குதல் அமெரிக்காவின் பலவீனத்தையே நிரூபித்துள்ளது. திட்டமிட்டுத் தாக்குதல் நடத்தும் சேர்பியர்களை இந்த மென்போக்கு ஒன்றும் செய்யப் போவதில்லை. எதிரியின் குணாம்சங்களைக் கணக்கில் எடுக்காத வெளியுறவுக் கொள்கை பயனற்றதாகும். ஆறு விமானங்கள் வீசிய சில குண்டுகள் கொராஸ்டே நகர எல்லைக்குள் வீழ்ந்துள்ளதைச் சேர்பிய இராணுவம் வரவேற்றுள்ளது. கிளின்ரனின் உறுதியின்மையும், குறிக்கோள் அற்ற நிலையும் விமானிகளுக்கும் தொற்றி உள்ளது போலும். இந்த இரண்டு வருட காலப் பொஸ்னிய யுத்தத்தில் 200,000 மக்கள் மடிந்துள்ளனர். இப்படியானதொரு கொடிய யுத்தத்தில் ஆறு விமானங்களின் அரைகுறைத் தாக்குதல் யாதொரு அழுத்தமோ, தாக்கமோ செய்யவில்லை என்பது வெளிப்படை. ஆனால் ருஷ்ய ஜனாதிபதி விமானத் தாக்குதல்களைக் கண்டிக்கத் தவறவில்லை. ருஷ்யத் தேசியவாதிகளின் செல்லப்பிள்ளை என்ற இடத்தைச் சேர்பியர்கள் பிடித்துள்ளதே காரணம். கூச்சலிடும் ருஷ்யத் தேசியவாதிகளை அடக்குவதென்றால் அவர்களிலும் கூடுதலாகத் தேசியம் பேச வேண்டும் என்ற நிலையில் பொறிஸ் யெல்சின் இன்று இருக்கின்றார். எது எப்படி இருப்பினும் கிளின்ரன் விதைத்த தவறுகளை அவரே அறுவடை செய்யுங் காலம் வெகு தூரத்தில் இல்லை.



இங்கிலாந்து

## குடிசைக் கைத்தொழில் ஒன்று

ஜப்பானிய வர்த்தகர் குழுவொன்று இங்கிலாந்தின் மாகாணக் கட்டடக் கலையில் ஆர்வங் கொண்டு, பல நூற்றாண்டு பழைமை வாய்ந்த கொட்ஸ்கோல்ட் என்ற கிராமத்தில் உள்ள செதுக்கப்பட்ட கல்லாலான குடிசை வீடுகளை விலை கொடுத்து வாங்கி ஒவ்வொரு கல்லாகக் கழற்றி டோக்கியோவுக்குக் கப்பலில் ஏற்றவுள்ளது. அவர்கள் அந்தப் பழங்கால வீடு ஒவ்வொன்றிற்கும் 300,000 ஸ்டர்லிங் பவுண் அளவு கொடுத்து வாங்கிப் பிரித்தெடுத்து ஜப்பானுக்குக் கொண்டு சென்று, அங்கே அவற்றை மீண்டும் வீடுகளாகக் கட்ட உள்ளனர். இங்கிலாந்தின் கட்டடங்களை உலகெங்கும் கப்பலேற்றும் நிறுவனம் ஒன்று இதனைச் செய்வதில் ஈடுபட்டு உள்ளது.

# அந்தரங்க நாடகம்

**ஹெயிற்றியின் உறுதியான இராணுவத் தலைமையால் அமெரிக்க சனாதிபதி அடுத்து என்ன நடவடிக்கை எடுப்பது எனத் தடுமாறுகிறார்.**

ஹெயிற்றியை ஆள்பவர்கள் உலகின் எதிர்ப்புக்குப் பயப்படவில்லை. காரணம் சதிக்குழுவின் லெப். ஜெனரல் றாவுல் செட்றாஸ் ஆயுதப்படையின் பலவான், ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதி ஜீன் பேட்றண்ட் அறிஸ்ரைட்டின் திரும்பலை வழிமறிப்பவர், 81 வயதான தனது மிக நெருங்கிய நண்பனை ஆயுதப் படையினரால் பொறுக்கி எடுக்கப்பட்ட ஜனாதிபதியாக மிகச் சாதுரியமாகப் பதவியில் அமர்த்தினார். இது ஐக்கிய அமெரிக்காவுக்கு நேரான சவால். ஒரு சிறுபான்மை வலது சாரிப் பிரதிநிதிகள், இவர்களுள் எண்மர் நடந்து முடிந்த முறையற்ற தேர்தலில் பதவி உயர்த்தப்பட்டவர்கள், அறிஸ்ரைட்டின் நீண்டகால அஞ்ஞாத வாசம் தங்களுக்கு ஒரு வாரிசைத் தெரிவு செய்வதைவிட வேறு வழியில்லை என்றனர். தலைநகரில் 21 மரியாதைப் பீரங்கி வேட்டுக்களைத் தொடர்ந்து உயர் நீதிமன்றம் எமில் யொனாசையின்ற், அறிஸ்ரைட் என்றுமே திரும்பாதவாறு வெகுநுட்பமாகக் கையாளப்பட்ட சதிமூலம் பதவியில் அமர்த்தப்பட்டார். செட்றாஸ் யொனாசையினுக்கு வலது பக்கமாக நிற்கக் காணப்பட்டார்.

இந் நகர்வு பில் கிளின்ரனை அவராகவே புதிய கடும் நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட்ட வேளை எதிர்த்தாக்குதல் கொடுக்கத் தட்டுத் தடுமாற வைத்தது. அவர் ஐக்கிய நாடுகள் சபையை ஹெயிற்றியின் சட்டத்துக்கு மாறான நிர்வாகத்துக் கெதிராகக் கடும் பொருளாதாரத் தடையை விதிக்குமாறு தூண்டினார். அவர் ஹெயிற்றியின் அகதிகளை ஒருவித விசாரணையுமில்லால் பலவந்தமாகத் திருப்பி அனுப்பும் பழிக்கிடமான நடைமுறையை முடிவுக்குக் கொண்டுவரும் புதியகொள்கையைப் பிரகடனப்படுத்தினார். அவர் ஐக்கிய நீக்குறோ கல்லூரியின் தலைவர் வில்லியம் கிறே ஐ வோஷிங்ரனில் புதிய ஹெயிற்றிச் சக்கரவர்த்தியாக நியமித்துள்ளார். இப்போது அவர் ஆயுதப்படை ஆக்கிரமிப்பெனப் பயங்காட்டுகிறார்.



அவர்களுடைய முயற்சியைப் பொறுத்தளவில் ஹெயிற்றி சதிக்குழுத் தலைவர்கள், உலகிலுள்ள அரசுகள் அனைத்தினாலும் கண்டனஞ் செய்யப்பட்டனர். அரசுகள் புதிய கைப்பொம்மை ஜனாதிபதியை அங்கீகரிக்க மறுத்தன. இருப்பினும் கிளின்ரன் எங்கே தொடங்கினாரோ அங்கே வந்துள்ளார். ஐக்கிய நாடுகள் சபை அமெரிக்க மாகாணங்களின் அமைப்புக்கள் ஏன் எல்லோரும் ஜனாதிபதியின் தூரப் பார்வையை எதிர்பார்த்தவேளை கிளின்ரனின் நிச்சயமற்ற தன்மை குழப்புவதாக இருக்கிறது.

ஹெயிற்றி மீது இறுக்கமான பொருளாதாரத் தடையை அமுலாக்க அவர் எண்ணியதை, அவரது நிர்வாகம் சாத்தியமான இராணுவ நடவடிக்கைபற்றித் துரிதப்படுத்தி வெளியிட்டமை அத்திவாரத்தை இரகசியமாக அழித்துவிட்டது. நிர்வாகம் ஏதோ ஒருவகையில் தலையிட்டை நோக்கி அலைந்துகொண்டிருக்கிறது என்று ஜோர்ஜ் போறியோல் வோஷிங்ரனில் உள்ள யுத்த தந்திரம் மற்றும் சர்வதேச படிப்புக்களுக்கான மையத்தின் இயக்குநர் கூறுகிறார்.

ஒரு படையெடுப்பு உடனடியாக நிசழக்கூடியதா என்பதற்கு வெள்ளை மாளிகை அதிகாரிகளுடைய போக்கு முழுமையான மறுப்பே. ஆனால் மந்திரி சபையில் இருந்து கிளம்பும் சைகைகள் கூடுதல் கலப்புடையன. புதனன்று லொஸ்எஞ்சலில் ரைம் பத்திரிகை வெளியிட்ட அறிக்கையில் ஐ. அ – ஹெயிற்றி ஆயுதப்படையைச் சுத்தி செய்வதற்கு 600 கனரக ஆயுதப்படையை ஆயத்தஞ் செய்வதாக ஐ. அ பாதுகாப்புச் செயலர் சொல்கிறார். ''அவ்வளவு திட்டத்தைப்பற்றி நாம் பரிசீலிக்கி

றோம் என்பதை நான் மதிப்பிடவில்லை. ஐ. நா பிரதிநிதி மெடலீன் அல்பிறைற் பல பொருள்படச் சொன்னார்; ''உள்ளோ அல்லது வெளியோ எதுவென்று ஒன்றையும் உத்தரவிடவில்லை'' என்று.

அடுத்த நடவடிக்கை எது என்று ஜனாதிபதிக்குத் தெரியாது என்று நிர்வாக உத்தியோகத்தர்கள் இரகசியமாக ஒப்புக் கொள்கிறார்கள். கடும் பொருளாதாரத் தடை மற்றும் புதிய தூதரை நியமிப்பது பேச்சுவார்த்தைக்கு மீள வாய்ப்பேற்படுத்தும். அதனால் அநேகமாக இப்பொழுதிருந்து பொருளாதாரத்தடையின் கடி உணரப்படுவதற்கு முன்பல்ல. ''ஒருவரும் படைஎடுப்பில் ஆர்வமாக இல்லை. இது ஒரு தேர்ந்தெடுக்கும் உரிமை. நாம் அதைப்பற்றி ஆழமாக ஆராய்ந்து கொண்டிருக்கிறோம்'' என்கிறார் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் அந்தோனி லேக்.

இறுதியானது உண்மைக்குப் புறம்பனாது ஐ. அ படையெடுப்பு நீண்ட காலச் சிக்கல் நிறைந்தது. உள்ளே போவது சுலபம் வெளியேறுவது கடினம். ஹெயிற்றியின் படையைச் சாந்தப் படுத்துவது விரைவில் முடியும். சனநாயக விரோதச் சக்திகளிடமிருந்து ஆயுதங்களைக் களைவது தீய கனவு போல, அறிஸ்ரைட்டுக்கு அதிகாரத்தை மீளக் கொடுப்பது சுலபம். அவருடைய அதிகாரத்தைத் திரும்ப நிலைநாட்டுவது இயலாது. ஹெயிற்றியின் சதிக்குழுவைச் சீர்குலைப்பதற்கு 2 மணித்தியாலம் எடுக்கும், ஆனால் ஜனநாயக மாற்று வழியைக் கட்டி எழுப்பப் பல ஆண்டுகள் செல்லும். ஹெயிற்றியின் ஆயுதப் படையினரை வெல்வது ஒரு கடுமையான இராணுவச் சவால் அல்ல; பிறகு செய்யப் போவதுதான் முக்கிய சவால். நல்ல முறையில் வெளியேறும் தந்திரோபாயம் கடுமையானது.

பென்ரகன் திட்டப் பணிகளுக்குப் பரிச்சயமான உத்தியோகத்தர்கள் ஐ. அ ''இரவு நேர உட்புகுதல்'' நடவடிக்கையை எடுக்கத் தீர்மானிக்கலாம் என்பர். இது பனாமா மீது 1989 இல் மனுவெல் நொறேஜிகாவை வீழ்த்திய போது நடத்தப்பட்ட படையெடுப்புப்போன்றது. ஆயிரக் கணக்கில் 82 ஆம் படைப் பிரிவைச் சேர்ந்தவர்கள் 101 ஆவது வான் படையும், மற்றும் கடற்படையினரும் தீவின் மீது வேகமாக இரவு நேர முற்றுகையை மேற்கொள்வர். அவர்கள் ஹெயிற்றியின் ஆயுதப்படைத் தலைவர்களைத் தடுத்துவைத்துச் செய்திப் பரிவர்த்தனையை இயங்காமற் செய்வர். மிகக் குறைவான எதிர்ப்பே எதிர் பார்க்கப்படும். ஏனெனில் ஹெயிற்றியின் படை 7,000 மட்டுமே. அத்துடன் தளபாடங்கள் ஒருசில. கவச வாகனங்கள் உட்பட வேவு பார்க்கும் வாகனங்களும் உண்டு. அவர்களுடைய படைப் பலத்தை விடிவதற்குள் முடித்து விடலாம். அமெரிக்க படைகள் பனாமாவுக்குள் புகுந்து நொறேஜிகாவை ஒருசில மணித்தியாலத்துக்குள் புகுந்து பிடித்து விடலாம் என்று எண்ணியது. ஆனால் அம் முயற்சி வெற்றிபெற ஒரு வாரத்துக்கு மேல் எடுத்தது. சோமாலியாவில் ஜெனரல் மொகமட்பரா, அயிடிட்டைப் பிடிக்க இயலாமற் போன சம்பவத்தில் அமெரிக்கா G I படை 18 போர் வீரரை இழந்தது.

கட்டுக்கடங்காவிட்டால் ஆயிரக் கணக்கில் அமெரிககப் படையினர் வளங் குன்றிய நாடு முழுவதும் பரந்து உணவும், மருந்தும் வழங்கி கிராமப்புறப் பக்கங்களைச் சாந்தப் படுத்துவர். ஆயுதப் படை அதிகாரிகள் இவ்விதமான நடவடிக்கையை மேற்கொள்ளப் பனாமாவில் ஈடுபடுத்தப்பட்டது போல ஏறத்தாழ 25,000 படையினர் தேவைப்படுமென்று ஹேசியம் சொல்கிறார்கள். காரணங் காட்டி ஒக்ரோபரில் U.S.S Harlan County யில் ஏற்பட்ட திடீர் மாற்றங் காரணமாக 195 U.S படையினர் ஒரு சிலர் சண்டியர்களிடமிருந்து வந்த எதிர்ப்பினால் பின்வாங்கினர். கிளின்ரன் ஐ. அ படையின் பலம் பற்றி ஒருவித ஐயப்பாட்டுக்கும் இடமளிக்க மாட்டார். ஏனெனில் எங்களுக்கு நம்பகத்தன்மை கிடையாது. கூடுதல் படையினர் தேவையென்கிறார் பென்ரகன் அதிகாரி. இதற்கிடையில் ஹெயிற்றி வான்வெளியில் விமானங்கள் பறந்து அறிஸ்ரைட் இடமிருந்து ஹெயிற்றி ரெலிவிசுக்குச் செய்திகள் அனுப்பும். இது அவருடைய மீள்வருகைக்கு வழி திறக்கும்.

அது புதிய பிரச்சனைகளை உண்டாக்கலாம். நாட்டில் உயர் மட்டத்தில் உள்ளோரும், வணிகரும் அறிஸ்ரைட் உண்மையாகவே ஜனநாயகக் கோட்பாடுகளைப் பேண எண்ணுகிறாரா அல்லது இன்னோர் ஆயுதபல ஆட்சியை நிலை நிறுத்த எண்ணுகிறாரா? என்று கேள்வி கேட்பர். அவர்கள் அறிஸ்ரைட்டின் ஆதரவாளர்கள் வணிக உலகத்தை ஏற்கனவே தடை அழிக்காதிருப்பின் தண்டிக்கக் கோருவார்களா என்று பயப்படுகிறார்கள். வார இறுதியில் பொருளாதாரத் தடை கடுமையாக அமுல்படுத்தப்படின் அறிஸ்ரைட் மேலும் ஒரு முறை படை சார்பற்ற தீர்வுக்குத் தள்ளப்படுவர். அறிஸ்ரைட் எப்போதுமே இல்லை சொல்பவராகார். அவருடைய மக்கள் அபிமானம் தீவில் சாயம் வெளுக்கிறது. அவர் இப்போது தொடரும் துன்பத்துடன் இனங்காணப்படுகிறார்.

அமெரிக்க படையெடுப்பு நேரத்தில் அறிஸ்ரைட் வருவதை அமெரிக்காவின் கைப்பொம்மை என அநேக ஹெயிற்றியர் எண்ணுவர். அதே வேளை அவர் அமெரிக்க தூதராலயத்தின் மீதான இயற்கையான வெறுப்பைத் தூண்டிவிட முடியும். மாத முற்பகுதியில் அதிகாரிகள், அறிஸ்ரைட்டும் அவரது சகாக்களும் மனித உரிமை மீறல்களைத் திரித்துக் கூறியோ கட்டுக்கதையாகச் சொல்லியோ பிரச்சார ஆயுதமாகப் பாவிக்கிறார்களென்று குற்றஞ் சாட்டிய செய்தியை வெளியிட்டனர். பதவியிறக்கப்பட்ட ஜனாதிபதியின் ஆதரவாளர்கள் அபூர்வமாகக் கூட்டுப் பணிக்கான முகூர்த்த வேளையில் அநேக தூதாக இராஜதந்திரிகளை வெளியேறும்படி கேட்டனர்.

ஜில் ஸ்மொலோவ்

ரைம், மே 23, 1994

# ஒரு தசாப்த காலமாகத் தமது நாட்டைக் காட்டிக் கொடுத்த அமெரிக்க-ருஷ்ய ஒற்றர்கள்.

## ருஷ்யாவுக்காக வேவு பார்த்த அமெரிக்கர்கள்

### 1) ஜோன் வோக்கர் (இளையவர்) (JOHN WALKER JR)

இவருடைய குடும்பம், பரம்பரையாக அமெரிக்கக் கப்பற் படையுடன் தொடர்புள்ளதாகும். கடற்படை இரகசியங்களை ருஷ்யாவுக்கு விற்ற குற்றத்திற்காக, இவர் மே 1985 இல் கைது செய்யப்பட்டுள்ளார். அமெரிக்க நாசகாரிக் கப்பல் நிமிற்சில், இவருடைய மகன் மைக்கேல் உயர் அதிகாரியாகக் கடமையாற்றும் வேளையில், ருஷ்யாவுக்காக உளவு பார்த்த குற்றச் சாட்டில், இதே காலப்பகுதியிற் கைது செய்யப் பட்டுள்ளார். தனது மகனுக்குக் கருணை காட்டும்படி, ஜோன் வோக்கர் நீதிபதியை மன்றாடியுள்ளார். நீதிமன்றம், ஜோன் வோக்கருக்கு ஆயுள் தண்டனை விதித்துள்ளது.

### 2) றொனால்ட் பெல்ரன் (RONALD PELTON)

1980 – 1985 ஆகிய காலப்பகுதியில், தேசியப் பாதுகாப்புப் புலனாய்வுப் பகுதியில் அதிகாரியாக இருக்கும் வேளையில், அமெரிக்காவின் அதி இரகசிய சமிக்ஞைகளை இவர் ருஷ்யாவுக்கு விற்றுள்ளார். நவம்பர் 1985 இல் கைது செய்யப்பட்டுள்ளார். இவருக்கு ஆயுட் சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

## அமெரிக்காவுக்காக வேவு பார்த்த ருஷ்யர்கள்

### 1) வலெறி மாற்றினோவ் (VALERY MARTINOV)

இப்போது பரபரப்பான சூழ்நிலையிற் கைதுசெய்யப்பட்ட சி. ஐ. ஏ ஊழியன் அல்டிறிச் ஏம்ஸ் என்பவன் காட்டிக் கொடுத்ததால், பத்துக்கு மேற்பட்ட அமெரிக்காவுக்காக வேவு பார்த்த ருஷ்யர்கள் உயிர் இழந்துள்ளனர். மேற்கூறிய மாற்றினோவ், ருஷ்யத் தகவல்களை அமெரிக்காவுக்குக் கொடுத்து வந்ததை, ஏம்ஸ் ருஷ்யாவுக்கு அறிவித்தபின், அவன் கொல்லப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. மாற்றினோவ் 1986 இல் மரணித்திருக்கலாம்.

### 2) சேர்கி மோட்டோறின் (SERGEI MOTORIN)

இவனும், ஏம்ஸ் காட்டிக் கொடுத்தபின், 1986 இல் உயிர் இழந்திருக்கலாம் என்று தீர்மானிக்கப்பட்டுள்ளது. இவன், அமெரிக்காவிலுள்ள ருஷ்யத் தூதரக அதிகாரியாவான்.

### 3) எட்வேட் லீ ஹோவா(ர்)ட் (EDWARD LEE HOWARD)

தமக்கு உதவாதவர் என்று, சி. ஐ. ஏ இவரை 1983 ஆம் ஆண்டு சேவையிலிருந்து வெளியேற்றியுள்ளது. இதன் பின், சேவையிலிருக்கும் காலத்திற் சேமித்த அமெரிக்க இரகசியங்களை, இவர் ருஷ்யாவுக்கு விற்றுள்ளார். ஆனால், 1985 இல் கைது செய்யப்படு முன், ருஷ்யாவுக்குத் தப்பி ஓடியுள்ளார், இப்போது, ருஷ்யாவுக்கு உளவு பார்த்த குற்றத்திற்காகக் கைது செய்யப்பட்டுள்ள அல்டிறிச் ஏம்ஸ், இவருக்கு உதவியிருக்கலாம் என்று நம்பப்படுகின்றது.

### 4) ஜேம்ஸ் ஹோல் (மூன்றாவது) (JAMES HALL III)

இவர் அமெரிக்க இராணுவத்தில் தொடர்புச் சாதன நிபுணராகக் கடமை ஆற்றுங் காலத்தில். இலத்திரனியல் உளவுச் சாதனங்கள் சம்பந்தமான இரகசியங்களை ருஷ்யாவுக்கு விற்றுள்ளார். டிசெம்பர் 1988 இல் இவர் கைது செய்யப்பட்டு, நீதி விசாரணையின் பின், 40 வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளார். இவருடைய கைங்கரியத்தால், அமெரிக்காவின் இலத்திரனியல் உளவுத்துறை பெரும் பின்னடைவு அடைந்துள்ளது.

### 3) அடொல்ப் ரொல்காசெவ். (ADOLF TOLKACHEV)

இவன், அதியுயர் ருஷ்யப் பாதுகாப்பு அதிகாரி. கருவிகள் மூலம் வேவு பார்க்கும் தொழில் நுட்பத்தில் நிபுணன். மொஸ்கோ நகரில், அமெரிக்கத் தூதரக அதிகாரிகளுடன் பேச்சு நடத்தும் காலத்தில், இவன் கைது செய்யப்பட்டுள்ளான். இவன் சி. ஐ. ஏ உளவாளி என்று நிரூபணம் ஆகியதால், ருஷ்யச் சட்டப்படி சுட்டுக் கொல்லப்பட்டுள்ளான். இவனும் 1986 இல் உயிரிழந்திருக்கலாம்.

4) இவனுக்குப் பெயரில்லை. தொடர்புகளுக்காக இவனுக்குக் கொடுக்கப்பட்ட இடுகுறிப் பெயர், புறலோக் (PROLOGUE) எனப்படுகின்றது. முகம் தெரியாத தொழில், உளவுத் துறை என்பதற்கு இது நல்லதோர் எடுத்துக் காட்டு. இவன், ருஷ்ய உளவு நிறுவனத்தில் சி. ஐ ஏ எதிர்ப்பு அலகிற் பணி ஆற்றி வந்த காலத்தில், சி. ஐ. ஏ யின் கைக்கூலியாக மாறியுள்ளான். மேற்கூறிய ஏம்ஸ் காட்டிக் கொடுத்ததின் காரணமாக, கொல்லப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன. இது 1990 இல் நடந்திருக்கலாம்.

## இன்னும் வெளியேறவில்லை

தாய்லாந்தில் முன்பு 1981 இலும் 1985 இலும் தோல்வியில் முடிந்த அரசியல் சதிப்புரட்சி செய்த முன்னாள் இராணுவ அதிகாரியான மனுன் ரூப்காசானுக்கு அமெரிக்காவுக்குள் உள்ளேற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. தாய்லாந்து வெளியுறவு அமைச்சு அதுபற்றி அமெரிக்கத் தூதுவராலயத்திடம் மரியாதையாக விசாரித்ததற்கு அது மறுக்கப் பட்டுள்ளதெனப் பதில் அனுப்பப்பட்டுள்ளது. 1988 இல் அவருக்குத் தவறுதலாக ஒரு நுழைவு அனுமதி அமெரிக்காவால் அனுமதிக்கப்பட்ட பின்பு அவர் ஐரோப்பா சென்று மீண்டும் தாய்லாந்துக்குத் திரும்பியபொழுது அந்த அனுமதி இரத்துச் செய்யப்பட்டது. மனுன்தான் எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடவிருப்பதாகக் கூறுகிறார். 1982இல் தேசியத் தலைவர்களைப் படுகொலை செய்யத் திட்டமிட்டதாகக் குற்றஞ் சாட்டப் பட்டிருந்த அவர் 1993 டிசம்பரில் நீதி மன்றத்தால் சுற்றவாளியெனத் தீர்க்கப்பட்டு விடுவிக்கப்பட்டார்.

மொசாம்பிக்

# சொந்த வீட்டைப் போல சிறந்த இடம் இல்லை

மாபுற்றோவிலிருந்து எழுதுவது
பீற்றர் ஹோரதோ(ர்)ண்

**போரால் நலிவுற்ற நாட்டுக்கு அமைதி திரும்புகிறது; ஆயிரக் கணக்கானோர் வீடு திரும்புகிறார்கள்**

ஐ. நா அகதிகள் நிலையத்தில் அடுத்த அறுவடை காலம் வரை வயிற்றைச் சமாளிக்க அங்கு வழங்கப்படும் உணவுப் பண்டங்களைச் சேகரிக்க வரிசையாக நிற்போர் கூட்டத்தில் நிற்கின்றார், நுங்கேகிராமத் தலைவர் ஜோஸே ஜோஆவோ (ஜோன்). ஆறு மணி நேரம் நடந்தால் அவர் கிராமத்துக்குப் போகலாம் அவருடைய ஒரே ஒரு முறைப்பாடு, பன்றிகள் தங்கள் நிலத்தில்சோளம், இறுங்கு தானிய வகைகளைப் புசித்து விடுகின்றன என்பதே. ''என்ன இருந்தாலும், அவை எங்கள் பன்றிகள் தானே, எங்கள் நிலத்தில் எங்கள் பயிர்கள், நாங்கள் மீண்டும் எங்கள் இல்லத்தில் இருக்கிறோம்''.

மொசாம்பிக் நாட்டில் 16 ஆண்டு உள் நாட்டுப் போர் நடந்தது. ஏழு ஆண்டுகளுக்கு முன், ஜோனின் கிராமத்தினுள் படைவீரர் புகுந்தனர். அவர்கள் அரச படைவீரரா, மொசாம்பிக் எதிர்ப்பு இயக்க (றெனாமோ) வீரரா என்று சொல்ல முடியாது என்கிறார் ஜோன். அவர்கள் பல கிராம மக்களைக் கொன்று, அவர்களது பொருள்களைச் சூறையாடினர். தாம் எடுத்துச் செல்ல முடியாதவைகளை அழித்தனர். மீதமாயிருந்த குடிகள் இரண்டு நாள் நடந்து, அயல் நாடான மலாவியில் அடைக்கலம் புகுந்தனர். தம் தாய் நாட்டில் போர் நெருப்புப் போல் பரவி எரிந்தது; அவர்கள் ஒரு போதுமே தம் நுங்கே கிராமத்தைப் பார்க்க முடியாது என ஏங்கினர்.

18 மாதங்களுக்கு முன் அரசாங்கம் நடாத்தும் மொசாம்பிக்கின் விடுதலை முன்னணிக்கும், றெனாமோ கட்சிக்கு மிடையில் ஓர் அமைதி ஒப்பந்தம் எழுதப் பட்டது. சுமார் பத்து இலட்சம் மக்களின் உயிரைக் குடித்த போருக்கு முற்றுப் புள்ளி வைக்கப் பட்டது. பதினேழு இலட்சம் அகதிகள், தஞ்சம் புகுந்த அயல் நாடுகளான மலாவி, சாம்பியா, சுவிற்சிலாந்து, தென் ஆபிரிக்கா, தன்சானியாவிலிருந்து மீண்டும் தம் தாயகம் புக வாய்ப்பு ஏற்பட்டது. முதலில் தயங்கியவர்கள் பிறகு நாட்டில் சமாதானம் உண்டு என்பதை நிச்சயித்த பின், கூட்டங் கூட்டமாகத் திரும்பலாயினர். ஐ. நா. அகதிகளுக்கான ஆணையாளர் வகுத்த சிறந்த திட்டத்தின் கீழ் 203.4 மில்லியன் டொலர் செலவிடப்பட்டு இடம் பெயர்ந்தோரைமீளக் குடி அமர்த்தும் முயற்சி வெற்றி பெற்றது. அத்தொகை ஆப்கானிஸ்தானில் செலவிடப்பட்டதற்குச் சற்றுக் குறைவானது. இடம் பெயர்ந்து துன்புற்றோரில் மூன்றில் ஒரு பகுதியினர் ஏலவே தாயகந் திரும்பி விட்டனர். அடுத்த ஒக்ரோபரில் முன்னர் பொதுவுடைமைப் போக்கில் சென்ற மொசாம்பிக் முதலாவது ஜனநாயகத் தேர்தலைக் காணும். அப்போது எஞ்சியுள்ள



ஒரு தசாப்தத்துக்குப் பின் மொசாம்பிக் வாசிகள் அகதி வாழ்வை முடித்து, சிரித்தபடி நாடு திரும்புகிறார்கள்.

அகதிகளும் தம் மண்ணுக்கு மீண்டு விடுவர்.

அவர்கள் காணப்போகும் நாடு உள் நாட்டுப் போரால் அடிமட்டத்தில் ஒரு கட்டமைப்பும் அற்று விட்டது மட்டுமல்லாமல் இயற்கையின் பேரழிவினாலும் நலிந்து கிடக்கின்றது. இந்த நூற்றாண்டில் ஏற்பட்ட மிகக் கொடிய வரட்சியால் பெரும் அளவு இறப்புக்கள் நிகழ்ந்தன. ஐ நா. மேற்பார்வையில், அரசாங்கப் படைகள் 60,000 பேரும், றெனாமோ படைகள் 19,000 பேரும் கலைக்கப்படும் திட்டம் தொடங்கிவிட்டது, ஆனால் நாட்டில் புதையுண்டு கிடக்கும் 2 மில்லியன் கண்ணிவெடிகளும், பிறவெடிக்கும் பொருள்களும் மக்களுக்கு இடர் விளைவிக்கும். 1975 –க்கு முன் போர்த்துக்கீச ஆட்சியாளரை எதிர்த்து மொசாம்பிக் விடுதலை முன்னணி போராடிய காலம் முதல் புதையுண்ட வெடிகள் அகற்றப்பட வேண்டும்.

கண்ணி வெடி இருந்தால் என்ன, அகதிகள் தாயகம் திரும்புவது தடைப்படாது. நல்லகாலம் வர இயற்கையின் பஞ்ச பூதங்களும் இப்போது ஒத்துழைக்கின்றன. கடந்த இரு ஆண்டுகளாக மாரி பொழிந்து மண் வளம் பெற்றது.. மொசாம்பிக்கின் அன்னக் களஞ்சியம் எனப் புகழ்பெற்ற அங்கோனியாவில் (மலாவியின் எல்லைப் பிரதேசம், ஜோனின் கிராமம் இங்கேதான் உள்ளது) மீண்டும் தானிய இலட்சுமி பூத்துக் குலுங்குகிறாள். சோளப் பயிர் பசும் அலை அலையாகச் செழித்துக் காய்க்கிறது. இடையிடையே அவரை இனங்கள் மிளிர்கின்றன. ஐ. நா ஊழியர் ஹூயி பிரான் சிஸ்கோ பொஃப்பானா சொல்கிறார்: ''பாருங்கள் பறவைகள் கூட நாடு திரும்பிவிட்டன. வரட்சி ஒழிந்து விட்டது'' என குருவிகள் ஐ. நா உதவி நிலையத்தில் எஞ்சிய தானியத்தைப் பொறுக்குவதைக் காட்டுகிறார்.

ஐ. நா வின் பிரதிநிதியாக அங்கு பணியாற்றும் அல்பிரடோ அகதிகள் திரும்புவதற்கு இரண்டு தூண்டுதல்கள் பாதுகாப்பும், மண்ணாசையுமாகும். நாட்டில் உயிருக்குப் பாதுகாப்பு இருக்கிறது என்றால் அவர்கள் தாயகம் திரும்புவார்கள். பாதுகாப்பு உணர்வினால் தம் நெஞ்சைப் பலப்படுத்திக் கொள்வார்கள். ஜோன் போன்ற கிராமவாசிகள் தாமாகவே தம் சொற்ப பண்டங்களுடன் வண்டிகளில் திரும்புகிறார்கள் தாம் பிறந்த மண்ணில் அற்ப சுகங்களுடன் வாழ்ந்தாலும் திருப்தியுண்டு என வருகிறார்கள்.

நன்றாக நிர்வகிக்கப்பட்ட சுவிற்சிலாந்து, தென்னாபிரிக்கா அகதி முகாம்களில் அநேக வருடங்கள் நிலையான வாழ்வு நடத்தியவர்கள், தையல் மெஷின், ஒற்றைச் சில்லுவண்டி, வீடு அமைக்க மரப் பலகைகளுடன் புகைவண்டிகளில் தம் ஊர் திரும்புகிறார்கள். 1983-ல் தம் இரு மனைவியர், மூன்று பிள்ளைகளுடன் சுவிற்சிலாந்துக்கு ஓடிப்போன ஒருவர் தாம் அகதி முகாமில் செய்த இரட்டைக் கதவைக் கொண்டு வந்து தம் புதிய வீட்டில் பெருமையுடன் பொருத்துகிறார். யுத்தம் முடிந்து விட்டது என்பதை யாரேனும் அறியாதிருக்கலாம். அவருடைய கதவில் பெரிய எழுத்தில் எழுதப்பட்ட வாசகம்: ''நான் எனது ஆயுதங்களைக் கொடுத்துவிட்டேன்; நீங்களும் கொடுத்துவிட்டீர்களா?'' அவர் மேலும் ஒரு வரியை எழுதினால் நன்றாயிருக்கும்: மீளமைப்புத் தொடர்கிறது.

ரைம், ஏப்ரல் 4, 1994.

## செத்துப் பிறந்த காவல் நாய்

சீனாவில் சிறகு முளைக்கத் தொடங்கியுள்ள பங்குச் சந்தையைக் கட்டுப்படுத்த ஓர் அமைப்பை ஏற்படுத்துவது அதிகாரிகளுக்கிடையில் இழுபறி நிலையில் நிறைவேறாமல் உள்ளது. 1993 இல் முன்னரைப் பகுதியில் சீன அதிகாரிகள் அமெரிக்காவில் உள்ளதுபோல் பங்குச் சந்தை உண்டியல்கள் ஆணைக்குழு ஒன்றை அமைப்பது என்று தீர்மானித்துள்ளனர். எனினும் அது நிறைவேற விடாமல் சீன நிதியமைச்சு, சீன மக்கள் வங்கி, மாகாண அரசுகளை மறு சீரமைக்கும் ஆணைக்குழு என்பன தடுத்து விட்டன. அதுபற்றிய சட்டம் இயற்றுவதில் நடைபெறும் நெடிய விவாதங்கள் அப்படியான அமைப்பு ஏற்படுமென்று எதிர்பார்ப்பதை நம்பிக்கையற்றதாக்குகிறது.

**சீதாவின் கலை அம்சத்தில்**

மின்னுவதெல்லாம் பொன்னே தான் !

அதன் அழகே தனிச் சிறப்புத் தான் !

## சீதா நகை மாடம்



கை தேர்ந்த விற்பனையாளர்களின்
கை வண்ணத்தில் உருவாகும்
22 கரட் தங்க நகைகள்



தமிழர் கலை வடிவை வெளிக்காட்டும்
அழகு தரும் ஆபரணங்கள்

வைபவங்களுக்குத் தேவையான நகைகளை தரங்குன்றாத்
தங்கத்தில் தவணை முறையில் பெற்றுக் கொள்ள

# ரீதா நகை மாடம்

27/A அருச்சுனா வீதி,
யாழ்ப்பாணம்.

தொழில் நுட்பம் தெளிவுறவும்
பல்கலை பெருகவும்

## வாழ்த்துகின்றோம் !

# சிவதாஸ் அரிவு ஆலை



சக்திமிக்க டீசல்
இயந்திரத்தின்
உதவியுடன்
திறமையாக
மர வேலைகளைச்
செய்து தருபவர்கள்.

★ செற்றிகள் ★ கண்ணாடி அலுமாரிகள்
★ கதிரை, மேசைகள் ★ மற்றும் மரத்தளபாடங்களையும்

பலவிதமான
கலை அம்சங்களுடன் செய்து கொடுப்பவர்கள்.

குறிப்பு :- இங்கே மொத்தமாகவும், சில்லறையாகவும் கொத்துவிறகு விற்பனை செய்யப்படுகிறது.

# சிவதாஸ் அரிவு ஆலை

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

# ருவான்டா ஒரு கொலைக் களம்

**"ருவான்டாப் படுகொலைகள் காட்டுமிராண்டித்தனத்திற்கு இலக்கணம் வகுக்கின்றன. இங்கு நடப்பவை அங்கோலா ஸ்ரீலங்கா, லைபீரியா பொஸ்னியா, நாகொர்னோ, கரபாக் ஆகிய நாட்டு நிகழ்ச்சிகளை ஒத்திருக்கின்றன."**

ருவான்டாவில் ஒரு மாதச் சங்காரம் 5,00,000 மக்களைப் பலியெடுத்துள்ளது. இருபதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில், இவ்வாறான இன அழிப்பு நடைபெற உலகம் அனுமதிப்பதே, கொலைச் சம்பவங்களிலும் கூடிய அதிசயம். இப்போது, படுகொலைகள் எண்ணிக்கையில் குறைந்துள்ளன என்று பார்வையாளர்கள் தெரிவிக்கின்றனர். காரணம், பெரும்பாலான மக்கள் கொல்லப்பட்டு விட்டனர் அல்லது நாட்டைவிட்டு ஓடிவிட்டனர். என்றாலும் முற்றாக நிறுத்தப்படும் வாய்ப்புக்கள் அநேகமாக இல்லை எனலாம். இன்று தென்னாபிரிக்காவில் வியக்கத்தகு ஆட்சி மாற்றம் அமைதியாக நடந்தேறியுள்ளது. ஆனால், மத்திய ஆபிரிக்காவில் சின்னஞ் சிறு ருவான்டா மனித குலத்திற்கே அவமானம் தேடித் தந்துள்ளது. ஏவுகணையில் செலுத்தப்படும் அணு குண்டு யுகத்தில், 'மச்செற்' எனப்படும் ஆபிரிக்க நாட்டுக் கனம் பொருந்திய கத்தியே ருவான்டாவில் கொலை ஆயுதமாகப் பாவிக்கப்பட்டுள்ளது. தலைநகர் கிகாலியின் தெருக்களில், கத்தியால் துண்டாடப்பட்ட சடலங்களே பெரும்பாலும் காணப்பட்டுள்ளன. குழந்தைகள், சிறுவர்கள், பெண்கள், வயோதிபர்கள் ஒருவருமே விட்டு வைக்கப்படவில்லை. செஞ்சிலுவைச் சங்க வாகனங்களில் ஏற்றிச் செல்லப்பட்ட காயமடைந்தோர்கள், இறக்கப்பட்டுக் கத்திக்கு இரையாக்கப்பட்டுள்ளனர். மனநோயாளர்களுக்கும் இதே கதி ஏற்பட்டுள்ளது.



★ சிறிய ஏரியின் நீர், 250,000 மக்களுக்கு உதவுகின்றது. சுகாதாரமின்மையால் நோய்கள் பரவுகின்றன. ★

இப் படுகொலைகள் நன்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கை என்று இப்போது தெரியவருகின்றது. ஜனாதிபதியின் இறப்பைச் சாட்டாக வைத்து, ஹூட்டு இன (Hutu) ஆட்சியாளர்கள் தம்மின இராணுவத்தைக் கொண்டு இக் கொலைகளை நடத்தியமைக்கு ஆதாரங்கள் உண்டு. ஹூட்டு இன மிதவாதிகளும் இதில் கொல்லப்பட்டுள்ளனர். இனப்படுகொலையோடு அரசியலும் தொடக்கத்தில் கலந்துள்ளது. இடைக்காலப் பிரதமர் அகாதே உயிலின்கியமானாவும் பல அமைச்சர்களும், முதல் நாளே கொல்லப்பட்டுள்ளனர். இவர்கள் சிறுபான்மை ருட்சிகளுடன் சமாதான ஒப்பந்தஞ் செய்யவேண்டும் என்ற எண்ணங் கொண்டவர்கள் என்பது வெளிப்படை. அரசின் கட்டுப்பாட்டில் உள்ள குண்டர் படைகள், இராணுவத்திலும் கூடுதலான வெறியுடன் செயற்பட்டுள்ளன.

இவர்களின் நடவடிக்கைகளை நேரில் கண்ட ஐ. நா. வின் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் டானியல் பெல்லாமி, இவர்கள் போதை வஸ்து உட்கொண்டிருக்க வேண்டுமென தான் நம்புவதாகக் கூறியுள்ளார். இவர்கள் கையில் தானியங்கித் துப்பாக்கி முதற்கொண்டு கத்திவரைப் பல்வேறு ஆயுதங்கள் காணப்படுவதாக இவர் தெரிவிக்கின்றார். இவர்களுடைய கழுத்தில் சிறிய ஊதுகுழல் எப்போதும் தொங்கிக் கொண்டிருக்கும். தமக்கிடையில் தொடர்பு ஏற்படுத்தவும், ருட்சிகள் மீது தாக்குதல் நடத்தும் சமிக்ஞை ஆகவும் இக்குழல் உபயோகிக்கப்பட்டுள்ளது.

ஹூட்டு இன அரசு, ஹூட்டு இன மக்களுக்குக் கொலைவெறி ஏற்றி இனப் படுகொலையை உச்சக் கட்டத்திற்குச் செலுத்தியுள்ளது. குக் கிராமங்களிலும் வாழ்ந்த ருட்சிகள் கொல்லப்படுவதற்கு இதுவே காரணம். சாதாரணமாக எல்லோர் வீடுகளிலும் நாளந்தப் பாவிப்புக்கென வைத்திருக்கும் கனமான கத்தி இன அழிப்புக் கருவியாகவே மாறிவிட்டது. இவ்வருட ஏப்ரல் மாதப் படுகொலைகளுக்கு முன் நடந்த கலவரங்களில் எல்லாம் றோமன் கத்தோலிக்கத் தேவாலயங்களில் புகலிடம் தேடிய ருட்சியினர், தாக்குதலில் இருந்து தப்பியுள்ளனர். ஆனால், இம்முறை? ருக்காரா என்ற சிறிய நகர தேவாலயத்தில் மாத்திரம் 800 ருட்சிகள் கொல்லப்பட்டுள்ளனர். 1959, 1963, 1973 ஆகிய ஆண்டுகளில், இராணுவமோ, குண்டர்படையோ, பொதுமக்களோ தேவாலயங்களுக்குள் காலடி வைக்கத் துணியவில்லை. இம் முறையும் தேவாலயங்களில், புகலிடம் தேடியோர் தாக்கப்பட மாட்டார்கள் என்ற எண்ணத்தை அரசும், இராணுவமும் தொடக்கி வைத்தார்கள். பின்பு தேவாலயங்களில், மக்கள் கூடியபின் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளார்கள். கபரண்டோ தேவாலயத்தில், 1,200 மக்கள் வெட்டியும், சுட்டும் கொல்லப்பட்டுள்ளனர். ஒறெஸ்றா இன்சிமாற்றா என்ற மதகுரு மாத்திரம் உயிர் தப்பியுள்ளார். மக்கள் காப்பாற்றப்படுவர் என்று தனக்கு உறுதி அளித்த நகர பிதாதான் கொலைகளுக்குச் சூத்திரதாரி என அவர் தெரிவிக்கின்றார். மேலும், இவரிடம் சென்று பாதுகாப்புக்கோரிய 600 ருட்சிகள், இவர் ஏவிய இராணுவத்தால் கொல்லப்பட்டுள்ளனர்.

தேவாலயங்களுக்கு, இந்தக் கதியென்றால் வேறு பொதுப் புகலிடங்களுக்கு என்ன நடந்திருக்கும்? தலைநகர் கிகாலியின் பாரிய விளையாட்டரங்கில், நிறைந்திருந்த ருட்சி இனத்தவர் மீது ஹூட்டு இராணுவம் வியூகம் அமைத்துப் படுகொலை புரிந்துள்ளது. ஏப்ரல் 06 ஆம் திகதி, தொடங்கிய கலவரங்களுக்குப் பின் இராணுவம் ஏற்கனவே தயாரிக்கப்பட்ட பட்டியலுடன் ருட்சி இனக் கல்விமான்கள், செல்வந்தர்கள், தொழில்நுட்பவியலாளர்கள், புத்தி ஜீவிகள் போன்றோரைத் தேடிக் கொன்றிருக்கிறார்கள். அத்துடன் ருட்சிகளுடன் அமைதியைப் பேண வேண்டும் என்ற ஹூட்டுக்களையும் கொன்றுள்ளார்கள். அதன் பின் அகப்பட்ட ருட்சி இனத்தவர்கள் எல்லோரையும் அழித்திருக்கிறார்கள். ருட்சி இனத்தவர்களின் உருவமைப்புக் கொண்டுள்ள, தம்மினத்தவர்களையும் கொன்றார்கள் என்ற செய்தி கொலைவெறியின் தன்மையை உணர்த்துகின்றது.




மேற்கு நாடுகள், ருவான்டாவில், சிக்கியுள்ள தம் நாட்டவர்களை வெளியேற்றுவதில் தான் அக்கறையாக உள்ளன. கறுப்பர்களுக்குச் சொந்தமான ஆபிரிக்க நாடுகளின் ஒற்றுமை அமைப்பும் (ORGANISATION OF AFRICAN UNITY) இதே மனநிலையில் தான் உள்ளது. ருவான்டா என்ற குட்டையில், கை நனைக்க இவர்களும் விரும்பவில்லை. இதே நிலையில் தான் ஐ. நாவும் இருக்கின்றது. ஐ. நா. பாதுகாப்புச் சபையில் ருவான்டா, ஒரு தற்காலிக அங்கத்துவ நாடு. இனப்படு கொலை (GENOCIDE) என்ற சொல்லைப் பாவித்துத் தயாரிக்கப்பட்ட ருவான்டா மீதான கண்டனத் தீர்மானம், பின்பு ஐ. நாவால் ''சர்வதேச மனிதாபிமானச் சட்டங்களுக்குப் புறம்பான படுகொ

லைகள்'' என்று மாற்றப்பட்டுள்ளது. இது இனப்படுகொலை அல்லவென்றால், எதுதான் அத்தகையது, என்பதை ஐ. நா. விளக்கிக் கூறின் மிகவும் நலம். அமைதிக்கு ஒரே வழிதான் இருக்கின்றது. ஆர். பீ. எப் (RPF) எனப்படும் ருட்சி இனத்தவர்களின் படை, கொலை வெறியுடன் செயற்படும் அரச படைகளைத் தோற்கடித்து, நாட்டைக் கைப்பற்றித் தனக்குக் கீழ் நாட்டைக் கொண்டு வருவதுதான் அந்த மார்க்கம்.

ருட்சி இன அகதிகள் அயல் நாடுகள் எல்லாவற்றிலும் குவிந்து விட்டனர். ருசும்மோ பாலத்தைக் கடந்து தன்சானியா நாட்டிற்குள் 2,50,000 மக்கள் புகலிடம் தேடியுள்ளனர். பாலத்திற்கு மேலால் மக்கள் கடந்து செல்லும் போது, கீழால் பெருந்தொகையான உயிர் பறிக்கப்பட்ட, ருட்சி இனத்தவர்களின் சடலங்கள் மிதந்து கடலுக்குச் செல்லுகின்றன. இத்தனை காலமும், ருட்சி இனத்தவரை வேட்டையாடி வந்த குண்டர் படையும், கிராமப் புறக் கொலைகாரரும், அகதிகள் என்ற போர்வையில், அயல் நாடுகளில் தஞ்சம் கோருவது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. முன்னேறிவரும் ஆர். பீ. எப் படைகளுக்குப் பயந்தே அவர்கள் ஓட்டம் எடுக்கத் தொடங்கியுள்ளனர். தன்சானியாப் படைகள், தமது எல்லையில், பல்லாயிரக்கணக்கான கத்திகளையும், வேறு ஆயுதங்களையும் .இவர்களிடமிருந்து பறிமுதல் செய்துள்ளனர். ருவான்டா நாட்டுக்குள் சென்று உதவிகள் செய்யத் தயங்கினாலும், சர்வதேச உதவி ஸ்தாபனங்கள் உணவையும், மருத்துவ உபகரணங்களையும் தாராளமாக அனுப்பி வைத்துள்ளன. என்றாலும், குடி நீர் பெரும் பிரச்சனையாக இருக்கின்றது. இக்காரணத்தால், சிறுவர்களும், குழந்தைகளும் வயிற்றோட்டம், நெருப்புக்காய்ச்சல் போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பிந்திக்கிடைத்த தகவலின்படி மனிதாபிமான நடவடிக்கைகளை மேற்கொள்ளுவதாகக் கூறிப் பிரான்ஸ் தனது படை வீரர்களை ருவான்டாவிற்குள் அனுப்பியுள்ளது. இவர்கள் அரசின் கட்டுப்பாட்டுப்பிரதேசங்களில் நிவாரண நடவடிக்கைகள், சிறுபான்மையின மக்களைப் பாதுகாக்கும் நடவடிக்கையில் ஈடுபடப்போவதாக அறிவித்துள்ளனர். ஆனால் சிறுபான்மை ருட்சி இனப்போராளிகள் பிரெஞ்சு படையினரது வருகையை எதிர்த்துள்ளார்கள். இதற்கிடையில் தலைநகர் விகாலியை ருட்சி இனப் போராளிகள் கைப்பற்றித் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளார்கள் இப்படையினரின் கட்டுப்பாட்டைக் கவனித்த ஐ.நா. அதிகாரி ஒருவர் பின்வருமாறு கூறியுள்ளார். ''அவர்களுடைய நிதானமும், கொலை வெறியற்ற நிலையும், எம்மை வியப்பில் ஆழ்த்துகின்றன. அரச படைகளுக்கும் அவர்களுக்கும் நிறைய வித்தியாசம் உண்டு.''

அவர்கள் பொதுமக்களை தாக்குவதே கிடையாது. தொடக்கத்தில், கைப்பற்றும் அரச படைகளை உடனடியாகக் கொன்றாலும் இப்போது ஆர். பீ. எப். தலைவர் ஜெனரல் போல் ககாமே (PAUL KAGAME) கொடுத்த, உத்தரவின்பின் இவர்கள் சிறையில் அடைக்கப்பட்டே வருகின்றனர். சிறுபான்மை இன ருட்சிகள் நாட்டையும் ஆட்சியையும் கைப்பற்றினாலும், அவர்கள் ஓர் அழிந்து செயலழிந்த நாட்டைத்தான் பெறுவார்கள். இதைக் கட்டியெழுப்புவதென்றால், எளிதான காரியமல்ல; அத்துடன், ஒரு சிறுபான்மை இனம், பெரும்பான்மையினரை நிரந்தரமாக ஆட்சி செய்ய இயலாது. வெற்றி அடைந்த நிலையில், ருட்சிகள், எதிரிகளுடன் ஓர் அரசியல் உடன்பாட்டிற்கு வந்தே ஆகவேண்டும். ஆனால் இது நடக்குமா?

ஆதாரம் :- ரைம், மே, 23, 1994
ரைம், மே, 16, 1994

## நகர வெட்டு

அனுமதிக்கப்படாத கணனி இணைப்புத் திட்டங்களைப் பெய்ஜிங் தடை செய்யும் புதிய விதிகள் பிறப்பிக்கப்பட்டு உள்ளன. அதனால் தேசிய நடவடிக்கைகள், பொருளாதாரம், பாதுகாப்புக்கட்டுமானவேலைகள், உயர்தரத் தொழில் நுட்பம் ஆகிய துறை சார் செய்திகள் வெளியேறாது தடுக்க இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கணனித் தொடர்பு வேலை அமைப்புக்கள் அனைத்தும் அரசின் பாதுகாப்பு நிறுவனங்களிடம் பதிவு செய்து அனுமதி பெற்று, காவல் துறையினர் சோதிக்க வரும் போது அனுமதிப் பத்திரத்தைக் காட்ட வேண்டும்.

# மண்டேலாப் பித்து

**அமர்க்களமான கொண்டாட்டங்கள், வனப்புடைகள் தரித்தோரின் கோலாகல ஊர்வலங்கள் இவற்றினிடையே புதிய ஜனாதிபதி பதவி ஏற்றார்.**



என்றுமே காணாத எழிலார்ந்த முழுநீல வானமும், பூரணமான மலர்ச்சியோடு வனப்புக்கு வரைவிலக்கணமாய் விளங்கிய மலர்களும், பச்சைப் பசும் புற்களுமாய்ச் சொல் கடந்த அழகானது, எமது அதியுச்ச வர்ணனைக்கும் அப்பாலாய் இயற்கையின் படைப்புக்கள் மூலம் தன் பெருமைகளையெல்லாம் வெளிப்படுத்தியது ஓரிடத்தில், ஒரு பொழுதில், இந்தப் பெருவனப்பின் சூழலிலே தென்னாபிரிக்கப் பெரும்பான்மைக் கறுப்பினத்தவரின் தலைமைக் கதாநாயகர், பிறிற்ரோரியாவின் திறந்தவெளி அரங்கினை நோக்கி, இன அநீதிக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட்டதைப் பிரகடனப்படுத்தவென்று முன் வந்தார். ''என்றைக்கும் என்றைக்குமே இக்கொடுமை மீள இடம்பெறாது'' என்று அவர் சூளுரைத்தார், ''இந்த அழகிய மண்ணிலே ஒருவரை ஒருவர் அடக்கி ஒடுக்கும் கொடிய அனுபவத்திற்கு இனியும் இடம் உண்டோ? ''என வினாவினார். அவர் இவ்வாறு பேசிக் கொண்டிருக்கையில் வானத்தில் ஆகாயப்படை விமானங்களின் புகைநிறைந்த சுவடுகளிடையே, புதிதாக மீளுருவாக்கப்பட்ட ஆறு வர்ணக் கொடியானது பட்டொளி வீசி ஒளிவெள்ளமாய் அசைந்தாடியது. வானவில்லின் குறியீடாய் ''வானவில் அரசு'' என்னும் பெயருக்கு இலக்கணமாய் அமைந்ததே இந்தக் கொடி, என்று நெல்சன் லொறிஹ்லஹ்லா மண்டேலா உரிமை பாராட்டினார்.

நாடு முழுவதும் ஒரே மகிழ்ச்சி வெறி, சகல விதமான பாராட்டுக்களும் வழங்கப்பட்டு, ஒருவருக்கொருவர் நலமுரைத்து உண்டாட்டு அயரப்பட்டு, நடனங்கள் ஆடப்பட்டு வைபவமும் ஒரு முடிவுக்கு வந்தது. தென்னாபிரிக்காவின் மாற்றமடைந்த புத்தொழில் தோற்றம் நாடக உச்சக்கட்டத்தை அடைவது போல் உச்சநிலை அடைந்திட்ட வேளை அது. உலகிலேயே மிக உன்னதமானது என்று சொல்வது மிகையானால், மண்டேலா சத்தியப் பிரமாணஞ் செய்திட்ட காட்சி, அந்த உன்னதத்திற்குச் சமமானது என்றாவது கூறத்தான் வேண்டும். கீழானதும், நேர்மைக் கேடானதுமான ஒரு நூற்றாண்டு முடிவுற்று, நன்னம்பிக்கை குறிப்பிடத்தக்க வகையில் வெளிப்பட்டுள்ளது என்ற உணர்வு மேலோங்க, அந்த உணர்வின் வழி எழுந்த மகிழ்ச்சிப்பிரவாகம் கரை கடந்ததாயிருந்தது. அவர் தமது வெற்றி வேளையில், தென்னாபிரிக்காவின் முதலாவது கறுப்பினத் தலைவர் என்ற ரீதியில், நாவன்மைத் திறத்தோடு நவின்றவை இவை; ''மனித இன அழிவாக நீண்டு சென்றதோர் அசாதாரண அனுபவத்திலிருந்து, உலகத்து மானிடம் முழுவதுமே பெருமைப்படத்தக்க ஒரு சமுதாயம் உருவாகியுள்ளது. அன்று ஏற்பட்ட புண்களுக்கு மருத்துவஞ் செய்ய வேண்டிய நேரம் வந்துவிட்டது.

கறுப்பினத்தவரும், வெள்ளையினத்தவர்களும் ஒருவரை ஒருவர் தழுவிக்கொண்டார்கள். பழைய அரசியல் விரோதிகள் ஒருவருக்கு

மற்றவர் கைகொடுத்தார்கள். சூலுக்களான மத்தளகாரரும், ஆபிரிக்காவைத் தாயகமாகக் கொண்ட வெள்ளை நிறத்து வயலின் வாத்தியகாரரும், ஆங்கிலம் பேசும் றொக் இசைக்காரருமாய்ப் பல்லினத்தவரும் ஒன்று சேர்ந்து "பல கலாசாரங்கள், ஒரு நாடு" என்ற தலைப்பில் கதம்ப நிகழ்ச்சி ஒன்றினை நடத்தினார்கள். வர்ண ஜால அலங்காரங்களுடன் ஒழுங்காய் அமர்ந்திருந்த வெளிநாட்டு விருந்தினரோடு, கடுங்கட்டுப் பாட்டொழுங்கமைந்த பிறிற்றோறியாவின் தென்னாபிரிக்கக் குடிமக்கள், பக்கம் பக்கமாக அமர்ந்திருந்தார்கள். கடுமையான காவல்துறைக் கட்டுக்குள் அடங்கிக்கிடந்த பிறிற்றோறியா, சகோதரத்துவ அன்பை நோக்கித் திரும்பிவிட்டதன் வெளிப்பாடுதான் இது.

மண்டேலாவின் நீண்டகால எதிரியும், தம்முடைய அடிச்சுவட்டைப் பின்பற்றிய சூலுக்கள் கடைசி நிமிடம் வரை தேர்தலைப் பகிஷ்கரிக்கப் போவதாகப் பயமுறுத்தவும், புதிய அரசாங்கம் அமைப்பதற்குச் சவால் விடவும் காரணராய் அமைந்த வருமான மங்கோசுது புதலேசியுடன், மண்டேலா மனந்திறந்து உரையாடினார். வனப்புடை தரித்தோரின் கோலாகல ஊர்வலத்தில் இணைந்து நின்ற வேளையில், தாம் வகிக்கப் போகும் பதவியை முன்பு வகித்தவரான எஃப், டபிள்யூ. கிளாக்குடன் உரையாடுவதில் மண்டேலா விசேட கவனஞ் செலுத்தினார். "தலை சிறந்த சீர்திருத்தவாதிகளில் ஒருவர், நாட்டின் மாபெரும் புதல்வர்களில் ஒருவர்" என்று உதவி ஜனாதிபதிகளில் ஒருவரான கிளாக்கை அவர் பாராட்டினார். கூடி நின்றோர் உத்தியோக பூர்வமான தேசியகீதத்தையும் (ஆபிரிக்கா வாழ் வெள்ளையருக்கான) சுதந்திர இயக்கத்தைத் தூண்டி எழுச்சி பெற வைத்த சுதேசிய கீதத்தையும் பாடினார்கள்.

ஜெற் போர் விமானங்கள் கறுப்பினத்தவரின் சிறிய பட்டினங்களின் மேல் பறந்து வைபவத்துக்கு ஓர் எழுச்சியை அளிக்க, உலங்கு வானூர்திகளின் கீழாகப் புதிய வர்ணக்கொடி பறந்து புதிய காட்சியினை வழங்க அவற்றினூடாக வெளிப்பட்ட விடுதலை வெளிப்பாடானது பார்வையாளரைப் பெரிதும் கவர்ந்தது. இனஒதுக்கல் ஆட்சியின் சின்னமாகவும், ஆயுதமேந்திகளாகவும் செயற்பட்ட அவை இன்று, 27 ஆண்டுகள் சிறையிலே வாட்டி எடுக்கப்பட்டவரும், உத்தியோக பூர்வமான கொடும் பகைவருமாகக் கருதப்பட்டவருமான ஒரு மனிதருக்குத் தமது பணிவார்ந்த வணக்கத்தைத் தெரிவித்தன. இத்தகைய கொடிய இராணுவயந்திரம் தமக்குச் சொந்தமாகிவிட்டதான அந்தக் காட்சி பெருந்தொகையான கறுப்பினத்தவர்களது கண்ணிலே கண்ணீரை வரவழைத்தது. இந்தக் காட்சியைக் கவனித்த மருத்துவக் கடை ஊழியரான மமலேடி என்னும் 25 வயதான இளைஞர். பயங்கரமான அழையாவிருந்தாளிகளோ அவை (ஜெற்விமானங்கள்) என்று சிறிதே அஞ்சியதாகக் கூறினார்; "ஆனால் பின்னர் அவை எனக்குப் பெருமகிழ்ச்சியை ஈந்தன" என்றார்.

காவலாளி மாறி அந்தக் காவற் கடமைக்கு உரிமையாளராகிவிட்ட மண்டேலா, அதிக உன்னதமான வேளையில், கம்பீரமாக நிமிர்ந்து நின்று தமது கரத்தினை மார்பில் வைத்துக் கொண்டு அக்காட்சியினை நோக்கினார். உணர்வெழுச்சிப் புயலானது சுற்றிலும் சுழன்றடித்து வெளிப்படுகையில், அதற்குரித்தானவர்களின் கண்களெல்லாம் தம்மை நோக்குகையில் அவர், வெள்ளையர், கறுப்பர், இந்தியர் ஆகிய அனைவரையும் தம் முள்ளே அணைத்துக் கொள்ள வேண்டிய தன் கடமையினை உணர்ந்தவராக, "எனது சகோதரக் குடிமக்களுக்கு அவர்கள் யாவரும் இந்த அழகிய மண்ணோடு பின்னிப் பிணைந்து விட்டவர்கள் என்பதைக் கூற நான் சிறிதும் தயங்கவில்லை. ஒவ்வொரு தடவையும் எங்களின் ஒருவர் இந்த மண்ணினைத் தொடுகையில், நாம் மீண்டும் புதியவராகி விட்டோம் என்ற உணர்வினை அடைகின்றோம்" என்றார்.

பெருவெள்ளமாகக் குருதியைப் பெருக்கி அதன் மூலம் பாசனம் செய்யப்பட்ட மண்ணிலே, நம்பிக்கைதரும் மீள்புத்தாக்கம் செழித்தோங்கத் தொடங்கியுள்ளமை, தனிப்பட்ட முறையில் மண்டேலாவுக்குப் பாரியதொரு தன்னுறுதியைப் பரிசிலாய் வழங்கியுள்ளது. இனவேறுபாடின்றி நாட்டுமக்கள் அனைவரையும் உள்ளடக்கியதாக அமையவிருக்கும் அவரது ஆட்சியின் பன்னிறக் கோவையாகிய காந்தம், உலகத் தலைவர்களைக்



வானில் விடுதலைச் சின்னத்தின் விருதுகளைத் தாங்கி வலம் வரும் விமானப்படைப் பவனி.

கவர்ந்திழுத்தது, எல்லாப் பேதங்களையும் கடந்து இங்கு வர வைத்துள்ளது. இவ்வாறு வந்தவர்களில், பிடல் கஸ்ரோ, திருமதி வறிலாறி கிளின்ரன், யாசிர் அரபாத், பிலிப் இளவரசர் உள்ளிட்ட 180 பேர் அடங்குவர்.

புதிதாய் உதித்த சூரியனைச் சூழ்ந்துள்ள செயற்கைக் கோள்கள் போல, பிறிற்றோறியாவின் ஒன்றிய மைதானத்திலே குழுமி, எந்தப் பாதையாற் செல்வது என நிச்சயமற்றவர்களாய்க் குழம்பிய நிலையில் அந்தத் தலைவர்கள் காட்சியளித்தார்கள். நரைமயிரும், சுருட்டில்லாத வாயுமாக, ஆபத்தான பொதுவுடைமைவாதியெனும் வகுப்பினரிடையே, மண்டேலாவின் நீண்டகால நட்புரிமையெனும் மிடுக்குடன் பிடல் கஸ்ரோ மெல்ல நடந்து கொண்டிருந்தார். ஐ. அமெரிக்காவின் விவசாய அமைச்சின் செயலரும், கறுப்பினத்தவருமான மைக் எஸ்பி, தமது சக தூதுக்குழுவினரின் இசைவின்றியே கஸ்ரோவுடன் சேர்ந்து படமெடுக்க இணக்கம் அளித்தார்.

மண்டேலாவின் 27 உறுப்பினர்களைக் கொண்ட அமைச்சரவை பலவித வேறுபாடுகள் கொண்டவர்களை உள்ளடக்கியுள்ளது. நீண்டகாலமாக நடைபெற்ற சுதந்திரப் போராட்டத்தில் தம்முடன் இணைந்து போராடியவர்கள் மீது கொண்ட விசுவாசங் காரணமாக ஆபிரிக்கத் தேசிய காங்கிரசுக்கென ஒதுக்கப்பட்ட 18 அமைச்சர்களில் மூவர் இடதுசாரிகளிலிருந்து மண்டேலாவால் தெரியப்பட்டுள்ளார்கள். முன்னைய ஒன்றியத் தலைவர் ஜே நாய்டு, பொதுவுடைமைக் கட்சித் தலைவர் ஜோ சுலோவோ, ஜோ மொடைஸ்சு என்பவர்களே அந்த மூவர். ஜோ மொடைஸ்சின் தெரிவு இம் மூவர்தெரிவிலும் கூடிய கேள்விக்குரியதாகும். இவர் ஆபிரிக்க தேசியக் காங்கிரசின் கெரில்லாப் படையின் மேலதிகாரியாகப் பணிபுரிந்தவர், அதற்கு எதிராகச் செயற்பட்டவர்களை 1980 களில் அங்கோலாவிலுள்ள சிறை முகாமுக்கு அனுப்பி மிகக்கொடுமையாகச் சித்திரவதை செய்வதில் சம்பந்தப்பட்டவர், இந்தச் சித்திரவதைகள் தொடர்பாகச் சென்ற ஆண்டு, சுதந்திரமான ஆணைக்குழு ஒன்றின் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர்.

காதல் முறிவு காரணமாகப் பிரிந்திருக்கும் வின்னி (மண்டேலாவின் மனைவி) மண்டேலாவால் கலாசார, கலை, விஞ்ஞான விவகாரத்துணை அமைச்சராக நியமிக்கப்பட்டுள்ளமை பெரும் சலசலப்பை ஏற்படுத்தியுள்ள ஒன்றாகும். இளைஞர் ஒருவரைக் கடத்திச் சென்று தாக்கி அவரின் மரணத்தை விளைவித்த குற்றவாளிக்கு வின்னி உடந்தையாயிருந்தார் என்று 1991 இல் தண்டனைக் குட்பட்டவர். இந்த வகையில் அவரின் நியமனம் மண்டேலா உட்பட நாடாளுமன்றத்தினருக்கும் பெரும் அதிருப்தி விளைவித்திருந்தாலும் நாடாளுமன்றத்தில் அவருக்கு இருஸ்தானங்கள் கிடைத்திருக்கின்றன. இதனால்அவரின் நியமனம் தவிர்க்க முடியாததாயிற்று. மண்டேலாவும், வின்னியும் அருகருகே அமர்ந்திருந்த போதிலும் ஒருவரை ஒருவர் திரும்பிப் பார்க்கவுமில்லை; முறைப்புடனேயே காட்சி தந்தார்கள்.

இடைக்கால யாப்புக்கிணங்க ஐந்தாண்டுகளுக்கு ஆட்சி செய்யும் ஒப்புதலாணை பெற்றுள்ள பல கட்சிக் கூட்டரசாங்கம் தனது செயற்பாடுகளில் மிதப் போக்கினையே அநுசரிக்கும் என்பது பொதுவாக நிலவி வரும் கருத்து. டி கிளாக்கின் ஆட்சிக் காலத்தில் அவரின் வலது கரமாக இருந்து சுரங்கத் துறையின் நிறைவேற்றதிகாரியாயும், நிதியமைச்சருமாய் விளங்கிய டெறக்கேய்ஸ் அவர்களுக்கு அதே நிதியமைச்சர் பதவி வழங்கப்பட்டுள்ளது. மிகவும் கடுமையாகச் செலவினங்களைக் கட்டுப்படுத்துபவர் என்பதால் வங்கியாளரும், முதலீட்டாளர்களும் அவருடைய நிருவாகம் தீவிரமான சமூக நலப் பரிசோதனைகளுக்கு வளைந்து கொடுக்காது என உறுதியாக நம்புகிறார்கள். ஆபிரிக்கத் தேசியக் காங்கிரசின் உறுதியான உறுப்பினரும், ஆனால் மந்தமானவரும், 68 வயதினருமான அல்பிறட் நிசோ வெளி விவகார அமைச்சராகியுள்ளார். அதே வேளை மிக உயர்வான பதவிக் குறியீட்டைக் கொண்டதான உள்நாட்டு விவகார அமைச்சு புதலேசிக்கு வழங்கப்பட்டுள்ளது. குடிவரவு, தேர்தல்கள் மற்றும் நிருவாகக் கடமைகள் இந்த அமைச்சின் நிருவாகத்தில் வருகின்றன.

புதலேசியின் 'இன்கதா சுதந்திரக்கட்சி' சிறுப்பட்டினங்களிலே நடைபெற்ற கிளர்ச்சிப் போராட்டங்களிலே இரத்த ஆறு பெருகி ஓடக் காரணமாய் இருந்தது. அதன் தலைவருக்குமுக்கிய அமைச்சுப் பதவி வழங்கியது, அரசியல் வன்முறை ஒடுங்கும் என்பதற்கு நல்லதோர் அறிகுறியாகும். அமைச்சரவை அமைப்பு என்ற நல்லிசையிலே அபசுரம் தட்டுவதாக றாமபோசாவுக்குப் பதவி வழங்காமை அமைந்துள்ளதெனலாம். இளமைப் பொலிவுடைய சிறில் றாமபோசா ஆ. தே. காங்கிரசின் செயலாளர் நாயகமாய் விளங்கித் தென்னாபிரிக்கப் புரட்சிக்கான வழி வகைகளை நெறிப்படுத்தியதோடு டி.கிளாக்கின் முகவர்களோடு உடன்பாட்டுக்கு வரக் காரணராயும் விளங்கியவர். முதலாவது துணை ஜனாதிபதிப் போட்டியிலும், மண்டேலாவின் வாரிசுப் போட்டியிலும் அவர் தோல்விகண்டதால் தமது அதிகாரத் தளத்தினைத் தற்காலிகமாக அரசாங்கத்துக்கு வெளியில் அமைப்பதில் அவர் ஈடுபட்டுள்ளார். அவருக்குப் பதிலாக ஆ. தே. கா இன் முடிக்குரிய இளவரசராக ஆ. தே. காங்கிரசின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவரின் மகனும், அதன் பெயரளவிலான நிதியமைச்சராய் இயங்கிய வருமான தபோமபெக்கி நியமனம் பெற்றிருக்கிறார்.

புதிய தலைவர்கள் தமக்கு முன்னால் கடினமான பிரச்சினைகள் இருப்பதையும் அவற்றுக்கு முகங் கொடுக்க வேண்டிய நிலை தமக்கு உள்ளது என்பதையும் உணர்ந்தே யுள்ளார்கள். சுமார் 350 ஆண்டு களின் வெள்ளையர் ஆதிக்கத்தால் தமது அருமை நாட்டின் மீது ஏற் பட்ட ஆழமான வடுக்கள் இன்ன மும் உள்ளன என்பதும் அவர்கள் அறியாததன்று. மண்டேலாவின் மேலாண்மை அதி உச்சமாக இருக் கும் இவ்வேளையில் தென்னா பிரிக்கா தனக்கு இதுவரை கால மும் இழைக்கப்பட்ட அநீதிகள் அது கடந்து வந்த அக்கினிப் பரீட்சை களை மறந்து தனது தளையினை அறுத்திட்ட தனிப்பெருந் தலை வரைச் சாதனைகள் நிகழ்த்திய ஆயி ரம் முகங்கொண்ட அற்புத மூர்த்தி யாகப் போற்றுகிறது.

வெள்ளையருக்கும் கறுப்பருக்கும், போயர்களுக்கும், பிரித்தானியர் களுக்கும், சூலுக்களுக்கும், சோசர் களுக்குமிடையே பரம்பரை பரம் பரையாக இடம் பெற்று வந்த சண்டைகள் இறுதியாக ஒரு முடிவுக்கு வந்து, அவை பெருந் தன்மையோடு மறக்கப்படுகின்றன. சடங்கின் இறுதியிலே மண்டேலா தமது துணை ஜனாதிபதிகளான டி கிளாக்கினதும், மபெக்கியினதும் கரங்களைப் பற்றி, போட்டி வீரர் களிடையே நிற்கும் நடுவர் போல, மேலே தூக்கி அவர்களின் புதிய பதவிநிலைகளைப் பிரகடனஞ் செய்தார். ஏகோபித்த முடிவின் படி கறுப்பரும், வெள்ளையரும் ஒருவரே. அவர்களே இன்றைய உலகின் சாதனை வீரர்.

(பிறிற்றோறியாவிலிருந்து ஸ்கொட் மக்லியொட் அனுப்பிய செய்தியறிக்கையின் சாரம்.)

★

# மண்டேலா அவர்கள் தமது கனவுக் குழுவினைக் கட்டி எழுப்புகிறார்

"நாங்கள் ஒரு முகமாகச் செயற்படுவோம் என்பதை நிரூபித்து விட்டோம்" என்று தேர்தல் முடிவையடுத்து வெற்றியில் மிகவும் பெருந்தன்மை காட்டி மண்டேலா கருத்து வெளியிட்டிருக்கிறார். "மக்கள் தாம் தெரிந்து கொண்ட கட்சிகளுக்கு வாக்களித்துள்ளார் கள். இதனை நாம் மதித்து நடப் போம். இதுவே சனநாயகம்." என்று யோகனஸ்பேக்கில் வெற்றிக் கொண்டாட்டம் ஒன்றின் போது அவர் குறிப்பிட்டார். ஆனால் தேர்தல் முடிவுகள் இறுதியாக அறிவிக்கப்பட்ட பொழுது, அந்த முடிவு தேசிய ஒற்றுமைக்குப் போதியதாய் இருக்கவில்லை. ஆ.தே.கா 63 வீத வாக்குகளளவில் பெற்றதனால் ஆட்சியில் அது மேலாண்மை பெற்றதாகலாம். ஆனால் புதிய யாப்பமைக்கும் வேளையில் தேவைப்படப்போகும் மூன்றில் இரண்டு பங்கு பெரும் பான்மையை, அவர் தமது சிறிய பங்காளிகளை அலட்சியப்படுத்திப் பெறுவது இயலாது. "எனது முட்டு நீங்கியுள்ளதாக உணர் கிறேன்" என்று மண்டேலாவே கூறியுள்ளார்.

ஆனால் தேர்தல் முடிவுகளின் பூரணத்துவம் எதேச்சையாகச் செயல் புரியக் கூடிய வாய்ப்பினை அளிக்கவில்லை. அடுத்துவரும் ஐந்து ஆண்டுகள் ஆட்சியில் இருக்கப் போகும் தேசிய ஒருமைப் பாட்டரசாங்கத்தின் உதவி ஜனாதிபதி ஆசனத்தில் நிலைக்க வேண்டுமானால், டி கிளாக் 20 வீதம் வாக்குகளைப் பெற்றாக வேண்டும். அவர் மொத்தம் 20 மில்லியன் வாக்குகளில் 77,000 வாக்குகளே பெற்றுள்ளார். இந்த

## தென்னாபிரிக்கா: வாக்குகளின் மொத்த எண்ணிக்கை பொய்த் தயாரிப்பா?

முடிவு வெள்ளையினத்தவருக்கு மீளுறுதி வழங்குவதாகும். தமது சொந்த மாகாணமான நேட்டாலில் புதலேசியின் இன்கதா சுதந்திரக் கட்சி 50.32 வீதம் வாக்குகளைப் பெற்றிருக்கின்றது. தேசிய அளவில் 10.53 வீதம் வாக்குகள் பெற்றுள்ள அதற்கு மூன்று அமைச்சுக்களே பெறுதற்கான வாய்ப்புண்டு. ஆனால் தேர்தற் பகிஷ்காரம் மூலம் நாட்டையே உள்நாட்டுப் போரில் இழுத்துவிட இருந்த புதலேசி தமது கட்சிக்கான பேர விளையாட்டில் இறங்கக்கூடும். தேர்தல் தலைமை அலுவலகம், வாக்குப் பெறும் போட்டியின் இறுதியில் பின்கதவுப் பேச்சுவார்த்தைகள் நடை பெற்றுள்ளதை ஏற்றுக் கொண்டிருக் கிறது நீண்ட தாமதங்களையும், தில்லுமுல்லுகளையும் தொடர்ந்தே தேர்தல் நடந்ததாகக் குற்றச் சாட்டுக்கள் பரவலாகப் பேசப்படு கின்றன. "இதுபற்றி நாம் மிகை யாக அலட்டிக் கொள்ள வேண்டிய தில்லை. ஆதிக்கம் பெறும் விளை யாட்டில் ஈடுபடும் கட்சிகள் ஒன்றை ஒன்று குற்றஞ்சாட்டுவதும், வாக்கு மாறாட்டங்கள் நடந்தேறியுள்ளன என்று கண்டனக் குரல் எழுப்புவ தும் பிழையானவையல்ல. அறத்தின் படியோ சட்டதிட்டத்தின்படியோ அவற்றைப் பிழையென்று கூறவிய

**மண்டேலாவின் அமைச்சரவையில் அவர்மீது விசுவாசங் கொண்டவர்களென்பதால் (திறமையாலல்ல) நியமனங்கள் வழங்கப்பட்டோரிற் சிலர்.**

| | |
|---|---|
| தபொ மிபெக்கி: | (51) முதலாவது துணை ஜனாதிபதி ஆ. தே. கா. தூதுவர்; நகர்ப்புறத்தவரான இவர் மண்டேலாவின் வாரிசு. |
| அல்பிறட் நிசோ: | (68) வெளிவிவகார அமைச்சர் மண்டேலாவின் அணுக்கத்துணைவர் என்பதால் இந் நியமனம் பெற்றவர். |
| ஜோமொடைஸ்: | (64) பாதுகாப்பமைச்சர், ஆ. தே. கா இளைஞர்களின் வெறுப்புக்குரியவர். வெள்ளையரின் இராணுவ உயரதிகாரிகளோடு சுமுகமாகப் பழகக் கூடியவர். |
| ஜோசிலோவோ: | (68) வீடமைப்பு, நல்வாழ்வமைச்சர், கறுப்பு இனத்தவர் வாழும் சிறிய நகர்ப்புறங்களிலே செல்வாக்குப் பெற்ற பொதுவுடைமை வாதி. |
| டெறெக்கேய்ஸ்: | (62) நிதியமைச்சர், மதிப்புவாய்ந்த வர்த்தகர், பணவீக்கத்தை ஏற்படாது சரிக்கட்டக்கூடியவர். 1991 தொடக்கம் முன்னைய தேசியக் கட்சி அரசாங்கத்திலும் இதே பதவி வகித்தவர். |

லாது '' என்று சுதந்திரத் தேர்தல் ஆணைக்குழுத் தலைவர் யோகான் கிறிக்ளர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

மண்டேலாவின் அமைச்சர் தெரிவு எதிர்வரும் நல்லரசாங்கத்துக்கு உகந்ததா என்ற கேள்வியும் கிளப்பப்படுகிறது. கடந்த மாதத்திலிருந்து செயற்படத் தொடங்கியுள்ள புதிய அரசியல் யாப்பின்படி 30 உறுப்பினரைக் கொண்ட அமைச்சரவையின் மூன்றில் இரண்டு பகுதியினரைத் தெரிய மண்டேலா உரித்துடையவர். எஞ்சியுள்ளவை தேசியக் கட்சியும் இன்கதாவும் பகிர்ந்து கொள்ள வேண்டியவை. ஆண்களும் பெண்களுமாய் 17 அமைச்சர்களைத் தேர்தற் தொகுதிகளைத் திருப்தி செய்யும் அடிப்படையில் மண்டேலா தெரிந்து விட்டார். புலமை நிறைந்த மபெக்கியை முதலாவது துணை ஜனாதிபதியாகத் தெரிந்ததிலிருந்து, மந்தமான சிரேஷ்ட உறுப்பினர் அல்பிறெட் நிசோவை வெளி விவகார அமைச்சராய் ஆக்கியது வரை இந்தத் தெரிவு மேலிருந்து கீழாகச் சென்றுள்ளது, அல்பிறட் நிசோ இனவொதுக்கற் கால கட்டத்தில் ஆ. தே. காங்கிரசின் செயலாளர் நாயகம் என்ற பதவியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வெளியேற்றப்பட்டவர். இப்பொழுது அவர் தாம் தென்னாபிரிக்கக் கறுத்த இனத்தின் முதலாவது வெளிநாட்டமைச்சர். வெள்ளையரான டெறெக்கேய்ஸ் அவர்களை முன்பு போலவே நிதி அமைச்சராக்கியது முதலீட்டாளருக்குஒருதுண்டுப் பாணை வீசியது போலத் திருப்தி தரத்தக்கதாகும். நெருங்கிய நட்பு என்பது பதவி நியமனத்தில் முக்கியமான அம்சமாக இருந்து உள்ளது, ''விசுவாசம் (மண்டேலாவுக்கு) உடையவராயும், நீண்டகால சேவையிலிருந்தவராயும், அரசியற் சமநிலை பேணுபவராயும் உள்ளவரே, திறமையாளரிலும் அவருக்கு வேண்டியவர்கள் என்று விட்வாட்டர்ஸ்ரான்ட் பல்கலைக்கழகத்து அரசியல் விஞ்ஞானியான றொம் லொட்ஜ் கூறினார்.'' நாட்டின் தொழில்நுட்ப நிபுணர்களிலும் மேலாக அரசியல் விவகாரமே கோலோச்சுகிறது. இது வருந்தத்தக்கது.

தொழில் நுட்ப நிபுணர்களும், அரசியல்வாதிகளுமாக இருசாராருடைய தேவையும் நாட்டின் அபிவிருத்தியாகிய தமது குறிக்கோளை நிறைவேற்ற மண்டேலாவுக்குத் தேவைப்படுகிறார்கள். ''எமது நாடு முகங் கொடுக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காண நாங்கள் எமது சட்டைகளின் கைப்பகுதிகளைச் சுருக்கிக் கொண்டு பாடுபட வேண்டும்'' என்று ஜோகானஸ் பேக்கிலுள்ள ஓர் உணவு விடுதியில் இடம் பெற்ற வெற்றிக் கொண்டாட்டத்தின் போது களிப்பில் மூழ்கியிருந்தவர்களுக்கு உரையாற்றுகையில் மண்டேலா கூறினார். ''இதன் பொருள் தொழில்களை உருவாக்கல், வீடுகள் அமைத்தல், கல்வி வழங்கல், எல்லோருக்கும் சமாதானமும் பாதுகாப்பும் வழங்கல் என்பதே.'' ஆட்சிக்குவரும் அரசாங்கத்தின் பணிப்பட்டியலில் குறிப்பிடப்பட வேண்டியவற்றுள் இவை ஒரு சில மட்டுமே. நடந்தேறிய தேர்தல் ஒரு தளர்நடைத் தொடக்கந்தான் இதனோடு அமைந்து விடலாகாது. அதற்கேற்ற ஆடம்பரவளங்கள் இல்லாத நிலையில் கிடைத்த வெற்றியையே மாபெரும் வெற்றியாக மயங்கி விடலாகாது. அரசியற் குதிரை வர்த்தகம் என்பது - உண்மையில் அதுவேயானால் - உயர்ந்த இலக்கை அடைதல் இப்போதைக்குப் பொருந்தும். ஆனால் தென்னாபிரிக்காவின் எதிர்காலத் தலைவர்கள் இந்தக் குதிரை வர்த்தகத்திலேயே அரசியற் சாதனைகளிலேயே தொடர்ந்து ஈடுபட்டுக் கொண்டிருந்தால் அது ஆபத்தாகவே முடியும்.

யோசவ் கொன்ற் றெறஸ்
(ஜோஹானஸ்பேக்)

நியூஸ்வீக், ரைம், மே, 1994

உத்தரவாதம்!

எவ்வளவு பெரிய மரமாக இருந்தாலும்
குறித்த அளவுகளில் பலகைகளாகவும்,
தீராந்திகளாகவும் அரிந்து கொடுக்கப்படும்.

உயர் அழுத்த இயந்திர
உதவியுடன் செய்து
கொடுப்பவர்கள்:



ஈஸ்வரி மரக்காலை

கே. கே. எஸ். வீதி,
மல்லாகம்.

மழைகாலமானாலும் சரி உங்களுக்குத் தேவையான
கொத்து விறகுகளையும்
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

ஈஸ்வரி மரக்காலை

கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

வாங்கத்............தகுந்தது
சுவைக்கச்..........சிறந்தது.
தரமோ..........உயர்ந்தது

கேக்
றோல்ஸ்
பற்றிஸ்
பேஸ்ரி
வெதுப்பி

## கருணா வெதுப்பகம்

காலை உணவை ஈடு செய்யும்

★ பணிஸ்

★ பட்டர் பாண்

★ திருமணமா?

★ பிறந்ததின விழாவா?

முன் கூட்டியே தெரியப்படுத்துங்கள்



சுகாதாரமான முறையில்
தரமாகத் தயாரித்து வழங்குபவர்கள்

# கருணா வெதுப்பகம்

ஏழாலை மேற்கு, ஏழாலை.

# தலைவர் கடாபி பேசுகிறார்

**பான்ஆம் விமானத் தகர்ப்பு சம்மந்தமாக விசாரணை நடாத்த இரு லிபியப் பிரஜைகளை ஒப்படைக்க மறுத்த லிபியா மீது ஐ. நா. தடைவிதித்து இரண்டு வருடங்கள் ஆகிவிட்டன, நாட்டில் பணவீக்கம், பற்றாக்குறை, குழப்பம் ஏற்படும் சாத்தியம் இருப்பினும் தலைவர் கடாபி இதுபோன்ற அழுத்தங்களுக்கு நிலைகுலையாது இருக்கின்றார்.**



**நியூஸ்வீக் சஞ்சிகையின் டேவிற் கெல்லியின் கேள்விகளும், கடாபியின் துடுக்கான பதில்களும் இங்கே தரப்பட்டுள்ளன.**

கே : அமெரிக்காவின் அமைதிக்கு லிபியா ஓர் அச்சுறுத்தலாக இருக்கின்றது என்று அண்மையில் ஜனாதிபதி பில் கிளின்ரன் கூறியிருக்கிறார் அல்லவா?

ப : ஆம். இது அவருக்கு எழுதிக் கொடுக்கப்பட்டிருக்கவேண்டும். அவரைப் பற்றிய அபிப்பிராயத்தை நான் இன்னும் மாற்றவில்லை. அவர் இளைஞர். முன்பு வியட்நாம் யுத்தத்திற்கு எதிராகப் பேரணிகள் நடத்தியுள்ளார். அவர் அமைதியை வேண்டி நிற்கும் மனிதன். ஆகையால் சி. ஐ. ஏ அவருக்கு எதிராகச் செயற்படுகின்றது. அவர்களுக்கு ஒரு துஷ்டன் தான் தேவை. கெனடியைப் போல் அவருக்கு ஒன்றும் நடந்து விடக்கூடாது என்பது என் கவலை. அவருக்கும், அவருடைய குடும்பத்தினருக்கும் பாதுகாப்பான மோட்டார் வாகனமொன்றை அனுப்பி வைக்க நான் சிந்தித்துள்ளேன்.

கே : 25 வருடங்களாக அதிகாரத்தில் இருக்கிறீர்கள். இக்காலத்தில் பெரும் பிழையேதும் விட்டிருக்கிறீர்களா?

ப : நாங்கள் தாக்கப்பட்டபின்பும் தொடர்ந்து யுத்தம் செய்யாதது எங்கள் தவறு. தாக்கப்படும் போது பதில் தாக்குதல் செய்யாமை பெருந் தவறு.

கே : நீங்கள் உதவிய சில குழுக்களைப் பற்றி காலப்போக்கில் மனம் வருந்தியது உண்டா?

ப : நாங்கள் செய்ததெல்லாம் 100 வீதம் சரி என்று நான் சொல்ல மாட்டேன். புரட்சிக் காரர்கள் என்று நாம் நினைத்தவர்கள் பயங்கரவாதிகள் என்று பின்பு அறிந்தோம். ஐ. ஆர். ஏக்கு ஆதரவு கொடுத்தது உண்மை. அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று தெரியாமல் போய் விட்டது. அயர்லாந்து விடுதலை ஆக வேண்டும் என்று நாம் விரும்புகிறோம். அப்பாவிக்குடி மக்களை ஐ. ஆர். ஏ யினர் கொன்றுள்ளதை இப்போது நான் அறிவேன். அவர்கள் இராணுவத்திற்கும், பொதுமக்களுக்கும் வித்தியாசம் பார்க்கவில்லை. அங்கோலாவின் விடுதலை இயக்கத்தை ஆதரித்துள்ளோம். சிம்பாப்வேயின் முகாபேயையும் ஆதரித்துள்ளோம். அவர்களுடைய முகாங்கள் லிபியாவில் இருந்திருக்கின்றன. இவர்கள் பயங்கரவாதிகளா?

கே : சென்ற டிசெம்பரில் ஐ.ஆர். ஏ யையும், பாலஸ்தீனிய அடிப் படைவாதிகளையும், அகம்மது ஜிப்றில், அபுநிடால் போன்றோர் களையும் லிபியாவுக்கு வருகை தரும்படி கேட்டுள்ளீர்கள். இது மேற்கிற்கு ஆபத்தாகத் தோன்றுகிறது அல்லவா?

ப : யாரையும் சந்திக்கும் சுதந்திரம் எமக்கு உண்டு.

கே : ஆனால் இது நீங்கள் பயங்கர வாதத்தை வளர்க்கிறீர்கள் என்ற தோற்றத்தை தருகிற தல்லவா?

ப : அமெரிக்கர்களின் மனதில் இப்படியானதோர் பிழையான எண்ணம் இருக்கின்றது. அகம்மது ஜிப்றில் அபு நிடால் ஆகியோர் பயங்கரவாதிகள் அல்லர். அவர்கள் ஒரு புனித யுத்தம் நடத்துகிறீர்கள்.

கே : அபு நிடாலுக்கு லிபியாவில் முகாம் இருக்கின்றதா?

ப : யாதொரு இடத்திலும் அவருக்கு முகாங்கள் கிடையாது. அவர் உயிருடன் இருக்கிறார் என்று நான் நம்பவில்லை. என்னுடைய அழைப்புக்கு அவர் இங்கு வரவில்லை. சரி, அமெரிக்கர்களுக்கு எதிராக அவர் என்ன செய்தார்? ஒன்றும் செய்யவில்லை. அவருடைய நாட்டை ஆக்கிரமித்த இஸ்ரேலையும் அவர் ஒன்றும் செய்யவில்லை.

கே : அகம்மது ஜிப்றில் அல்லது ஈரான் நாட்டவர்கள் பான் ஆம் விமானத்தை குண்டு வைத்துத் தகர்த்ததாகச் சொல்லப்படுகின்றதே?

ப : ஜிப்றில் செய்திருந்தால் அவர் உரிமைகோரி இருப்பார்.

கே : அப்ப ஈரான்?

ப : அவர்களுக்குத் தகுந்த காரணம் உண்டு. சேவையில் ஈடுபட்ட அவர்களுடைய விமானம் ஒன்று அமெரிக்காவால் வீழ்த்தப்பட்டுள்ளது.

கே : இப்போதைய நடப்புக்களுக்கு வருவோம். கெப்ரோன் படுகொலைகளுக்குப் பழிவாங்க பாலஸ்தீனியர்களுக்கு நீங்கள் உதவுவீர்களா?

ப : அவர்கள் தினசரி படுகொலை செய்யப்படுகிறார்கள். தம்மைத் தாமே பாதுகாக்க அவர்களுக்கு உரிமை உண்டு.

கே : லிபிய மக்கள் அதிருப்திப்படுகிறார்களா? சில இராணுவ அணிகள் சென்ற வருடம் உங்களுக்கு எதிராகக் கிளர்ந்து எழுந்தார்கள் என்று செய்திகள் வருகின்றனவே.

ப : என் கையில் ஒன்றும் இல்லை. அதிகாரம் மக்கள் கையில் இருக்கின்றது. அவர்கள் அதிகாரத்திற்காகப் போராடுவதில் அர்த்தமில்லை. இராணுவம் எதற்காகப் போராடவேண்டும்? என்னைப் பதவி கவிழ்ப்பதில் அவர்களுக்கு ஒன்றும் கிடைக்கப் போவதில்லை.

கே : எல்லோரும் உங்களோடு மகிழ்ச்சியாக இருக்கிறார்களா?

ப : அதிகாரம், ஆயுதபலம், செல்வம் எல்லாம் மக்கள் கையில், நான்தான் இதையெல்லாம் அவர்களுக்குப் பெற்றுக் கொடுத்தேன். இதற்காகவே அவர்கள் என்னை மதித்து அன்பு செலுத்துகின்றார்கள்

கே : சென்ற டிசெம்பரில், எகிப்தின் கெய்ரோவில் காணாமற்போன லிபிய எதிர்ப்பாளன் மன்சூர் சிக்கியாவுக்கு என்ன நடந்தது?

ப : நாங்கள் அவரைப்பற்றி கவலைப்படுகிறோம். கெய்ரோவில் அமெரிக்க உளவாளிகள் நடமாடுகின்றனர். நான் இவர்களைத் தான் குற்றஞ் சாட்டுகிறேன்.

கே : விமானத் தகர்ப்பு லிபியாவின் வேலை அல்ல என்கிறீர்கள். சந்தேக நபர்களை ஒப்படைக்க ஏன் மறுக்கிறீர்கள்?

ப : அவர்கள் சம்மதத்தை மீறி அவர்களை ஒப்படைக்க முடியாது. அப்படி நான் செய்தால் அவர்களுடைய மனித உரிமைக்கும், லிபியச் சட்டத்திற்கும் அது முரணாகும்.

கே : பொருளாதாரத்தடை உங்கள் எண்ணெய் ஏற்றுமதியைப் பாதிக்கும் அல்லவா? உங்கள் மக்களுக்கு பெரும் நெருக்கடியைக் கொடுக்கும் அல்லவா?

ப : அப்படியல்ல, ஐரோப்பாதான் பெரும் நெருக்கடிக்கு உட்படும். நூற்றுக்கணக்கான ஐரோப்பிய நிறுவனங்கள் லிபியாவில் செயற்படுகின்றன. ஒப்பந்தங்கள், வேலை, எண்ணெய் எல்லாவற்றையும் அவர்கள் இழப்பார்கள்.

கே : மேற்கு நாட்டவர்கள் உங்களுக்கு எதிர்ப்புக் காட்டுகிறார்களே. அதைப்பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப : அவர்கள் என்னை முற்றாக அறியமாட்டார்கள். ஓர் உதாரணம், நான் ஒரு கவிஞர் என்பதை அவர்கள் அறிவார்களா? நான் ஓர் எழுத்தாளன், தத்துவப் பேராசிரியன். சமூகவியல், சரித்திரம் ஆகியவற்றில் எல்லாம் நான் பல்கலைக்கழக விரிவுரையாளன். நான் இந்த நாட்டின் தலைவனாக இல்லாவிட்டால், ஓர் எழுத்தாளனாக, இலக்கியவாதியாக, பேராசிரியனாகப் புகழ் படைத்திருப்பேன்.

நியூஸ்வீக், ஏப்ரல் 4, 1994

(தலைமைத்துவத்தின் சவால்)

# சிக்கலுக்குரியவன் நான்

**மற்றவர்கள் தமது நடத்தைகளை மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்பினால் என்னுடைய நடத்தையை முதலில் மாற்றிக்கொள்ள வேண்டும். சிக்கலுக்குரியவன் நான் தான் என்று அறிந்து கொண்ட போதுதான் என்னால் தீர்வின் ஒரு பகுதியாக முடிந்தது.**

ஜேம்ஸ் ஏ. பெலஸ்கோவும்
றல்ப் சீ. ஸ்ரேயரும்

ஆசிரியரின் குறிப்பு:

உங்கள் அமைப்பு அல்லது நிறுவனம் மிக விரைவான மாற்றங்களுக்குள்ளாவதில்லை என்றும், தலைமைத்துவத்திற்கான செய்முறை ஒன்றை நீங்கள் தேடுகிறீர்கள் என்றும் வைத்துக் கொண்டால் அதற்கான தீர்வு ஒன்று பெலஸ்கோவிடமும், ஸ்ரேயரிடமும் உண்டு. தம்முடைய நிறுவனங்களை மாற்றியமைத்த அனுபவங்களைக் கட்டுரையின் படைப்பாளிகள் பகிர்ந்து கொள்கிறார்கள்- அதற்காக முதலில் தம்மையே அவர்கள் மாற்றிக் கொண்டார்கள்.

இந்தக் கட்டுரை எருமையின் பறத்தல் ( Flight of The Buffalo ) என்ற நூலின் ஒரு பகுதியாகும், ஒரே குரலில் இரண்டு ஆசிரியர்களும் ‘‘நாங்கள் ஒரே விதமாகச் சிந்தித்துச் செயற்படுகிறோம்’’ என்ற நிலையின் தன்மையில் எழுதப்பட்ட நூல் அதுவாகும். ‘‘யானைக்கு நாட்டியம் கற்றுக் கொடுத்தல்’’ ( Teaching The Elephant to Dance ) என்ற நூலின் ஆக்கியோனான ஜேம்ஸ் ஏ. பெலஸ்கோ பி எச் டீ, சன் டியாகோ அரச பல்கலைக் கழகத்தின் பேராசிரியர். உலகிலேயே தொழிலாளிகளால் நிர்வகிக்கப்படும் முதற்றர நிறுவனங்களுளொன்றான ஜோன்சன் வில் புட்ஸ் நிறுவனத்தின் பிரதம நிர்வாக அதிகாரி றல்ப் சீ. ஸ்ரேயர் இருவருமே பாரிய கூட்டுத் தாபனங்களின் ஆலோசகர்களாவர்.



தலைவர் தனது ஆசனத்தில் அமைதியற்று அசைந்து கொண்டிருந்தார். அவர் முகம் சோகக் களிம்பால் தடவப்பட்டிருந்தது. அவருடைய நிறுவனம் மிகவும் மதிப்புக்குரியது. அவரது கையிருப்புக்கள் பல மடங்காக விலைபோய்க் கொண்டிருந்தன.

அப்படியிருந்தும் அந்த நிறுவனம் மோசமாகத் தோல்வி கண்டு கொண்டிருந்தது. ஒவ்வொரு வியாபார முனையிலும் சந்தைப் பங்கில் அது நட்டமீட்டியது. புதிய உற்பத்திகளை விற்பனைக்கு விடுவதில் காலதாமதம் செய்தது. அதனுடைய பணவரவு போட்டியாளர்களின் தாக்குதலுக்காளாகியிருந்தது.

தனது வியாபாரம் அடிப்படை மாற்றத்திற்குட்படாது போனால், ஏற்படக் கூடிய அபாயங்கள் அவருக்குப் பளிங்குபோல் தெளிவாகத் தெரிந்தன. மாற்றங்களைக் கொண்டுவர அவர் பகீரதப் பிரயத்தனம் செய்துள்ளார். தாம் வாடிக்கையாளர் சேவை, குழுப்பணி என்பவற்றை ஊக்குவிப்பதற்கான திட்டங்களை வளர்த்திருக்கிறார். செயற் குழுக்களை உற்பத்தி வாடிக்கையாளர் நலன் சம்பந்தமான தொகுதிகளாக மீளமைப்புச் செய்துள்ளார். முகாமையாளர் அடுக்குகளைக் குறைத்திருக்கிறார். இவ்வளவு செயற்பாட்டின் பின்னரும் நிறுவனம் சந்தைப் பங்குகளை இழந்தது. வெளிச்சந்தையில் போட்டியாளர்கள் அதனைப் பின்தள்ளிக் கொண்டிருந்தார்கள்.

அந்தத் தலைவரின் உணர்வுகள் எப்படியிருக்கும் என்று எனக்குத் தெரியும். அதே கதிரையில் நான் அமர்ந்திருக்கிறேன். வித்தி

யாசமாக இருக்க வேண்டும் என்று பேசுவது மிக எளிது என்பதும் தெரிந்த விடயம்தான். ஆனால், வித்தியாசமாக இருப்பது என்பது மிகமிகக் கடினம். இதே வகையில் ஏமாற்றமும், செய்வதறியாது தவிக்கும் உணர்வும் பல தலைவர்களுக்கு ஏற்படுவதுண்டு.

எல்லாத் தலைவர்களும் தலைமைத்துவத்தின் சவாலை எதிர்கொள்ளுகிறார்கள். நீண்ட காலமாக எனது தொழில் திட்டமிடுதல், அமைத்தல், கட்டளையிடுதல், இணைப்பை ஏற்படுத்தல், கட்டுப்பாடுகளை விதித்தல் என்ற பழைய முறைமையே என்று நான் நம்பியிருந்தேன். எனது நிறுவனம் ஒரு எருமைக் கூட்டம்போல இயங்கியதைக் கண்டேன். ஒரு தலைவனை மிகவும் விசுவாசமாகப் பின்பற்றுவதில் எருமைகள் மிகச் சிறந்தவையாகும். அவைகள் எதைச் செய்ய வேண்டும் என்று தலைவர் விரும்புகிறாரோ, அதை அவை செய்யத் தவறுவதில்லை. தலைவர் எங்கு செல்லச் சொன்னாலும் அவை அங்கே செல்லும். எனது நிறுவனத்தில் நானே தலைமை எருமையாக இருந்தேன்.

ஆரம்பத்தில் அந்த ஒழுங்கு எனக்குப் பிடித்திருந்தது. அந்த நிறுவனத்தை இவ்வளவு தூரம் கட்டியெழுப்பியது எனது புத்திக் கூர்மைதான். நான் சொன்னதை எனது ஆட்கள் அப்படியே செய்ய வேண்டும் என்பது என் விருப்பம். விசுவாசமாகவும், ஈடுபாட்டோடும் அவர்கள் நடந்துகொள்ள வேண்டும். அதிகார மையத்தில் நடுநாயகமாக இருக்க நான் விரும்பினேன். அதுதான் ஒரு தலைவரின் தொழில் என்று நான் நம்பினேன்.

ஈற்றில், நான் விரும்பியபடி நிறுவனம் இயங்கவில்லை என்பதை உணர்ந்தேன். எருமைகள் சுற்றி நின்று தலைவனின் வழி நடத்தலுக்காகக் காத்திருக்கும், அவையாக எதையும் செய்யமாட்டா. இதனாலேயே எருமைகளின் தலைக்கடாவைக் கொன்றுவிடுவதன் மூலம் அந்த எருமைக் கூட்டத்தையே அழித்துவிடக் கூடியதாகவுள்ளது. தலைக்கடா கொல்லப்பட்ட பின்னரும் எருமைக் கூட்டம் வழிநடத்தலுக்காகக் காத்திருந்து கொலை செய்யப்படுகின்றன.

எருமைக் கூட்டம் போன்ற எனது நிறுவனத்தில் பல எருமைகள் ''சுற்றி நின்றன'' இதில் கூடாத நிலை நான் சொன்னதை மட்டுமே அவர்கள் செய்தார்கள் என்பதுதான். அதற்கு மேல் இம்மியும் நகர்வதில்லை. அதன் அடுத்த கட்டளைக்காகச் ''சுற்றி நின்றனர்.''

தலைக் கடாவாக இருப்பதுங் கடினம் என்பதை நானும் உணர்ந்தேன். கட்டளைகள் அனைத்தையும் பிறப்பித்து ''முக்கியம்'' பணிகள் அனைத்தையும் செய்து முடிக்க நாளொன்றுக்கு 12 – 14 மணித்தியாலங்கள் தேவைப்பட்டன. மாற்றங்களுக்குத் துரிதமாக முகங்கொடுக்க என்னால் முடியாமற் போனதால் சந்தையில் எனது நிறுவனம் கொல்லப்பட்டு வந்தது. எருமைக் கூட்டத்தின் தலைக் கடாவாக இருந்து நான் செய்த ஏமாற்றம் அளிக்கும் வேலைகளெல்லாம் பழையனவாகிக் காலம் வரும் முன்னரே நானும் முதியவனாகி விட்டேன்.

ஒரு நாள் எனக்கு ஞானம் பிறந்தது. எனது நிறுவனத்திற்குத் தேவைப்படுவது பொறுப்பு வாய்ந்த, சுதந்திரமான பணியாளர்கள் என்பதைப் புரிந்துகொண்டேன். எருமைக்கூட்டமல்ல, தேவைப்படுவது வாத்துக் கூட்டம் எனக் கண்டுகொண்டேன். ''V'' அமைப்பில் வாத்துக்கள் பறந்து செல்வதையும், தலைமை அடிக்கொரு தடவை மாறுவதையும், வெவ்வேறு வாத்துக்கள் தலைமை தாங்குவதையும் மனக் கண்முன் கண்டேன். வாத்துக் கூட்டம் எங்கு போக வேண்டுமோ அங்கு போவதற்கு ஒவ்வொரு வாத்தும் பொறுப்பு வகிப்பதையும், தேவையானபோது எந்தப் பாத்திரத்தையும் ஏற்றுக் கொள்வதையும், மாறி மாறித் தலைமை தாங்குவதையும், பின்பற்றுவதையும், சாரணராவதையும் காணமுடிந்தது.



எனக்காக எனது தலைமைத்துவத்திற்காக நான் சொல்வதைச் செய்வதற்காகக் காத்திருக்கும் விசுவாசமான எருமைக் கூட்டமே வெற்றியின் ஆகப்பெரியதடை என்பது புலனாகியது. நான் என்னை மாற்றிக் கொள்ள வேண்டியது அவசியம் என்பதை உணர்ந்தேன். நான் ஒரு வித்தியாசமான தலைவராக வேண்டியிருந்தது. ஒவ்வொருவரும் தலைவராக வேண்டிய அவசியமும் இருந்தது.

சந்தர்ப்பமா அல்லது அச்சுறுத்தலா?

**முதலில் சில வரலாறு:**

1970 – களில் நான் பாரம்பரிய முறையில் வியாபாரம் செய்தேன். சம்பிரதாய வழியில் எனது வியாபாரம் வெற்றிகரமாக நடந்

தது. எனது இலாபம் கைத்தொழிலில் சராசரிக்கு மேலாகவே இருந்தது. தரமும் அப்படியே. எமது சராசரி ஆண்டு வளர்ச்சி 20 விழுக்காடாகும்.

அப்படியிருந்தும் ஏதோ தவறியிருப்பதையுணர்ந்தேன். காரணம், எனது வியாபாரம் அதனுள்ளூரவுள்ள வளங்களிலும் மிகவும் பின்தங்கியே செயற்பட்டு வந்தது. தமது பணிகளில் ஆட்கள் அக்கறையில்லாமலிருப்பதை அன்றாடம் கவனித்தேன். சிந்தனையில்லாத் தவறுகளை அவர்கள் செய்து கொண்டிருந்தார்கள். கருவிகளைக் கீழே போட்டார்கள். வீண்பொழுது போக்கினார்கள். பொருள்களையும் வீரயம் செய்தார்கள். தாம் செய்த எந்தத் தவறுக்கும் அவர்கள் பொறுப்பேற்கவுமில்லை,வேலைக்கு வந்தார்கள். சொன்னதைச் செய்தார்கள் பணி முடிந்ததும் வீடு திரும்பினார்கள். அவர்களுக்கு எந்த ஈடுபாடும் இருக்கவில்லை.



நான் எனக்கே சொல்லிக் கொண்டேன். ''என்னைப்போலவே எனது நிறுவனத்தில் அவர்களும் ஈடுபாடு கொண்டிருக்க மாட்டார்கள். இது எப்படியானாலும் இந்த இடம் எனக்குச் சொந்தமானது; அவர்களுக்கல்ல.'' எனது பல நண்பர்களும் இதே காரணத்தை எடுத்துக் கூறினார்கள். எப்படியும் அந்த விடை சரியானதாக எனக்குப் படவில்லை. என் தலையில் ஒரு குரல் சொல்லிக்கொண்டிருந்தது. ''ஒரு நல்ல வழி இருக்க வேண்டும்'' என்பதுதான் அது, அதை விட வியாபாரத்திலிருந்து வந்த போட்டாபோட்டி பற்றியும் நான் கவலையடைந்திருந்தேன். சிறிய உற்பத்தியாளர்கள் நல்ல சேவையை வழங்குவார்கள். பெரியவர்கள் எந்த வேளையிலும் எம்மை வீழ்த்தி விட முடியும்.

தலைமைத்துவத்தில் செய்முறை காட்டும் நூல் ஒன்றைத் தேடி அலைந்தேன். தமது நிறுவனத்தையும், தொழிலையும் பற்றிக் கவனஞ் செலுத்தக் கூடியவர்களுக்கு வழி காட்டும் நெறிமுறைகளடங்கிய புத்தகமாக அது இருக்க வேண்டும் என விரும்பினேன். ஆலோசகர் குழு ஒன்றையே வாடகைக்கு அமர்த்தினேன். அதைத் தொடர்ந்து முகாமையாளர்களை மாற்றத் தொடங்கினேன். நஷ்டஈட்டுத் திட்டங்களையும் மாற்றி அமைத்தேன். ஏதும் நடந்ததென்றால் அது என் நிறுவனத்தின் செயற்பாடு மேலும் மோசமடைந்தது என்பதேயாகும்.

எனக்குக் கற்கை நெறிகளுக்குப் போகவும் வாசிக்கவும் பேரவா ஏற்பட்டது. அப்படியான ஒரு கருத்தரங்குக்குப் போயிருந்தபோது ஒரு பேராசிரியர் எனக்கு வெளிச்சங் காட்டினார். அமைப்புமுறை, வெற்றிக்குச் செயற்பாட்டுத் திறனே திறவுகோல் என்று வாதாடினார். அவர் நிறுவனத்தினதும், தனி நபரினதும் முக்கிய நலன்களைப் பாதுகாக்கும் செயற்பாட்டுத் திறனுக்காக, சூழ் நிலையைத் தோற்றுவிப்பதே முகாமைத்துவத்தின் கடமையாகும். அதில் பொருள் பொதிந்திருந்ததை நானும் அறிந்தேன். எனது சொந்த வழிகாட்டியாகவும், ஊக்குவிப்பாளராகவும் அந்தப் பேராசிரியரையே வாடகைக்கு அமர்த்திக் கொண்டேன்.

### எருமைகளுக்குப் பறக்க முடியும்

'ஓர் எருமைக் கூட்டத்திற்கு ஒரு தலைவன் –எருமைக்கடா தானுண்டு. வாத்துக்களின் கூட்டத்தில் ஒவ்வொன்றும் மாறி மாறித் தலைமை தாங்கும், பின்பற்றும் சாரணராகும். ஒவ்வொருவரும் தலைவராகும் விதத்தில் படத்தை மாற்றிவிட்டேன்.

என்னையே பிரச்சனையாக நோக்கத் தயாராக இருக்கிறேனா என்று பேராசிரியர் வினா எழுப்பினார். பிரச்சனை நிறுவனத்திலுள்ள ஏனையவர்களல்ல, என்பதையும் நான் ஏற்றாக வேண்டும் என்றார். ஆரம்பத்தில் இதை ஏற்றுக்கொள்வதென்பது மிகவுங் கடினமாகவே இருந்தது. முன்னைய ஏமாற்றங்கள் காரணமாக எதனையும் கவனத்துட் கொள்ள நான் இணங்கினேன். இதற்குப் பெருந்தடையாக இருந்தது எனது சுய கௌரவந்தான். தீர்மானங்களை எடுப்பவராகவும், பிரச்சனைகளைத் தீர்ப்பவராகவும் உள்ள ஜோன்ஸன் வில்லின் தலைவர் என்ற பதவி தான் எனது பெறுமதி முழுவதற்குங் காரணம் என்று நான் நம்பினேன். எல்லாவற்றிற்கும் பொறுப்பான மனிதன் எனது தொழிலின் இந்த அம்சங்கள் போய்விட்டால் நான் செய்வதற்கு அதிகம் இருக்காது என்று நான் அஞ்சினேன்.

எனது தனிப்பட்ட சாதனைகளிற் கூட நிறுவனத்தின் கூட்டு விளைவுகளின் பங்குப் பணிபற்றிப் பெருமைப்பட நான் கற்றுக்கொள்ள வேண்டியிருந்தது.

ஒரு நாள் எனக்கு இது புரிந்தது. இந்த இடத்தைக் கட்டியெழுப்பியவன் நான். அதை அமைத்தவன் நான். அது சரியாக இயங்கவில்லையென்றால் அதற்கான பொறுப்பு என்னுடையது. நானே பிரச்சனை ''போகோ கூறியவாறு எதிரியை நான் கண்டு கொண்டேன்.'' அது நான்தான். ஜோன்ஸன் வில்லின் தலைவராக நான் அடைந்த பெரு வெற்றியே எனது மிகப்பெரிய தடைக்கல்லாகும் என்பதை இறுதியில் புரிந்து கொண்டேன். எனக்கு வெற்றியைத் தேடித்தந்த தலைமைத்துவ முடிவுகளே எனது சொந்தத் தோல்விக்கான வித்துக்களையும் ஊன்றி விட்டன. நான் எனது வியாபாரத்தை வடிவமைத்த விதம், நான் நடந்து கொண்ட தன்மை, நான் போட்ட நிறுவன அமைப்பு முறை, நான் உபயோகித்த வியாபாரச் செயல் முறைகள் எல்லாமே என் மனக் கவலைக்குரியவனாக்கி விட்டன.

நான் மாற்றத்தைக் கொண்டு வரவேண்டும் என்ற முடிவுக்கு வந்தேன். எனது நிறுவன அமைப்பில், செயற்பாட்டில் ஒரு புதிய கட்டத்தை உருவாக்க நினைத்தேன். இது நடப்பதற்கான பணிப்புரையை வழங்க முடியும். அது நடக்குமென்று நம்பினேன்.

அது ஓர் இமாலயத் தவறாகி விட்டது. நான் கற்றுக் கொண்ட புதிய வழிமுறைக்கிணங்க உணர்வு பூர்வமாக எனது ஆட்களை வழிமுறைக்கு மாற்றிக் கொள்ளும்படி பணிப்புரை வழங்கினேன். இப்போது தொடக்கம் உங்கள் சொந்த முடிவுகளை எடுக்கலாம். நீங்களே அவற்றிற்குப் பொறுப்பும் ஆகலாம் என்று எனது நிறுவனத்தின் மூத்த அதிகாரிகளுக்குக் கூறினேன். சர்வாதிகார மட்டத்திலிருந்து முடிதுறக்கும் மட்டத்திற்கு இறங்கினேன். எனது புதிய எதிர்பார்ப்புக்களுக்கு ஈடுகொடுக்கும் வகையில் அவர்கள் கடுமையாக உழைத்தார்கள். ஆனால் அவர்களால் அது முடியவில்லை.



நானே சிக்கல்களைத் தீர்த்து வைக்க வேண்டும் என்று அவர்கள் எதிர்பார்க்கும் வகையிலான பயிற்சியையே நான் அவர்களுக்கு வழங்கியிருந்தேன். அவர்களது இயலாமையை எதிர்பார்த்து ஆற்றாமையை அபிவிருத்தி செய்திருந்தேன்.

விற்பனைக்குப் பொறுப்பான எனது உபதலைவர் நல்லதோர் உதாரணமாவார். அவர் எனக்கு மிகவும் நெருங்கிய ஆப்த நண்பர். விற்பனை முடிவுகள் எல்லாவற்றிற்கும் அவரே பொறுப்பாய் இருப்பார் என்று நான் அறிவித்த போது அவர் திகைத்து விட்டார். நான் எந்த முடிவுகளை மேற்கொண்டிருப்பேனோ அத்தகைய முடிவுகளையே அவர் உண்மையில் மேற்கொண்டார். தன்னுடையதிலும் பார்க்க என்னுடைய முடிவுகளையே நான் அதிகம் விரும்புவேன் என்பது அவருக்குப் புரிந்திருந்த காரணத்தால் அந்த நிலையில் நான் என்ன செய்திருப்பேன் என்பதை அறிந்து கொள்வதில் அதிக நேரம் செலவிட்டார்.

நான் அவருக்கு வழங்கியிருந்த பயிற்சி ஒரு விதம். இப்போது அவர் நடந்துகொள்ள வேண்டும் என்று எதிர்பார்ப்பது வேறு விதம். அவரால் அது முடியவில்லை. இறுதியில் அவரது இடத்திற்கு இன்னோராளை நியமிக்க வேண்டியதாயிற்று. அதனால் ஓர் உற்ற நண்பரை இழந்து நாசமாகிவிட்டேன்.

நிறுவனத்திலிருந்த அனைவருமே சுற்றுக் குறைந்து காணப்பட்டனர். மற்றவர்கள் தம்மை மாற்றிக் கொள்ள வேண்டுமென்று நான் கேட்கக்கூடாதென்பதில் எனக்கு நம்பிக்கை பிறந்தது. தலைமைத்துவ நடைமுறைகள், பழக்க வழக்கங்கள் என்பனவற்றில் ஒரே தொகுதி சந்தர்ப்பங்களை மையமாக வைத்தே முழுத் தொகுதியையும் நான் கற்றிருந்தேன். இப்போது சந்தர்ப்பங்கள் வேறுபடுகின்றன. நானும் மாறியே ஆகவேண்டும். (Palmer Sausage) பாமர் சோசெஜ் நிறுவனம் எனக்கு இப்போது பொன்னான வாய்ப்பொன்றை அளித்தது. அது ஒரு குறிப்பிடத்தக்க அச்சுறுத்தலுங் கூட.

பாமர் ஒருபெரிய சோசெஜ் நிறுவனமாகும். பெரிய தொழிலாளிகளை ஒன்றிணைத்துக் கொண்டிருந்தது. அது மூடிவிடப் போகும் ஒரு தொழிற்சாலையின் உற்பத்தியைப் பொறுப்பேற்குமாறு எம்மிடம் ஒரு கோரிக்கையை விடுத்தது. இது நடைமுறையிலிருந்த அவர் தம்

கட்டளையில் பாரிய அதிகரிப்பாகும். வியாபாரம் மிகவும் கவர்ச்சிகரமானது. மிக்க இலாபம் தரக் கூடியது. ஒரு புதிய தரம் மிக்க தொழிலகம் ஒன்றைக் கொள்வனவு செய்வதை நியாயப் படுத்த வல்லது. அதன் வாய்ப்பு அனைத்தும் என்னுடைய நிறுவனம் ஒழுங்காக நடத்துமானால் மிகவும் சாதகமானது.

கம்லற் கூறியது போன்று உராய்ந்து கொள்ள நல்ல இடம். எம்முடைய பாமர் உற்பத்தி வெற்றிகரமாக நடைபெற வேண்டுமென்றால் பெரிய எண்ணிக்கையிலான புதிய ஆட்களைச் சேர்த்துப் பயிற்சியளிக்க வேண்டும். ஜோன்ஸன் வில்லின் இப்போதைய ஆட்களுக்குப் புதிய திறமைகளைக் கற்றுக் கொடுக்க வேண்டும். எம்முடைய சொந்த உற்பத்தியையும், பாமர் உற்பத்திப் பொருள்களிலும் உயர்ந்த தரத்தை உறுதி செய்ய வேண்டும். புதிய தொழிலகம் ஆயத்தமாகும் வரை ஓராண்டு காலத்திற்காவது வாரமொன்றிற்கு ஆறு ஏழு நாள்கள் வேலை செய்தாக வேண்டும்.

வித்தியாசமான தலைவராவதற்கு நான் கற்றுக்கொண்டவையிலிருந்து எனக்குப் புரிந்தது. பாமர் நிறுவனத்தின் விமர்சனத்துக்குரிய முன்னேற்றத்திற்குக் காரணம் சோசெஜ் உற்பத்தி செய்யும் ஆட்களின் ஈடுபாடு என்பதாகும். அது அவர்களால் இயக்கப்பட்டுக்கொண்டிருந்தது. அதனால் இந்த முடிவை அவர்கள் மேற்கொண்டார்கள்.

என்னுடைய நிர்வாகிகள் அந்தத் தொழிற் கூடத்தில் சகல பணியாளர்களையும் சந்தித்துப் பிரச்சனையைத் தெளிவுபடுத்தினார்கள். உடனேயே சிறிய குழுக்கள் சேர்ந்து முடிவுகளைப் பற்றி உரையாடினார்கள். இரண்டு வாரங்களுக்குப் பின் இந்த வியாபாரத்தைக் கையேற்பதென்று உறுப்பினர்கள் ஏகமனதான முடிவுக்கு வந்தார்கள். பாரம்பரிய தலைமைத்துவ நெறிகளைநான்பற்றிப்பிடித்திருந்தேனென்றால் பாமர் முடிவோடு மல்யுத்தஞ் செய்து சில

### பிரயாணத்திற்குத் தலைமை தாங்கல்

எருமைகளை வாத்துக்களாக மாற்றுவது பற்றியும் நம்பிக்கையான விவாதங்கள் உள்ளன.

(1) பல சந்தர்ப்பங்களில் ''நானே பிரச்சனை'' தலைக்கடாவாக இருக்க வேண்டும் என்ற எனது நோக்கம் குறுக்கே வந்தது. நானே தடையென்பதை உணர்ந்து எனது நடத்தைகளை மாற்றும் வரை ஆக்கபூர்வமாக எதுவுமே நடைபெறவில்லை.

(2) வாடிக்கையாளரே முதன்மையானவர்-தலைவர் உள்ளமைப்பின் தலைவரல்ல; பல காலமாகச் செயலகத்தின் மூலை அறையில் அமர்ந்திருப்பவருக்கே முதலில் சேவிக்க வேண்டும் என்று நான் வற்புறுத்தி வந்தேன்.

(3) மூலோபாயத்தோடு சிந்திக்க வேண்டும். நாங்கள் என்னவாக இருக்க முடியும் என் பதில் தொடங்கியே முன்னேற முயலுவேன். வாடிக்கையாளருக்கு நாம் எப்படி இருக்க வேண்டும் என்று தொடங்கி அதிலிருந்து பின் நோக்கிய போதுதான் எங்களால் தங்கப் பதக்கங்களை வெல்ல முடிந்தது.

(4) வழிகாட்டல் என்பது கற்றல் தான். எனது வாழ்க்கையின் திறவுகோல் துரித கற்றல் தான். எல்லோரும் ஆவலோடு கற்கத் தொடங்கும் வரை எமது நிறுவனம் ஓங்கி வளரவில்லை.

வேளை அந்தக் கோரிக்கையை நிராகரித்திருக்கவும் கூடும் அதனால் ஏற்படக்கூடிய அபாயங்கள் பலவாக இருந்திருக்கும். தம்மீதே நம்பிக்கை வைத்த மக்கள் சவாலுக்கு முகங்கொடுக்கத் தயாரானார்கள்.

முடிவு ஜோன்ஸன் தனது கருத் திட்டங்களையே விஞ்சி நின்றது. எதிர்பார்க்கப்பட்ட அளவிலும் பார்க்கக் கற்றுக் கொள்ளல் துரிதமானது. தொழிலகப் பொருள்கள் யாவும் தரத்தால் உயர்ந்தன. புதிய தொழிலகம் வெற்றிநடை போட்டது. மேலும் வியாபாரங்களை ஏற்றுக் கொள்ளுமாறு பாமர் நிறுவனம் எம்மைப் பல முறை அணுகியது.

இன்னமும் அந்த நிலை நீடித்துக்கொண்டிருக்கிறது. நீங்கள் இதை வாசித்துக் கொண்டிருக்கும் போது ஜோன்சன் வில்லின் குழுக்கள் கூட்டம் கூடுகின்றன. அடுத்த ஆண்டின் மூலதன வரவு—செலவு புதிய உற்பத்திக்கான கருத்துக்கள், அடுத்த வாரத்திற்கான ஆட் சேர்க்கும் திட்டம், இன்றைய உற்பத்தி அட்டவணை, நேற்றைய தரத்துக்கான விலை, விளைவுச் செயற்பாடுகள் பற்றியெல்லாம் அங்கே அலசி ஆராயப்படும்,

கற்று வளரும் தலைவனாக நான் மிகுந்த முயற்சியோடு இருக்கிறேன். பழைய எருமைத் தலைக்கடா முறைமையை விட்டுப் புதிய வழிகாட்டும் வாத்து முறைமைக்கு மாறியுள்ளேன். எனது மாற்றம் கீழ்க்காணும் கோட்பாடுகளைச் சுற்றியே கட்டப்படுகிறது.

- ★ தலைவர்கள் வேலைக்கான உரிமையை, வேலையை நிறைவேற்றுவோரிடம் மாற்றி விட வேண்டும்.
- ★ ஒவ்வொரு பணியாளரும் பொறுப்பேற்றுக் கொள்ளும் உரிமைக்கான சூழலைத் தலைவர் உருவாக்கிக் கொடுக்க வேண்டும்.
- ★ தனிநபர் திறமையை அபிவிருத்தி செய்யும் விதத்தில் தலைவர்கள் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.
- ★ தலைவர்கள் தாங்களும் விரைவாகக் கற்றுக்கொள்ள வேண்டும். மற்றவர்களும் விரைவாகக் கற்றுக்கொள்ளும் விதத்தில் ஊக்கப்படுத்த வேண்டும்.

**புதிய நியமனங்கள்:**

மற்றவர்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதல்ல எனது தொழில், என்றும் தத்தமது செயற்பாடுகளுக்கான பொறுப்புக்களை அவரவருக்கு ஏற்றுக்கொள்ளக் கூடிய சூழலை ஏற்படுத்த வேண்டியதே. எனது பணியையும் நான் கற்றுக் கொண்டிருக்கிறேன். சில காலங்களுக்கு முன்னர் எனது தொழிற்சாலை ஒன்றில் தரக்குறைவாக இருந்தபோதும் அட்டவணையில் குறிப்பிட்டபடி கப்பலில் ஏற்றும் உற்பத்திப் பொருள்கள் பற்றி ஒரு தீர்மானம் எடுக்கவேண்டி இருந்தது. இந்த வினா தவிர்க்க முடியாத விதத்தில் என் மேசை மீது வந்து சேர்ந்தது. பொருள்கள் சரியான தரமற்றதாக இருக்கின்ற போதும் அவற்றைக் கப்பலில் ஏற்றுமதி செய்யப்போகிறீர்களா அல்லது இந்தத் தவணையில் வரவு செலவுத் திட்டப்படி நடக்காமல் ஊதியத்துக்கு மேலான கொடுப்பனவை நிறுத்தப்போகிறீர்களா?.

நான் எதைச் செய்தேனோ அது எப்போதும் தவறாகவே முடிந்தது. தரங்குறைந்த பொருள்களை ஏற்றுமதி செய்திருந்தால் வாடிக்கையாளர் பிரச்சனை தலை தூக்கியிருக்கும், ஏற்றுமதியை நிறுத்தினால் பணியாட்களுக்கான அதிகப்படிக் கொடுப்பனவை வழங்கியிருக்க முடியாது. உலகத் தரத்திலான மீட்பாளராகமுயன்று உலகத் தரத்திலான இழப்பாளரானேன்.

சில காலங்களின் பின்னர் ஒரு தரப் பிரச்சனை தலை தூக்கியது. பொறுப்பைத் தட்டிக் கழிக்கச் சங்கற்பம் செய்து கொண்டு பணியாளர்களின் கூட்டமொன்றை ஒழுங்கு செய்து பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அவர்களுடைய பங்களிப்பைக் கோரினேன். அவர்கள் முன்வைக்கும் எந்தத் தீர்வையும், செயற்படுத்தும் பொறுப்பு அவர்களுடையது என்பதையும் வலியுறுத்தினேன். எல்லையில்லாதது போல் தோற்றமளித்த போதும் நாலே நாலு நாள்களில் அந்தக் குழு என்னிடம் திரும்பி வந்து பல செயல் முறைகளைத் திரும்பச் செய்யவும், புதிய முறைகளைக் கற்றுக்கொள்ளவும் திட்டம் சமர்ப்பித்தனர். முழுச் செலவு பத்தாயிரம் டொலருக்கும் குறைவென்பதோடு தரப் பிரச்சனையும் தீர்க்கப்பட்டு விட்டது.

எனக்கு முன்னால் போடப்பட்ட பத்திரங்களைப் பார்க்காமலே அப்படியே செய்யுங்கள் என்றேன். எனது பழைய தலைமைத்துவ வழிமுறைகளின் உள்ளார் வங்களைக் கட்டுப்படுத்த பகீரதப் பிரயத்தனம் செய்யவேண்டி இருந்தது. அவர்களுடைய விடை என்னுடையதைப் போன்று நல்லதாக இருக்கவில்லையோ அல்லது நான் அப்படி நினைத்துக்கொண்டேனா தெரியாது; அவர்களுடைய தீர்மானத்தை வாசிக்காமல் இருக்கவும் அதில் 'விருத்தி' செய்யாமல் இருக்கவும் அதிகப்படியான கட்டுப்பாடு தேவைப்பட்டது. எனது பொறுமை பெரிய இலாபங்களுக்கு வழி கோலியது. பிரச்சனை தீர்க்கப்பட்டு விட்டது. என்னிடம் அது திரும்பவேயில்லை, இத்தகைய பிரச்சனைகளையும், அதனைத் தன் சொந்தக்காரர்களிடமே தீர்வுக்கு மாற்றி விடும்படியாகக் கற்றுக் கொண்டேன். ஒரு தொழிலைச் செய்பவரே அந்தத் தொழிலுக்குத் திறமையான பொறுப்பாளியாக இருக்க முடியும் என்றும் கற்றுக்கொள்ள வாய்ப்புக் கிடைத்தது.

இன்னொருவருக்குச் சொல்லிக் கொடுக்கவும் கற்றுக் கொள்ளவும் முடிந்தது. நிர்வாகியின் பணி சொல்லிக் கொடுப்பதுதான் என்று ஒவ்வொருவரும் கூறுகிறார்கள். அதற்கான உண்மையான பொருளென்ன?

பேரறிவு சார்ந்த சொல்லிக் கொடுப்போர் ஏனையவர்கள் விடைகாண உதவியதாக ஆரம்பத்தில் நினைத்தேன். ஆகவே கேள்விகள் கேட்பதிலேயே என் கவனத்தைச் செலுத்தினேன். சொல்லிக் கொடுப்பதில் சிறந்தவர்கள் விளையாடுபவர்களின் தீர்ப்புக்களுக்கீடாகத் தமது தீர்ப்புக்களை விடுவதில்லை என்பது எனக்குத் தெரியும். ஆகவே விடையைச் சொல்லாமல் இருப்பதற்கு முயற்சி செய்தேன். அது பலருக்கு ஏமாற்றத்தையே அளித்தது. நிச்சயமாக என்னிடம் அப்படியான ஒன்றை எவரும் எதிர்பார்க்கவில்லை. மூத்தவர்கள் பலருக்கு எது செய்வது என்று தெரியாமல் போனதால் குறிப்பிடத்தக்க வியாபாரத் தந்திரங்கள் பலவற்றைத் தப்ப விட வேண்டியதாயிற்று.

ஒரு நாள் அது என்னை உறுத்தியது. பாரிய செயற்பாட்டின் நிபுணர் வாடிக்கையாளர் தான். வாடிக்கையாளரை மகிழ்வூட்டுவதில் தான் எல்லாமே ஆரம்பமாகிறது. அதனாலேயே எங்களுடைய தொழில் விபரங்களை 2 ஆம் வாடிக்கையாளரைக் கவர்வதற்கும், வைத்துக் கொள்வதற்கும் நான் செய்யும் காரியங்கள் என்று ஆரம்பிக்கிறது.

என்னுடைய பார்வையைத் திருத்தி வாடிக்கையாளரின் நோக்கில் பெரிய செயற்பாடு என்பது என்ன? என்று கேட்டுக்கொண்ட போது நிலைமை தெளிவானது. பணியாளர்கள் தத்தமது வினாக்களுக்கு இறுதியில் விடைகளைப் பெற்றனர். தாம் செய்ய வேண்டிய பணிகளில் நிபுணத்துவம் வாய்ந்தவர்களிடமே அவர்கள் அதைப் பெறக்கூடியதாக இருந்தது. அவர்களுக்கு அது நல்ல பாதுகாப்பை வழங்கியது.

எனது நிர்வாக முறையைக் கட்டாயமாக மாற்றியே ஆக வேண்டும் என்று நான் தீர்மானித்தபோது அது எப்படிச் செயற்படப் போகின்றது என்பதற்கு என்னிடம் விரிவான விளக்கங்கள் எதுவும் இருக்கவில்லை. மாறியே ஆகவேண்டும் என்பது எனக்குத் தெரியும். எப்படி மாறுவது? இறுதி மாற்றம் எப்படியானதாக இருக்கும்? என்ற வினாக்களுக்கு நல்ல விடைகளையும் நான் காணவில்லை. முழு விடைகளையும் கண்டு கொள்ளும் வரை நான் பார்த்திருந்தால் எனது வயதும் முதிர்ந்து நரைதிரையும் தோன்றி வியாபாரத்தையும் துறந்திருப்பேன் என்பதும் எனக்குத் தெரியும்.

World Executive Digest
ஏப்ரல், 1994.

## உத்தரவாதம்!

எவ்வளவு பெரிய மரமாக இருந்தாலும்
குறித்த அளவுகளில் பலகைகளாகவும்,
திராந்திகளாகவும் அரிந்து கொடுக்கப்படும்.

உயர் அழுத்த இயந்திர
உதவியுடன் செய்து
கொடுப்பவர்கள்:



## ஈஸ்வரி மரக்காலை

கே. கே. எஸ். வீதி,
மல்லாகம்.

மழைகாலமானாலும் சரி உங்களுக்குத் தேவையான
**கொத்து விறகுகளையும்**
எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம்.

## ஈஸ்வரி மரக்காலை

கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.

வாங்கத்..................தகுந்தது
சுவைக்கச்.................சிறந்தது.
தரமோ..................உயர்ந்தது

கேக்
றோல்ஸ்
பற்றிஸ்
பேஸ்ரி
வெதுப்பி

கருணா வெதுப்பகம்

காலை உணவை ஈடு செய்யும்

★ பணிஸ்

★ பட்டர் பாண்

★ திருமணமா?

★ பிறந்ததின விழாவா?

முன் கூட்டியே தெரியப்படுத்துங்கள்



சுகாதாரமான முறையில்
தரமாகத் தயாரித்து வழங்குபவர்கள்

# கருணா வெதுப்பகம்

ஏழாலை மேற்கு, ஏழாலை.

# பாத்திரங்கள்: திருத்துவோன், தையற்காரன், கடத்துவோன், உளவாளி.

எழுதியவர் :
— டக்ளஸ் வோலர் —

கடந்த ஆண்டுக் கடைசியில் சுங்க அதிகாரிகள், வேர்ஜினியாவின் கிராமப்புறத்தில் அல்ஹாப்பினுடைய செயற்பாடுகளைப் பரிசோதிக்கும் முயற்சியில் அவருடைய வீட்டைக் கடுங் காவலுக்கு உள்ளாக்கினர்; அவருடைய வளவுப் புறங்களை வான் ஒளிப்படக் கருவி ( Aerial photo ) கொண்டு படம் எடுத்தனர். இதற்குக் காரணம் ஹாப் சட்ட விரோதமாகத் தாம் மறைத்து வைத்திருப்பனவற்றிற்கு மாற்றாகப் பயனற்றவையான பொருள்களைக் காட்டித் தங்களை ஏமாற்றக்கூடும் என்ற அச்சமே. ஆனால் தோமஸ் மடிசன் என்ற சிரேஷ்ட சுங்க நுண்ணாய்வு அதிகாரி ஆபத்தினைத் துணிவுடன் எதிர்கொண்டு, ஹாப்பின் அதிர்ஷ்டப் புதையலை வெளிக்கொணர்வதில் வெற்றி பெற்று விட்டார். அணுச் சக்தி அளவைகாட்டி என்னும் ( Accelerometers ) நுண்ணிய தொழில் நுட்பக் கருவிகளின் ( கப்பலிலே ஏற்றுமதி செய்தவற்றின் ) விலைப்பட்டியல் தான் மடிசன் பெற்ற அதிர்ஷ்டப் புதையல்; அவை சிங்கப்பூருக்கு ஊடாக



ஜோர்டானுக்கு அனுப்பப்பட்டிருந்த உண்மை அந்த விலைப்பட்டியல் மூலம் வெளியாயிற்று. ஐக்கிய அமெரிக்க அஞ்சல் சேவை, பாக்தாதிலிருந்து தபால் மூலம் நான்கு துண்டுகளை, நான்கும் திகைப்பளிக்கும் படம் ஒன்றினால் சுற்றப்பட்டு வந்தவற்றை-ஹாப் பெற்றதாகத் தகவல் அளித்ததைத் தொடர்ந்து, ஈராக் அமெரிக்காவிலிருந்து மர்மமான வகையிலே பொருள்களை விலைக்குப் பெறும் வர்த்தகக் கூட்டிணைப்பில் மீண்டும் ஈடுபட்டிருப்பது வெளியாயிற்று.

சோவியத் ருஷ்யாவில் பொதுவுடைமை வீழ்ச்சிகாணும் வரை ருஷ்ய உளவாளிகளே அமெரிக்காவின் தேசியப் பாதுகாப்புக்கு முதல் அச்சுறுத்தற் காரராய் விளங்கி வந்தனர். இப்பொழுதோ அந்நிய முகவர்களும் அக்கிரமமான வர்த்தகர்களுமே, நுணுக்கமான தொழில் நுட்பங்களை வெளிநாடுகளுக்கு விற்பதில் ஈடுபடுகின்றனர். சில வேளைகளிலே சதாம் ஹுசைனின் துட்டத்தனமான ஆட்சிக்கும் இவை விலை போயுள்ளன. பாலைவனப்புயல் ( Desert Storm ) நடவடிக்கை இடம் பெறுவதற்கு முன்பே ஈராக் நேர்மையற்ற வகையிலே உலகளாவிய ரீதியில் ஆயுதத் தொழில் நுட்பங்களைக் கடத்துவதிலே ஈடுபட்டுவந்தது. '' பனிப்போர் முடிந்துவிட்டதே என்று நாம் அமைதியாகத் தூங்கிவிடக் கூடாது '' என்று அமெரிக்க சுங்க ஆணையாளர் ஜோர்ஜ் வெய்ஸ் எச்சரித்துள்ளார். அமெரிக்காவின் கடல் வர்த்தகம் ஈராக்குக்கு மூடப்பட்ட போதிலும், ஈராக்கின் கடத்தல் வேலை தொடர்வதாலேயே இந்த எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. இத்தகைய கடத்தல் வேலைகள் அதிகரிப்பதனால் பென்ரகனின் நிதி வருவாய் சுருங்குகிறது.

இதனால் பாதுகாப்புக் கருவிகளின் ஒப்பந்தக் காரர்கள் கடல் கடந்த நாடுகளோடு வர்த்தகஞ் செய்வதற்கு முயல்கிறார்கள். '' நியூஸ் வீக் '' பத்திரிகை பெற்ற தகவலின்படி சுங்கச் சேவை இதுவரை, அமெரிக்காவிலிருந்து போர்க்கருவிகளைக் கடத்திச் செல்வதில் பன்னிரண்டுக்கு மேற்பட்ட நிகழ்வுகளைக் கண்டுபிடித்துள்ளதாகத் தெரிகிறது. இவற்றில் சீனாவும், ஜோர்டானும் ஈடுபட்டுக் கடத்திய கடத்தல் நிகழ்வுகளும் அடங்கும்.

**உழவுத்தொழில்: பனிப்போரைத் தொடர்ந்து உயர்தர தொழில்நுட்ப உற்பத்திப் பொருள்களையும், சாதனங்களையும் களவாடும் விளையாட்டு இடம்பெற்று வருகின்றது.**

இவற்றை முறியடிப்பது எளிதன்று. சிலவேளைகளில் அமெரிக்க கொம்பனிகள்,

விற்பனைப் பொருள்கள் இன்றி வெறுமையாகுமளவுக்கு அவை வாங்கப்பட்டு வெளிநாடுகளுக்கு ஏற்றுமதியாகி மிக ஆபத்தான இரும்புப் பொருளாய்ச் சீரமைக்கப்பட்டு விற்பனையாகின்றன. இந்த உண்மையை நுண்ணாய்வாளர்கள் ( Investigators ) மணந்து பிடித்துள்ளார்கள். சுங்க அதிகாரிகள் தரம்மிகுந்த தொழில் நுட்பத்தைக் கையாண்டு, ஏற்றுமதியாகும் பொருள்களைப் பரிசோதிக்கையில் பயனில்லாப் பொருள்களிடையே கடுமையும், கொடுமையுமான தொழில் நுட்பக் கருவிகளும் கண்டுபிடிக்கப்படுவதுண்டு. ஆனால் இந்த முயற்சி மிகவும் கடுமையானது; களைப்பை அளிப்பது.

நீதிமன்ற ஆவணங்களைக் கட்டவிழ்த்துப் பார்வையிடப்பட்டபொழுது 1991 ஆம் ஆண்டுச் சுங்க முகவர்களின் கவனத்துக்கு ஹாப் உள்ளானார். சென்ற் லூயிஸ் விமானத்தளத்திலே ''மூடிமறைக்கப்பட்ட ஏற்றுமதிப் பொருள் விபரங்கள் (கப்பலில் ஏற்றும் பொருள்கள்)'' அவரிடம் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுச் சிறிது காலம் தடுத்துவைக்கப்பட்டார். ஜோர்டானியரும், அமெரிக்காவின் குடிமகனுமான ஹாப் பின்பு தலைமறைவாகிவிட்டார். ஆனால், நிதியமுலாக்கல் தொடர்புச் சாதனத்துக்கான நுண்ணிய கணனியில் அவருடைய பெயரினைச் சுங்கப்பகுதி பதிந்து வைத்திருந்தது. சந்தேகத்துக்குரிய கடத்தற்காரர்களின் பெயர்கள் இச்சாதனத்தின் மூலம் பதியப்படுவதான வழக்கம், ஹாப்பின் பெயரையும் அவர் தப்ப முடியாதவாறு பதிய வழிவகுத்தது. கடந்த ஆண்டு முடிவிலே வேர்ஜினியாவிலுள்ள கிராமப்புற வீட்டிலே மத்திய கிழக்காசிய நாடுகளுக்குப் பொருள்கள் ஏற்றுமதி செய்யும் வர்த்தகத்தில் ஹாப் ஈடுபட்டிருந்ததும், அந்த வர்த்தக நிறுவனம் 'வேர்ஜினியா சர்வதேச வர்த்தக நிறுவனம்' எனப் பெயர் சூட்டப்பட்டிருந்தமையும் கண்டுபிடிக்கப்பட்டன. இவற்றோடு அவருடைய தொலைபேசியின் பக்கத்தில் உள்வரும், வெளிச்செல்லும் தொலைபேசி அழைப்பிலக்கங்கள் எழுதப்பட்ட பதிவேடும் கிடைத்தது. அவருடைய ஃபாக்ஸ் (Fax) மீது அவர் அனுப்பும் தகவல்களை இடையீடு செய்யும் கருவி இணைக்கப்பட்டது.

## வழிகாட்டும் முறைமை

சமஷ்டி நீதி விசாரணையாளர்கள் மேற்குறித்த இடையீடுகளின் மூலம் ஹாப் ஈராக்குக்கு வேண்டிய பல பொருள்களை அனுப்புவதில் ஈடுபட்டிருந்தது வெளியாகியுள்ளதைத் தெரிவித்தனர். மொஸ்கோ கொம்பனி ஒன்று ஐ.அமெரிக்காவின் கடல் வர்த்தகத் தடையை மீறிச் செயல்புரிந்த நிகழ்வு ஒன்றும் இதன் மூலம் வெளிவந்தது. வேர்ஜினியாவின் தொழில்நுட்பக் கருவி உற்பத்தியாளர் ஒருவரிடமிருந்து ஹாப் ஏவுகணைகளுக்கு வழிகாட்டும் சிறப்புப் பொறிப் பாகங்களை ஜோர்டான் நாட்டின் தலைநகர் அம்மானிலுள்ள தேசியக் களிமண் பொருளுற்பத்தித் தொழிற்சாலையொன்றுக்கு அனுப்ப முயன்றதாகக் குற்றஞ் சாட்டப்பட்டது. இந்தக் களிமண் பொருள் உற்பத்தித் தொழிற்சாலையின் பெயர் அபு ஹாப் வர்த்தகக் குழுமம், இது ஈராக் அரசாங்கத்தால் நடாத்தப்படும் மின்பொருள் உற்பத்தி நிறுவனத்துக்கு இப்பொருள்களை அனுப்பி வைப்பதாகக் கூறப்பட்டது. இக்களிமண் பொருள் உற்பத்தித் தொழிற்சாலை, அவ்வாறு செயற்படுவதில்லை என்று அதன் பேச்சாளர் ஒருவர் மறுப்புத் தெரிவித்தார். 31 வயதான ஹாப்பும், அவருடைய மனைவியும் ஐ. அமெரிக்காவின் ஈராக்குக்கான கடல் வர்த்தகத் தடைச் சட்டத்தை மீறியதற்காகக் கைதாகினர். ஆனால் அவர்கள் தம்மீது சாட்டப்பட்ட குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை.

சிலவேளைகளில் எதிரிணை உளவாளிகளும் தம்மையே தாம் ஏமாற்றும் வகையிலே செயற்படுவதும் உண்டு. 1990 இல் சீன அரசின் பாதுகாப்பமைச்சு, இளைஞரான பல்கலைக்கழகப் பேராசிரியர் பின் வூ என்பவரை உளவாளராக அமெரிக்காவுக்கு அனுப்பி வைத்தது. ஓராண்டின் பின்னர் அவர் எஃப்பிஐ (FBI) என்ற புலனாய்வு நிறுவனத்துக்குச் சென்று, தாம் வந்த நோக்கத்தைக் கூறி அதிலிருந்து தாம் விடுபட்டு எஃப்பிஐ (FBI) நிறுவனத்திற் சேர விரும்புவதாக எடுத்துரைத்தார். எஃப்பிஐ (FBI) அவருக்கு 'சக்கர் டிலைற்' என்ற புனை பெயரை வழங்கி 21,500 டொலர் பணமும் அடுத்து வந்த 18 மாதங்களுக்கு வழங்கி வந்தது. பின்பு வூ இருபக்க உளவு முகவராகவும் தொழிற்படலானார். இவ்வகையில் அமெரிக்காவில் சீனா ஈடுபட்டு வரும் உளவுபற்றிய தகவல்கள் அவரால் வெளியாகின. ''வூ, எமது நிறுவனத்தின் வெளிநோக்குக்கான பலகணி போன்றவர்'' என்று எஃப்பிஐ நிருவாகி பிளேக் லீவிஸ் இவர் பற்றிக் குறிப்பிட்டார். ஆனால் வூ இருபக்கத்திற்கும் உளவாளியாகவே தொழிற்பட்டார். தம்மை நியமித்த சீனாவுக்கு அமெரிக்கத் தொழில் நுட்ப இரகசியங்களை வெளியிட்டார். இராணுவத்தினர் பயன்படுத்தும் ''இரவு நோக்காடி'' (Night Vision) என்னும் சாதனத்தை அவர் தாம் நிறுவிய ஏற்றுமதி நிறுவனம் ஒன்றின் மூலம் ஹொங்கொங்கிற்கு (Hong Kong) ஏற்றுமதி செய்தார். அவர் இச்சாதனத்தை 'வைத்திய சாதனம்' என்று பெயரிட்டு அனுப்பியதனால் ஐயங் கொண்ட 'வாரோ' எனும் நிறுவன நிறைவேற்றதிகாரிகள் கொடுத்த தகவலின்படி 1992 ஒக்டோபர் மாதக் காலைப் பொழுதொன்றில், அவரின் அலுவலகத்தினை சுங்கப் பகுதியினர் முற்றுகையிட்டனர். உண்மை வெளியாகி அவர் கைதானவேளையில், அவரைத் தமது புலனாய்வுக்கு இன்றியமையாத துணையாளர் என்று அதுவரை கருதி வந்த பிளேக் லீவிசுக்கு அப்பொழுது தான் உண்மை புலனாயிற்று. (கடந்த ஆண்டு வூவின் குற்றம் நிரூபணமாகி அவருக்குப் பத்தாண்டுச் சிறை வழங்கப்பட்டது).

இதேபோன்று பித்துக்குளித்தனமானதும், நகைப்பிற்கிடமானதுமான உளவு முயற்சியில் றோகர் கிறம்மர் என்பவரும் இறங்கினார்; தம்மை ஜேம்ஸ் பொண்ட் ஆகப் பாவனை செய்து உலக உளவர்களில் தாம் உயர்ந்தவர் போலக் காட்டத் தமது பயணப் பெட்டியில் எப்போதும் ரவைகள் ஏற்றப்பட்ட கைத் துப்பாக்கியை வைத்துக்கொண்டு உலாவினார். அவருடைய 'நொவாக்கொம்' என்ற கொம்பனி சிஐஏ (ஐக்கிய அமெரிக்கப் புலனாய்வு நிறுவனம்) யுடனும், அரச பீடத்துடனும், தேசிய பாதுகாப்பு முகவத்துடனும் உச்சமான அந்தரங்கத் தொடர்பு கொண்டு அவர்களுக்கான தொலைத் தொடர்புக் கருவிகளை வழங்கிவந்தது. ஆனால் கிறம்மர் ஜோர்டானிய அரசோடு, முன்னணிக் கொம்பனி ஒன்றினூடாக அந்தரங்கமான வர்த்தக உறவு கொண்டிருந்தார்.

வளைகுடாப் போரின்போது, தமது கொம்பனியின் செயற்பாடுகளில் அதிருப்தி கொண்ட 'நவகோனின்' தொழிலாளர் இருவர்' கிறம்மர் 'விரியன் பாம்பு' என்ற பெயருடன் ஜோர்டானிய அரசுக்குச் சமிக்ஞை — இடையீட்டுச் சாதனம் ஒன்றினை (Signal interception System) உருவாக்கி வழங்கியுள்ளதாகவும் அதன்மூலம் அமெரிக்காவும், மத்திய கிழக்கு நாடுகளும் கொள்ளுந் தொடர்புகளை இடைத்தலையீட்டினால் ஜோர்டானிய அரசர் ஹூசேயின் அறிந்து கொள்ளமுடியும் என்றும் கூறினார்கள். அமெரிக்க அரச பீடம், விரியன் பாம்புப் புலனாய்வு மூலம், சதாம் ஹூசேயின் வளைகுடாப்போர் இழுத்தடிக்கப்படும் என்ற உண்மையை அறிந்து கொள்வார் என்று கவலைகொண்டது. ஜோர்டான் முன்னரே ஈராக்கிற்குத் தகவல்களைத் தெரிவிப்பதாகக் கொண்டிருந்த ஐயம் இப்பொழுது உறுதிப்பட்டது.

## 'விரியன் பாம்பு'' திட்டம்:

சமஷ்டி முகவர்கள் அம்மானுக்கு அனுப்பப்படவிருந்த செயற்கைக்கோள் தட்டுக்களைத் தடுத்து வைத்து, கிறம்மரின் அலுவலகத்தை முற்றுகையிட்டனர். அவர் சட்டவிரோதமாகச் சமிக்ஞை இடையீட்டுச் சாதனத்தை உருவாக்கியதாகக் குற்றஞ் சாட்டப்பட்டார். ஆனால் அவர் தமது உற்பத்திச் சாதனம் இராணுவ ரீதியாக எவ்வித பெறுமானமும் கொண்டதல்ல என்றார். அதனை அமைத்ததன் நோக்கம், ஜோர்டானிய அரசருக்கு மிக முரண்பட்டவர்களான பாலஸ்தீனியரின் தொலைபேசி அழைப்புக்களை இடைத்தலையீட்டின் மூலம் பெறுவதற்கு வாய்ப்பளிக்கவே என்பதும் அவரின் கூற்று. (கிறம்மர் கடந்த ஆண்டு தற்கொலை புரிந்தார்; இதனால் அவர்மீதுள்ள வழக்கு, சிக்கலடைந்துள்ளது போலத் தோற்றுகின்றது).

அம்மான் அரசவையின் பேச்சாளர் ஒருவர், ''நியூஸ் வீக்'' பத்திரிகைக்கு வழங்கிய செய்தியில் ''மேற்குறித்த சாதனம் ஐ அமெரிக்கத் தொடர்புகளை இடைமறித்து அறிவதற்கான தல்ல, அது முற்று முழுக்க ஜோர்டானின் தேவைகளை நிறைவேற்றவே உருவாக்கப்பட்டது'' என்றும், 'அது ஐ அமெரிக்காவிற்குத் தெரியப்படுத்தப்பட்டு விட்டது'' என்றும் குறிப்பிட்டார். ''ஆனால் ஐ. அமெரிக்காவோடு தொடர்பு கொண்டபின்பு அந்தச் சாதனம் பயன்படுத்தப்படாமல் கைவிடப்பட்டது''.

கிளின்ரனின் நிர்வாகம் பனிப்போரின் பின்பு உயர் தொழில் நுட்பப் பொருள்களை ஏற்றுமதி செய்வதற்கான தடைச் சட்டத்தினைத் தளர்த்தியுள்ளது. ஆனால் இந்தத் தளர்ச்சி அவற்றைக் கடத்திச் செல்லும் கதவுகளை அகலத் திறந்துவிடவுங் கூடும். திறைசேரித் திணைக்களம் சட்டத்தை இறுக்கமாக்கவெனப் புலனாய்வு அதிகாரிகளைக் கொண்ட சர்வதேச மாநாடு ஒன்றை நடத்துவது பற்றி ஆலோசித்து வருகிறது. ''இது முற்றாகப் புதியதொரு பந்து விளையாட்டாகும். இந்த அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்கக் கூடிய ஒழுங்களை மேற்கொள்ள வேண்டும். இதைச் செய்யாவிட்டால் ஐ. அமெரிக்காவின் தொழில் நுட்பம் எதிரி நாடுகளின் கைக்குப் போய்விடும்'' என்று றொனால்ட் நோபிள் திறைசேரியின் உதவிச் செயலாளர் கூறியுள்ளார்.

நியூஸ்வீக்

### குற்றவாளிகளைக் கையளிக்கும் ஒப்பந்தம்

எகிப்தும், பாகிஸ்தானும் குற்றவாளிகளை ஒரு நாடு மற்ற நாட்டிடம் கையளிக்கும் ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டு உள்ளன. இஸ்லாமிய அடிப்படைவாதத் தீவிரவாதிகளைக் கட்டுப்படுத்தும் நோக்கத்துடன், இந்த ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது. அமெரிக்காவும், எகிப்தும், வேறு பல அரபு நாடுகளும் கடுங் கோட்பாட்டாளர்கள் பாகிஸ்தானின் வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தில் தரித்திருந்து கொண்டு இயங்கி, பிற இடங்களில் வன்முறைச் செயல்களைத் திட்டம் இட்டு நிறைவேற்றுகின்றனர் என்று கூறுகின்றன. அந்த மாகாணம், ஆப்கானிஸ்தானின் எல்லையில் உள்ளது.

# மன்னர் தலைமறைவாகிறார்

ஜேர்கன் ஜினீடர் ( Jurgen Schneider ) ஜேர்மனியின் பண்ணை மன்னரென அழைக்கப்படுபவர், விரிவாக்கத்தின் முக்கிய வியாபாரி, பிராங்பேட்டின் வானுயர் கட்டடங்கள் தொடக்கம் 18 ஆம் நூற்றாண்டு காலத்திய லிப்சிக்கின் முழு வீதிகள் வரை தேசத்தின் மிக விரும்பத்தக்க சொத்துக்களை ஆள்பவர். அவர் பலகோடி சொத்துக்கதிபதி. பிராங்பேட்டிற்குக் கிட்ட ஒரு மாளிகையில் வசிக்கிறார். இவர் கனறிக் தீவுகளில் பனிக் காலத்திலும், வடகடல் தீவுகளில் கோடையிலும் வசிப்பவர். பிரத்தியேக லிவர் ஜெற் விமானத்தில் மெய்க்காப்பாளரும், செயலாளருங் கொண்ட தனிச் சிறப்பு வாய்ந்த குழுவுடன் ஐரோப்பா முழுவதும் வான்வழிப் பிரயாணஞ் செய்பவர். அவர் தம்முடன் துவக்கு ஒன்றையும் வைத்திருப்பார்.

கடந்த வாரம் ஜினீடரின் ஆதிக்க வலுவுள்ள இயந்திர இலாபம் ஓடி மறைந்தது போல அவரும் வெளிப்படையாக மறைந்துவிட்டார். பிராங்பேட்டில் நிலைகொண்டுள்ள வாணிகக் கழக அதிகாரிகள் வேலைக்கு வந்தபோது 59 வயதான தலைவரிடமிருந்து (Fax) பாக்ஸ் செய்தி காணப்பட்டது. அதில் தாம் ஈஸ்ரர் விடுமுறையின் போது சுகவீனமுற்றிருந்தாரென்று மரியாதையாகக் குறிப்பிட்டிருந்தார். அவருடைய வைத்தியர்கள், 13 வருடங்களுக்கு முன் தன்னந்தனியாக நிறுவி, நிர்வகித்து வந்த கம்பனியின் விவகாரங்களில் சம்பந்தப்படுவதை நிறுத்த வேண்டுமென்று ஆலோசனை கூறியுள்ளனர் என்று அவர் சொன்னார். ஜினீடர், அவரது மனைவி குளோடியா, அவரது பணம் ஆகியவற்றை

— ஜேம்ஸ் ஏ. ஜாக்சன் —

எங்கேயும் காண முடியவில்லை. ஈஸ்ரருக்கு முந்திய வியாழன் '' நான் ரஸ்களிக்குப் போகிறேன் '' என்று ஜினீடரின் அதி உயர் நிர்வாகஸ்தரான ஹோரங்ற் ஓபர் மேயருக்குச் சொன்னார். ஈஸ்ரருக்குப் பிறகு கம்பனிகளில் எதுவித பணமும் விட்டு வைக்கப்படவில்லை.

ஜினீடரும், மனைவியும் உண்மையாக ரஸ்களிக்குப் போய்விட்டார்கள். ஆனால், ஓபர் மேயரோ அல்லது அவருக்குக் கடன் கொடுத்த அநேகரோ அங்கு காணவில்லை. சில அறிக்கைகள் அவர்கள் சுவிற்சிலாந்தில் உள்ளனர் என்றும், வேறு சிலர் பிறேசிலுக்கு, அங்கே அவருக்குப் பல பண்ணைகளில் பங்கு உண்டு போய்விட்டார்கள் என்றும் கூறுகின்றன. இவ்வாறான நிலைமையில் எல்லா மதிப்புள்ள சொத்துக்களும் தற்காலிகமாக முடக்கப்பட்டுள்ளது என்று கம்பனி அறிவித்துள்ளது.

ஆனால், களஞ்சியக் கதவுகள் மூடும்போது காலங் கடந்துவிட்டது. அவருடைய வங்கியாளர்கள் கூறுவதுபோல் ஜினீடர் கண் இமைவரைக் கடனாளியாய் இருந்தார். அவ்வாறு சில காலமாக இருந்திருக்கிறார். அவர்கள் அவருடைய வணிகக்கழக விவகாரங்களை வகைப்படுத்தியபோது, கடன் கொடுத்தவர்கள் நட்டம் பிரமாண்டமானது எனக் கண்டுகொண்டார்கள். ஜினீடர் 50 –க்கும் மேற்பட்ட, அநேக ஜேர்மன் வங்கிகளில் $ 2.9 பில்லியன் கடன் பெற்றுள்ளார்கள். அத்துடன் $ 2.4 பில்லியன் பெறுமதியான பணத்தை ஒப்பந்தகாரருக்கும், வழங்குநர்களுக்கும் கொடுக்க வேண்டியும் இருந்தது. மிகப் பெரிய கடனாளி டச்சி வங்கி $ 700 மில்லியனுக்குக் கூடுதலாகக் கடன் கொடுப்பனவுள்ள தலைமை நிதி தொடர்பான ஸ்தாபனம், வேறு பெரிய கடன் வழங்குநர் $200 மில்லியன் பெறுமதி வாய்ந்த ஜினீடர் கடதாசிக்காசு கொடுத்த



கோடீஸ்வரர் ஜேர்கன் ஜினிடரின் திடீர் வெளியேற்றம் காரணமாய் அவருடைய அரண்மனை போன்ற வாசஸ்தலம் கடும் பாதுகாப்பிற்கு உட்படுத்தப்பட்டது.

மதிப்புமிகு கொமர்சல் வங்கி, அத்துடன் Dresdner Bank 174 மில்லியன் கொடுத்தது.

நாடு முழுவதும் 80 –க்கும் மேலான கௌரவமிக்க விலாசதாரர்கள் மீது வங்கிகள் அடமானக் கடதாசிகள் வைத்துள்ளன. ஜேர்மனியின் பழைமைவாத அடமான சட்டங்கள் 60 சதவீத பெறுமதிக்கு மேலாக முற்பணங் கொடுப்பதை அனுமதிப்பதில்லை. இதன் அர்த்தம் வங்கிகள் தங்கள் நட்டங்களை அறவிட நல்ல வாய்ப்பு என்பதுவே. 2,000 தொழிலாளர் கொண்ட ஜினீடர் கம்பனிகளும், சேவைகளும், சாமான்களும் வழங்கிய கணக்கால், கொடுக்குமதியை எதிர்பார்க்கும் நூற்றுக்கணக்கான ஒப்பந்தக்காரரும், வழங்குநர்களும் அநேகமாக பாதிப்புறவேண்டி வரும்.

எல்லாவற்றிலும் வலுவாகப் பாதிக்கப்படுவது ஜேர்மனியிலுள்ள Leipyig ஆகும். இங்கே நகரத்தின் மத்தியில் ஒரு மிகப் பெரிய ஜினீடர் அபிவிருத்தி சடுதியாக நின்றுவிட்டது. 18 ஆம் நூற்றாண்டுக் காலப் பழைமை வாய்ந்த Barthel Hot Compler ஐ ஜினீடர் வரலாற்று முக்கியம் வாய்ந்த கடைகளாகவும், சிற்றுண்டிச் சாலைகளாகவும், தொடர் மாடிகளாகவும் புனரமைப்புச் செய்து கொண்டிருக்கையில் கடந்த வாரம் வேலையாட்கள் கட்டடங்களிலிருந்து செங்கட்டிகள், பைப்வகைகள், ஜன்னல்கள், கதவுகள், குழியலறைப் பொருத்துக் கருவிகளை வலிந்து இழுத்துச் செல்ல முனைந்துள்ளனர். கம்பனியின் வீழ்ச்சி லிப்சிக்கில் 5,000 வேலை இழப்புக்களைக் கொண்டு வரும் என்று யூனியன் அதிகாரிகள் கணக்கிட்டுள்ளார்கள்.

சம்பிரதாய ஞானம் ஜினீடரின் வீழ்ச்சிக்கு தற்பெருமையும், அளவுக்கு மீறிய பெருப்பமுமெனக் காரணங் காட்டுகிறார்கள். அவர் பிராங்பேர்ட் சீல் கலேறி போன்ற மதிப்பு மிக்க திட்டங்களில் கவனஞ் செலுத்தினார். அவர் அதிக வாடகை தரக்கூடிய வியாபார சிற்றுண்டிச் சாலைகளை வசிப்பிடங்களாக அபிவிருத்தி செய்தபின் இவைகளை விற்க மறுக்கும் திமிர் பிடித்த சுபாவமுள்ளவரென்று ஆய்வாளர்கள் கூறுகின்றார்கள். ஜினீடர் ஒருமுறை சொன்னார்: வீடுகளுக்கு உயிர் உண்டு. அவைகள் கலையம்சம் கொண்டவை என்று. இந்த வெகுமதிகளை மூலதனமாக மாற்றாமல் அவைகளுக்கூடாகக் கடன் வாங்கி மேலுங் கலைக் கூடங்களை வாங்கினார். இது கிழக்கு ஜேர்மன் கம்யூனிச வீழ்ச்சியுடன் இவருடைய லிப்சிக் வாணிபமும் முடிவுக்கு வந்தது. 1992 இல் மிகப் பிரியமானவற்றுள் ஒன்றான பேர்ஸ்ரன்கோப் ஹோட்டலை 30 ஜப்பானிய பண முதலீட்டாளருக்கு $ 265 மில்லியனுக்கு விற்றது வங்கிகளைக் கவலையுறச் செய்தது. விற்பனை இலாபத்தைக் கொடுத்தபோதிலும் முதலீட்டாளருக்குக் காசு கொடுக்கல் வாங்கற் பிரச்சனை இருக்கிறதென்பதை வழமைக்குமாறான அந்த நிகழ்வு சுட்டிக் காட்டுவதாயிற்று.

**ஜேர்மனியின் உடைந்த பொருளாதாரத்தில் மேலும் பிளவுகளை உண்டாக்கி ஒரு சொத்துச் சாம்பிராச்சியம் நொறுங்குகிறது.**

இருப்பினும் கொடுத்துத் தீர்க்க முடியாத நிலைமை மட்டுந்தான் ஜினீடரை வீழ்த்தியதாகாது. பின்னடைவை நோக்கிச் செல்கின்ற ஜேர்மன் பொருண்மியம் கடந்த வருடம் சுருங்கியது. அது அபிவிருத்தி அடைவதாகவில்லை. அசைக்கமுடியாத நிலையில் இருந்த சில ஜேர்மன் தொழிலதிபர்கள் பிரச்சனைப்படுகிறார்கள். 1993–ல் டெய்ம்லர் பென்ஸ் நிறுவனம் $ 1 பில்லியன் நட்டங் காட்டியது. வோக்ஸ்வகன் அதிலும் பார்க்க மோசமான நிலையில் ($ 1.5 பில்லியன்), ஓர் உலோக எந்திரவியல் நிறுவனம் (Metallegesellscraft), கடந்த ஜனவரியில் டச்சி வங்கியால் $ 2 பில்லியன் பிணையில் வங்கிரோத்து நிலையிலிருந்து காப்பாற்றப்பட்டது.

உலோக எந்திரவியல் நிறுவனத்தைக் காப்பாற்றித் தனவந்தர் சிங்காசனத்திலிருந்து இறக்கப்பட்டவருக்கு அதேமாதிரிச் செய்யப்போவதில்லை. சட்ட நடவடிக்கை எடுக்கவிருப்பவர்கள் இவர் மீதும், இவர் மனைவி மீதும் சட்டத்தை மீறியதற்காக விசாரணையை முடுக்கிவிட்டிருக்கிறார்கள். இப்போது வழக்குத் தொடுப்பது டச்சு வங்கி.

ரைம், ஏப்ரல் 25, 1994.

★

# மிக விரைவில் ஆபத்தில்லா ஆயுதங்கள்

### வெள்ளிக் குண்டு

*பீரங்கியிலிருந்து வெடிக்கப்பட்டதும் 28 அடி அகலமான இந்தக் குண்டுக் குவியல் இலக்கைச் சென்றடைகிறது.*



● அது போயடைந்ததும் அந்த உறை இலக்கை இயக்குவோரை– கார் அல்லது கவச வாகனம் திக்குமுக்காடச் செய்கிறது.

● இதே இரகசிய முறையில் பென்ரகனின் ஒப்பந்தகாரர் மஸாட்சு செற்றிலுள்ள கேம்பிறிட்ஜ் நிறுவனம் ''ஸ்ரீத்திநெற்'' எனப்படும் 18 அடி அகலமான பொருளை உருவாக்கியுள்ளனர். இது மக்களுக்கு எதிராக உபயோகிக்கக் கூடியது.



● இந்த வலை இலக்கிலுள்ளவர்களைப் பசைப் போர்வையால் அகப்படுத்திவிடும்.

பெண்களும், பிள்ளைகளும் கல்லெறிந்த படியால் ஐ. நா அமைதி காக்கும் படையிலிருந்த பாகிஸ்தான் படைகள் மொகடிஷுவில் கடந்த ஜூன் திங்களில் துப்பாக்கிப் பிரயோகஞ் செய்தனர். இதனால் 20 அப்பாவிப் பொது மக்கள் இறந்து போயினர். இதனையே சோமாலியப் புரட்சியாளர்களும் எதிர்பார்த்திருப்பர். கடந்த ஒக்ரோபரில் ஹெயிற்றியில் (HAITI) துப்பாக்கியேந்திய ஒரு கூட்டத்தினர் காரணமாக அமெரிக்க இராணுவ ஆலோசகர் கொண்ட சிறு குழுவை இறக்க முடியவில்லை. டெக்சாஸ் மாநில வகோவில் பிரான்ச் டேவியன்களுடன் (Branch Davidians in waco Texas) எப்பீஐ (FBI) க்கு ஏற்பட்ட அனுபவம். சட்டம், ஒழுங்கை நிலைநாட்டுவதில் மூன்றாம் உலக நாடுகளில் மட்டுமன்றி மேலை நாடுகளிலும் சிக்கல்கள் உண்டு எனக் காட்டுகிறது.

ஆபத்தில்லாத, ஆனால் சக்தி வாய்ந்த ஏமாற்றக்கூடிய ஆயுதங்களைப் பயன்படுத்தும் ஐ நா அல்லது அமெரிக்கப் படைகள் குழப்பம் ஒன்றினைக் கட்டுப்படுத்த, அல்லது ஒளிந்திருக்கும் துப்பாக்கிக் காரர்களைக் கண்டு பிடித்துச் செயலிழக்கச் செய்ய முடியுமாயின் எப்படி இருக்கும்? உலகெங்கும் அமைதியை நிலைநாட்ட முயலும் அமெரிக்கத் துருப்புக்கள் எதிர்காலப் போர்களில் பொது மக்களைக் கொல்லாமலோ, காயப்படுத்தாமலோ எதிரிகளை மேற்கொள்ள முடியுமாயின் எப்படியிருக்கும்? எதிர்காலத்தில் உயிருக்கு ஆபத்து விளைவிக்காத ஆயுதங்களைப் பயன்படுத்துவது குறித்துப் பென்ரகன் ஆராய்கிறது. உலகம் மாறுகிறது. எனவே நமது போர் முறைகளும் மாற வேண்டும் என்கிறார் —.... சர்வதேச கேந்திர முக்கியத்துவம் பற்றிய ஆராய்ச்சி நிலையத்தில் வோஷிங்ரன் பிரிவைச் சேர்ந்த டான் கோயறி (Dan Goure) என்பவர் சோமாலிய சம்பவத்தின் பின் பாதுகாப்புத் துணைச் செயலர் ஜோன் டொயிற்ச் (John Deutch) பென்ரகன் அதிகாரிகளுக்கு ஆபத்தில்லா ஆயுதங்கள் பற்றி ஆராயும்படி பணித்துள்ளார். 1995 இல் இதற்கு முக்கியத்துவம் தரப்பட்டு நிதி வழங்கப்படும் என பிராங்க் கென்டோல் (Frank Kendall the Pentagon's Director of Tactical Systems) கூறியுள்ளார் முதல் முயற்சியாக அதிரடித் துப்பாக்கி பயன்படுத்தப்படும். இது சிறிய பயத்தங் கொட்டைப் பைகளைச் சுடும். (Beanbags) இவை ரப்பர் ரவைகளிலும் ஆபத்துக் குறைந்தவை, ஆனால் ஒரு மனிதனைச் செயலிழக்கச் செய்ய வல்லவை.

ஆதியில் கிரேக்கர் கி. மு 425 லேயே தமது படை நடவடிக்கைகளை மறைப்பதற்கு ஒரு வகை புகை பயன்படுத்தப்பட்டது. (ஒப்ரேசன் டெசற் ஸ்றோம்) ஒப்பரேசன் பாலைவனப் புயல் என்ற பெயரில் அமெரிக்கக் கடற்படை

பல மின் பிறப்பாக்கிகளை ஏவுகணையில் வைத்துப் பாக்தாத் நகரம் முழுவதும் தூவின. இம் மின் சுருள்கள் (Filaments) ஈராக்கின் பாதுகாப்புத் தொகுதியைச் செயலிழக்கச் செய்தது. ஆனால் மின் பிறப்பிகளுக்கு அழிவை ஏற்படுத்தவில்லை. ''நாம் ஈராக்கைத் தோல்வியடையச் செய்ய நினைத்தோமே தவிர அதனை அழிக்க விரும்பவில்லை என விமானப் படைத் தளபதி கேணல் ஜோன் வோர்டன் என்பவர் கூறினார். ஏற்கனவே பல வகையான ஆபத்து விளைவிக்காத ஆயுதங்கள் தோன்றியுள்ளன. அவையாவன: லேசர் கதிர்கள், மைக்ரோவேவ், ஒலிக்கதிர், ஸ்றோப் ஒளி, Strobe Light) மின் காந்த நாடிகள், நுண்ணங்கிகள், இரசாயனப் பதார்த்தங்கள், கொம்பியூற்றர் வைரஸ் என்பனவாகும். பயத்தங் கொட்டைப் பைகள், இரசாயனப் பதார்த்தங்கள் சத்தை உருவாக்கி (Noise Generators) என்பன கூட்டங்களைக் கலைக்கப் பயன்படுத்தலாம். இரசாயனப் பதார்த்தங்கள், உலோகம், பிளாஸ்ரிக் என்பனவற்றை அழிக்க வல்லன. எனவே டாங்கிகளைச் செயலிழக்கச் செய்யலாம். மின் காந்த நாடிகள், மைக்ரோ வேவ், கொம்பியூற்றர் வைரஸ் என்பன, மின், மின்னியற் கருவிகளைச் செயலிழக்கச் செய்யும்.

இவற்றுள் சில ஆச்சரியமானவையாகும், உதாரணமாக சண்டியா தேசிய ஆய்வு கூடம் கண்டுபிடித்த இரண்டு மிகவும் இரகசியமான ஆயுதங்களை உற்பத்தி செய்தன. முதலாவது சாதனம் ஒரு நுரையைத் தள்ளும். அது ஒட்டிப் பிடிக்குந் தன்மையுள்ளது. வளி (காற்று) பட்டவுடன் பசைத் தன்மையுடையதாக மாறும். இரண்டாவது சோப் குமிழ்கள் போன்ற பல குமிழ்களை உருவாக்கும். இது பயங்கரவாதிகளைக் கேட்கவோ, பார்க்கவோ, நகரவோ முடியாதபடி செய்யும். இதனால் ஆபத்தானவர்கள் செயலிழந்து விடுவர்.

வாகனங்களில் ஒட்டிப் பிடிக்கும் இரசாயனப் பதார்த்தங்களை



## போரின் விஞ்ஞானம்

**குழப்பம் விளைவிப்போர் பயிற்சியில்லாத துப்பாக்கியாளர் என்போரைச் சமாளிக்கவும் சிலவேளைகளில் போரில் வெற்றிபெறவும், ஆபத்தில்லாத, அப்பாவிகளைக் கொல்லாத, ஒரு புதியவகை ஆயுதங்கள் தோன்றுகின்றன.**

யும் கண்டுபிடித்து உள்ளனர். இவற்றைத் தூவுவதால் நடைபாதை ஒன்றில் ஒட்டிப் பிடிக்கும் அல்லது டாங்கி ஆகியவை நகர முடியாதபடிக்கு வழுக்கிக்கொண்டிருக்கும். வாகனங்களை மூடக்கூடிய அல்லது மனிதரை மூடக்கூடிய உலோக வாளிகளும் உண்டு. சோடாப் போத்தல் அளவு உறைகளுள் வைத்து இவை சுடப்படும். ஆளுக்குமேல் அல்லது வாகனத்தின் மேல் அது விழுந்து பொறிபோல் பிடித்து விடும.

### போலித் துப்பாக்கி

*சந்தியா ஆய்வு கூத்தில் செய்முறைச் செயற்பாட்டின் போது, ஒரு போலித் துப்பாக்கி ',ஸ்ரிக்கி போம்'' வகையில் இயக்கப்படுகிறது. பெரிய ஓசையோடு இங்கும் அவ்வாயுதம் காற்றுப் பட்டதும் வேகம் குறைந்து விடும்.*

- *அணுவாயுதப்பிரதேசங்களைக் காக்க உபயோகப் படும் ''ஸ்ரிக்கி போமும்'' ''அக்கிவாஸ் போமும்'' பொலிஸ் திணைக்களங்களுக்கு விற்பனை செய்யப்படலாம்.*
- *கூடாதவர்களைக் கட்டுப் படுத்த வேறு ஆயுதப்பாவனை வரை இதனால் சமாளித்துவிட முடியும்.*

எச். ஜி. வெல்ஸ் (H. G. Wells) கால, விஞ்ஞானக் கற்பனைகள் இன்று நனவாகின்றன. லேசர் கதிரினால் குண்டு வீசும் விமானியின் கண்களைத் தற்காலிகமாகக் குருடாக்க முடியும், அல்லது எதிரியின் டாங்கிகளிலிருந்து சுடுபவரின் கண்களைக் குருடாக்க முடியும். லொஸ் அலாமொஸ் ஆய்வு கூடங்களில் இவை பரீட்சித்துப் பார்க்கப்பட்டன என முற்றுந் தெரியாத தகவல்கள் கூறுகின்றன.

விஞ்ஞானக் கற்பனைக் கதை எழுதும் ஜனற், கிறிஸ்தோப்பர் மொறிஸ் தம்பதிகள் முன்னாள் சி. ஐ. ஏ பிரதிப் பணிப்பாளர் புத்திஜீவியான மின்சார கோடீஸ்வரன் ஆகியோர் இதில் அதிகமாக ஈடுபட்டனர். ஜனற் தம்பதிகளின் சிந்தனை 80 களில் தெரிய வந்தது. சி. ஐ. ஏ யின் பிரதிப் பணிப்பாளர் ரே கிளைன் ஜோன் அலெக்சாண்டர் என்ற கேணல் ஆகியோர் இவர்களது பணியினால் கவரப்பட்டனர். கிளைன் ஜோர்ஜ் புஷ்ஷுடன் இது பற்றிக் கதைகக அனுமதி பெற்றிருந்தார்.

ஈராக் போர் தொடங்கிய அன்று நடைபெறவிருந்த இச் சந்திப்பு நடைபெறவில்லை. ஆனால்

இவர்களது தீர்க்க தரிசனப்பார்வை புஷ்ஷின் பாதுகாப்புச் செயலர் டிக் கென்னியைக் கவர்ந்தது. பில் கிளின்ரன் பதவியேற்ற காலத்தில் ஒருவித இணக்கம் ஏற்பட்டது ஆயினும் அரசாங்கச் செயலமைப்பு இதற்குத் தடையாகவுள்ளது. டேவிட் கோரேஷ் என்பவருக்கு எதிராகக் காதுகளுக்குக் கேட்காத மெல்லிய ஒலிபரப்பைச் செய்வதன் மூலம் கோரேஷ் கடவுள் தம்மோடு பேசுகிறாரென உணரச் செய்யலாம். ஆனால் (FBI) அதனை நிராகரித்தது. தோல்வியின் பின் அரசாங்க சட்ட வல்லுநர் (Attorney General) ஜனட் ரெனோ பென்ரகனுக்கும், சி. ஐ. ஏக்கும் தமது திணைக்களத்துடன் இணைந்து ஆபத்தில்லா ஆயுதங்களைப் பயன்படுத்துவது பற்றி ஆராயும்படி அழைத்தார்.

இவற்றைப் பயன்படுத்துவதில் சில சிக்கல்கள் உண்டு என்று சர்வதேச சட்டத்தின் படி இரசாயன உயிரியல் ஆயுதங்கள் தடைசெய்யப்பட்டுள்ளன. இரண்டாவதாக ஆபத்தில்லாத ஆயுதங்களில் இராணுவப்பயிற்சி.மூன்றாவதாக இவற்றைப் பயன்படுத்தும் போது சில வேளை எதிரிகளும் இவர்கள்மேல் இதனைப் பிரயோகிக்கலாம்.

ஆயினும் ஒருநாள் மொகாடிவில், பாகிஸ்தான் இராணுவம் சந்தித்த அதே சூழ்நிலையில் அமெரிக்க இராணுவம் ஆபத்தில்லா ஆயுதங்களைப் பயன்படுத்தும் என்பதிற் சந்தேகமேயில்லை. அவர்கள் ஒலி, வேலி (SOUND BARRIERS) ஸ்றோப் ஒளி, பயற்றம் விதைப்பை ஆகியவற்றைப் பயன்படுத்துவர். சோமாலியாவின் புரட்சியாளர்கள் அமெரிக்காவுக்கு எதிராக ஒலி பரப்புச் செய்தால் அதற்குப் பதிலாக பறக்கும் ஒலி பரப்பும் சாதனம் மூலம் அமைதிக்கான செய்திகளைப்பரப்ப முடியும். அவர்கள் கூட்டங்களுக்குள் மறைந்திருந்து சுட்டால் அவர்களையும் ஊடுருவி அவர்கள் இருக்கும் இடத்தைக் காணக்கூடிய லேசர் கதிர் ருஷ்யாவிடம் உண்டு. மிக விரைவில் அவர்களை உறைய வைக்கக்கூடிய லேசர் கருவி உருவாகிவிடும்.

*நியூஸ்வீக், பெப்ரவரி 7, 1994*

# ஒரு "குவாக்" கைக் கண்டு "பிடிக்க" எத்தனை விஞ்ஞானிகள் தேவை?

அலெக்சாண்டர் வொல்ஸான் ஒரு வானியலாளர். சூரியத் தொகுதிக்கு அப்பாலும் வேறு கிரகங்கள் உள்ளனவா என ஆராய்கிறவர். அண்மையில் அவரை ஒருவர் கேட்டார்: வான் வெளியில் எவ்விடத்தில் கிரகங்கள் இருக்கக் கூடும் என நீங்கள் நினைக்கிறீர்கள்? ஓரியோனில்லா? பெரும் டிப்பரிலா? பிளாடெஸ்சிலா? "என்னால் பதிலே கூற முடியவில்லை" என்று கூறினார். அந்த பென்சில்வேனிய பல்கலைக்கழக ஆய்வாளர்; "எந்த உருத் தொகுதியில் அவை இருக்கின்றன என்பது பற்றி என்னால் எதுவும் சொல்ல முடியாது. ஒரு சாதாரண மனிதன் இயற்கையைப் பற்றிக் கருதுவதற்கும் ஒரு விஞ்ஞானியின் கருத்திற்கும், இடையில் வேறுபாடு இது தான்".

விஞ்ஞானம், அன்றாட அநுபவங்களிலிருந்து அந்நியப் பட்டுப் போய்விடுமெனில் அது கண்டுபிடிப்பிற்கான வழமையான கருதுகோள்களிலிருந்தும் விலகிவிடும். எந்த நுண்ணிய துறையை எடுத்துக் கொண்டாலும் - அது வானியல் பௌதிகமாயிருந்தாலென்ன, மூலக்கூற்று மரபுவழிப் பண்பியலாயிருந்தாலென்ன – கண்டுபிடிப்பின் நோக்கம், புலன்களுக்கு அப்பாற்பட்டது தான். அது மட்டுமன்றி கண்டு பிடிப்புச் செய்முறையானது நேரடியானதாகவன்றி உய்த்துணரக் கூடியதாகவுமே உள்ளது. வோல்ஸான், முதன் முதலில், எமது சூரியத் தொகுதிக்கு அப்பால் உள்ள கிரகங்களைக் "கண்டு பிடித்த" போது அவர் அவற்றைத் தொலை நோக்கிகளின் உதவியால் கண்டு பிடிக்க வில்லை. அவற்றிலிருந்து வரும் ரேடியோ சமிக்ஞையின் அமைப்பினைக் கொண்டே அவர் அவற்றை உய்த்தறிந்தார். புற்றுநோயைத் தடுப்பதற்கு இரசாயன வியலாளர்கள் (முட்டை)க் சோசிலிருந்து ஒரு பொருளைக் "கண்டு பிடித்த" போது, அவர்கள் நுணுக்குக்காட்டி மூலம் அதனைக் கண்டு பிடிக்க வில்லை. குரோமற்றோகிராஃப் படத்தில் அந்த இரசாயனத்தின் தடயங்களைத் தான் தேடி அறிந்தார்கள். Paleontology ஆராய்ச்சி எனில் ஒருவர் Fossil களைக் கண்டு கொள்ள முடியும். ஆனால், பிற துறைகளிலோ வெனில், "குறிப்

*விஞ்ஞானம்;*

**பெரும் முன்னேற்றங்கள் புலன்களை மீறுகின்றன. உண்மையில் கண்டுபிடிக்கப்பட்டது ஒன்றுமில்லை; அது உய்த்துணரப்பட்டது.**



பிட்ட பொருளையே அவர்கள் இப்போதெல்லாம் கண்ணால் கண்டுவிடுவதில்லை'' என்கிறார் பௌதிகவியலாளரான நிக்சமியோஸ். இவர் நியூயோர்க்கிலுள்ள புறூக்கோவன் தேசிய ஆய்வு நிலையத்தின் பணிப்பாளர். ''நாங்கள் அது என்ன செய்கிறதென்பதையும் என்ன தடயங்களை விடுகிறதென்பதையுமே கவனிக்கிறோம்''.

அல்லது, சில சமயங்களில் தடயங்களின் தடயங்கள். கடந்த வாரம், பௌதிகவியலாளர்கள், நீண்ட காலமாகத் தேடப்பட்டு வந்த ''ரொப்குவாக்'' எனும் மிக அடிப்படையான துணிக்கையொன்றின் இருப்பிற்கான முதலாவது பரிசோதனைச் சான்றுகள் கிடைத்திருப்பது பற்றி அறிவித்தார்கள். இதன் மூலம் நட்சத்திரத்திலிருந்து நத்தை வரையான எல்லாப் பொருள்களினதும் அடிப்படையான, பிரிக்கப்பட முடியாத ஒரு பொருளுக்கான 2,000 ஆண்டு காலத் தேடுதலுக்கும் ஒரு முடிவு கண்டுள்ளார்கள். இந்த ''பொப்'' என்பது பௌதிகவியலாளர் கூற்றுப்படி, சடத்தின் மிக நுண்ணிய துணிக்கையாகும். இதைக் கண்டுபிடித்தமையானது ஒரு ''முழுமை உணர்வி'' னைக் கொடுப்பதாகச் சிக்காகோ பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த Cosmologist டேவிட் ஷ்ராம் கூறினார். இதற்கு 34 நாடுகளைச் சேர்ந்த 440 விஞ்ஞானிகள் தேவைப்பட்டார்கள். அவர்கள் ஃபெர்மி தேசிய ஆய்வு கூடத்தில் 17 ஆண்டுகள் பணியாற்ற வேண்டியிருந்தது. சாதாரண அணுக்கருவிலுள்ள புரோட்டோன்களை ரெவாட்றன் உடைத்து எதிர் - புரோட்டோன்களாக்குகையில் ''ரொப்'' உருவாகிறது. ஐன்ஸ்டீனின் $E=MC^2$ கூறுவதன்படி, இந்தச் சக்தி வெளிப்படையானது பிண்டமாக மாற்றப்படுகிறது. - புதிய அதிக கனம் வாய்ந்த துணிக்கைகளாக அது மாற்றப்படுகிறது. ஒரு பிங்பொங் பந்தின் மேல் இன்னொரு பிங்பொங் பந்தினை எறிந்து அதனை ஒரு கிரிக்கட் பந்தாக ஆக்குவது போன்றது இது. இந்தக் கிரிக்கட் பந்துகளிலொன்று தான் ''ரொப்''. ஆனால், எவருமே ரொப்பைக் கண்டதில்லை. கருவிகள் கூட அதனை உணர்ந்ததில்லை. அதன் தடயங்களைக் கூடக் கண்டுபிடிக்கவில்லை. ''ரொப்'' ஒரு விநாடியின் கோடானு கோடியின் ஒரு பகுதிக்குத்தான் உயிர் வாழ்கிறது. பிறகு அது இலகு துணிக்கைகளாக மாறிவிடுகிறது. ''நாங்கள் அதைக் காண்பதில்லை'' என்கிறார் ரோசெஸ்ரர் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த போல்ரிப்ரன். ''அதனுடைய மிச்ச சொச்சங்களை அல்லது மிச்ச சொச்சங்களின் மிச்ச சொச்சங்களைத் தான் எம்மால் காண முடிகிறது.

நிலையற்றது:' ''ரொப்'' பை, பௌதிகவியலாளர்கள் ஒரு போதும் பிடிக்க முடியாது. ''நாமெல்லோரும் அதைப்பற்றி யோசித்துப் பார்த்து விட்டோம். நாங்கள் தேடும் பொருள்கள் எமது பரிசோதனைகளின் தோற்றங்களா அல்லது மெய்யானவையா என்பதை'' -என்கிறார் நோபல் பரிசு பெற்றவரும் எஸ். எல். ஏ. சீ. நிறுவன இயக்குநருமான பேட்டன் ரிச்ரர். ''ரொப்'' சாதாரண பொருள்களில் காணப்பட முடியாத அளவுக்கு நிலையற்றது. ஏறத்தாழ 15 மில்லியன் ஆண்டுகட்கு முன் நிகழ்ந்த 'பெரும்' மோதல் அதாவது இந்தப் பிரபஞ்சத்தை உருவாக்கிய பிக் பாங் (Big Bank) கின் போது அது இயற்கையாகவே இருந்தது. ''ஒரு பொருள் மெய்யானதெனக் கூறவேண்டுமெனில் அது எவ்வளவு நேரத்திற்கு நிலைக்க வேண்டும்?'' என வினவுகிறார் ரிச்ரர். பௌதிகமும், அறிவாதார முறையியலும் சேர்ந்ததன் விளைவுகள் இவை.

இந்த ''குவாக்'' வேட்டையில் கிடைக்கும் பொய்மைத் தோற்றமானது, குவாக்கின் நிலையற்ற தன்மை காரணமாகவன்றி கண்டுபிடிப்பின் புள்ளிவிபரத் தன்மை காரணமாகவும் ஏற்படுகிறது. ''ரொப்'' பினுடைய மிச்ச சொச்சங்களை வேறேதும் விடுவதும் சாத்தியம். கணனிகள் ஆய்வு செய்த 16 மில்லியன் மோதுதல்களில் அப்படியான ஏமாற்றுத் தன்மை வாய்ந்த ஐந்து மோதுதல்களும் இடம் பெற்றன என்று 'ஃபெர்மிலாப்' பௌதிகவியலாளர்கள் கணக்கிட்டனர். (ரொப்) பினுடைய சான்றுகள் 12, அக் குழுவினர் வசமுள்ள இந்தப் 12 இல் எத்தனை உண்மை, எத்தனை போலி என்று ஒருபோதுஞ் சொல்ல முடியாது. ''இது பழைய மாதிரியான கண்டுபிடிப்பல்ல'' என்கிறார் புறூக் ஹேரவனைச் சேர்ந்த மெல்ஷ்வாட்ஸ். இவர் 1988இல் பௌதிகத்திற்கான நோபல் பரிசைப் பகிர்ந்து கொண்டவர்.

உண்மையில், விஞ்ஞானிகளுக்கும், அவர்களின் இலக்குகளுக்கும் இடையிலான தூரம் புதியதொன்றல்ல. கடந்த நூற்றாண்டில் வாழ்ந்த வானியலாளர்கள், நட்சத்திரங்களின் சேர்மானம் பற்றிய ஆய்வில் மனச் சோர்வு கொண்டிருந்தனர். ஆனால், பின்னர் நட்சத்திரங்கள் உலகிற்கனுப்பும் ஒளியினை அரியங்கள் மூலம் பிரித்தறிவதனால், அவற்றின் இரசாயன சேர்க்கைகளை அறியலாமெனக் கண்டனர். மனிதர்களின் உலகிற்

கும் இந்தத் துணிக்கைகளின் உலகிற்குமிடையிலான தொடர்பின்மை "ஆன்மாவிற்கும் கூட நல்லது. எமது நாளந்த அநுபவங்கள் எல்லா விஷயங்களையும் விளக்கி விட முடியாது என்பதை இது காட்டுகிறது" என்கிறார், சோசெஸ்ரரின்ழிப்ரன்.

'ஃபெர்மிலாப்' குழுவானது இன்னுமிரண்டு ஆண்டுகளுக்கு இந்தப் புரோட்டோயன்களையும், எதிர்ப் புரோட்டோயன்களையும் நொருக்கிக்கொண்டேயிருக்கும். ஏற்கனவே இருக்கும் "ரொப்"பின் 12 சான்றுகளுடன் இன்னும் ஒரு 100 ஐச் சேர்க்கும் நம்பிக்கையுடன் இதில் ஈடுபட்டுள்ளார்கள் அவர்கள். தொடரும் இந்த மோதல்கள் கடைசி "குவாக்"கின் இருப்பினை நிச்சயப்படுத்த வேண்டும். அத்துடன், நம்ப முடியாத அதன் நிறையையும் அவர்கள் கணித்துவிட வேண்டும். வேறெந்த அடிப்படைத் துணிக்கையிலும் பார்க்க "ரொப்" ஏன் இவ்வளவு கனம் வாய்ந்ததாயுள்ளதென்பதும் ஒரு புதிராகவே உள்ளது. இதற்கான தெளிவானது எல்லாவற்றிலும் மிக அடிப்படையான கேள்வியொன்றிற்கும் விடையாய் அமையும். திணிவு (Mass) எங்கிருந்து வந்தது? சடம் (Matter) என்பது ஏன் இருக்கிறது? "இந்த விளக்கம், வேறெந்தப் பெரிய விஞ்ஞானக் கண்டுபிடிப்புக்கும் ஈடாக அமையும். இது ஒரு செயற்பாட்டின் முடிவன்று; ஒரு புது விஞ்ஞானத்தின் தொடக்கமாய் அமையும்" என்கிறார் ஃபெர்மிலாப்பைச் சேர்ந்த கிறிஸ் ஹில். அவ சொல்வது சரியானால், "ரொப்"புக்கு அதன் செல்லப்பெயரும் சரியாகவே அமையும் - உண்மை.

*நியூஸ்வீக், மே 9, 1994.*

★

## உறைபனி மூடிய நோர்வேயில் ஓர் உல்லாச நகரம்

பனியில் செதுக்கப்பட்ட கவர்ச்சியான உருவங்கள் அங்கே எங்கும் நிறைய உண்டு. நகர மத்தியில் தனிப்பட்ட கார்கள் செல்வது தடைப்படுத்தப் பட்டதாகும். ஆட்டிக் வட்டத்திற்கு 380 மைல்களுக்கு அப்பால் உள்ள இந்த சிறிய நகரமான லிலிஹாமரில் பயணிகளைக் கவர்ந்திழுக்கும் பல கேளிக்கைகள் உண்டு.

இரவு நேர பலே நடனங்களும், நாடகங்களும் அங்கு நடத்தப்படுகின்றன. அங்கே உறை பனியில் செதுக்கப்பட்ட சிலைக் கண்காட்சியைப் பார்க்காமல் போவோர் எவருமே இல்லை. அந்த நகரத்தின் வீதியோர விற்பனை மண்டபங்களும், கூடங்களும் பலவகையான வினோதப் பொருள்களை நிறையக் கொண்டுள்ளன. சிகப்பும் மஞ்சளும் நிறம் பூசப்பட்ட, முற்பக்கம் மரத்தாலான கடைத் தொகுதிகளின் முன்பக்கக் காட்சிச் சன்னல்கள் ஊடாக பொருள்களைப் பார்த்துக் கொண்டு திரிவதே ஒரு பெரும் பொழுது போக்காகும். துருவக்கரடி முதல் பழங்காலப் போர்வீரர் வரை பல உருவங்களில் பனிக்கட்டியில் தத்ரூபமாகச் செதுக்கப்பட்ட வீதியோர விற்பனையாளர்களுடன் மோதிவிடாமல் செல்லக் கவனம் வேண்டும். ஸ்பார்கஸ் என்று கூறப்படும் நின்ற நிலையில் செலுத்திச் செல்லும் சறுக்கு வண்டிகளில் தான் அநேகமானவர்கள் பொருள்கள் வாங்கச் சந்தைக்குச் செல்வர். ஹெயின்டியர் என்று கூறப்படும் துருவமான் போக்குவரத்துக்குச் சறுக்கு வண்டிகளை இழுத்துச்செல்ல உதவுவது மட்டுமல்ல உண்பதற்கு உருசிமிக்க இறைச்சியும் ஆகிறது.

மது விற்பனைக் கடைகளை நாடுவோர்க்கு என்று விக்டோரியாஜர்னட் என்ற இடம் உள்ளது. அங்கே நோர்வீஜியர்களின் புகழ்பெற்ற மதுக் கலவையான பொம்மி அருந்தலாம். அதனைக் கொஞ்சம் கூடக் குறைய அருந்தும் ஒருவர் லிலிஹாமர் நகரில் இருக்கும்போது றியோ நகரில் இருப்பது போன்று நினைக்கக் கூடும்.

# ... ஒளிமேல் ஒளித்தெறிப்பு

இஸ்லாமியப் பேரரசரான உமயட் காலிவ் அப்துல் மாலிக் பதின்மூன்று நூற்றாண்டுகளுக்கு முன்பு கல்லுக் கும்மட்டம் ( Dome Of The Rock ) ஒன்றினைக் கட்டுவதற்கெனத் தமது திறைசேரியின் நிதி முழுவதையும் ஏழு ஆண்டுகளுக்கு மேலாகச் செலவழித்தார். முகமது நபி (சல்) அவர்கள், பாறையொன்றின் மேல் நின்று அதிலிருந்து சுவர்க்கத்துக்கு ஏறிச் சென்றதாக நம்பப்படுகிறது. அந்தப் பாறையின் மீதுதான் இக் கும்மட்டம் அமைந்த மசூதி கட்டப்பட்டது. கிறிஸ்தவ தேவாலயங்களின் எழிலில் மயங்கிய இஸ்லாமியரின் விசுவாசத்தினை இஸ்லாம் மீது ஏற்படுத்தவே காலிவ் இதனைக் கட்டினார். அண்மைக் காலத்தில், கும்மட்டம் திருத்த முடியாத அளவிற்குப் பழுதுபட்டுள்ளது. எனினும் 1964 இல் தங்க நிறத்தாலான அலுமினியத் தகட்டினால் அதன் மேற்பக்கத்தினை மூடி வைத்தனர். ஆனால் மழைக்காலங்களில் மிக மோசமாக ஒழுக்கு ஏற்பட்டு மசூதியின் தரைப்பாகம் முற்றாக நனைந்துவிடும். அதிலிருந்து பாதுகாப்பதற்கென உட்பக்கத்தில் விரிந்துள்ள கம்பளங்களின்மேல் வாளிகள் வைக்கப்படுவதுண்டு.

இந்த மாதம் இதன் பாரிய புனர்நிர்மாணவேலை பூர்த்தியாகிவிடும். மீண்டும் இந்தக் கும்மட்டத்தின் மேல் மறைப்பினைத் தங்கத் தகட்டினால் போர்த்துவிடவுள்ளனர். (இம்முறையும் அரசியலாரே இப்புனர் நிர்மாணத்துக்கான செலவைப் பொறுத்துள்ளனர்.) இம்முயற்சியின் ஒருமுகத்தன்மை, கும்மட்டத்தின் கவர்ந்திழுக்கும் அழகிலேயே தங்கியுள்ளது. ஆனால் இதற்கான செலவும் அழகுக் கவர்ச்சியால் உண்டான பெருமிதமும் மத்திய கிழக்குத் தரைப்பகுதியில் இஸ்லாமியருக்கு ஏமாற்றத்தை அளிப்பதாய் மாறிவிட்டன. புனர்நிர்மாணச் செலவினை யார் பொறுப்பது? என்பதே இன்று எழுந்துள்ள கேள்வி.



அரச செலவில் திருத்தி நிர்மாணிக்கப்பட்ட மசூதியின் (கும்மட்டம்) அழகிய தோற்றம்

**இஸ்லாமின் மிகப் பழைய கட்டடச் சிற்பச் செல்வம் மீண்டும் முலாம் பூசப்படுகிறது. அது ஜெருசலேமின் உன்னதக் கட்டட வடிவமைப்பினை மீளுருவாக்குவதான அறிக்கையாக வெளியாகின்றது.**

புனர்நிர்மாணத்துக்கு இம்முறை 8 மில்லியன் டொலர் செலவாயிற்று. இது ஓர் அடக்கமான தொகைதான். ஆனால் மசூதியின் போஷகர் யார் என்பதிலே ஜோர்டான் அரசர் ஹூசெயினுக்கும், அராபிய அரசர் ஃபாஹிட்டுக்கும் இடையே போட்டி நிலவுகிறது.

கிழக்கு ஜெருசலேமை இஸ்ரேல் கைப்பற்றும் வரை இதற்கான செலவினை 1967 இல் முதலீடு செய்த மத்தியவங்கிக்கு யார் இறுப்பது என்பதில் பிணக்கு உண்டாகியிருக்கிறது. மசூதியும் அதனைச் சுற்றியுள்ள ஹரம் அல் ஷரிப் கட்டடத் தொகுதியும் ஜோர்டானுக்குச் சொந்தமானவை. ஹூசெயினோ வாஹ் என்னும் இஸ்லாமிய அறநிதியத்தின் பொறுப்பாளர், இஸ்லாமின் மூன்றாவது புனித ஸ்தலமான மேற்குறித்த மசூதியின் நிர்வாகத்திற்குப் பொறுப்பானவர். (மற்றைய இரண்டு அதி புனித மசூதிகள் மக்காவிலும், மதீனாவிலும் உள்ளன) 1990 இல் குவைத் மீது ஈராக் படையெடுத்த பொழுது சதாம் ஹூசெயினுக்கு, ஜோர்டான் அரசர் ஹூசெயின் உதவியமை. சவுதி அரேபிய அரசர் ஃபாஹிட்டைச் சீற்றங் கொள்ள வைத்தது. அவர் அல் ஷரிப் கட்டடத்தொகுதியின் காவலர்ப் பொறுப்பைத் தொடர்ந்து வைத்திருப்பதற்காக வாஹ் அறநிதியத்திலிருந்து 10 மில்லியன் டொலர்களை நேரடியாக ஜெருசலேமிற்கு வழங்கிவிட்டார், ஹூசெயின் தமது உரிமையை மசூதியின் மீது நிலை நிறுத்துவதற்காக, லண்டனிலுள்ள தமது வீட்டை விற்று அந்தப் பணத்தைப் புனர்நிர்மாணத்துக்குச் செலவழித்துள்ளார்.

1992 இல் புனர்நிர்மாண வேலைகள் இசாம் அவ்வாட் என்னும் கட்டடச் சிற்ப நிபுணரின் நெறிப்படுத்தலில் ஆரம்பமாயின. 19 மாதங்களாக 1515 பித்தளைத் தகடுகளின் மீது செப்பு, வெள்ளி நிற முலாம் பூசப்பட்டன. இவற்றின் மேல் இடுவதற்கு 22 காரற் உள்ள 85 கிலோ தங்கம் பயனாயிற்று. இந்த மேல்மூடி, கும்மட்டம் மீது பதிக்கப்பட்டபின் சார்வு மரங்கள், பந்தல்கள் என்பன அப்புறப்படுத்தப்பட்டன. ''இந்தக் கல்லுக் கும்மட்டமானது, அராபியரும் முஸ்லிம்களும் ஒன்றிணைந்து சமுகமளிக்கிறோம் என்பதன் அடையாளம்'' என்று சூரிய ஒளியில் தகதகக்கும் கும்மட்டத்தை நோக்கியபடி அவ்வாட் கூறினார். மரபு முறையாகத் தங்கத் தகடுகளை மட்டும் பதித்தால் அதன் ஆயுட் காலம் சில ஆண்டுகளுக்கே நீடிக்கும். ஆனால் பித்தளை செப்பு, வெள்ளி போன்ற உலோக முலாமிடுதல் மூலம் அதன் ஆயுட் காலம் குறைந்தபட்சம் அரை நூற்றாண்டுக்காவது நின்று பிடிக்கும். இதன் பொருள் இயற்கையின் சக்திகளால் மட்டுமே இத்தகைய செயற்கைப் படைப்புக்களுக்குத் தாக்கம் ஏற்படும் என்பதே.

இஸ்லாமிய விசுவாசிகளுக்கும், யூதருக்கும் இடையே 1990 இல் நிகழ்ந்த சண்டையின் போது கும்மட்டத்தின் முகப்புப் புறத்தில் பதிக்கப்பட்டிருந்த சலவைக் கற்கள் துப்பாக்கிச் சன்னங்களால் சிதைக்கப்பட்ட அடையாளங்கள் இன்னமும் உள்ளன. இந்தச் சண்டையில் 21 பாலஸ்தீனியர்பிரார்த்தனைசெய்யும் மேற்குச் சுவரருகிலே இஸ்ரேலிய பாதுகாப்புப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டனர். புனர்நிர்மாண வேலை நடந்து கொண்டிருந்த காலத்திலும் வன்முறை வெடித்ததில், பெப்ரவரி மாதத் தொடக்கத்தில் இஸ்ரேல் குடியேற்ற வாசியால், 30 பாலஸ்தீனியர் படுகொலைக்குள்ளாயினர்.

'வட அயர்லாந்தின், பெல்பாஸ்ட் நகரத்திலுள்ள ஒரு நிறுவனத்தைத் தெரிந்து, இந்தப் பொன் முலாமிடும் வேலையை அந்த நிறுவனத்திடம் கொடுத்திருந்தால் அது புத்திசாலித்தனமாக இருந்திருக்கும். ஏனெனில் நாங்கள் துப்பாக்கி வெடியோசையைக் கேட்டதும் ஓடிச்சென்று ஒளிக்க மாட்டோம்'' என்றார் புனர்நிர்மாண நிகழ்ச்சித் திட்ட முகாமையாளரான வட அயர்லாந்தினைச் சேர்ந்த பற்றிக் ஒ ஹெயர்.

இப்படியான பணிகளில் ஈடுபடுகையில் எதிர்ப்புக்கள் இருக்கவே செய்யும். இஸ்ரவேலைச் சேர்ந்த ஜேஷோன் சொலமன் என்ற யூதர் அமைத்துள்ள 'கடவுளின் குன்றுக்கு விசுவாசமானோர்' (Temple Mount Faithftul) மதவாத இயக்கத்தின் கூற்றுப்படி ''ஜெருசலேமின் இந்தப் பகுதியை (மசூதி உள்ள பகுதியை) இறைவன் யூதர்களுக்கென்றே ஒதுக்கியுள்ளார். இந்த ஹரம், மசூதி யாவற்றையும் இடித்துடைத்து இவ்விடத்திலே விவிலிய அரசர் சொலமனுக்கு ஆலயம் அமைக்கவேண்டும் என்பதே அவரின் விருப்பம். முஸ்லிம்கள் கும்மட்டத்தைத் தங்கம் கொண்டு மெருகேற்றியிருப்பது எங்களுக்கு மகிழ்ச்சி தருகிறது. ஏனென்றால் இறைவனின் திருவருள் கொண்டு இந்த இடத்தில் நாம் மூன்றாவது ஆலயம் எழுப்புவோம்.'' வாஹ் அறநிதியப் பணிப்பாளரான அட்னன் ஹுசெயினி, சொலமனின் தீவிரத்திற்கு எந்த அளவிலும் குறையாதவர் என்பதற்கு அவரின் பின்வரும் கூற்றே எடுத்துக் காட்டாகும். ''இது அராபிய இஸ்லாமிய நகரம், கடவுளால் எமக்கு அருளப்பட்டது. அது மாற்ற முடியாதது.'' நகரத்தின் பெருமிதத்திற்குச் சான்றாய் மீண்டும் மசூதியின் கும்மட்டம் புதுப்பிக்கப்பட்டுள்ளது உண்மை தான். ஆனால் இந்த அழகினால் புராதனமான பகைவர்களைச் சாந்தப்படுத்தலாம் என்பது இயலாத காரியமே.

ரைம், ஏப்ரல் 25, 1994

★

## ஹொங்கொங்:

ஹொங்கொங் விரைவில் தானியங்கிக் கட்டுப்பாட்டுக் கணனி பொருத்தப்பட்ட நாய்கள் உள்ள நாடாகப் போகிறது. அறிவியற் றொழில் நுட்பத் துறையில் ஹொங்கொங் முன்னணியில் நிற்கும் ஒரு நாடாகும். இந்த ஆண்டின் இறுதிக்குள் அந்த நாட்டு மிருகக் கட்டுப்பாட்டாளர்கள் அந்தக் குடியேற்ற ஆதிக்க நாட்டிலுள்ள 165,000 செல்லமாக வளர்க்கப்படும் நாய்களுக்குத் தானிய அளவிலான மைகிறோ கிப்ஸ்களைக் கழுத்தடியில் உட்செலுத்துவர். அவை உயர் தொழில் நுட்ப அடையாளச் சின்னங்களாக இயங்கி அந்த உத்தியோகத்தர்கள் ஒரு நாயை இன்னாருடையது என்று அடையாளங் காணவும், அதற்கு உரிய நோய்த் தடை மருந்துகள் ஏற்றப்பட்டு உள்ளதா என்பதை அறியவும் உதவும். ஒரு சிறு மின்னியல் சாதனத்தைக் கழுத்தடியில் பிடித்தால் நொடிக்குள் அந்தத் தகவல்களைத் தந்துவிடும். 1987 இன் பின்பு விசர் நாய்க் கடியால் ஒரு மரணம் கூட நிகழ்ந்திராத ஹொங்கொங் அதன் சுகாதாரச் சிறப்பைக் காப்பது பொருத்தமானதே.

# சீனாவில் கிறிஸ்தவ மதம்



புதிய பக்தி மார்க்கம்.
சீன மதகுரு ஆராதனை நடத்துகிறார்.

★★★ ●●● ★★★

மதம் மக்களின் போதைப் பொருள் என்று பொதுவுடைமைத் தத்துவத்தின் பிதாமகன் கார்ல் மார்க்ஸ் (1818 – 1883) கூறியுள்ளார். எனினும் இதுவரை காலமும் பொதுவுடைமை நாடுகளில் மதம் மறைந்திருந்தாலும் முற்றாக வெளியேற்றப்படவில்லை என்பது வெளிப்படை. 19 ஆம் நூற்றாண்டின் தொடக்கப் பகுதியில் கிறிஸ்தவ மதமாற்றம் சீனாவில் ஆரம்பித்துள்ளது. அமெரிக்கா, இங்கிலாந்து, இத்தாலி போன்ற நாடுகளிலிருந்து மதப் பிரச்சாரத்திற்காகப் பலர் சீனாவுக்கு வருகை தந்துள்ளார்கள். பெரும் பொருட் செலவில் கிறிஸ்தவ தேவாலயங்கள், ஆரம்பப் பள்ளிகள் முதலியனவை கட்டப்பட்டு மதமாற்றம், தொடர்ச்சியாக நடைபெற்றுள்ளது. மதமாற்றத்துடன் உள்நாட்டு மதகுருமாரை உருவாக்குவதும் மேற்கூறிய நாடுகளின் குறியாக இருந்துள்ளது. 1949 ஆம் ஆண்டு மாவோவின் ஆட்சி தொடங்கிய பின் 150 வருடகாலம் தொடர்ந்து நடைபெற்றுவந்த கிறிஸ்தவ மத மாற்றம் முடிவுக்கு வந்துள்ளது எனலாம். மாவோவின் புரட்சி அரசு நிறுவப்பட்டவுடன் மதங்களுடன் தொடர்புடைய வெளிநாட்டவரெல்லாம் வெளியேற்றப்பட்டுள்ளனர். அல்லது நிலைமையை உத்தேசித்துத் தாமாகவே வெளியேறியுள்ளனர் என்பது வரலாறு. 1950 களில் சீனக் கிறிஸ்தவர்களின் எண்ணிக்கையை 4 மில்லியன் எனக் கணக்கிடலாம். மாவோ அரசு கொள்கை ரீதியில் மதத்திற்கு அனுமதி அளிக்காத படியால் கிறிஸ்தவ மதச் சடங்குகளும், ஆராதனைகளும் மிகவும் அபாயகரமான சூழ்நிலையில் மறைவிடங்களில் நடத்தப்பட்டுள்ளன.

> **சீன அரசு கிறிஸ்தவ மதத்திற்கு முழு மதச் சுதந்தர அனுமதி வழங்குகின்றது என்பது ஐயத்திற்குரியது.**

80 களில் டெங் சியோ பிங் அதிகாரப் பீடத்திற்கு வந்தபின் ஓரளவு மதச் சுதந்திரம் மக்களுக்கும், மத நிறுவனங்களுக்கும் அனுமதி கப்பட்டுள்ளது. இதைப் பயன்படுத்திக் கிறிஸ்தவ மத மாற்றங்கள் பெருமளவில் நடைபெற்றுள்ளன. இதன் அர்த்தம் என்னவென்றால், மதமாற்றம் செய்யுந் தகுதியுடையோரும் மதமாற்றத்தை விரும்பியோரும் சீனாவில் அக்காலத்தில் இருந்திருக்கின்றனர் என்பதே. இன்று சீனக் கிறிஸ்தவர்களின் தொகை 50 மில்லியன் தொடக்கம் 75 மில்லியன் வரை என்று தெரிவிக்கப்படுகின்றது. இன்று முழுமதச் சுதந்திரம் அனுமதிக்கப்பட்டுவிட்டதாக எண்ணக்கூடாது. ''சகல வித மத அனுஷ்டானங்களும் தடை செய்யப்படாவிடினும் கண்காணிக்கப்பட்டே வருகின்றன''. இது மனித உரிமைக்குழு ஒன்றின் அறிக்கையிலிருந்து ஒரு வரி. ஐந்து வருடங்களுக்குமுன் நடந்த தினான்மென் சதுக்கப் படுகொலைகளின் பின்பே இந்த நிலை தோன்றியதாக அக்குழு தெரிவித்துள்ளது.

வெளிநாட்டுத் தொடர்புள்ள கிறிஸ்தவ மதப் பிரிவுகளைச் சீன அரசு எப்போதும் சந்தேகத்துடன் நோக்குகின்றது. சீனாவின் எல்லைகளைக் கடந்த நம்பிக்கை தேசிய நலனுக்கு முரணானது என்பதே அரசின் நிலைப்பாடு, வத்திக்கானைத் தலைமையகமாகக் கொண்ட றோமன் கத்தோலிக்கமும், இங்கிலாந்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அங்கிலிக்கன் கிறிஸ்தவமும் இந்த ரகத்தைச் சேர்ந்தவை. தேசாபிமானிகள் கத்தோலிக்கர் கழகம் சீன அரசின் அங்கீகாரம் பெற்று இயங்குகின்றது. இவர்கள் வத்திக்கான் தொடர்பு இல்லாதவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்தக் கழகம் 1958 இல் சீன அரசு உத்தியோக பூர்வமாக வத்திக்கானுடன் உறவுகளை முறித்ததைச் சரியென ஏற்றுக்கொண்டுள்ளது. இந்தக் கழகத்தினர் 4 மில்லியன் வரை இருக்கலாமென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. வத்திக்கான் தொடர்பை ஏற்றுள்ள கத்தோலிக்க மதத்தினர் 6 மில்லியன் வரை இருக்கலாமெனவும் தெரிவிக்கப்படுகின்றது. இவர்கள் மிகவும் இரகசியமாகவே தங்கள் மதச் சடங்குகளைச் செய்யவேண்டியுள்ளது. இதேபோன்று அரசு அங்கீகாரம் பெற்ற புரொட்டஸ்தாந்து கிறிஸ்தவர்கள் 11 மில்யன் என்றும், வெளித் தொடர்பை ஏற்றுள்ளோர் 30 மில்லியனிலிருந்து 50 மில்லியன்வரை இருக்கலாமெனவும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

காலத்திற்குக் காலம் தஙலநகருக்கு வெகுதொலைவில் கிராமப்புறங்களில் பிரதானமாக விவசாய மையங்களில் தோன்றும் சிறிய கிறிஸ்தவ மதக் குழுக்களை நசுக்குவதில் அரசு பெரும் அக்கறை காட்டுகின்றது. இவை அரசியற் கலப்பு உள்ளவையாக இருப்பதாலும், நாட்டில் நெருக்கடி காலத்தில் இக் குழுக்கள் அரசை எதிர்க்கும் சக்திகளாக மாறுவதாலுமே இந்த நிலை தோன்றியுள்ளது. உதாரணமாக இயேசுவின் குடும்பம் எனப்படும் குழு உறுதியாக அரசு எதிர்ப்பும் மதவழிபாடும் கலந்த சக்திவாய்ந்த சிறு குழு எனப்படுகின்றது. 1982 ஆம் ஆண்டு சாடொன்ங் மாகாணத்தில் இக்குழுவைச் சேர்ந்த 37 அங்கத்தவர்கள் கைது செய்யப்பட்டு 2 தொடக்கம் 12 வருடச் சிறைத் தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது.

சீனக் கிறிஸ்தவ மதத்தினரைப் பொறுத்தளவில் முறையாகத் திருநிலைப்படுத்தப்பட்ட மதகுருவினர் பற்றிய குறையே பெரும் பிரச்சனையாக இருக்கின்றது. மாவோவின் ஆட்சியில் மதகுருவினர் சிறையில் தள்ளப்பட்டுச் சித்திரவதைப்பட்டு இளவயதில் இறந்துள்ளனர். எஞ்சியுள்ளோர் மிகச் சிலரே. இவர்கள் மதத் தேவைகளைப் பூர்த்தி செய்ய இயலாமையால் பொறுப்பு வாய்ந்த பொது மக்களின் உதவியை நாடுகின்றனர். பொது மக்கள் மதகுருவாகக் கடமையாற்றும் நிலை தோன்றியுள்ளது எனலாம். சிச்சுவான் மாகாணத்தின் மதக் கல்லூரி (Theological School) இளம் மதகுருமாரைத் தயார் பண்ணுவதில் பெரும் பங்கு ஏற்றுள்ளது. முதல் தடவையாக இளம் குருவானவர்கள் கடமையாற்ற ஆரம்பித்துள்ளதை இன்று சில இடங்களில் நாம் கவனிக்கலாம்.

இன்று கிறிஸ்தவ மத நிறுவனங்களுக்கு இதுவரை காலமும் இருந்த அரச பயம் குறைவதையும் நாம் காண்கின்றோம். அரசுடன் ஒத்துழைத்த நிறுவனங்கள் கூட நிதி, மற்றும் மதகுரு நியமனம் போன்ற அலுவல்களை அரச தலையீடு இல்லாமல் நடத்த விரும்புகின்றன. இவை மறைவிடங்களில் செயற்படும் நிறுவனங்களுடன் உத்தியோகப்பற்றற்ற தொடர்புகள் கொண்டிருப்பது அண்மைக்கால நிகழ்வு எனலாம். 1980 தொடக்கம் வத்திக்கானும், சீனாவும் நெருங்கிவரும் சாத்தியக்கூறுகள் நிறைய இருந்தன. ஆனால் சோவியத் ருஷ்யாவின் உடைவும், கிழக்கு ஐரோப்பாவின் இன்றைய நிகழ்ச்சிகளும் இதைத் தடுத்துள்ளன போலாந்து நாட்டைச் சேர்ந்த பாப்பரசர் சோவியத் ருஷ்யாவின் வீழ்ச்சிக்குக் காரணியாக இருக்கலாம் என்று சீனா நம்புகின்றது. என்றாலும் அண்மைக் காலத்தில் வத்திக்கான் தூதுவர்கள் சீனாவுக்கு வந்து போயுள்ளமையும், இவர்கள் அரசால் வரவேற்கப்பட்டதும் பலர் அறிந்த தொன்றாகும்.

அரச சார்பு கிறிஸ்தவ மதப் பள்ளி நடைமுறைகள் அண்மையில் காரசாரமான விவாதத்திற்கு வந்துள்ளன. செங்கு மதப்பள்ளி மாணவர்கள் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் தலையீட்டை எதிர்த்து ஒட்டுமொத்தமாகப் பள்ளியைவிட்டு வெளியேறியுள்ளனர். சீனாவில் இன்று அரசு 13 குருத்துவப் பள்ளிகள் இருக்கின்றன. மேற்படி செங்கு நடப்புக்கள் இவை எல்லாவற்றையுங் தவறாது பாதித்துள்ளன. இத்துடன் தாம் அரசு அங்கீகாரம் கொடுக்காத கிறிஸ்தவ மத நிறுவனங்களில் சேரப்போவதாகவும் மேற்படி மாணவர்கள் மிரட்டும் அளவுக்குச் சென்றுள்ளனர் .இத்தகைய குழப்பங்கள் கிறிஸ்தவ நிறுவனங்களின் மீது அரசின் பிடியை இழக்க வைத்துவிடும். இதை மனதிற்கொண்டு பிரதமர் லீ பென்ங் இரண்டு புதிய தடை உந்தரவுகளைக் கொண்டு வந்துள்ளார். சீனாவில் உள்ள சகல கிறிஸ்தவ மத நிறுவனங்களும் மறைவிடத்தில் இருப்பவை உட்பட, அரச பதிவகங்களில் தம்மைப் பதிவு செய்துகொள்ளல் வேண்டும், தவறின் தண்டிக்கப்படுவார்கள். வெளிநாட்டு கிறிஸ்தவமதப் பிரசாரகர்களின் வருகை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. வெளிநாட்டு மதகுருவினர் மீதான தடை மிகவும் பாரதூரமானது. தேவாலயங்கள், பள்ளிக் கட்டடங்கள் போன்றவற்றை நிறுவுதல் மாணவர்கள், மதகுருக்கள், மதக் கடமை புரிவோருக்குப் பயிற்சி அளித்தல், சீன மக்கள் மத்தியில் மதப் பிரச்சாரம் செய்தல் போன்றவை

யாவும் அத்தடைக்கு உட்பட்டவையாகும் மேற்கூறிய தடை உத்தரவுகள் அமுலுக்கு வந்தபின் இவ்வருட பெப்ரவரி மாதத்தில் அமெரிக்க மதப் பிரசாரகர் டெனிஸ் பல்கோம் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டுள்ளார். இவர் சீனாவுக்குள் பெருந்தொகையான சீனமொழி பைபிள்களைக் கொண்டு வந்துள்ளார். அத்துடன் அவர் தீவிர மதப் பிரச்சாரம் செய்ததாகவும் சொல்லப்படுகிறது. இவர் 1989 ஆம் ஆண்டு சீனாவிலிருந்து வெளியேற்றப்பட்டது இங்கு குறிப்பிடத்தக்கது.

இன்று சீனாவில் மாணவர்கள் என்ற போர்வையில் பெருந்தொகையான மதப் போதகர்கள் வெளிநாடுகளிலிருந்து வந்து காலூன்றியுள்ளனர். வெளிநாட்டு மாணவர்களுக்கென்று ஒதுக்கப்படும் பல்கலைக் கழக இடங்களை இவர்கள் கைப்பற்றுகின்றனர். யூனான் பல்கலைக் கழகத்தில் வெளிநாட்டு மாணவர்களில் 50 சத வீதத்தினர் மாணவர் வேடமிட்ட மதபோதகர்கள் எனலாம். ஆங்கிலம் படிப்பதற்கென சீன அரசு இறக்குமதி செய்வித்த பெரும்பாலான ஆசிரியர்களும் இவ்வாறான மறைமுக மதப்பிரசாரகர்களே. கிறிஸ்தவ மத அமைப்புக்கள் யாவும் பதிவகங்களில் தம்மைப் பதிவுசெய்ய வேண்டுமென்ற விதியின்படி பதிவுசெய்யப்படாத அமைப்புக்களை மூடுவதற்கு ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது. அத்துடன் தண்டிப்பதற்கும் இவை வழிசெய்கின்றன. ஆனால் இன்னும் சீனாவில் கிறிஸ்தவ மதத்திற்கு எதிரான நேரடித் தாக்குதல்கள் ஆரம்பிக்கப்படவில்லை. இவ் வருடம் பதிவு செய்யப்படாத கிறிஸ்தவ அமைப்புக்களைச் சேர்ந்த 24 மதகுருவினர் கைது செய்யப்பட்டுள்ளனர். அன்கூயி மாகாணத்தில் 100 பதிவற்ற மத அமைப்புக்களில் காணப்பட்ட கிறிஸ்தவ சீன மக்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட பின் எச்சரிக்கப்பட்டு விடுதலை செய்யப்பட்டுள்ளனர். லீபெங் அவர்களுடைய தடை உத்தரவுகள் பொலிஸாருக்குக் கூடுதல் அதிகாரங்களைக் கொடுத்துள்ளது. சிறைச்சாலைகளில் அமைந்துள்ள தொழிற்கூடங்களில் தொழிலாளர் பற்றாக்குறை நேரும்போது கைது செய்யப்படும் சீனக்கிறிஸ்தவர்களின் எண்ணிக்கை பெருமளவு கூடுமென நாம் நம்பலாம்.

எத்தனை சட்டங்கள் போட்டாலும் அரச அங்கீகாரம் பெறாத கிறிஸ்தவ வணக்க ஸ்தலங்கள் குன்றியதற்குச் சான்றுகள் கிடைக்கவில்லை. உதாரணத்திற்குத் தலைநகரின் சன நெருக்கடி மிகுந்த பகுதியில் ஒரு மாடி அறையில் ஞாயிற்றுக் கிழமை ஆராதனைகள் நடப்பதைக் கூறலாம். தனியொரு சிலுவையின்முன்பாக 20 கிறிஸ்தவர்கள் மண்டியிட்டு வணங்குகிறார்கள். அன்று ஆறு இளவயதுச் சீனர்கள் கிற்ஸ்தவாகளாக மதமாற்றஞ் செய்யப்படுகின்றார்கள். அவர்கள் ஒவ்வொருவருக்கும் புதிய சீனமொழி பைபிள் அன்பளிப்புச் செய்யப்படுகின்றது. இறுதியில் ''இயசுவே எம்மை ஆதரியும்'' என்ற கீதத்துடன் நிகழ்ச்சி முடிவுக்கு வருகின்றது. இப்படியாக மறைவிடத்தில் வணங்குவோர் அரசு அங்கீகாரம் பெற்ற தேவாலயங்களை நெருங்காததற்கு மூன்று காரணங்கள் உண்டு. அங்கு போதிக்கப்படுவது உண்மையான கிறிஸ்தவ மதம் அல்ல. இரண்டாவதாக இத் தேவாலயங்கள் சீனப் பொதுவுடைமைக் கட்சியின் அலகாகச் செயற்படுகின்றன. மூன்றாவதாக இப்படியான தேவாலயங்களில் தமது பெயரைப் பதிவு செய்தால் பிற்காலத்தில் ஆபத்து வரலாமென மக்கள் அஞ்சுகின்றனர்.

இந்த மூன்றையுங் கவனத்தில் எடுத்துத் தகுந்த பரிகாரஞ் செய்தபின் அரச அங்கீகாரம் பெற்ற தேவாலயங்களில் வருகை தருவோர் தொகை பெருகியுள்ளது. வியட்நாம் எல்லையில் குவான்சி மாகாணத்தில் அரசுக்குரிய புரொட்டஸ்தாந்து தேவாலயத்தில் 1980 இல் 7, 000 ஆக இருந்த தொகை 1993 இல் 50, 000 ஆக உயர்ந்துள்ளது. என்றாலும் இது ஒரு தனிப்பட்ட நிகழ்வு என்றே குறிப்பிடவேண்டும். பெய்ஜிங் தலைநகரின் பல்கலைக் கழகப் பிராந்தியத்தில் தேவாலயம் ஒன்றில் நடக்கும் ஞாயிற்றுக் கிழமை ஆராதனைகளில் பெரும்பாலும் மாணவர்களே கலந்துகொள்கின்றனர். அரச அங்கீகாரம் பெற்ற தேவாலயங்களின் பராமரிப்புக்குப் பொறுப்பான மூத்த அதிகாரிகள் அங்கீகாரம் பெறாத தேவாலயங்களுக்குக் கிரமமாக உதவி வருவதும் அண்மைக்கால நிகழ்ச்சியாகும் இவ்வருட ஏப்பிரல் மாதத்தில் சீன கிறிஸ்தவ ஒன்றியத்தின் தலைவர் 'டிங் குவான்சுன்' அரசுக்குப் பின்வருமாறு விண்ணப்பஞ் செய்துள்ளார்; ''அரசு பதிவு செய்த செய்யாத தேவாலயங்கள் என்ற பாகுபாட்டை நீக்கவேண்டும். யாவருக்கும் அரசு பாதுகாப்பும், உத்தரவாதமும் வழங்கவேண்டியது மிகவும் அவசியம். மக்களின் உரிமைகள் பறிக்கப்படக் கூடாது.'' அரசு தாம் கிறிஸ்தவர்களை நசுக்கவில்லை என்று கூறிவந்தாலும் மேற் கூறியவை அப்படியொரு நிலை இருப்பதையே காட்டுகின்றது.

இவ்வருடம் சீனா கோரும் வர்த்தக முன்னுரிமை மற்றும் வர்த்தகச் சலுகைகளைக் கொடுப்பது பற்றி (Most Favoured Nation Status) அமெரிக்க அரசு ஆராய இருக்கின்றது. சீனாவில் கிறிஸ்தவர்கள் எபபடி நடத்தப்படுகின்றார்கள் என்பது சீனாவுக்குக் கொடுக்கப்பட இருக்கும் சலுகைகளையும், முன்னுரிமைகளையும் பாதிக்கும் என்புதில் ஐயமில்லை. கிறிஸ்தவர்களுடைய மனித உரிமைகள் பறிக்கப்பட்டுள்ளன என்பது நிரூபணமானால் சீனா கோரும் சலுகைகள் மறுக்கப்படலாம். சீனாவின் முன்னேற்றத்திற்குத் தேவையான வர்த்தகமும், பொருளாதாரத் தொடர்புகளும் கிறிஸ்தவ மதச் சுதந்திரத்துடன் கலந்துவிட்டதை நாம் அவதானிக்கலாம். ஹொங்கொங் தீவுகளின் கிறிஸ்தவர்கள் ஒன்றியத்தின் தலைவர் வென்டல் கார்சன், ''சீனாவில் எமது மதத்திற்கு நல்ல எதிர்காலம் இருக்கின்றது'' என்று சொல்வதற்குக் காரணமாக அமைகின்றது. அமெரிக்க வர்த்தகச் சலுகைகளை வழங்கும் போது மதச் சுதந்திரம் பேணப்படுவதை மிகவும் அவதானமாகக் கவனிக்க வேண்டும் என்கிறார் கார்சன். இவ்வாறான அமெரிக்க அழுத்தம் ஒரு புறம் இருக்க, சீன மக்கள் தமது அரசின் அழுத்தங்களில் இருந்து விடுபடவே பெரிதும் விரும்புகின்றனர். இந்த விடுதலை உணர்வும் செயற்பாடும் கிறிஸ்தவ மதவளர்ச்சியில் நன்றாகப் புலப்படுகின்றது.

நியூஸ் வீக் மே 23, 94

★ ● ★

## இராஜ தந்திரம்

# அமெரிக்கா என்ன அனைத்துலகச் செவிலித் தாயா?

சென்ற ஆண்டின்போது கிளின்ரன் நிர்வாகம் ஆசிய நாடுகளுடன் மனித உரிமை மீறல், வர்த்தகக் கொள்கை, அணுவாயுதங்கள் சேகரித்துக் கொள்ளாமை, அருகும் ஆபத்தை எட்டிவிட்ட உயிரினங்கள் போன்ற பலவிடயங்கள் தொடர்பாகக் கொழுவுப்பட்டுக் கிடந்தது. ஆனால், அதனால் பெரும் விளைவு ஏதும் ஏற்பட்டுவிடவில்லை. அந்த விடயத்தைக் கவனத்திற் கொண்ட அமெரிக்க இராஜாங்க அமைச்சு உச்ச அதிகாரி யொருவர் அந்த நிலைமை மேலும் தொடர்ந்தால் அமெரிக்காவை அனைத்துலக மிரட்டற்காரன் என்று சொல்லாவிட்டாலும் அனைத்துலகத் செவிலித்தாய் என்று கூறும் அளவுக்கு இளக்காரமாகி அந்தப் பிராந்தியத்தில் செல்வாக்கு இழக்க நேரிடலாம் என்று எச்சரித்துள்ளார். கிழக்காசிய மற்றும், பசுபிக் அலுவல்கள் தொடர்பான துணைச்செயலர் வின்ஸ்டன் லோட் என்பவர் தமது மேலதிகாரியான அமைச்சர் வோறன் கிறிஸ்தோபரிற்கு அனுப்பிய இரகசிய அறிக்கை ஒன்றில் இவ்விதம் குறிப்பிட்டுள்ளார். அந்த அறிக்கை ஆசியா பற்றிய அமெரிக்காவின் கொள்கையில் மாற்றந் தேவை என்று சுட்டிக்காட்டியுள்ளதாம்.

நிர்வாகத்தின் உள்ளே உள்ள விமர்சகர்கள் திரு. லோட் முன்பு சீனாவில் அமெரிக்காவின் தூதுவராக இருந்தபொழுது தாமே உருவாக்க உதவிய அதே கொள்கைகளிலிருந்து தம்மைத் தூரப் படுத்த முனைகிறார் என்று கூறுகின்றனர். இன்னும் ஓர் ஆலோசகரோ, திரு. லோட் அமெரிக்கா தனது மனித உரிமை காத்தல் இலக்கைக் கைவிடக் கோரவில்லை என்றும், ஆனால், வாஷிங்டனின் கொள்கைகள் ஆசியாவில் வெறுமனே ''உபதேசங்களாகவும், மேலாண்மை செலுத்துபவையாகவுமே'' கருதப்படுவதாகவும் உள்ளன என்பதை எடுத்துக் காட்டவே அப்படிக் கருத்து வெளியிட்டுள்ளார் என்று கூறினார். இராஜாங்க அமைச்சின் சார்பில் குரல்தரவல்ல பெண் அதிகாரி ஒருவரிடம் அந்த அறிக்கை பற்றிய விமர்சனம் கேட்ட பொழுது, எதுவும் சொல்ல மறுத்ததுடன் ''ஒவ்வோர் உறவுக்கும் அதனுடைய சவாலாக அமையும் கணங்கள் உள்ளன'' என்று கூறினார்.

# 30 இலட்சம் வயது முதியவர்

## விஞ்ஞானம்: மனிதக் குடும்பத்தில் தெரிந்த மிகப் பழைய உறுப்பினரின் மண்டை ஓடு, சில பரிணாம வினாக்களுக்கு விடைதருகிறது.



மனிதனின் தொல் இயல் வரலாற்றில், கூர்மையான கண்களுக்கும், கட்டையான காற் பெருவிரலுக்கும் மாற்றுக்கிடையாது. ஆராய்ச்சியில் மூளையின் முக்கியத்துவம் எதுவென்று சொல்வார்களோ அதுவுந் தெரியாது. 1992 இல் ஒரு பிற்பொழுதில் விஞ்ஞானிகளின் குழுவொன்று குரூரமான அழகு படைத்த எத்தியோப்பியப் பள்ளத்தாக்கில் மிகக் கஷ்டப்பட்டு மண்ணாய்வு செய்துகொண்டிருந்தனர். அவர்களது அவ்பார் பழங்குடி உதவியாளர்கள் பக்கத்திலிருந்த மலையொன்றைத் தேடலுக்கு உட்படுத்தியிருந்தனர். திடீரென மலையுச்சியில் தோன்றிய அவ்பார் இனத்தவரொருவர் கைகளை அசைத்துச் சத்தம் போட்டார். வரலாற்றுத் தேடல் நடத்திக் கொண்டிருந்தவர்கள் ஒன்றைத்தான் அநுமானித்தார்கள். ஏறத்தாழ மனிதரைப்போலவேயிருந்த எவரினது நேரடி வம்சாவழியினர் நாங்களோ அந்த வகை ஹோமினிட்டின் சாம்பல்—வெள்ளை நிறத் தாடை எலும்பில் அவர் கால் இடறி விழுந்திருக்க வேண்டும் என்பதே அவர்கள் கணிப்பாகும். ஆனால் அந்த இடத்திற் காணப்பட்ட 200 கற்கள் உடைந்த துண்டுகளை ஒவ்வொன்றாகச் சேர்த்து இணைக்க 20 மாதங்கள் சென்றன. இதைத் தூண்டியது என்னவென்று இப்போது தொல்பொருளியலாளர்கள் கூறுகின்றார்கள். மனிதக் குடும்பத்தின் தெரிந்த, மிகப் பழைய உறுப்பினரின் மண்டை ஓடுதான் அங்கு கண்டெடுக்கப்பட்ட பொருள் ஆகும். ''மனிதத் தொடர் பற்றிய கருத்து முரண்பாடுகள் மலிந்த பிரச்சினைகளுக்கு'' இந்த உயிர்ச்சுவடு முடிவுகளைக் கொண்டு வரலாம் என்று கருதுகிறார் லண்டன் பல்கலைக்கழகக் கல்லூரியைச் சேர்ந்த யெஸ்லி அயெல்யோ.

இந்த விவாதங்களுளொன்று எமது குடும்ப விருட்சத்தின் வேர்கள் எத்தனை என்பதாகும். இந்தப் புதிய உயிர்ச்சுவடு முப்பது இலட்சத்துப் பதினெண்ணாயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த, மெலிந்த உருவங் கொண்ட சிறிய பெண்ணான லூசி என்பவரின் இனத்தைச் சேர்ந்தது. 1974 ஆம் ஆண்டில் இந்த இடத்திலிருந்து ஒரு மைல் தொலைவிலேயே அந்த உயிர்ச்சுவடு கண்டெடுக்கப்பட்டது. 75 தனியார்களிடம் இருந்து கிடைத்த 300 உயிர்ச்சுவடுகளில் ஒஸ்ற்றாலோப்

பித்தேக்குஸ் அபாறென்சிஸ் என அழைக்கப்படும் இவற்றுள் லூசியினுடையதே முதலாவதாகும். இந்த வன்கூடுகள் வெவ்வேறு தோற்றமுடையனவாயிருந்தன. அவற்றுட் சில வளைந்து நடனமாடும் பெண் போன்றும்' சில பலங்கொண்ட உதைபந்தாட்ட வீரன் போலவும், சில மரமேறுபவர்கள் போலவும், சில பூரணமாக ' நிமிர்ந்து நடப்பவர்கள் போலவும் காணப்படவே இவை இரண்டு இனத்தைச் சேர்ந்தவையாக இருக்க வேண்டும் என்ற கருத்தை விஞ்ஞானிகள் முன்வைத்தார்கள்.

நாம் இப்போது லூசியின் மகன் என்று அழைக்கப் போகும் சமீபத்தியக் கண்டுபிடிப்பு இவையெல்லாம் 30 இலட்சம் ஆண்டுகளுக்கும், 39 இலட்சம் ஆண்டுகளுக்கு இடைப்பட்ட உயிர்ச் சுவடுகள் என்றும், அனைத்துமே அபாறென்சிஸ் இனத்தைச் சேர்ந்தவைதான் என்றும் முன்வைக்கப்படும் கருத்துக்கு உரமூட்டுவதாயுள்ளது. இயற்கை-நேச்சர்-என்ற சஞ்சிகையில் இவ்வாறு தொல்பொருளியல் நிபுணர்கள் சமீபத்திய வெளியீட்டில் எழுதியுள்ளார்கள். மனிதக் குரங்குத் தொடருக்கும், மனிதத் தொடருக்கும் பிரிவு ஏற்பட்டபோது பரிணாமம் பெற்ற இனம் 'அபாறென்சிஸ்தான். அவர்களுடைய பற்களின் தோற்றத்திலிருந்து அபாறென்சிஸ்கள் பழம், பூச்சி, சிறிய மிருகங்கள் என்பவற்றையே உணவாகக் கொண்டிருக்கிறார்கள் எனத் தெரிய வருகிறது. அவர்கள் ஆயுதங்கள் எவற்றையும் விட்டுச் செல்லவில்லை. இப்போது மனிதக் குரங்குகள் கூடுகளிலுள்ள கறையான்களைத் தோண்டி எடுப்பதற்கு உபயோகப்படுத்துவது போன்று தடிகளைப் பாவித்திருக்கக்கூடும்.

## ஆபிரிக்காவுக்கு வெளியே

எத்தியோப்பியாவிற் கண்டெடுக்கப்பட்ட மண்டை ஓடு ஒன்று மனிதக் குடும்ப விருட்சத்திற்கு ஒரே வேர் தான் உண்டு என்று ஆணித்தரமாகக் கூறுகின்றது. அதுதான் மனிதத் தொடருக்கும், மனிதக் குரங்குத் தொடருக்கும் பிளவு ஏற்பட்டதும் வாழ்ந்த ஒஸ்ற்றாமோபெத்தெக்குஸ் அபாறென்சிஸ் இனமாகும்.

லூசியின் மகனும், அபாறென்சிஸ்களின் தோற்றத்தையும், அவர்தம் வாழ்க்கை முறையையும் எமக்கு வெளிக்கொணரக் கூடும். அவருக்கு முன்னால் நீட்டிக் கொண்டிருக்கும் தாடையும், தடித்த கண் புருவங்களும், சிறிய மூளைப் பெட்டியும் இருந்திருக்கின்றன. சிக்கலான எண்ணங்கள் ஏற்படுவதற்கு முன்னரே இவர்கள் நடக்கத் தொடங்கி விட்டார்கள் என்பதை இதனால் அறியக்கூடியதாகவுள்ளது. பெண்கள் 4 அடி உயரமும், 75 இறாத்தல் எடையுமுடையவராயிருந்திருப்பர். அவர் தம் கணவர் 5 அடி உயரமும், 100 இறாத்தல் எடையும் கொண்டிருப்பர். இந்தப் புதிய 30 இலட்சம் வயதுடைய மனிதனின் கையெலும்புகள் நிலத்தில் நிமிர்ந்து நடப்பது போலவே மரத்துக்கு மரம் தொற்றித் திரிந்திருக்கவும் கூடும் எனப் பறைசாற்றுகின்றன.

புதிய உயிர்ச்சுவடு மிகப் பழைய அபாறென்சிசுடையதை ஒத்ததாகவே இருக்கிறது. மனிதத் தோற்ற நிறுவனத்தைச் சேர்ந்த டொனால்ட் ஜோஹன்கனின் கருத்துப்படி 10 இலட்சம் ஆண்டுகளுக்கு அபாறென்சிஸ்கள் எந்த மாற்றத்தையும் அடையவேயில்லை. லூசியினதும், புதிய உயிர்ச் சுவட்டினதும் கண்டுபிடிப்பாளருள் டொனால்டும் ஒருவராவர். ''அபாறென்சிஸ்கோ வளைந்து கொடுக்கும் ஓர் இனமாகும் என்கிறார் மனித ஆரம்ப நிறுவனத்தைச் சேர்ந்த வில்லியம் கிம்பெல். ''உள்ளூர்க் கால நிலை மாறிய போதும் ஈரலிப்பு, வரட்சி, ஈரலிப்பு- அதனால் ஏனைய மிருகங்கள் அழிந்தொழிந்தது போல் அல்லால் இந்தச் சிறிய ஹோமினிட்கள் புதிய காலநிலைக்கேற்பத் தம்மை மாற்றிக் கொண்டன.'' அப்படியிருந்தும் பரிணாம மாற்றத்தை நோக்கும் கண் வெட்டுக்கு 30 இலட்சம் ஆண்டுகளுக்கு முன் அபாறென்சிஸ்கள் மனிதக் குடும்ப மரங்களின் ஐந்துக்குக் குறையாத கிளைகளுக்குக் காரணமாயமைந்தன.

இரண்டு கிளைகள் மூளையுள்ள கருவிகளை உபயோகிக்கும் ஹோமோ வர்க்கத்திற்கும், மூன்று கிளைகள் மறைந்து போன முரட்டுத் தன்மை வாய்ந்த ஒஸ்ற்றாலோப்பித்தேக்குஸ் வர்க்கத்துக்குமாகும். மனித ஆரம்ப நிறுவனத்தின் விஞ்ஞானிகள் இவ்வாண்டு எத்தியோப்பியாவிற்கு மீளவும் பயணம் மேற்கொள்ளும் போது மனித உயிர்ச்சுவட்டின் காற் பெருவிரலைத் தட்டியெடுக்க எண்ணியுள்ளனர். உயிர்ச்சுவட்டின் வயது 25 இலட்சத்திற்கும், 30 இலட்சத்திற்கும் இடைப்பட்டதாகும். அந்தக் கண்டுபிடிப்பு அபிறென்சிசுக்கும் முதலாவது ஹோமோ இனத்திற்கும் இடையிலுள்ள வெளியை நிரவல் செய்ய உதவும். லூசியின் பேரக் குழந்தையைக் காணத் தயாராகுங்கள்.

கட்டுரையாக்கம்:-
ஷறோன் பெக்லி
''நியூஸ்வீக் ஏப்ரல் 11, 1994.

★

# புதை குழியிலிருந்து வெளிவரும் கதைகள்:

## அமெரிக்க மக்களின் வாழ்க்கை எவ்வளவு கடினம் என்பதனை காலனித்துவ காலத்தில் இறந்தவர்களின் உடல்கள் சாற்றுகின்றன.

55 வயதுப் பெண்மணி ஒருவர் இயற்கை மரணம் எய்தியிருந்தார். ஆனாலும் பரிதாபகரமான உளைச்சலுக்கு உள்ளாகியிருந்தார். மூட்டுக்களில் மூட்டு வாதம் ( Arthiritis ), எலும்புகள் தேய்தல் (Osteoporosis), மற்றும் போசாக்கற்ற நிலை, பற்கள் விழுந்தும் உடைந்தும் மோசமான நிலையிற் காணப்பட்டன. முறிந்த கால் எலும்புகளைச் சரியான முறையில் பொருத்தி வைக்காததனால் எலும்புகளில் பாரிய கட்டுக்கள் ஏற்பட்டிருந்தன.

பன்னிரண்டு மாதங்களுக்குட்பட்ட (Infant) பெண் குழந்தையொன்றும் முன்ணாண் தொகுதி, மூளை என்பவற்றில் கிருமிகள் படிந்து அநேகமாக மூளைக்காய்ச்சலினால் ( Brain Inflammation ) இறந்திருக்க வேண்டும்.



ஆச்சரியப்படும் விதத்தில் பாதுகாப்பாக இருந்த ஆளுநர் கல்வேர்ற்றின் சடலம்.

50 வயது மதிக்கத்தக்க சோம்பேறித்தனமான உடல் நிலையும், பருமனும் கூடிய ஓர் ஆணும் இறந்திருந்தார். ஒரு வேளை மாரடைப்பினால் இறந்திருக்கக்கூடும். மேற்கூறிய மூன்று பிரேதங்களிலும் பிரேதப் பரிசோதனை ( Autopsy ) மேற்கொண்டவர்கள் இவர்கள் மிகவும் வறிய அயலவர்களைக் கொண்ட. சூழலில், அல்லது மிகவும் பின் தங்கிய காடுகளில் வாழ்ந்திருக்கக்கூடும் என நினைத்தார்கள். ஆனால் அப்படியிருக்கவில்லை. அவர்கள் மிகவும் செல்வந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஆனாலும் வேறொரு காலகட்டத்தில் வாழந்திருக்கிறார்கள். அதாவது அமெரிக்கா காலனித்துவ ஆட்சியின் கீழ் இருந்த காலத்தில் வாழ்ந்திருக்கிறார்கள். இந்தப் பிரதேசங்களை மெரிலன்ட் என்கிற இடத்தில் சோள வயலில் தற்செயலாக 1992 ஆம் ஆண்டில் கண்டு பிடித்தார்கள். அவர்களுடைய பிரேதப் பெட்டிகள் மிகவும் கவனமாக இறுக்கமாக மூடப்பட்டிருந்ததால் ஆச்சரியப்படும் விதத்தில் அவர்களுடைய பிரேதங்களும் மிகவும் பாதுகாப்பாக இருந்தன.

இவர்கள் யார்? கற்றறிந்தவர்களுக்கு இவர்களுடைய எச்சங்கள் எஞ்சியவைகள் அமெரிக்க மக்களின் ஆரம்ப வாழ்வைப்பற்றி என்ன கூறி நிற்கின்றன? இந்த ஆராய்ச்சியில் அமெரிக்காவிலுள்ள பல்வேறு பல்கலைக்கழகங்களிலிருந்து பல விஞ்ஞானிகள் முயன்றார்கள். இவர்களுள் கௌரவமாகக் குறிப்பிடக் கூடியதாக அமெரிக்க இராணுவத்தினரும், தேசிய விண்வெளி ஆராய்ச்சிக் கழகத்தினரும் (Nasa) அடங்குவர்.

சில வாரங்களில் இந்த ஆராய்ச்சியில் இறங்கிய அனைவரும் ஒன்றிணைந்து இந்தப் புதிர் தீர்ந்ததாக அறிவித்தனர். 1682 ஆம் ஆண்டில் காலனித்துவ ஆட்சியின் கீழ் மெரிலான்ட் மாநிலத்திற்கு ஆளுநராகவிருந்த திரு. பிலிப் கல்வேர்ற் என்பவரின் பிரேதம் தான் அந்த 55 வயதுடைய ஆண். அந்தப் பெண்மணி அவருடைய முதன் மனைவி திருமதி ஆன் கல்வேர்ற். அவருடைய இரண்டாவது மனைவிக்குப் பிறந்த குழந்தையே அந்த சிறிய பிரேதம் எனக் கண்டு பிடித்தார்கள்.

இந்தக் கண்டு பிடிப்பு 17 ஆம் நூற்றாண்டில் அமெரிக்க மக்கள் எவ்வளவொரு கடினமான வாழ்க்கை வாழ்ந்திருக்கிறார்கள் என்பதற்கு ஒரு மெல்லிய சாட்சியெனச் சரித்திர ஆய்வாளர்கள் கருதுகிறார்கள்.

திருமதி ஆன் கல்வேர்ற் என்பவரின் தலை முடியை ஆராய்ந்த போது அவர் ஏராளமாக மருந்துக் குளிகைகள் குறிப்பாக ஆர்சனிக் (Arsenic) என்கிற நச்சுப் பொருள் அடங்கிய மருந்துக் குளிகைகள் உட்கொண்டிருப்பதை அவதானித்திருந்தார்கள். மேலும் இரும்புச் சத்து உடலில் குறைவாக இருந்தமையும் ஒருவேளை அம்மையார் இரத்தப் பெருக்கு ஏற்பட்டு இறந்திருக்கலாம் என்றும் கருதுகிறார்கள். குழந்தையினுடைய உண்மையான அடையாளத்தைக் கண்டு பிடிக்கு முகமாக கலத்திலுள்ள DNA என்கிற முக்கிய புரத ஆராய்ச்சி செய்து அடையாளம் நன்கு உறுதி செய்யப்பட்ட பின்னர், கல்வேர்ற் தம்பதிகள் கௌரவமாகப் பூரண மரியாதையுடன் இடங் குறிக்கப்பட்ட புதை குழியில் புதைக்கப்பட்டிருக்கிறார்கள்.

★

# நுண்ணுயிர்க் கொல்லிகளின் முடிவு

— ஷரோன் பெக்லி

டாக்டர் சிந்தியா கீபேட் ஒன்றன்பின் ஒன்றாக நுண்ணுயிர்க் கொல்லி (Antibiotics) மருந்துகளை 57 வயது நிறைந்த சிறுநீரக நோயாளி ஒருவருக்கு 9 மாதங்கள் கொடுத்தும், எதுவுமே பயனளிக்கவில்லை. வெறும் வனிலா அம்பிசிலினிலிருந்து, பரீட்சார்த்த ரெயிக்கோபிளானின் வரை ஊட்டப்பட்டும், அவரது இரத்தத்தில் என்ரெறோ கோக்கஸ் பற்றீரியா அதிகளவில் காணப்பட்டது. இதனால் அவரது செங்குருதிச் சிறுதுணிக்கை நஞ்சூட்டப்பட்டது. "ஆறு அல்லது ஏழு வெவ்வேறு விதமான மருத்துவத்தை மேற்கொண்டோம். சிலவற்றைத் தனித்தனியாகவும் சிலவற்றை ஒன்றுசேர்த்தும், கொடுத்தோம். சில மருந்துகள் பயனளிக்காது என்று தெரிந்திருந்தும், அதையும் கொடுத்துப் பார்ப்பதை விட வேறு வழியிருக்கவில்லை" என்று, வாஷிங்டனிலுள்ள முன்னால். படைய வீரர்கள் விவகார மருத்துவ மனையின் தொற்றுநோய் நிபுணரான கீபேட் இவ்வாறு கூறியிருக்கிறார். சில வேளைகளில் இந்த டாக்டரினால் நோயாளியின் இரத்தம் சாதாரணமாக இருப்பது சோதித்தறியப்பட்டிருந்தும் சில நாள்களில், தொற்றுநோய் வேகமாக வந்து சேருகிறது. ஒரு சில திருட்டுப் பற்றீரியாக்கள் நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு அஞ்சாமல் வந்து புகுந்து விடுகின்றன. விளையாட்டுத் துவக்கு நகர்ப்புறச் சட்ட விரோதக் கும்பலுக்கு எப்படியோ, அதேபோல் இத் திருட்டு



கசரே ராகம்

பற்றீரியாக்கள், நுண்ணுயிர்க் கொல்லிகள் தமது சந்ததியை அழித்த பின்பு பல இலட்சக் கணக்கில் பெருகுகின்றன, ஒரு நாள் காலை டாக்டர் கீபேட் மனவுறுதியுடன் நோயாளியின் அறைக்குட் புகுந்தபோது; நான் நினைக்கிறேன், நானே செத்துக் கொண்டு இருக்கிறேன் என்பதைச் சொல்லவே நீங்கள் வருகிறீர்கள் என்று அந்த நோயாளி சொன்னார். இதற்கு "ஒரு மருந்தும் வேலைசெய்ய வில்லை, எந்தவொரு மருந்தையும் தெரிவு செய்ய முடியவில்லை" என்று விளக்கமளித்தார் டாக்டர். 20 ஆம் நூற்றாண்டின் அதிசய மருந்தான நுண்ணுயிர்க் கொல்லியைப் புவியில் மிகவுந் தொன்மை மிக்க அங்கியான பற்றீரியா தோற்கடித்து விட்டது. பல நாள்களுக்குப் பின்னர் இரத்தத்திலும், இருதயத்திலும் பாரிய பற்றீரியாத் தொற்றுநோய் காரணமாக அந்த நோயாளீ மரணித்து விட்டார்.

அலெக்சாண்டர் பிளெமிங் 1928 இல் பென்சிலினைக் கண்டு பிடித்ததிலிருந்து "மனிதனும், நுண்ணுயிர்களும் தமக்கிடையே ஓட்டப் போட்டியில் ஈடுபட்டிருந்தன" என்கிறார், அயோவாம் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டாக்டர் றிச்சட் வென்செல். இவ் ஓட்டப்பந்தய முடிவுகள் மாறி மாறி வந்து கொண்டிருந்தன. 1946 இல் அதாவது இரண்டாவது உலகப் போரின் பின்னர் பென்சிலின் பாரிய அளவில் பாவனைக்கு வந்து, ஐந்து ஆண்டுகளின் பின்னர் இந்த மருந்தால் தடுத்து நிறுத்த முடியாத ஸ்ரபிலோ கோக்கஸ் என்ற பற்றீரியாவை இனங்கண்டனர்.

திறன் மிக்க மருந்தியலாளர்களைச் சிக்கல் எதுவுமில்லாமலே, புதிய நுண்ணுயிர்க்கொல்லிகளை

**தொற்று நோய்களை வெற்றி கொண்டுவிட்டதாக விஞ்ஞானம் நினைத்தது, இப்போது உயிர்க்கொல்லிகள் தாக்கத் தொடங்கியுள்ளன.**

( அன்ரிபயோட்டிக்ஸ் ) கண்டுபிடித்தனர். மீண்டும் ஒருமுறை மருந்துகள் நுண்ணுயிர்களைத் தாக்கி அழித்தன. ஆனால், நுண்ணுயிர்கள் மீண்டும் இணைந்து மருந்துகளுக்குத் தாக்குப்பிடிக்கும் விகாரிகளைத் தோற்றுவித்தன. இவ்வாறு புதிய மருந்துகள், புதிய விகாரிகள் என்று போய்க் கொண்டிருந்தன. இதில் மொத்தத்தில் மருந்துகளே சிரமப்பட்டு வெற்றியீட்டி வந்தன. கசரோகம், பற்றீரியாவினால் ஏற்படும் சளிச்சுரம், சிஃபிலிஸ் (மேகவெட்டை), செப்ரிசீமியா கொணோரியா (மேகநோய்), மற்றும் வேறு சில பற்றீரியாத் தொற்றுகளும் நுண்ணுயிர்க் கொல்லிகளினால் வெற்றிகரமாகக் குணப்படுத்தப்பட்டன. எனினும் மக்கள் செத்தார்கள், செத்துக் கொண்டேயிருக்கிறார்கள். இந்த நோய்களினால், ஆனால், அதிகமானோரல்ல. இதில் நுண்ணுயிர்கள் மிக முக்கிய பகுதிகளைத் தாக்குவதற்கு முன் நுண்ணுயிர்க் கொல்லிகளை உபயோகித்தவர்கள் தப்பி விடுகிறார்கள். ''சகல தொற்று நோய்களையும் முறியடித்து விட்டோம் என்ற நம்பிக்கை 1980 –களில் அதிகளவில் காணப்பட்டது'' என்று சொல்கிறார், பவ்வலோ மருத்துவ நிலைய டாக்டர் தோமஸ் பீம். அத்துடன் புற்றுநோய் இருதய வருத்தங்கள், மற்றும் தீவிர நோய்களால் மட்டுமே சவால்கள் ஏற்படும் என்று, எண்ணினார்கள் விஞ்ஞானிகள். இதற்கு மாற்றாக ''தொற்று நோய்களுக்கெதிரான மருந்துகளின் வெற்றி ஒரு மாயையாகி விட்டது'' என்று, ''எப்படி மரணிக்கிறோம்'' என்ற நூலின் டாக்டர் ஷேர்வின் நூலண்ட் விளக்குகிறார்.

உண்மையில் மருத்துவம் வெற்றியை அறிவித்து விட்டு உடனடியாக வீட்டுக்குத் திரும்பிவிட்டது போல் தோன்றுகிறது. இப்போது நோயை உருவாக்கும் ஒவ்வொரு பற்றீரியமும் மருந்துகளில் நூற்றுக்கும் மேற்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகளில் ஒன்றையேனும் எதிர்த்து நிற்கும் வலிமை பெற்றுள்ளது. சில ஒன்றைவிட ஏனையவற்றுக்குத் தாக்குப் பிடிக்குந் தன்மையைப் பெறுகின்றன. இன்று மருந்தைத் தாக்குப் பிடிக்கும் கசநோய் புதிய ஏழு நோயாளிகளுள் ஒருவருக்கு ஏற்படுகிறது. இதனால் ஐந்து சத வீதமான நோயாளிகள் இறக்கின்றனர்.

சத்திர சிகிச்சை செய்யப்பட்ட புண்களில் தொற்றுவதும் சில சிறு பிள்ளைகளின் காதுப்புண்களில் தொற்றுவதுமான நியூமோகோக்கஸ் என்ற நுண்கிருமியினதும், மெனிஞ் சைற்றிஸ் என்ற மூளைக் காய்ச்சலைத் தோற்றுவிக்கும் பற்றீரியாவினதும் தாக்குப்பிடிக்கும் சந்ததியானது 1970 – களில் தென்னாபிரிக்காவில் தோன்றிப் பின் ஐரோப்பாவிற்கும் பரவி இப்போது அமெரிக்காவுக்கு வந்துள்ளது. சீடீசீ எனப்படும் அமெரிக்காவின்



நைசீரியா கொணோறியே
(மேகநோயை உண்டாக்கும் கிருமி)

நோய்க்கட்டுப்பாட்டு நிலையங்களின் அறிக்கையின் படி தாக்குப் பிடிக்கும் நியூமோகோக்கஸ் கென்ரக்கியிலும், மெம்பிஸ்ஸிலும் பாரிய அளவில் பரவி வருவதாகத் தெரியவந்துள்ளது. குழந்தைகள் பராமரிப்பு நிலையங்களில்தொடர்ச் சங்கிலிகள் போல இது பரவிவருகிறது. இதனால், சின்னஞ் சிறிசுகள் நடுக்காதில் தொற்று நியூமோனியா அல்லது சளிச்சுரம் என்பனவற்றால் பாதிக்கப்பட்டுள்ளதோடு 6 பேர் மூளைக்காய்ச்சலினாலும் பீடிக்கப்பட்டு உள்ளனர். சீடீசீயின் அறிக்கையின்படி 1992 ஆம் ஆண்டில் மட்டும் மருத்துவர்கள் பிரயோகித்த நுண்ணியிர்க் கொல்லிகளுக்குத் தாக்குப்பிடித்த, பற்றீரியல் தொற்றுநோய்களால் 13,300 நோயாளிகள் மருத்துவ மனைகளில் மரணித்துள்ளனர்.

எல்லாத் தொற்றுநோய்களும் ஒவ்வொரு மருந்துக்குங் கட்டுப் படாமல் போகிறது என்பதைவிட இந்த நோய்க்கு இந்த நுண்ணுயிர்க் கொல்லியே பொருத்தமானது என்று மருத்துவர்கள் கண்டு பிடிப்பதற்கு முன் தாக்குதல் நடத்தும் பற்றீரியா இரத்தத்தில் நஞ்சூட்டி விடுகிறது என்பதே பொருத்தமாகும். அவை சுவாசப்பையில் கடுமையானதொன்றை ஏற்படுத்துவதுடன் சில முக்கிய உறுப்புக்களிலும் பாதிப்பை உண்டாக்குகின்றது.

இது தொடர்பான நிதிச் செலவும் மிகவும் அதிகரித்துள்ளது. முதலில் கொடுக்கப்படும் நுண்ணுயிர்க் கொல்லி வெற்றியளிக்காதபோது நோயாளி மீண்டும் மீண்டும் பல முறை வேறுபல நுண்ணுயிர்க் கொல்லிகளை உட்கொள்ள வேண்டியுள்ளது. இதனால், நாட்டின் சுகாதாரச் செலவு 10 கோடியிலிருந்து 20 கோடி டொலர்களால் அதிகரிக்கிறது. ''இப்போது கண்ணுக்குப்புலப்படாத நுண்ணங்கிகள் வெற்றிகொள்கின்றன. அவை எம்மிலும் அதிகமான வயதுடையவை; புத்தி சாதுரியமும் கூடியவை'' என்கிறார் அபோவாவிலுள்ள வென்சீல்.

குறிப்பாகப் பரிணாம வளர்ச்சியில் அவை அறிவு மிகுந்தவை. சிங்கங்களுக்குத் தப்பிக் கொள்ள அன்ரிலோப் என்னும் மான் துரிதமாக ஓடத் தொடங்கியதற்கு டாவினியன் கூறுங் காரணமானது நுண்ணுயிக் கொல்லிகளுக்குத் தாக்குப்பிடிக்கும் பற்றீரியாக்களுக்கும் பொருந்தும். ஒரு பற்றீரியாப் பெருக்கத்திற்குப் பென்சிலின் மருந்தை நோயாளிக்குக் கொடுப்பதன் மூலம் அழிவை ஏற்படுத்தலாம். அதிர்ஷ்ட வசமான சில நுண்ணுயிர்கள் விகாரப் பரம்பரையலகுகளினால் மருந்துக்குத் தாக்குப்

பிடிக்கும் சந்ததியை உருவாக்குகின்றன. வேகமாக ஓடும் அந்த மான்கள் இன்னொரு நாளைக்கும் அலைந்து திரிவது போல நுண்ணுயிர்களும் பிழைத்து விடுகின்றன. இந்த விகாரிகள் தாக்குப்பிடிக்கும் பரம்பரையலகுகளைத் தம் சந்ததிக்குச் செலுத்தி விடுகின்றன. 24 மணித்தியாலங்களுள் ஒரு பற்றீரியம் 16,777,220 நுண்ணுயிர்களை வம்ச விருத்தி செய்யும் வல்லமையுடையது. இன்னமும் ஆபத்து எதுவெனில், இவ் விகாரிகள் தாக்குப் பிடிக்கும் பரம்பரையலகுகளைத் தம்மோடு தொடர்பே இல்லாத வேறு நுண்ணுயிர்களோடு பகிர்ந்து கொள்கின்றன. இவ்வாறான இணைவால் (கொலரா)- வாந்திபேதிநோய்- நுண்ணுயிர்கள் ரெற்றாசைக்கிளினுக்குத் தாக்குப் பிடிக்கும் சக்தியை மனிதக் குடலில் உள்ள ஈ-கோலை (E-Coli) என்ற கிருமியில் இருந்து பெற்றுக் கொள்கின்றன. இங்கு நுண்ணுயிர்க் கொல்லிகள் தாக்குப் பிடிக்கும் பரம்பரையலகுகளை உருவாக்கா விட்டாலும் அவற்றின் பரம்பலுக்குத் துரித கதியில் உதவுகின்றன. ''நுண்ணுயிர்க் கொல்லிகளின் உபயோகம் உயிரியல் வரலாற்றில் எப்போதுமே ஏற்பட்டிருக்காத அளவிற்குப் பரிணாம மாற்றங்களைக் கொண்டு வந்திருக்கிறது'' என்று 'நுண்ணுயிர்க் கொல்லிக் கருத்து மாற்றம்' என்ற நூலில் டாக்டர் ஸ்கொட் லேவி எழுதுகிறார்.

இதனிலும் கொடுமை என்னவெனில், விஞ்ஞானிகள் எதிர்பார்க்காத அளவிற்கு இந்தப் பற்றீரியாக்கள் ''மிகவும் புத்திசாதுரியமான பிசாசுகளாயிருப்பதுதான்'' என்கிறார் நுண்ணுயிரியல் விஞ்ஞானியான ஸ்ரான்லி பல்க்கோ. எப்போதுமே அவை சந்தித்திராத நுண்ணுயிர்க் கொல்லிகளுக்குக் கூடத் தாக்குப் பிடிக்க இந்தப் பற்றீரியாக்களுக்கு முடிகிறது. பெண்களின் சிறுநீரகத் தொற்று வியாதிக்காக நுண்ணுயிர்க் கொல்லியான ரெற்றாசைக்கிளினை உபயோகிக்கும் போது உதாரணமாக ஈ-கோலை ரெற்றாசைக்கிளினுக்கு மட்டுமன்றி வேறு நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கும் தாக்குப்பிடிக்கி



ஸ்ற்றெப்ரோகோக்கஸ்

> *மருத்துவர்கள் பிரயோகித்த ஒவ்வொரு மருந்தையும் தொற்றுநோய்கள் எதிர்த்து நின்றதால். 1999 இல் 13,300 மருத்துவ நிலைய நோயாளிகள் மரணிக்க நேர்ந்தது.*

றது. ''ஒன்றை எதிர்த்து நிற்கின்ற அதே வேளையில், மூலோபாய ரீதியில் வேறும் நுண்ணுயிர்க் கொல்லிகளைப் பற்றீரியாக்கள் எதிர்பார்க்கின்றன போலத் தெரிகிறது'' என்கிறார் லீவி.

இந்தச் சிக்கலுக்குள் எவ்வாறு மாட்டிக்கொண்டோம்? பழைய வருத்தங்களை முடிவுக்குக்கொண்டு வரும் ஆர்வத்தில் மருத்துவர்களும், நோயாளிகளும் இச் சிக்கலுக்குப் புத்துயிரளித்து விட்டனர். நுண்ணுயிர்க் கொல்லிகளின் பாவனை தேவையற்ற தடிமனுக்குக்கூட நோயாளிகள் அன்றிபயோற்றிக்கையே கேட்டுப் பெற்றுக் கொள்கிறார்கள். ஒவ்வொரு முறை அவற்றை உட்கொள்ளும் போதும் அவற்றுக்குத் தாக்குப் பிடிக்கும் கிருமிகள் பரவுவதற்கான சந்தர்ப்பம் வலுக்கும். சில வேளைகளில் சளிச்சுரம் அல்லது தொண்டை அடைப்புப் பற்றீரியாவால்தான் தோன்றியிருக்கிறது என்பது தெரியாமலே மருத்துவர்கள் நுண்ணுயிர்க் கொல்லிகளை நோயாளிகளுக்குக் கொடுக்கிறார்கள்.

அமெரிக்க விவசாயிகளுக்கு மேலதிக நுண்ணுயிர்க் கொல்லிகள் கொடுபடுகிறது. மக்களிலும் பார்க்க, விவசாய மிருகங்கள் 30 மடங்கு நுண்ணுயிர்க் கொல்லிகளைப் பெறுகின்றன. மருந்துகள் தொற்று நோய்களைக் குணமாக்கித் தடுக்கின்றன. அதே வேளை விவசாயிகள் அவற்றை விரும்புவதற்குக் காரணம் கால்நடைகளில் எதுவித நோயும் இன்றி, ஒவ்வோர் இறாத்தல் உணவுக்கும் துரித வளர்ச்சியைப் பெறுவதற்காகும். மனிதரிற் போலவே நுண்ணுயிர்க் கொல்லிகளை உட்கொள்ளும் போது இங்கும் தாக்குப் பிடிக்குந் தன்மை பற்றீரியாக்களுக்குக் கூடுகிறது. மிருகம் வெட்டப்பட்டு இறைச்சியாக வைக்கப்படும் நிலையிலும், பற்றீரியாக்கள் அங்கே பதிந்திருக்கின்றன. வான் கோழிகளில் காணப்படும் சல்மொனெல்லா வகைப் பற்றீயாக்கள் நுண்ணுயிர்க் கொல்லிகளுக்குத் தாக்குப் பிடிக்குந் தன்மையைக் கொண்டுள்ளன. இவ் இறைச்சி வகைகளைக் கடுமையாகச் சூடேற்றும்போது கிருமிகள் கொல்லப்பட்டாலும் சமைக்கப்படாத அல்லது நன்கு சமைக்கப்படாத இறைச்சிகள் மூலம் பற்றீரியாக்கள் மிருகங்களிலிருந்து, மனிதருக்குத் தொற்றிவிட வாய்ப்புண்டு. நுண்ணுயிர்க் கொல்லிகளை உட்கொள்ளும் நோயாளிகள் பற்றீரியாக்களின் தாக்குதலுக்குள்ளாவது எளிது. ஏனெனில் குடல் வழியில் நுண்ணுயிர்க் கொல்லிகள் தம் பணியைச் செய்து வழியைத் துலக்கிவிடத் தாக்குப் பிடிக்கும் பற்றீரியாக்களும் தொற்றை ஏற்படுத்தும் வாய்ப்பு அதிகமாகி விடுகிறது. ஆண்டுதோறும் இறைச்சியிலும், கோழிகளிலுமுள்ள நுண்ணுயிர்களால் அமெரிக்காவில் 500 பேர்வரை இறக்கிறார்கள். அவர்களுள் சென்ற ஆண்டு திடீர் உணவு தயாரிக்குஞ் சிற்றுண்டிச்சாலையில் ஈ-கோலை எனும் பற்றீரியாவில் தொற்றேற்பட்ட ஹம்பேகர் என்ற உணவை உண்டதால் மூன்று பிள்ளைகள் மரணித்தார்கள். இவர்களை விட மேலதிகமாக 65 இலட்சம் பேர் நோய்வாய்ப்பட்டுள்ளனர்.

போத்தல் பாலை வாங்கிக் குடிப்போரில் இப் பாதிப்பு ஏற்படும் வாய்ப்பு இன்னும் அதிகமாக இருக்கும். பசுக்களில் தொற்று நோய்த் தடுப்பிற்காக நுண்ணுயிர்க் கொல்லிகள் கொடுக்கப்பட்டதனால் பாலில் வெவ்வேறு வகையான 80 நுண்ணுயிர்க் கொல்லிகள் கலந்து இருக்கின்றன. ஒவ்வொரு கிளாஸ் பாலை உட்கொள்ளும் போதும் ஒரு சிறிய அளவு பல்வகைப்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகளையும் நாம் உள்ளே எடுத்துக் கொள்கிறோம். அமெரிக்காவின் உணவு, மற்றும் மருந்து நிர்வாகம் இந்த 80 நுண்ணுயிர்க் கொல்லிகளில் எவ்வளவைப் பால் கொண்டிருக்க வேண்டும் என்று குறிப்பிட்டு இதை மீறும் ஒரு வீதத்திற்குக் குறைவான பால் விநியோகம் பயன்படுத்தப்படாமல் போவதாகக் கூறுகிறது. 1992 இல் காங்கிரஸ் பொதுக் கணக்குச் செயலகம் மத்திய அரசால் ஒழுங்குபடுத்தப்பட்ட நுண்ணுயிர்க் கொல்லிகளில் நாலை மட்டுமே மாநிலங்கள் பரிசோதிப்பதாகக் கண்டுள்ளது. காங்கிரசின் பொதுக் கணக்குச் செயலகத்தின் சொந்த ஆய்வின் படி பால் குடிப்போரில் தாக்குப் பிடிக்கும் கிருமிகளை உருவாக்க வல்ல ''சுகாதாரக் குறைவை ஏற்படுத்தும்'' 64 நுண்ணுயிர்க் கொல்லிகள் இனங்காணப்பட்டுள்ளன. இதுவும் கூடக் குறைவான கணிப்பீடேயாகும். றட்றேஸ் பல்கலைக்கழகம் நடத்திய ஆய்வொன்றில் அமெரிக்க மருந்து நிர்வாகம் பாதுகாப்பானதெனக் கண்ட மட்டத்திலேயே தாக்குப் பிடிக்கும் பற்றீரியாக்கள் 600 விருந்து 2700 வீதம் வரை அதிகரித்திருப்பது கண்டுகொள்ளப்பட்டுள்ளது.

பண்ணைகளைப் பிறப்புரிமையியற் பொறியியல் தன் வசமாக்கிக் கொண்டுள்ளதால் மருந்தின் கழிவுகள் இப்போது அதிகரிக்கக் கூடும். பரம்பரையலகுகள் பிளவுபடுவதால் உற்பத்தியாகும் போவைன் ஓமோனை அமெரிக்க மருந்து அதிகார சபை அங்கிகரித்துள்ளது. இது பால் உற்பத்தியையும் பெருக்கும். போவைன் வளர்ச்சி ஓமோன்கள் தொற்று நோய்வாய்ப்பைப் பெருக்குவதால் பசுக்களுக்கு நுண்ணுயிர்க் கொல்லிகள் கொடுக்க வேண்டிய தேவைகள் அதிகரிக்கின்றன. இதனால் உயிரியல் தொழில் நுட்ப நிறுவனமான கல்ஜீன் தறாமைசின் எனப்படும் நுண்ணுயிர்க் கொல்லிக்குத் தாக்குப் பிடிக்கும் பரம்பரையலகைக் கொண்ட தக்காளியைச் சந்தைப்படுத்த முடியுமாவென்று அமெரிக்க மருந்து அதிகாரசபை விசாரிக்கவுள்ளது. இதனால் கிடைக்கக்கூடிய பலாபலன்கள் நீண்ட நாள்களுக்குப் பழுதடையாமல் இருக்கக்கூடிய தக்காளி உற்பத்தியாகும். இதனால் தாக்குப் பிடிக்கும் பரம்பரையலகு மனித இரைப்பையிலும், குடலிலும் வைத்துப் பற்றீரியாவால் எதிர்கொள்ளப்படும் என்றும் இதனால் தாக்கப்பட முடியாத கிருமிகள் உருவாகுமென்றும், சுற்றுப்புறச் சூழற் குழுக்கள் எச்சரிக்கின்றன.

இவையெல்லாவற்றிலும் அன்ட்றோமீடியா இருப்பின் அது சில சளிச் சுரங்களுக்கும் சத்திர சிகிச்சைப் புண்களால் ஏற்படும் கவலையளிக்கக்கூடிய இரத்தத் தொற்றுக்கும் பொறுப்பான ஸ்ரவலோ கோக்கஸ் ஒறியஸ் என்ற பற்றீரியாவின் வேலை என்பது உறுதி.

மருத்துவமனைகளிலுள்ள ஸ்ராவ் தொற்று நோயின் 40 சத வீதமானவை வன்கோமைசின் தவிர்ந்த ஏனைய நுண்ணுயிர்க் கொல்லிகள் அனைத்துக்கும் தாக்குப்பிடிக்கும் வல்லமையுள்ளவை. ''வன்கோமைசினும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் பலமிழந்து பற்றீரியா எதுவிதத் தாக்கமுமின்றி வளர வழி செய்யும்.'' 1950-1960 களில் இந்தத் தொற்று நோய்க்கு எந்த மருந்துமில்லாமல் இருந்த நிலை தோன்றியது. அப்போது இறப்பு 80 சத வீதமாக இருந்தது என்று ஒரு மருத்துவ அறிக்கை கூறுகிறது. அந்தக் காலங்களில் ஒவ்வோர் ஆண்டும் ஆயிரக்கணக்கானவர்கள் ஸ்ராவ் தொற்று நோயால் இறந்துள்ளார்கள். இந்த உயர்ரக பற்றீரியா எப்படி உருவாக்கப்படும் என்பது பற்றி ஆய்வாளர்கள் கண்டறிந்துள்ளனர். திபேத்தின் நோயாளியைக் கொன்ற இரத்தத்தில் தொற்றை ஏற்படுத்திய பற்றீரியாவான என்ரெறோகோக்கசே அதுவாகும். மருத்துவமனைகளிலுள்ள என்ரெறோகோக்கஸ் தொற்று வியாதிகளில் 20 சத வீதமானோர் உள்ள பற்றீரியாக்கள் வன்கோமைசினுக்குத் தாக்குப் பிடிக்கக் கூடியவையாகும் என்பது ஆய்வாளர் பரிகெய்ஸ் வேத்தின் கருத்தாகும். இந்த எண்ணிக்கை அதிகரிக்கிறது. 1989 இல் நியூயோர்க்கிலுள்ள ஒரேயொரு மருத்துவமனை மட்டுமே வன்கோமைசினை எதிர்க்கும் என்ரெறோகோக்கஸ் பற்றீரியாவைக் கொண்டிருந்தன. ஆனால் 1991 இல் 38 மருத்துவமனைகளில் இவ்வாறு காணப்பட்டன. அடுத்த ஆண்டு பிரிட்டனின் ஆய்வாளர் ஒருவர் இந்தத் தாக்குப் பிடிப்புக்கான பரம்பரையலகு என்ரெறோகோக்கசிலிருந்து ஸ்ராவ் ஒறியஸ்சிற்குக் கடத்தப்பட்டுள்ளது என்று சுட்டிக்காட்டியுள்ளார். அவருடைய கண்டுபிடிப்பின் பயங்கரத் தோற்றம், அவரிடமிருந்த வன்கோமைசனுக்குத் தாக்குப் பிடிக்கும் ஸ்ராவ் அனைத்தையும் அழித்துவிடத் தூண்டியது. ஆனால் இந்த மாற்றம் எங்கோ ஓர் இடத்தில் சீக்கிரம் நிகழ்ந்தேயாகும் என்றே நுண்ணியலாளர்கள் நம்பினார்கள். ''பற்றீரியாக்களுக்குச் சொந்த விநியோக முறையுண்டு.'' மனிதர் கடிதப் பரிவர்த்தனை செய்து கொள்வது போல என்கிறார் ஸ்ரான் போடின் பல்க்கோவ். வன்கோமைசினுக்குத் தாக்குப்பிடிப்பதற்கு ஸ்ராவ் பரம்பரையலகைக் கண்டு கொண்டால் ''நாம் உண்மையான சிக்கலை எதிர் கொள்ளவேண்டியிருக்கும். வன்கோமைசின் தான் நமது கடைசிக் கோடு'' என்கிறார் டாக்டர் றிச்சர்ட் றொபட்ஸ்.

# மருந்துகளுக்குத் தாக்குப்பிடிக்கும் நுண்ணுயிர்கள்

பென்சிலின் பரவலான உபயோகத்திற்கு வந்த இரண்டாவது உலகப் போருக்குச் சில ஆண்டுகளின் பின்பு மருந்தை எதிர்க்கும் ஸ்ராவ் வகைப் பற்றீரியா தோற்றமெடுத்தது. அப்போது, தொடக்கம் எதிர்ப்புப் பரவத் தொடங்கிவிட்டது.

| | நுண்ணுயிர்கள் | ஏற்படும் நோய்கள் | இப்போது பயன்படாத (பிரயோசனப் படாத) நுண்ணுயிர்க் கொல்லிகள் |
|---|---|---|---|
| 1. | என்ரெறோகோக்கஸ் | இரத்தத்தில் தொற்று, காயங்களில் தொற்று | அமினோகிளைக் கோசைட் செவலோஸ் போறின்ஸ் எரித்றோமைசின், பென்சிலின், ரெற்றாசைக்கிளின், வன்கோமைசின். |
| 2. | கீமோபிலஸ் இன்(வ்) புளுவென்சா | முளைக் காய்ச்சல், நடுக்காதில் தொற்று, (சைனுசைற்றிஸ்) மண்டைப் பீனிசம், சளிச்சுரம் (நிமோனியா) | குளோறம் பெனிக்கோல் பென்சிலின், ரெற்றாசைக்கிளின், கோட்றீம் |
| 3. | மைக்கோ பற்றீரியம் ரியூபெக்குளோசிஸ் | ரியூபெக்குளோசிஸ் (காசநோய்) | அமினோகிளைக்கோசைட்ஸ் எத்தம்பியூட்டோல் ஐசோனியசின் பைராசினாமைட் றிவாம்பின் |
| 4. | நைசீரியா கொணேறியா | கொணேறியா (மேக நோய்) | பென்சிலின், ஸ்பெக்ரினோமைசின் ரெற்றாசைக்கிளின் |
| 5. | பிளாஸ்மோடியம் ஃபல்சிப்பாறம் | மலேரியா | குளோறோகுயின் |
| 6. | ஷிகெல்லா டிசென்ரெறியே | கடுமையான வயிற்றோட்டம் | அம்பிசிலின், குளோறம்பெனிக்கோல், ரெற்றாசைக்கிளின், கோட்றீம் |
| 7. | ஸ்ரவிலோகோக்கஸ் ஒறியாஸ் | இரத்தத்தில் தொற்று சளிச்சுரம், காயத்தில் தொற்று | வன்கோமைசின் தவிர்ந்த ஏனைய நுண்ணுயிர்க்கொல்லிகளெல்லாம் |
| 8. | ஸ்ற்றெப்ரோகோக்கஸ் அநியூமோனியே | முளைக் காய்ச்சல், சளிச்சுரம் | அமினோகிளைக்கோசைட்ஸ், செபலொஸ்போறின்ஸ், குளோறம் பெனிக்கோல், எரித்றோமைசின், பென்சிலின், ரெற்றாசைக்கிளின், கோட்றீம் |

அடுத்த அதிசய மருந்து எம்மைக் காப்பாற்றாதா? 1980 நடுப்பகுதி வரையில் மருந்தியல் நிறுவனங்கள் தமது சிறகுகளில் இன்னொரு நுண்ணுயிர்க் கொல்லியைத் தயார் நிலையில் வைத்துக் கொண்டேயிருந்தன. ஆனால் பற்றீரியாவால் ஏற்படும் தொற்று நோய்கள் இந்த ஆயிரமாண்டுடன் குறைந்து விடும் போல ஒரு தோற்றங் கண்டது. உள்நாட்டு நுண்ணுயிர்க் கொல்லிக்கான சந்தை வாய்ப்புக்கள் குறைந்து நவீன சுகாதார முறைகள் வேறிடங்களில் அற்றொழித்து விட்ட வாந்திபேதி நோய், வயிற்றோட்டம், மற்றும் நோய்கள் அபிவிருத்தியடைந்து வரும் நாடுக

ளில் மட்டுமே இருந்து வருவதால் அங்கேயே சந்தை வாய்ப்பு இருந்தது.

ஒப்பீட்டளவில் மூன்றாம் உலக நாடுகளில் ஒரு சிலரே புதிய குளிகைக்கு 100 டொலர்கள் செலவிடக் கூடியவராயிருப்பர். பாரிய மருந்தியல் நிறுவனங்களில் பல அடுத்த பென்சிலினைப் பற்றிச் சிந்திப்பதை விட்டுவிட்டன. அரசும் திருப்தியடைந்து விட்டுவிட்டது. நுண்ணுயிர்க்கொல்லி ஆய்வுக்கான அரச நிதி தேய்ந்து நலிந்து போயிற்று. ''கடந்த 20 ஆண்டுகளில் இது தொடர்பாய் எந்த உதவியும் கிடைக்கவில்லை'' என்று கூறுகிறார் டாக்டர் ஜோர்ஜ் மில்லர். இதன் காரணமாய் அமெரிக்க மருந்து அதிகார சபை 1990 ஒரு புதிய அன்ரிபயோற்றிக்கிற்கும் (நுண்ணுயிர்க்கொல்லி), 1991 இல் ஐந்திற்கும், 1992 இல் மூன்றிற்கும் 1993 இல் மீண்டும்..... ஒன்றிற்குமே அனுமதி வழங்கியது.

சில நிறுவனங்கள் இப் பற்றீரியாக்களைக் கட்டுப்படுத்துவதற்கு ஆகக் குறைந்தது ஐந்து வருடங்களாவது போராட முயற்சி எடுத்திருக்கின்றன. பற்றீரியாக்கள் எவ்வாறு நுண்ணுயிர்க் கொல்லியைப் போரிடுகிறது என்பதை நன்கு புரிந்து கொள்வதும் ஒரு மூலோபாயமாகும். பல வழிகளால் இந்த பற்றீரியாக்கள் தம்மைக் காத்துக் கொள்கின்றன. ஸ்ராவ் பற்றீரியாப் பென்சிலினை நடு நிலையாக்கும் போது செய்வது போல இவை மருந்தை உருக்குலைப்பதற்கு ஒரு நொதியத்தைக் சுரக்கின்றன. இவ் நொதியங்களைச் கலச்சுவரில்மாற்றத்தை ஏற்படுத்துவதினால் நுண்ணுயிர்க் கொல்லிகள் கலத்தினுள் போக முடியாமல் தடுக்கப் படுகின்றன. இதே பொறிமுறையைத் தான் என்றொகொக்கசும் எரித்திரோமைசினுக்கு எதிராக செயற்படுத்துகிறது. ஈகோலை ரெற்றாசைக்கிளினுக்கு எவ்வாறு தாக்குப் பிடிக்கிறதோ அப்படி நுண்ணுயிர்கள் மருந்துகளை வெளியே தள்ளிவிடுகின்றன. வாய் மூலம் கொடுக்கப்பட்ட அதியுயர் சக்திமிக்க நுண்ணுயிர்க்கொல்லி ஸ்மித் கிளைன் பீச்சாமின் ஒக்மென்ரின் ஆகும். இங்கு இதனுடன் ஒரு வகைப் பென்சிலினும் நுண்ணுயிர்க்கொல்லியை எதிர்த்து நிற்பதற்காகப் பற்றீரியா வெளிவிடும் நொதியத்தை அகற்றிவிடும் இரசாயனமும் சேர்ந்துள்ளது. மூன்று வருடங்களுக்கு முன்னர், ஈகோலைன் ஒரு வகை பென்சிலினை அழித்து வரும் நொதியத்தை உருவாக்கக் கற்றுக் கொண்டது. இதனால் அந்த ஈகோலைகளுக் கெதிராக ஒக்மென்ரின் செயலிழந்து விட்டது. ஈகோலைத் தன் தாக்குப் பிடிக்கும் சக்தியை ஏனைய பற்றீரியாக்களுக்கும் மாற்றி விடுமோ என்ற அச்சம் இதனால் தோன்றலாயிற்று. அதனாலேயே பற்றீரியாவின் எதிர்ப்பை முடமாக்கி விடுவதென்பது ''ஐந்து பத்து ஆண்டுகள் செலவழிப்பதை விட வேறொன்றுமில்லை'' என்கிறார் மில்லர்.

கடந்த காலங்களில் மருந்தியல் நிறுவனங்கள் புதிய நுண்ணுயிர்க் கொல்லிகளைச் சந்தர்ப்ப வசமாக கண்டுபிடித்தன. மரஞ்செடி கொடிகள் நிறைந்த பிரதேசங்களுக்குப் பிரயாணஞ் செய்யும் ஊழியர்களை அங்குள்ள கழிவுகளின் மாதிரிகளைக் கொண்டு வருமாறு நிறுவனங்கள் கேட்டுக் கொண்டன. நிலத்திலுள்ள பற்றீரியாக்கள் மறுதலித்து வரும் அன்ரிபயோற்றிக்சுகளை நிறுவன இரசாயன வியலாளர்கள் கண்டு கொள்வதற்காகவே இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. 1980 களில் நிறுவனங்கள் ஒரு புதிய அணுகு முறையைக் கையாண்டன. அது என்னவெனில், அவர்கள் அடியிலுள்ள மூலக்கூறுகளிலிருந்து நுண்ணுயிர்க் கொல்லிகளை உருவாக்கினர். இப்போது அது மீண்டும் இயற்கைக்குத் திரும்பிவிட்டது. இன்று நிறுவனங்கள் கடலினடியிலிருந்து போர்னியோக் காடுகள் வரையில் பற்றீரியாக்களைக் கொல்லும் கலவைகளைத் தேடியலைகின்றன.

இவ் நுண்ணுயிர்க் கொல்லிகளுக்குப் பதிலாகப் புதிய மருந்துகளைக் கண்டு பிடித்தலும், பழையனவற்றை அறவே பாவிக்காமல் விடுவதுமே ஒரு நல்ல மூலோபாயமாகும் தாக்குப் பிடித்தல் மூலம் ஒரு பற்றீரியா வாழ்வை நடத்துந் திறமையை இழப்பதோடு தீவிர சீதோஷண நிலையால் மருந்துகளின் தாக்குதலுக்காளாவதும் அதிகரிக்கின்றது. ''மருந்தை எதிர்த்துத் தாக்குப் பிடிக்கும் ஒரு பற்றீரியா எவ்வேளையிலும் போட்டி நிலையில் நட்டத்தையே ஈட்டிக் கொள்ளும் என்பது டாக்டர் வீ கிறீனின் அபிப்பிராயமாகும். குடலில் அமிலத்தைத் தோற்றுவிக்கும் ஒரு மருந்தின் மூலம் பற்றீரியாவுக்கு ஊறு விளைவிக்க ஆய்வாளர்களுக்குச் சிலவேளைகளில் முடியும். இரத்தத்தில் பிளாஸ்மிட்ஸ் அதிகரிப்பதைத் தடுப்பதற்கும் இரசாயனங்களைத் தேடிக்கண்டு கொள்ள ஆய்வாளர்கள் முயலுகிறார்கள். இந்தப் பிளாஸ்மிட்ஸ்கள் நுண்ணுயிர்கள் உலகத்தின் ஈத் தொலைத்தொடர்புச் செய்திகளையும், பற்றீரியாவைக் கொன்றொழிக்கும் நொதியங்களை வழிதப்பச் செய்யும் மூலக் கூறுகளையும் இல்லாமற் செய்து நுண்ணுயிர்க் கொல்லிகளை உட்செல்லவும் வழி வகுக்கின்றன இதற்கு மாற்றீடாக வக்சின்கள்—அம்மைப்பால் போன்றவை—மாற்றீடாகப் பற்றீரியாக்கள் மீது தாக்குதல் நடாத்தக்கூடும். இப்போது நியூமோ கோக்களிற்கு எதிரான வக்சின் ஒன்றுண்டு. ஸ்ரபலோகொக்கஸ், ஸ்ரெப்ரோகாக்கஸ் போன்றவற்றிற்கு எதிரான வக்சின் தொடர்பான ஆய்வு எதுவுமே இப்போது இருப்பதாகத் தெரியவில்லை. அது ஏன்? ''வக்சின்களால் பெரிய பொருள் இலாபம் ஏற்படுவதில்லையென்பதே காரணமாக இருக்கலாம்'' என்று தோமஸ் சல்ஸ்மான் கூறுகிறார்.

அல்லது நமக்குத் தேவையானது பாரிய தொழில் நுட்ப அறிவில்லாது பொது அறிவு மட்டுமாக இருக்கலாம். நுளம்பை நோக்கி கைக்குண்டு எறியாதது போல மெல்லிய தொற்றுக்களுக் கெதிராக அதிசக்தி வாய்ந்த நுண்

## நுண்ணுயிர்க் கிருமியின் வாழ்க்கை

★ கலச்சுவர்களைக் கரைத்துவிடுகல் போன்ற பலவிதத்தில் நுண்ணுயிர்க் கொல்லிகள் தாக்குதல் நடத்துகின்றன. சிலவேளைகளில் சந்தர்ப்பவசமாக, ஒரு நுண்ணுயிர் இந்த நுண்ணுயிர்க் கொல்லியை எதிர்த்து நிற்கும் தன்மையை ஈட்டிக் கொள்ளுகிறது. ஈற்றில் அந்தமருந்துக்கு அது தாக்குப் பிடிக்கிறது.

★ **நுண்ணுயிர்க் கொல்லியின் தாக்குதல்:-** அது செயற்படும் போது, கிருமியின் கலச் சுவரை அழித்துவிடும் அல்லது உயிர்தாங்கும் புரதங்களை உற்பத்தி செய்யுந் திறமையைத் தகர்த்துவிடும்.

★ **இனப்பெருக்கத் தாக்கம்:-** தாக்குப் பிடிக்கும் பற்றீரியா இன்னொரு பற்றீரியாவுக்கு இழைவிட்டு அதனை உள்வாங்குகிறது. தாக்குப் பிடிக்கும் நுண்ணுயிர் டீ என் ஏ வளையத்தைப் பிரதிசெய்து விடுகிறது. டீ என் ஏயில் தாக்குப் பிடிக்கும் பரம்பரை அலகுண்டு.

★ **உயர்ந்தரக நுண்ணுயிர்:-** ஒரு நுண்ணுயிர் பிறப்புரிமையில் விகாரத்தை அபிவிருத்தி செய்யும்போது நுண்ணுயிர்க் கொல்லி தாக்காதவாறு கலச்சுவரை வலுவுடையதாக மாற்றும். அத்துடன் மருந்தை வெவ்வேறாக உடைத்தெறியும் அல்லது பரம்பரையலகையும். புரதம் செய்யும் பொறிமுறையையும் பாதுகாக்கும்.

★ இரண்டு பற்றீரியாக்கள் ஒன்றையொன்று தொடும்போது தாக்குப்பிடிக்கும் பற்றீரியா மேலதிக டீ என் ஏ வளையத்தைத் தனது கலச்சுவருக்கூடாக அடுத்த பற்றீரியாவுக்கு அனுப்பிவிடும்.

★ இதனால் இரண்டாவது பற்றீரியாவானது நுண்ணுயிர்க் கொல்லிக்குத் தாக்குப்பிடிக்கும் சக்தியைப் பெற்றுத் தனது சக்தியைச் சந்திக்கும் ஏனைய பற்றீரியாக்களுக்கும் மாற்றி விடும்.

ணுயிர்க் கொல்லிகளைப் பாவிக்காதது போலவும் இருக்கலாம், அல்லது திரும்பத்திரும்ப அன்ரிபயோற்றிக்கை உபயோகித்துத் தாக்குதற் தன்மையைத் திரும்பப் பெறுவதாய்ப் பலமிழந்த வேறு கிருமிகள் தம்மை மீளவும் வலுப்படுத்திக் கொள்ளவும் இடமாகலாம். விவசாயத்தில் அன்ரிபயோற்றிக்ஸ் உபயோகத்தில் மட்டுப்படுத்துவது போலாகலாம். மருத்துவர்கள், தாதிமார் மற்றும் மருந்துக்கலவையாளர்கள், கூட நோயாளர்களுக்கு மருத்துவம் செய்யத் தொடங்குமுன் தம் கைகளை நோய்த்தடுப்பு மருந்துகளால் கழுவிக்கொள்ள வேண்டும் என்று வற்புறுத்துவது போலவுமிருக்கலாம். அல்லது சில (அன்ரிபயோற்றிக்களுக்கு) நுண்ணுயிர்க் கொல்லிகளுக்கு அவற்றுக்குகந்த ஓய்வு வழங்குவதாகவும் அமையலாம். ''இவைகள் செய்யப்பட்டால் தாக்கத்துக்குள்ளாகக் கூடிய வகைகளின் மீள் தோற்றத்தை நாம் பார்க்க முடியும்'' என்று கூறுகிறார் டாக்டர் றிச்சட்டுமா.

பெண்கள் மகப்பேற்றின்போது இரத்தத்தில் தொற்று ஏற்பட்டதால் மரணித்தல் அதிகரித்த வேளையில்தான், நுண்ணுயிர்க் கொல்லிகள் உயிரியல் மருத்துவ ஆய்வு கூடங்களில் பிறப்பெடுத்து 20 ஆம் நூற்றாண்டின் மருந்துகளை ஓரந்தள்ளியது. அதேபோல பிள்ளைகளின் நடுக்காதில் தொற்று மரணத்தை வருவிக்கும் மூளைக் காய்ச்சலை ஏற்படுத்திய போதும் புண்கள் பெரும் பாதிப்புக்குரியனவாக மாறியபோதுமே நுண்ணுயிர்க் கொல்லிகள் தோற்றுவிக்கப் பட்டன.

நவீன சுகாதார முறைமைகளும் நோய்களைப் பற்றிய நல்ல விளக்கங்களும் நாம அந்தப் பழைய நிலைக்குத் திரும்பிப் போக மாட்டோம் என்பதற்கு உத்தரவாதம் அளிக்கின்றன. 40 ஆண்டுகளுக்கு முன் இந்த மண்ணைவிட்டு அகற்றப்படும் என்று விஞ்ஞானம் முரசறைந்து பல வியாதிகளுக்கு, இப்போது நோயாளிகள் ஆளாகிறார்கள், மரணிக்கிறார்கள். விஞ்ஞானிகளின் கூற்றுப்பொய்த்துவிட்டது. விஞ்ஞானம் மீண்டும் நுண்கிருமிகளோடு சமராடும்போது பலர் இறந்து போவார்கள்.

இணைவு: நியூயோர்க்கில் மார்த்தா பிறன்ற் வாஷிங்டனில் பற்விங்கட் மேரி ஹேகர்.

# டி-டே நேச நாடுகள் எவ்வாறு வென்றன?

**பகுப்பாய்வு: அமெரிக்கா, ஐரோப்பாவில் அணுகுண்டு பிரயோகிக்காமைக்கு நாலு காரணங்கள் உள்ளன.**

> 50 வருடங்களுக்கு முன்பாக, இரண்டாம் உலகப் போரின் போக்கையே மாற்றிய வரலாற்றுப் புகழ்வாய்ந்த தரையிறக்கம் ''டி — டே'' எனக்குறியிடப்பட்டு அழைக்கப்பட்டது. 1994, ஜூன் 6 இல் பிரான்சின் கரையில் நேசநாட்டுத் தலைவர்கள் ஒன்று கூடி வெற்றிக்கு வழிவகுத்த ''டி — டே'' யை நினைவு கூர்ந்தார்கள்.

டி—டேயின் எச்— நேரம், அந்த நாளின் அதிமுக்கிய நேரம், 5,300 படகுகளில் 1994 ஜூன் மாதம் 6 ஆம் தேதி நோர்மண்டிக் கடற்கரைகளை நோக்கிப் பயணஞ் செய்த 370,000 பேரில் ஒவ்வொருவரும் கல்லச்சில் பதிக்கப்பட்ட கடதாசித் துண்டொன்றை வைத்திருந்தனர். நேச நாட்டுப் படைகளின் பிரதம தளகர்த்தர் டுவைற் ஐசன் ஹோவரின் ''அந்த நாட் கட்டளை'' அதுவாகும். ''மாபெரும் விடுதலைப்போர்'' என்று ஐசன் ஹோவர் இதை வர்ணித்திருந்தார். எப்போதுமே நடைபெற்றிராத அளவு மிகக் கடுமையானதும், சிக்கல் நிறைந்ததுமான நடவடிக்கை இதுவாகும் என்பது டி-டே பற்றிய சேர்ச்சிலின் கருத்து. பிரித்தானியரின் பழக்கத்திற்கமைய படையெடுப்பின் கடற்படை நடவடிக்கைக்கான பிரதம தளபதி அட்மிரல் சேர் பேட்றம் றாம்சே தரையிறங்குவதற்குச் சில நாள்களுக்கு முன் தனது படையினரிடம் மன்னிப்புக் கோரினார். தோற்றம் பெறாத அனைத்திற்கும் அவர் கவலையடைவதாகவும். இனிமேல் மெய்ப்பாடான விடயங்களே இடம் பெறும் எனவும் அவர் தெரிவித்திருந்தார்.

ஓவர்லோட் நடவடிக்கை - ஒப்பறேசன் ஓவர்லோட் எந்த அளவில் முக்கியமானது. அது தோல்வியில் முடிந்திருந்தால் இன்று ஐரோப்பாவின் வரைபடம் பிழையான தோற்றத்தைப் பெற்றிருக்கும். இரண்டாவது முயற்சியொன்று மேற்கொள்ள வேண்டியிருந்திருப்பின் அதற்கு ஓராண்டு காலம் பிடித்திருக்கும். ''அத்தகையதோர் பயங்கர விளைவால் ஏற்படும் உளவியல் ரீதியான தாக்கத்தைக் கருத்திற் கொள்ளின் கட்டாயம் இன்னோர் ஆண்டு தேவைப்பட்டிருக்கும்'' என்கிறார் நோர்மண்டி நடவடிக்கையின் அமெரிக்க படைத் துறையினது உத்தியோகபூர்வ வரலாற்றின் ஆசிரியரான மாட்டின் புளுமென்சன். சிதறுண்ட கடற்படை மீளவும் ஒன்றிணையும் வேளையில் அத்லாந்திக் சுவரை முடித்து விடவும் வீ-1 வீ-2 எறிகணைகளை லண்டன் மாநகரின் மேல் பொழிந்து தள்ளவும், இறுதித் தீர்வை முடித்து வைக்கவும் ஹிட்லருக்குப் போதிய அவகாசம் கிடைத்திருக்கும். இதற்கிடையில் ஸ்டாலினின் செஞ்



*படையினரையும் மக்கள் போலவே பாவித்தல்: ஜூன் 5 ஆம் நாள் பின்னேரம் போருக்கு முன்னான கவனம், ஆறுதல் என்பனவற்றை வழங்குவதற்காக ஐசன் ஹோவர் பரசூட் படையினரைச் சந்தித்து அளவளாவுகிறார்.*

சேனை மேற்கு நோக்கித் தள்ளி வந்திருக்கும்? அதாவது ஜேர்மனியை நடுவால் ஊடறுத்துப் போயிருக்கும். ''இரும்புத் திரை றைன் நதியில் இருந்திருக்கும் என்று கூறுவதற்குத் தூரதிருஷ்டியுள்ள அதிசயம் எதுவும் தேவையில்லை'' என்று சொல்கிறார் டீ.டே வரலாற்றாசிரியர் கார்லோ டெஸ்ரே.

அதாவது மேற்கத்தைய நேச நாடுகள்முதலில் அணுவாயுதங்களை உபயோகிக்காமலிருந்திருந்தால் மேற்சொன்னவை நடந்திருக்கும். ''டீ.டே தோற்றிருந்தால் 1945 ஒகஸ்ட் மாதமளவில் அமெரிக்கா ஜேர்மனி மீது அணு குண்டைப் போட்டிருக்கும். ஹிரோசிமாவுக்கும் நாகசாகிக்கும் பதிலாக நாம் பேர்லினையும், பிராங்பேட்டையும் நினைவில் வைத்திருப்போம்'' என்று கூறுகிறார் றட்ஜேஸ் வரலாற்றுப் பேராசிரியரும், இரண்டாம் உலகப் போர் நிபுணருமான வில்லியம் ஓநீல்.

ஒரு போரில் இவ்வளவு அபாயங்களைச் சந்திப்பதென்பது அதுவும் ஒரே நாளில்-நேச நாடுகளின் தலைவர்களின் சிந்தனைகளைக் குழப்புவதாயிருந்தது. முதலாவது உலகப் போரின் படுகொலைகளை நினைவு கூர்ந்த சேர்ச்சில் மிக்க துயரத்தோடு கால்வாயின் நீரோட்டம் நேச நாட்டினரின் இரத்தத்தாலே செந்நிறமாகப் போய்க்கொண்டிருக்கிறது. கடற்கரைகள் அமெரிக்கர்களாலும், பிரித்தானிய இளசுகளாலும் ஊறிப்போயுள்ளன என்று முணுமுணுத்தார். அமெரிக்கர்கள் அதிக நம்பிக்கையோடிருந்தார்கள். ஆனால் அவர்களுக்கும் சில மயக்கங்களிலிருந்தன. மே மாத நடுப்பகுதியில் அதாவது படையெடுப்பிற்கு மூன்று வாரங்களுக்கு முன்னர் ஐசன் ஹோவரின் படைத் தலைமை அதிகாரியும், ஆத்திரக் காரருமான பெடல் ஸ்மித் பயங்கர விளைவுகளின் முன்னெச்சரிக்கையோடு இருந்தார். வெற்றி வாய்ப்பை 50:50 ஆகவே அவர் கணித்திருந்தார்.



உயிர் நாடி: படை இறங்கிப் பல நாட்களின் பின் கரைக்கு விநியோகம் பெரிய அளவில் வந்து சேருகிறது.

பின் நோக்கலில் அது மிகைப் படுத்தப்பட்டிருந்தது. எதிர்க் காரணிகளைப் பார்ப்போம். அந்த நாளில் நேச நாடுகள் 10,000 போர் விமானங்களைப் பிரான்

— ஜோண் பரி —

சிற்கு மேலால் பறக்க விடலாம். லுவ்ற்வொவ் – ஜேர்மனிடம் 800 மட்டுமே இருந்தது. நேச நாடுகளின் கடற்படையிடம் 5 போர்க் கப்பல்களும், 23 வேகப் போர்க் கப்பல்களும் உள்ளடக்கிய கடற்திறமை இருந்தது. கால்வாயில் ஜேர்மனியின் கடற்பலம் சில ஈ படகுகளும், நீர்மூழ்கிக் கப்பல்களும் மட்டுமாகவே இருந்தது. இரண்டு மாதங்களில் நேச நாடுகள் 8,000 இத்திற்கும் அதிகமான கவச வாகனங்களை நோர்மண்டிக்குள் அனுப்பின. ஆனால் ஜேர்மனியால் 1,350 ஐ மட்டுமே பயன்படுத்த முடிந்தது. இவ்வளவிருந்தும் வெற்றி நிச்சயமாக இருக்கவில்லை. நிச்சயமற்ற தன்மைக்குக் காலநிலையே பிரதான காரணமாக இருந்தது. ஐசனோவரின் காலநிலையாளர் கால்வாய்ப் புயல்களுக்கிடையில் 36 மணித்தியாலச் சாளரமொன்றையே குறித்திருந்தார். அவர் தவறாகக் கணித்திருந்தால் உடைந்து போகக் கூடிய தரையிறங்கும் படகுகள் புயலுக்குள் அகப்பட்டிருக்கும்.

அந்த நாளின் வெற்றித் துணிச்சலாலும், 59 மைல் நீளமான நோர்மண்டிக் கடற்கரை நெடிகிலும் மோதிச் சிதறும் அலைகளுக்கு மத்தியிற் துப்பாக்கி றவைகளுக்குத் தப்பிக்கொண்ட இளம் கடல் வெறுப்புக் கொண்ட இளம் வீரர்களின் துணிவாலும் ஏற்பட்டது என்று கொள்வது சிறிது அதிகப் படியாகும். நோர்மண்டிக் கடற்கரைக்கு வெகு தொலைவிற் கப்பால் துணிச்சலிலும் பார்க்கப் பெரிய அளவிலான சக்திகளாலேயே டீ-டேப் போரை வெற்றி கொள்ள முடிந்தது என்பதே நிதர்சனமாகும்.

## முடிவான காரணிகளாவன

ருஷ்யர்கள் செஞ்சேனை வெஹ்ர் மக்ற் எனப்படும் ஜேர்மன் படைகளைக் கட்டுக்குள் கொண்டு வராமலிருந்திருந்தால் மிக நீண்ட நாள் மேலும் நீண்டிருந்திருக்கும். ருஷ்யாவில் தோல்வியைத் தழுவிக் கொண்ட 59 ஜேர்மனியப் பிரிவுகளையே நேச நாட்டுப் படைகள் சந்தித்தன. ஹிட்லரிடம் 157 படைப்பிரிவுகளிலிருந்தன. ஒப்பறேசன் ஓவலோட் நடந்து இரண்டு வாரங்களின் பின்னர் ஸ்டாலின் மேற் கொண்ட தாக்குதல் டீ–டேயை மிகவும் சிறிதாகக் காட்டியது. 10 நாட்களில் 150 ருஷ்யப் படைப் பிரிவுகள் 3 ஜேர்மனிய இராணுவத்தையே நிர்மூலமாக்கி 350,000 ஜேர்மனியர்களைக் கொன்றும், காயப்படுத்தியும், கைது செய்தும் விட்டன.

## ஹிட்லர்

போல்ஷ்விக்குகளைத் தோற்கடிப்பதிலேயே முழுக் கவனத்தையும் செலுத்திய அவர், 2 ஆவது போர் முனை ஒன்றைப் பற்றிச் சிந்திக்கவேயில்லை. கிழக்கிலே படைகளைக் குவித்துப் படைப்பிரிவுகளைப் பிரான்சிற்கு நகர்த்தி நேச நாட்டுப் படைகளை அழித்தொழிக்க வேண்டுமென்ற மேற்கில் நின்ற அதியுயர் தளபதிகளான வொண் றண்ட்ஸ்ரெட், றொமேல் ஆகியோரின் கோரிக்கைகளை ஹிட்லர் நிராகரித்தார். தம்மிடமுள்ள கவசவாகனங்களை எந்த வகையில் பயன்படுத்துவதென்பதில் தளபதிகளுக்கிடையிலேயிருந்த முரண்பாடுகளைக் களையவும் அவர் தவறிவிட்டார். வோண் றண்ட்ஸ்ரெட், பன்சர் கவசவாகனப் பிரிவுகளைப் பின்னால் வைத்துப் பாரிய எதிர்த் தாக்குதல் மேற்கொள்ள வேண்டும் என்றார். போரின் முதல் மணிகளுக்குள்ளேயே எதிரியைத் துரத்திக் கடலிலே மூழ்கடித்துவிட வேண்டும் என்பது றோமலின் திட்டமாக இருந்தது. இதில் ஒரு முடிவுக்கு வராமலிருந்த ஹிட்லரின் போக்கு அழிவுக்கே வழி கோலியது. பன்சர்கள் காலங்கடந்தே வந்து சேர்ந்தன. ''அவரது கைகளைக் குலுக்க ஆசைப்படுகிறேன். அவர் 40 படையணிப் பிரிவுகளுக்குச் சமம்'' என்று பிரிட்டனின் படைத் துறைத் தலைமை அதிகாரியான ஜெனரல் அலண் புறாக் திடுக்கிட்டுப் போயிருந்த ஜெனரல்கள் குழுவொன்றிற்குக் கூறினார்.

## வஞ்சனை:

வரலாற்றிலேயே மிகவும் சிறப்பாக மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு நடவடிக்கையால் ஜேர்மனியர்கள் தாமதமடைய நேரிட்டு விட்டது. இரண்டு போலி இராணுவப் பிரிவுகளை நேச நாடுகள் தயார் செய்தன. ஜெனரல் ஜோர்ஜ் எஸ். பற்றன் அதற்குத் தளபதி, ஜேர்மனிக்கு மிக அண்மையில் கால்வாயை நேசப்படைகள் கடக்கின்றன என்று காட்டிக் கொள்ளவே இந்த ஏற்பாடு. அதற்கான துறைமுகம் பாஸ் டீ கலாயிஸ். இங்கிலாந்தில் உளவு வேலை செய்த ஜேர்மனியர்களுக்கு ''இரட்டைச் சிலுவை'' மூலம் பிரிட்டனின் புலனாய்வு கயிறு கொடுத்துக் கொண்டிருந்தது. பற்றனைப் பற்றித் தவறான தகவல்களையே ஜேர்மனிய உளவாளிகள் றிச்சுக்கு அனுப்பிக் கொண்டிருந்தார்கள். ஜேர்மனியரின் சங்கேதச் செய்திகளெல்லாவற்றையும் நேசப்படைகள் அறிந்து செயற்பட்டன.

## டெற்றொயிற்:

அவர்களுக்குக் கார்களும், குளிர்சாதனப் பெட்டிகளும் செய்யத் தெரியுமேயன்றி விமானங்கள் செய்யத் தெரிந்தவர்களல்லர். லுவ்ற்வாவ் என அழைக்கப்பட்ட ஹிட்லரின் விமானப்படைத் தலைவரான ஹேர்மன் கோயறிங் 1941 ஒகஸ்டில் செய்த விமர்சனம் இது. 1943 இல் அமெரிக்காவின் எட்டாவது விமானப்படையணி ஜேர்மனிக்குள்ளே புகுந்து பட்டப்பகலில் குண்டுமாரி பொழிந்த போது அவர் வித்தியாசமானதொரு நிலையைக் காண நேர்ந்தது. நோர்மண்டிக் கடற்கரையிலிருந்து 100 மைல்களுக்கப்பால் நேச நாடுகளின் போர் விமானக் கூட்டம் போட்ட பேரிரைச்சலைச் சீபீஎஸ் – கொலம்பிய ஒலிபரப்பு நிலையம் – செய்தியாளர் கேட்டபோது முக்கிய வேளை வந்து விட்டது தெரிந்தது. வானத்தில் இராட்சதத் தொழிற்சாலையின் சத்தம் அது என்றார் அந்த சீபீஎஸ் இன் எட்வேட் ஆர் மறோ. எல்லாவித தனிப்பட்ட வீர சாதுரியங்களுக்கும் மேலாக ஜனாதிபதி ரூஸ்வெல்டின் ''சனநாயக ஆயுதச்சாலை'' சகல எதிர்ப்புக்களையும் வீழ்த்தி டீ – டேயை வெற்றிகரமாக்கியதென்பதே உண்மையாகும். கிழக்கிலே மனிதர்களோடு மனிதர்கள் மோதினோம். இங்கே மனிதர்கள் இயந்திரங்களோடு மோதுகிறோம்'' என்றார் நோர் மண்டிச் சண்டைக்குள் அகப்பட்டுக் கொண்ட ஜேர்மனியின் படை வீரர். டீ- டேக்கு சில நாள்களின் பின் ஜெனரல் றோமல் ''எம்மிடம் இருந்த துணிச்சல் எல்லாம் பலனளிக்கவில்லை. அது ஒரு பயங்கரமான இரத்த விரயம். நாங்கள் சுடும் ஒவ்வொரு வேட்டும் எம்மையே தாக்குகிறது. காரணம் அது நூறுமடங்காகத் திருப்பி விடப்படுகிறது'' என்று மனத்துயரத்துடன் தன் மகனிடம் கூறியுள்ளார்.

1944 ஆம் ஆண்டளவில் வெஹ்ர்மக்ற் காலியாகி அடக்கப்பட்டும் விட்டது என்றாலும் ஜேர்மனியருக்கு இன்னமும் ஓராண்டுச் சண்டை கையிருப்பில் இருந்தது. நேசப்படைகள் திடீர்த் தாக்குதல்களையும் சுற்றி வளைப்புக்களையும் செய்து கொண்டுதானிருந்தன. நோர்மண்டியின் புதர்வேலி வரிசைகளிலிருந்து எல்ப் நதியின் கரையோரம் வரையில் சண்டை கடினமானதாகவே இருந்தது. ''சண்டைப் பிரிவிலுள்ள சாதாரண துப்பாக்கி வீரனுக்குப் போர் முனையில் வாழ்க்கை எதிர்ப்பு முதலாவது

உலகப் போரில் ரொமீசுக்கிருந்தது போலத்தான்'' என்று வரலாற்றாசிரியர் ஜோன் எயிஸ் எழுதுகிறார் 11 அமெரிக்கப் படைப் பிரிவுகளில் இழப்பு வீதம் 76 விழுக்காடு எனக் கூறுகிறார் எலிஸ். 11 மாதங்கள் சண்டையிட்ட 4 ஆவது படைப் பிரிவின் இழப்பு வீதம் இறந்தும், காயப்பட்டும் போனவர்கள் 83 விழுக்காட்டினர் ஆவர்.

ஜேர்மயரினின் இறப்பு வீதம் நம்பமுடியாத அளவில் இருந்தது. 11 மாதங்களுக்கும் பல ஜேர்மனிய படைப்பிரிவுகளின் இறப்பு 100 விழுக்காடாகும். வேறு வார்த்தையில் சொல்வதானால் அவர்கள் அழித்தொழிக்கப்பட்டார்கள். டீ-டேயன்று நேசதேசப் படைகளை ஜேர்மனியரின் அதிரடிப் பிரிவான 21 ஆவது பன்சர் பிரிவு எதிர்கொண்டது. 127 கவச வாகனங்கள், 350 அதிகாரிகள், 12,000 படைவீரர்கள் என்போரோடு போர் ஆரம்பமாயிற்று. 10 வாரங்களுக்குப் பின்னர் 23 ஆவது படைப்பிரிவின் எச்சம் செயின் நதியைக் கடந்தபோதும் 3,000 படை வீரர்களும், 10 கவச வாகனங்களுமே மிஞ்சியிருந்தன. தளபதி அமெரிக்க பீ 17 விமானத் தாக்குதல் பற்றிக் குறிப்பிடுகையில், '' அது நகரம் ... சரக்கு அனுப்பும் வார்ப்பட்டை போல விமானங்கள் ஒன்றன்பின் ஒன்றாகக் குண்டுவீசித் தள்ளின. வெளிகளெல்லாம் எரிந்து சாம்பலாகிக் கொண்டிருந்தன. எனது முன்னணி நிலவின் இயற்கைக் காட்சி போலத் தோற்றமளித்தது. முன்னணியில் 70 விழுக்காட்டினர் செயலிழந்தனர். இறந்தும், காயப்பட்டும், மதிமாறியும், மரத்துப் போயும் விட்டனர் என்று விபரித்தார். பாரங் குறைந்த சிறிய கண்காணிப்பு விமானங்கள் தாழப் பறந்தபோது விமானிகளுக்குத் துர்நாற்றம் எட்டும் அளவிற்கு நோர்மண்டியில் நடந்த ஒரு சண்டையில் இறந்தோரின் உடல்கள் குவிந்து கோடை வெயிலில் அவிந்து கொண்டிருந்தனவாம்.

போரின் பின்னர் சோவியத் யூனியனுக்கெதிராக அணிதிரண்ட தளபதிகள் அனைவரும் டீ-டேயிலும், ஐரோப்பாவை மீட்கும் போரிலும் பங்குகொண்ட அனுபவம் வாய்ந்த போர் வீரர்களாவர். பேர்லின் சுவர் வீழ்ச்சியடையும் வரை அணுவாயுத அச்சுறுத்தலையே நேட்டோ தனது பாதுகாப்பிற்கு நம்பியிருந்தன. இதற்கான சிறிய காரணம் எவருமே ஒருபோதும் டீ-டேச் சண்டையைத் திரும்பச் செய்ய விரும்பவில்லை.''

## பிரான்ஸ் ஜனாதிபதியின் பரிப் பிரியம்

பரிசாகக் கிடைத்த குதிரைக்கு வாயில் பல்லெல்லாம் நல்லபடி உள்ளதா என்று பார்க்க முயன்றார் என்று, பிரெஞ்சு ஜனாதிபதி மித்ரோங்கை எவருங் குறைகூற முடியாது. சென்ற ஆண்டு அவர் பழைய சோவியத் ஒன்றியத்தின் குடியரசுகளில் ஒன்றாக இருந்து பிரிந்த துருக்மனிஸ்தானுக்கு அரச முறைப்பயணம் மேற்கொண்டபோது, அந்த நாட்டின் ஜனாதிபதி அவருக்கு மிகவும் அரிதாகக் காணப்படும் அக்ஹால்-தெக்கி வகையைச் சேர்ந்த ஆண்குதிரை ஒன்றைப் பரிசாகக் கொடுத்தார். அவ்விதம் கிடைக்கும் பரிசுப் பொருளைத் தேசிய அமைப்பு எதற்கும் கொடுத்து விடுவது அங்கு வழக்கமானதாகும். ஆனால், அந்தப் பரிசாகக் கிடைத்த 'கென்ஜி' என்று பெயர் சூட்டப்பட்ட குதிரையோ காணாமற் போய்விட்டது. சங்கோசியான மித்ரோங், அந்தக் குதிரைப் பிரயாணத்தின் போது காயமடைந்ததால் அதற்குப் பராமரிப்புத் தேவையென்று, பண்ணையொன்றுக்கு அனுப்பப்பட்டதாகக் கூறினார். ஆனால், பிராஞ்சிலுள்ள எந்தவொரு சிறந்தரகக் குதிரை வளர்ப்புப் பண்ணையிலும், அக்குதிரை நிற்கக் காணப்படவில்லை. பல வாரங்களுக்குப் பின்பு அந்தக் குதிரையை மித்ரோங் மீண்டும் வெளியே தோன்றவிட்டார். அவர் அந்தக் குதிரையைத் தனது பாவனைக்கு வைத்துக் கொள்ளப் போகிறார் போல் தெரிகிறது.

# சர்வதேச உதைபந்தாட்டப் போட்டிகள்:

## இப்போது அமெரிக்காவில் சிறப்புற நடைபெற்றுள்ளன.

காற் பந்தாட்டம் பங்குபற்றவும், பார்த்துக்கொண்டிருக்கவும் மிகச் சிறந்ததொரு விளையாட்டு. உலகில் மிகக் கூடுதலான நாடுகளையும், ஆர்வலர்களையுந் தன்பால் இழுக்கும் சிறப்பு இதற்கு உண்டு. இதன் நடைமுறை விதிகள் பாமரர்களும் மிக எளிதாக விளங்கக் கூடியதாக இருக்கின்றன. 90 நிமிட கால எல்லைக்குள் கூடுதலான சிலிர்ப்பும், பரவசமுந் தரவல்ல விளையாட்டு இஃதொன்று தான். இறுதி நிமிடம்வரை வெற்றிக்கனி யாருக்குச் சொந்தம் என்று அறுதியிட்டுக் கூறமுடியாத விறுவிறுப்பான திகிலூட்டும் ஆட்டம் இதைவிட வேறில்லை.

ஒலிம்பிக்ஸ் போட்டிகள் போன்று உலகக் கிண்ண உதை பந்தாட்டப் போட்டிகளும் நான்கு வருடங்களுக்கு ஒரு முறை, இதற்கெனத் தெரிவு செய்யப்பட்ட நாடொன்றில் நடைபெறுகின்றன. சர்வதேசக் குழு, ஒலிம்பிக்ஸ் போட்டிகளை நடத்துவதற்குப் பொறுப்பாக இருப்பதுபோல் உலக உதைபந்தாட்ட நிகழ்ச்சிகளும் பல்நாட்டு குழுவின் பொறுப்பில் நடைபெறுகின்றன. 1930 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட இப் போட்டிகளில் வெற்றிபெறும் நாட்டுக்கு முழுத் தங்கத்தாலான வெற்றிக் கிண்ணம் பரிசாகக் கொடுக்கப்படுகின்றது. 1970 இல் பிறேசில் நாடு மூன்றாவது முறையாக இப்பரிசைப் பெற்றபடியால் கிண்ணம் அதற்கே சொந்தமாக்கப்



பட்டுள்ளது. 1974 ஆம் ஆண்டு நடந்த போட்டிகளில் புதிய தங்கக் கிண்ணம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இன்றுவரை இதுவே வெற்றிப் பரிசாக இருக்கின்றது. 1930 இல் தொடங்கிய இப்போட்டிகள் இன்றுவரையிலான 64 வருட காலத்தில் 15 தடவைகள் அரங்கேறியுள்ளன.

1990 ஆம் ஆண்டு, இத்தாலியில் நடந்த உலகக் கிண்ணப் போட்டிகளில், அரை இறுதி ஆட்டத்தில் ஜேர்மனி இங்கிலாந்தைத் தோற்கடித்து இறுதி ஆட்டத்தில் ஆர்ஜென்ரீனாவை எதிர்கொள்ளும் தகுதியைப் பெற்றுள்ளது. மோசமான கைகலப்புக்களும், காலடிகளும் விரும்பத்தகாத சம்பவங்களும், நிறைந்த இந்த மோதலில், ஜேர்மனி கிண்ணத்தைக் கைப்பற்றி உள்ளது. 1994 ஆம் ஆண்டுப் போட்டிகளில் கிண்ணத்தைத் தன்வசம் ஜேர்மனி வைத்திருக்குமா அல்லது பிறிதோர் நாட்டுக்கு கையளிக்கவேண்டுமா என்பதே முக்கிய கேள்வியாகும். ஐரோப்பாவின் மிகச் சிறந்த ஆட்டக் காரர்கள் பலர் ஜேர்மன் அணியில் இருக்கின்றனர். உடற் பயிற்சிக்கும், விளையாட்டு நுட்பத்திற்கும் இவர்கள் முதலிடம் கொடுக்கிறார்கள். மேற்கூறிய இங்கிலாந்துடனான ஆட்டத்தில் இந்த இரண்டு அம்சங்களும் அவர்களுக்குக் கை கொடுத்ததாக ஆய்வாளர்கள் தெரிவிக்கின்றனர். ஜேர்மனி அணியின் தலைவர் லோதார் மாற்கவுஸ், வயது 33, இவ்வருடத்துடன் நான்காவது உலகக் கிண்ணப் போட்டிகளில் கலந்து கொள்கிறார்.

இவ்வருடப் போட்டிகளைப் பின்பு கவனிப்போம். இப்போது 1930 ஆம் ஆண்டு தொடங்கி 1990 ஆம் ஆண்டுடன் முடியும் காலப்பகுதியில், நடந்த 14 தங்கக் கிண்ணப் போட்டிகளையும் நாம் ஆய்வுக்கு எடுக்கலாம். இடையில் இரண்டாம் உலகப் போர் நடந்தபடியால் போட்டிகள் நிறுத்தப் பட்டிருந்தன. யுத்தம் முடிந்த பின்பும் வழமையான நிலை தோன்றப் பல வருடங்கள் சென்றுள்ளன. இந்த விளையாட்டு இன்று ஐரோப்பிய நாடுகளின் தேசிய விளையாட்டு என்ற இடத்தைப் பிடித்துள்ளது. தென் அமெரிக்காவிலும் அப்படியே போட்டிகள் நடக்கும் நாட்களில் இந்த இரண்டு கண்டங்களிலும் அன்றாட வாழ்க்கை ஸ்தம்பித நிலைக்கு வந்துவிடும். ஆசியாவில், உலகத் தரத்திற்கு வளர்ந்துள்ள நாடுகள் மிகக்குறைவு, பெருஞ் சனத்தொகையை அடக்கிய கண்டமென்றாலும் எல்லாவித விளையாட்டுக்களிலும் மிகவும் பின் தங்கியதென்றே இதைக் குறிப்பிட வேண்டும். தென் கொரியாவும், ஜப்பானும் இவ்வருடப் போட்டிகளில் கலந்துகொள்கின்றன. 2002 ஆம் ஆண்டு நடைபெறும் உதைபந்தாட்டப் போட்டிகளை

இருவரில் யார் நடத்துவதென்று ஜப்பானுக்கும் தென்கொரியாவுக்கும் இப்போதே மோதல் நிலை உருவாகியுள்ளது.

இது வரையில் இத்தாலி, மேற்கு ஜேர்மனி, பிறேசில் என்ற நாடுகள் ஒவ்வொன்றும் மூன்று முறை இக்கிண்ணத்தை வென்றுள்ளன. ஆர்ஜென்ரீனாவும், உருகுவேயும் தலா இருமுறை கிண்ணத்தை வென்றுள்ளன. ஆகவே தங்கக் கிண்ணம் தென் அமெரிக்கா, ஐரோப்பா ஆகிய இரண்டு கண்டங்களில் மாத்திரம் தங்கியுள்ளதை நாம் அவதானிக்கலாம். இப்போட்டிகளில் இங்கிலாந்து, அயர்லாந்து உட்படப் பெரும்பாலும் ஐரோப்பிய நாடுகளே கலந்துகொள்கின்றன. அணிசேராக் கொள்கையைத் தன் உயிர் போன்று கடைப் பிடிக்கும் சுவிற்சர்லாந்து. இப்போட்டிகளில், இவ்வருடம் பங்குபற்றுவதைக் கவனியுங்கள், மத்திய கிழக்கு நாடுகளிலும் உதைபந்தாட்ட மோகம் பரவி வருகின்றது. குறிப்பாக சவுதி அரேபியா போட்டியில் பங்கு பற்றும் அளவுக்குச் சென்றுள்ளது. ஆபிரிக்காவில் சகாரா பாலைவனத்திற்கு வடக்கிலுள்ள நாடுகளிலும் இந்த விளையாட்டு உன்னத நிலையில் இருக்கின்றது. மொறாக்கோ நாடு இப்போட்டிகளில் திறமையாகச் செயற்பட்டுள்ளதை இவ்விடயத்தில் சுட்டிக்காட்டவேண்டும். ஆகவே, இந்த வருடப் போட்டிகளில் 13 ஐரோப்பிய நாடுகளும், 4 தென் அமெரிக்க நாடுகளும், 3 ஆபிரிக்க நாடுகளும் 2 வட அமெரிக்க நாடுகளும், 2 ஆசிய நாடுகளும், பங்குபற்றுகின்றன. கூட்டுத்தொகை 24.

போட்டி ஒழுங்குகளின் படி பிரிவுக்கு 4 நாடுகள் என்றவாறு 6 பிரிவுகளாக இந்த பங்குபற்றும் 24 நாடுகளும் வகுக்கப்படுகின்றன. இந்த ஆறு பிரிவுகளுக்கும் ஆங்கில முதல் எழுத்து 'ஏ' யில் தொடங்கி ஆறாவது எழுத்து 'எப்' வரை கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவுக்குள்ளும் போட்டிகள் நடந்து அடுத்து சுற்றுக்கான நாடுகள் 'தள்ளிவைத்தல்' (Elimination) முறையில் குறைந்த புள்ளிகள் எடுத்தலை நீக்கப்பட்டபின், தெரிவு செய்யப்படும். இந்த 24 நாடுகளின் தெரிவும் இந்த முறையிலேயே நடந்துள்ளன. 1991 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் தொடங்கிய போட்டிகளில் 143 நாடுகள் பங்கு பற்றியுள்ளன. எல்லாமாக 491 உதைபந்தாட்டப் போட்டிகள் நடந்த பின்பே இந்த 24 நாடுகளும் தெரிவாகியுள்ளன.

### இரண்டாம் சுற்றில் தகுதி பெற்ற 16 நாடுகளிடையே நடைபெற்ற ஆட்டங்களின் முடிவுகள்

| | |
|---|---|
| ஜேமன் — ஸ்பெயின் | (3 — 2) |
| ஸ்பெயின் — சுவிற்சலாந்து | (3 — 0) |
| சுவீடன் — சவுதி அரேபியா | (3 — 1) |
| ருமேனியா — ஆர்ஜென்ரீனா | (3 — 2) |
| நெதர்லாந்து — அயர்லாந்து | (2 — 0) |
| பிரேசில் — அமெரிக்கா | (1 — 0) |
| பல்கேரியா மெக்சிக்கோ | (4 — 2) (பெனால்டி) |
| இத்தாலி — நைஜீரியா | (2 — 1) |

வெற்றிக் கிண்ணத்திற்கான போட்டிகளை நடத்தவும் பல நாடுகள் பெரும் பிரயத்தனம் செய்கின்றன. தெரிவு செய்யப்பட்ட நாடு பெரும் புகழும் உலக அரங்கில் உயர் நிலையும் அடைவதோடு பார்வையாளர்களும், உல்லாசப் பயணிகளும் வருவதால் வருவாயும் பெறுகின்றது. அமெரிக்காவின் ஒன்பது முக்கிய நகரங்களில் மேற்கூறிய 24 நாடுகள் சம்பந்ததான போட்டிகள் நடைபெறுகின்றன. ஒரு மாத காலம் போட்டிகள் நடந்தபின், இறுதிப் போட்டி கலிபோர்னியா மாநில லொஸ் ஏஞ்ஜல்ஸ் நகரின் புகழ்பூத்த றோஸ் போல் அரங்கில் (Rose Bowl Stadium) ஜூலை மாதம் 17 ஆம் திகதி நடைபெறும். அமெரிக்கர்களின் கனவுகளின் உறைவிடம் என்று இந்த நகரம் வர்ணிக்கப்பட்டுள்ளது. இந்த அமெரிக்காவின் மூன்றாவது மிகப் பெரிய நகரம் 'எல். ஏ.' எனச் சுருக்கமாக அழைக்கப்படுகின்றது. மேற்கூறிய அரங்கு, ஒரே நேரத்தில், ஓர் இலட்சம் இரசிகர்களை இருத்தக்கூடிய வசதிகளுடன் இருக்கின்றது.

1894 ஆம் ஆண்டு ஒலிம்பிக்ஸ் போட்டிகளுக்குப் புத்துயிர் கொடுத்த கூபேர்ற்றின் என்ற பெரியார் பின்வருமாறு கூறியுள்ளார்; ''வெல்வது பெரிதல்ல பங்குபற்றுவதே பெருமை.'' ஒலிம்பிக்ஸ் போட்டிகளிலே இந்தத் தாரக மந்திரம் தேய்ந்து வரு



ஒலிம்பிக்ஸ் நிகழ்ச்சிகளை நடந்தப் பெரும் போட்டி நடப்பது போல் உலக உதைபந்தாட்ட

கின்றது. உலக உதை பந்தாட்டப் போட்டிகள் எம்மாத்திரம். பெரும் பணமும், நாட்டின் எழுச்சியும், விளம்பரமும், அரசியலும் கலந்து விளையாட்டு அரங்கை யுத்தக் களமாக்கிவிட்டன. 1990 இல் ஆர்ஜென்ரீனாவுக்கும், ஜேர்மனிக்கும் நடந்த இறுதி ஆட்டத்தை இரு நாடுகளின் போர் என்றுதான் வர்ணிக்க வேண்டும். 'ஈ' பிரிவில் இவ்வருடம் நடந்த இத்தாலி – அயர்லாந்து மோதலில் உணர்ச்சிகள் கரை உடைத்துப் பாய்ந்துள்ளன. இருநாட்டு மக்களும் பல நூற்றாண்டுகளாக அமெரிக்காவில் குடியேறி உள்ளனர். முதல் அமெரிக்கா பின்பு தாய் நாடு என்று வாழ்ந்த இந்த மக்கள், உதை பந்தாட்டம் என்றவுடன் இதை மறந்து தாய்நாட்டுடன் ஒன்றிவிடும் விந்தையை நாம் இங்கு காண்கிறோம். இன்னுமொரு மாலை ஜேர்மனியும், பொலிவியாவும் மோதிக்கொள்ளும் போது பார்வையாளர்களின் மத்தியில் வீற்றிருந்த பொலிவியாவின் ஜனாதிபதி பின்வருமாறு தெரிவித்தார்: ''எனது நாடு தோல்வியுறுவதைப் பார்த்து நான் கூனிக்குறுகிவிட்டேன்''. அரசியலையும், விளையாட்டையும் பிரித்தெடுக்க முடியாத நிலையை இதிலிருந்து உணரலாம். 'ஈ' பிரிவில் யாரும் எதிர்பாராத விதத்தில், இத்தாலி, அயர்லாந்தின் கையில் தோல்வியுற்றவுடன 58 மில்லியன் இத்தாலியர்கள் (முழு நாடும்) கண்ணீர் விட்டதாக ஒரு விமர்சகர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவில், நடந்த முதலாம் சுற்றுப் போட்டிகள் முடிவுக்கு வந்துள்ளன. 24 நாடுகளில் எட்டு நாடுகள் நீக்கப்பட்டுள்ளன. அவை தமது நாடுகளுக்குத் திரும்பியுள்ளன. அவையாவன; பொலிவியா, ருஷ்யா, தென்கொரியா, நோர்வே, கிறீஸ், கொலம்பியா, கமரூன், மொறக்கோ. ருஷ்யாவிடமிருந்து பெரு வெற்றிகள் எதிர் பார்க்கப்பட்டாலும் அதனால் மூன்று புள்ளிகளுக்குமேல் பெற முடியவில்லை. மேற்கு ஆபிரிக்க நாடான கமரூன் ஒரு



**கால் இறுதியாட்டத்தின் முடிவுகள்**

| | |
|---|---|
| பல்கேரியா — ஜேர்மன் | (2 — 1) |
| பிரேசில் — நெதர்லாந்து | (3 — 2) |
| சுவீடன் — ருமேனியா | (7 — 6) (பெனால்டி) |
| இத்தாலி — ஸ்பெயின் | (2 — 1) |

புள்ளி மாத்திரம் எடுத்தாலும் வெகு உயர்வான விளையாட்டு நுட்பத்தைக் காண்பித்துள்ளது. கொலம்பியாக் குழு தென் அமெரிக்காவின் மிகச் சிறந்த தென வர்ணிக்கலாம். சென்ற வருடம், இவர்கள் ஆர்ஜென்ரீனாவை 5 கோல்களால் தோற்கடித்துள்ளனர். இதுதான் இந்த விளையாட்டின் நியதி. எப்படியோ எதிர் பாராதவாறு நடந்து விடுகிறது. ஆசியாவில் உதை பந்தாட்டம் மதிப்புடன் கணிக்கப்படும் நாடென்றால் அது தென் கொரியாதான். அமெரிக்காவிலிருந்து கடன் வாங்கிய பேஸ்பால் விளையாட்டு (Base Ball) இந்த நாட்டில் நன்கு பரவியிருந்தாலும் உதை பந்தாட்டத்திற்குத் தேசிய அந்தஸ்து உண்டு. இவர்களுடைய மிகச் சிறந்த ஆட்டக்காரர் கிம் ஜூ சுங் பந்தைக் காலால் தட்டிக்கொண்டு போவதில் தென் அமெரிக்கர்களுக்கும், ஜேர்மனியர்களுக்கும் நிகரான இடம் பிடித்துள்ளார். மொரக்கோவின் அதிர்ஷ்டக் குறைவால் அதற்கு 'எப்' பிரிவில் இடம் கிடைத்துள்ளது. இப்பிரிவில் பெல்ஜியம், நெதர்லாந்து, சவுதி அரேபியா என்பன அங்கம் வகிக்கின்றன. சவுதி அரசரின் நேரடிக் கண்காணிப்பில் இம்முறை இந்த நாடு முதன் முறையாக இரண்டாம் சுற்று வரை வந்துள்ளது.

உதை பந்தாட்டம் ஒவ்வொரு பக்கமும் 11 வீரர்கள் விளையாடும் விளையாட்டு. கூட்டு முயற்சி கூட்டுப் பொறுப்பு. தனித்துவத்தை மறந்து குழுவின் ஐக்கியம் ஆகியவை இவர்களிடம் எதிர்பார்க்கப்படுகின்றன. ஆனால் சினிமா நட்சத்திரங்கள், ஓட்டப் பந்தைய வீரர்கள் ஆகியோருக்கு நிகராக ஒரு சில தனி வீரர்கள் உலகப் புகழ் பெற்றுள்ளனர். தென் அமெரிக்காவின் பேலி (Pele) ஒவ்வோர் எதிரணியுடனும் புதுப் புதுப் பாணியில் விளையாடித் திணறடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது. 60, 70 களில் பிரேசில் நாட்டிற்கு விளையாடியுள்ளார். இன்றைய வீரர்களில், ஆர்ஜென்ரீனாவின் டியாகோ மரடோனா முதன்மையானவர். ஆனால், கட்டளைக்குப் பணியாத மூர்க்கக் குணமும், போதை வஸ்து உபயோகமும் இந்தப் போட்டிகளிலிருந்து இவரைத் தடைசெய்ய உதவியுள்ளன. ஜேர்மனியின் தலைவர் லோதார் மாற்கவுஸ் வெற்றிக்குத் திட்டமிடுவ

தில் தலை சிறந்தவர். முன்னணியில் விளையாடுவதில் ஐரோப்பாவில் நெதர்லாந்து நாட்டின் டெனிஸ் பேர்காம்ப், வயது 25 என்பவருக்குத்தான் முதலிடம். தென் அமெரிக்காவின் உதைபந்தாட்டவீரன் என்ற பட்டப் பெயரைக் கொலம்பியா நாட்டின் கார்லோஸ் வல்டேராமா, வயது 32, 1993 ஆம் ஆண்டு விளையாட்டு இரசிகர்களிடமிருந்து பெற்றுள்ளார். இவ்வருடம் இவரைப்பற்றியதொரு நூல் வெளிவரவிருக்கின்றது. ஆனால் இத்தாலியின றொபேட்ரோ பாகியோ (Roberto Baggio), இன்றைய உலகின் முதலாவது விளையாட்டு வீரன் என்று ஆய்வாளர்களால் கருதப்படுகின்றார். இவருடைய தலையினுள் உதைபந்தாட்டத்திற்கெனப் பிரத்தியேகமாகத் தயாரிக்கப்பட்ட கணனிப் பொறி இருப்பதாகப் பலமான சந்தேகம் நிலவுகின்றது. பிரேசில் நாட்டைச் சேர்ந்த றொமாறியோ ஓர் அற்புதமான விளையாட்டு வீரர். ஒவ்வொரு நாட்டு மக்களுக்கும் ஒன்றோ, இரண்டோ ஒப்புவமையற்ற விளையாட்டு வீரர்கள் இருப்பார்கள், ஆனால் உலக அந்தஸ்து ஒரு சிலருக்குத்தான் கிடைக்கின்றது.

'உலக உலா' ஆசிரியர் குழு

போதையேற்றக் கூடிய மருந்தினை அருந்திய காரணத்தால், ஆர்ஜன்ரீனாவின் டியகோ மரடோனோ உலகக்கோப்பைக் காற்பந்தாட்டப் போட்டிகளிலிருந்து நீக்கப்பட்டார். இதனைத் தொடர்ந்து பலமான ஆர்ஜன்ரீனா அணியும் கால் இறுதிக்குக் கூட நுழையாமல் ருமேனியாவிடம் தோற்று வெளியேறியது. இன்னுமோர் அதிர்ச்சித் தோல்வி முன்னாள் உலக சம்பியனான ஜேர்மனிக்கு ஏற்பட்டது. கால் இறுதியாட்டத்தில் பல்கேரியாவிடம் 2–1 என்ற கோல்க் கணக்கில் தோற்றுப் போனது. இந்தமுறை உலகச் சம்பியனாக வரக்கூடிய அணியென்று கருதப்பட்ட ஜேர்மன், ஒருமுறை கூட கால் இறுதியாட்டத்திற்கு வராத பல்கேரியாவிடம் தோற்றுப் போனது, உலக காற்பந்தாட்ட இரசிகர்களைப்பெரிதும் அதிர்ச்சியிலாழ்த்தியது. இறுதியாக அரை இறுதியாட்டத்திற்குப் பல்கேரியா, இத்தாலி, சுவீடன், பிரேசில் ஆகியன விளையாடத் தகுதி பெற்றன. பல்கேரியா, இத்தாலியிடமும் பின்பு சுவீடனிடமும் விளையாடித் தோல்வி கண்டது. ஆனால் பல்கேரியா அதைப் பற்றி அலட்டிக் கொள்ளவில்லை. முன்னாள் உலகச்சம்பியனான ஜேர்மனியை வென்ற மகிழ்ச்சியே அவர்களுக்குப் போதுமானதாக இருந்தது.

### அரையிறுதியாட்டத்தின் முடிவுகள்

இத்தாலி — பல்கேரியா
(2—1)
பிரேசில் — சுவீடன்
(1—0)

இறுதியாக இம்மாதம் 17 ஆந் தேதி பிரேசிலுக்கும், இத்தாலிக்குமிடையில் உலகக் கோப்பைக்கான இறுதிப் போட்டி நடைபெற்றது. இரு நாடுகளுமே உலகக் கோப்பை வரலாற்றில் தலா மூன்று முறை வெற்றி கொண்ட அணிகள். ஆட்டம் ஆரம்பித்ததிலிருந்தே பிரேசில் அணியின் ஆதிக்கந் தான் மேலோங்கியிருந்தது. பல தடவைகள் அவர்களுக்குக் கிடைத்த அரிய பல சந்தர்ப்பங்களை அவர்கள் தவறவிட்டனர். மேலதிக நேரங் கொடுத்தும் இரு அணிகளும் கோல்கள் ஏதும் போடாததினால் பெனல்டி முறையின்மூலம் போட்டி முடிவுக்கு வந்தது. 3–2 என்ற கோல்க்கணக்கில் இத்தாலியை வென்று உலகக் காற்பந்துக் கோப்பையை நான்காவது தடவையாகப் பெற்ற நாடு என்ற புகழைப் பிரேசில் அடைந்தது.

இத்தாலிய அணியின் சுப்பஸ்ரரான றொபார்ட்டோ பாகியோ அடித்த கோலானது கோல்ப் போஸ்ருக்கு மேலாகச் சென்றதைத் தொடர்ந்து பிரேசிலுக்கு இந்த வெற்றி கிடைத்தது. உலகக் கோப்பைக் காற்பந்தாட்டம் ஆரம்பிக்க முன்னர் உலகின் முதற்தர ஆட்டக்காரராக இருந்த றொபார்ட்டோ பாகியோ இறுதியாட்டத்தில் சோபிக்கவில்லை. உலகக் காற்பந்தாட்டத் தொடரின் நாயகனாகவும், மிகச் சிறந்த காற்பந்தாட்டக்காரராகவும் பிரேசில் அணியைச் சேர்ந்தரொமாறியோவினை உலகக் காற்பந்தாட்டக் கழகம் இம்முறை தேர்ந்தெடுத்துள்ளது. இவருக்குத் தங்கப் பந்து ஒன்று பரிசாக வழங்கப்பட்டுள்ளது. இதற்கு முன்பாக இறுதியாட்டத்தில் வெற்றி பெற்ற பிரேசிலுக்கு 5 கிலோ தங்கத்திலான உலகக் கோப்பையினை அமெரிக்க உதவி ஜனாதிபதி அல் கோர் வழங்கினார். 24 வருடங்களுக்குப் பின்னர் மீண்டும் பிரேசில் உலகக் கோப்பையை வென்றது. எது எவ்வாறு இருந்தாலும் ஒரு மாத காலம் அற்புதமான காற்பந்தாட்டப் போட்டிகளைப் பார்த்துக் களித்த இரசிகர்களது திருப்தியினைச் சொல்லில் வடிக்கவியலாது.



வெளியிடுவோர்: உலக உலா என்ரபிறைசஸ் (3 ஆம் மாடி) 144, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்
அச்சிடுவோர்: இராகன் அச்சகம், 144, அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்

வேண்டும் இடத்திலும்
விரும்பும் போதும்

தண்ணீர்



அமோக விளைச்சல்!

நீர் இறைக்கும் இயந்திரம் சிறந்த
முறையில் சரி செய்து
கொடுப்பவர்கள்.

கைப்பம்புகள் செய்து
கொடுப்பவர்கள்.

நவீன நீர்ப்பாசன வடிகால்
அமைப்பவர்கள்.

ஆமாம்

# விவசாய கைத்தொழில்
# இயந்திரவியல் தொழில்கம்

நீதிமன்றம் வீதி, மல்லாகம்.

வேண்டிய விளைச்சல் பெற உறுதுணையாக நிற்பவர்கள்
கமக்காரனின் நண்பன்

யோகாமணி ஆடை அகம்




★ எண்ணத்தை ஈர்க்கும்
வண்ணக் களஞ்சியம்

★ லயமும் நயமும் இணைந்த
துணிகளின் சங்கமம்,

★ இதயத்தை மீட்டும்
சேலைகளின் சோலை

★ மனதை மயக்கும்
மென்னிழைச் சரிகை

ஆமாம்

ஆடவர் நங்கையர்களுக்கு
லயமும் நயமும் சேர்க்கும்

# யோகாமணி ஆடை அகம்

**குமார் புடைவை மாளிகை**
முத்திரைச் சந்தை,
நல்லூர், யாழ்ப்பாணம்.

**குமார் வண்ணச் சோலை**
பெரிய கடை சாலை,
யாழ்ப்பாணம்.

# யோகாமணி ஆடை அகம்

32, சந்தோசம் சாலை - யாழ்ப்பாணம்



அச்சுப்பதிப்பு:- இராசன் அச்சகம், 144 அருச்சுனா சாலை, யாழ்ப்பாணம்.
அட்டைப்பதிப்பு:- அந்திவானம் பதிப்பகம்.